சென்னையின் சட்டசபைச்
சொற்பொழிவுகள். 1959
(திரு. [illegible])

M. NAMASIVAYAM, M.A., M.L.I.S.,
LIBRARIAN
TAMILNADU ARCHIVES AND
HISTORICAL RESEARCH
EGMORE, CHENNAI-600 008

M. NAMASIVAYAM, M.A., M.L.I.S.,
LIBRARIAN
TAMILNADU ARCHIVES AND
HISTORICAL RESEARCH
EGMORE, CHENNAI-600 008

# அண்ணாவின்

# சட்ட சபைச் சொற்பொழிவுகள்

(முதல் தொகுதி)

1959

OFFICE OF THE REG...
MADRAS
1:7N07
5.1
5

# அண்ணாவின்

# சட்டசபைச் சொற்பொழிவுகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

(முதல் தொகுதி)

*

59-2

விற்பனை உரிமை:

**கலைமகள் நிலையம்**

126, பிராட்வே

சென்னை—1

முதற் பதிப்பு மே 1959.
பதிப்புரிமை பெற்றது

V2N,21 N09
N59.1

Acc. No. 825
Dt 26.11.77

விலை ரூ. 2-00

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 825
MADRAS

## வெளியீட்டுரிமை

ஏற்கனவே வெளிவந்தது தவிர (வளம் காண வழி) மற்ற எனது சட்ட சபைச் சொற்பொழிவுகளைப் புத்தக உருவில் வெளியிட நண்பர் V. G. S. மணி அவர்களுக்கு உரிமை கொடுக்கிறேன்.

சென்னை,
6—12—1958.

வெளியிட்டவர் :
V. G. S. மணி
சென்னை—1

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.—குறள்

# 'அண்ணா'வின்
# சட்டசபைச் சொற்பொழிவுகள்

30—4—'57 ] [ செவ்வாய்க்கிழமை

[ சபாநாயகரும் (டாக்டர் U. கிருஷ்ணாராவ்) உதவி சபாநாயகரும் (திரு. B. பக்தவத்ஸல நாயுடு) தேர்ந்தெடுக்கப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்திப் பேசியது ]

---

பிற்பகல் 12-30

சட்டமன்றத் தலைவர் அவர்களே, துணைத்தலைவர் அவர்களே, தங்களுடைய கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச்சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் இந்தப் பகுதியில் அமர்ந்திருக்கிற எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கையும், இதிலே பிறருக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய வேண்டுமென்ற உறுதிப்பாடும் இருப்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களுடைய சிறந்த அறிவாற்றலை நான் மாணவனாய் இருந்த பருவத்திலும், அரசியல் நடவடிக்கைகளை கவனித்துப் பார்த்த காலத்திலும் இருந்தே நன்கு அறிந்திருக்கிறேன். தங்களைப் போன்ற நேர்மை உள்ளம் படைத்தவர்கள் போட்டியின்றியே சபைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது தான் பொருத்தமானது. என்றாலும், ஜனநாயக அமைப்பிலே சில பல தவிர்க்க முடியாத கடமைகளுக்கு உட்பட்டு போட்டி இருந்தது என்றும் அந்தப் போட்டியும் தங்கள் புகழை அதிகப்படுத்துவதாக டிந்தது என்பதையும் அறிவோம்.

பாராளுமன்ற நடவடிக்கைகளில் தங்களுடைய அறிவையும், ற்றலையும் நன்கு அறிந்திருக்கக் கூடிய எங்களுக்கு அதிலே திகமான அனுபவம் இல்லாததை தாங்கள் அறிந்துகொள்ள வண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் துறையில் ங்கள் நல்ல அறிவாற்றல் பெற்றிருப்பதுபோலவே தாங்கள் டுபட்டிருக்கிற மருத்துவத் துறையில் யார் யார் தங்களிடம்

இளைத்து வருகிறார்களோ அவர்களுக்குப் பலமூட்டுகின்ற காரியத்தில் நீண்டநாளாக ஈடுபட்டிருக்கிறீர்கள். உடல் இளைத்தோருக்கு மருத்துவராக அவர்கள் பக்கத்தில் நின்று தாங்கள் பலம் ஊட்டுவதைப் போலவே அரசியலில் இளைத்தோருக்குப் பக்கத்திலும் தாங்கள் நின்று பலமூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல் உலகத்தில், நம் நாட்டு ஜனநாயக ஆட்சியில் என் போன்றவர்களுக்கு இத்தகைய சட்டமன்றத்தில் அநுபவம் இல்லாதது மட்டுமல்ல பொதுவாக பிற ஜனநாயக நாடுகளோடு, ஜனநாயக முறையில் செயல்படுகிற நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது சிறு குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். இந்த நிலையில் நல்ல ஜனநாயகப் பண்புடன் வளர்ந்திருக்கும் தாங்கள், இந்த பக்கத்திலுள்ள எங்களில் சிலர் யாராவது சில சமயங்களில் கொஞ்சம் குறும்பாக குழந்தைத்தனமாக நடந்துகொண்டாலும், தாய்போன்று எங்களை அன்புடன் அணைத்து அதிகமாக அடிக்காமல், கருணையோடு சீராட்டி வளர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் அநுபவம் உள்ளவர்கள், அரசியல் அநுபவம் இல்லாதவர்கள் என்ற இரண்டு வகைமட்டுமல்ல, இதையே பச்சைத் தமிழில் சொன்னால் ஞானவான்கள், அஞ்ஞானம் நிரம்பியவர்கள் என்ற இரண்டு வகைமட்டும் அல்ல. ஞான சூனியர்கள் இருப்பதாகவும் கருதப்பட்டு வருகிறது. எங்கள் போன்றவர்களை ஞானசூன்யர்கள் என்றால் கவலை இல்லை. ஞானசூன்யர்களைத் திருத்த முடியும். ஞானவான்களாக்கமுடியும். ஆனால் அஞ்ஞானிகளை திருத்துவது என்பது மிகமிகக் கடினம்.

என்னைப் பொறுத்த வரையில், நாங்கள் சேர்ந்திருக்கிற இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அரசியல் அநுபவத்தையும், ஆற்றலையும் அதிகமாகப் பெற்றுவிட்டோம் என்று எடுத்துச் சொல்வதற்கு இல்லை, ஆனால் நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கும்போதே நாங்கள் அதிகமாகப் பயிற்சிபெறாமல் இருப்பது அதற்கு ஏற்றகாலத்தில் பயிற்சி பெறத் தவறிவிட்டது ஒன்றைத்தவிர பயிற்சி பெறமுடியாது என்பது அல்ல. பயிற்சி பெற்றால் எங்களுக்கு அந்த அறிவு கைகூடாது என்பதும்



அல்ல, என அரசியல் அநுபவம் பெற்ற தாங்கள் நிச்சயமாக நன்கு உணர்ந்திருப்பீர்கள். அரசியல் துறையில் குழந்தைகளாக எதிர் வரிசையில் உட்கார்ந்திருக்கும் நாங்கள் இந்தச்சபையின் நடவடிக்கைகளில் சட்ட வரம்புக்கு உட்பட்டே செயல் படுவோம் என்றாலும் குழந்தைத்தனமாக சில பல நேரங்களில் தவறுவதும் இயற்கை அந்த நேரங்களில் தாங்கள் அன்புகூர்ந்து தங்கள் கட்டளைகளை புன்சிரிப்போடு கலந்து, கருணையிலே குழைத்து உபயோகிப்பது எங்களை எல்லாம் நல்ல ஜனநாயக பண்புடையவர்களாக்கப் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர் கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள். ஆளும் கட்சி செய்கின்ற காரியங்கள் அத்தனையையும் எதிர்ப்போம் என்று அல்ல ஆளும் கட்சிக்கும், எதிர்கட்சிக்கும் உள்ள உறவு, மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளைத் தோழர்களுக்கும் உள்ள உறவுபோல இருக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். சிற்சில நேரங்களில் மாப்பிள்ளை, தம்முடைய தோழர்களின் குறும்புகளை வெறுப்பது போல ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எங்களைக் கருதக்கூடும், அப்படிப்பட்ட நேரத்தில், நாங்கள் மிகவும்சோர்ந்து போகாமல் இருக்க, தாங்கள் அருள் கூர்ந்து தங்களுடைய நியாயமான தீர்ப்புகளை வழங்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் அ சியல் பெருந்தன்மை நம் நாட்டில் மிக மிக அவசியம் என்பதை நல்ல பெருந்தன்மை உடைய தகப்பனாருக்குப் பிள்ளையாயும், நல்ல பெருந்தன்மையுள்ள தொழிலில் ஈடுபட்டவராயும், அரசியல் பெருந்தன்மையை நிலை நாட்டும் பதவிக்கு இன்று தேர்ந்தெடுக்கப்பட்டவராயும் உள்ள தாங்கள் அறிந்து இருப்பீர்கள்.

அரசியல் பெருந்தன்மை, கொடுத்து வாங்குவது ஒன்றே தவிர ஒரே வழியில் செல்கிற வியாபாரம் அல்ல என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். அப்படி அரசியல் பெருந்தன்மையை கொடுத்து வாங்கவேண்டுமென்ற கொள்கையைத்தான் நாங்கள் கவலையோடு போற்றி வைத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தும் சில பல நேரங்களில் தவறுகள் இழைக்க நேரிட்டால், அரசியல் அநுபவம் இல்லாதவர்கள் நாங்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, தவறுகளைத் திருத்தி நல்வழிப்படுத்துகின்ற அதிகார பீடத்தில்

அமர்ந்திருக்கிற தாங்கள் கொடுக்கும் ஆணைகளுக்கு உட்பட்டு நடப்போம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் எல்லாம் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்று நீங்கள் அறிவீர்கள்; இந்த சபையும் அறியும். நாங்கள் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்ருல் எங்களைத் தோற்றுவித்ததும் நாட்டிலுள்ள ஒரு விசித்திர நிலைமைதான் என்பதை யாவரும் உணரவேண்டும். விசித்திரமான நிலைமைகள் விசித்திரமான கட்சிகளை ஏற்படுத்துகின்றன.

உண்மையிலேயே ஒரேவிதமான உடற்கூறு படைத்தவர்கள் சிற்சில வியாதிகளுக்கு உட்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிறந்த மருத்துவர் என்ற முறையில் அவர்களுடைய வியாதிக்கு மூலகாரணம் என்ன என்பதைப் பற்றியும் நீங்கள் ஆராய்ந்து சிகிச்சை செய்திருப்பீர்கள். வெளியே தோற்றுகின்ற புறக்குறிகளை மாத்திரம் பார்த்து சிகிச்சை அளிக்கக்கூடாது என்பது தங்களுக்குத் தெரியாதது அல்ல. உங்களுடைய பேட்டையில் எத்தனையோ நோயாளிகள் இளைத்தவர்களாக உங்களிடம் வந்து திடகாத்திரர்களாகத் திரும்பி இருக்கிருர்கள். அவ்வாறு திரும்பிய பல பேர்களிடத்தில் இருந்து நான் அறிந்துள்ளபடி தாங்கள் முதலில் புறத்திலே தோற்றும் குறிகளைக் கண்டு, அக்குறிகளைத் தோற்றுவித்த மூலகாரணத்தை உணர்ந்து சிகிச்சை செய்யும் வழக்கத்தை இங்கும் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் பண்டத்துள்ள நல்ல ஜனநாயகக் கண்ணேட்டத்தோடு எங்களுடைய குறைபாடுகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் அரசியலில் மட்டும் அல்ல, ரெயில் வண்டிப் பிரயாணத்திலும் கூட யார் முதலில் வண்டியில் ஏறி இடம் பிடித்துக் கொள்கிருர்களோ அவர்கள் அடுத்து வருகிறவர்களைத் துரத்துவதைப் பார்க்கிறோம். சட்ட மன்றத்திலும் அந்த மனப்பான்மை நீண்டகாலத்திற்கு இருக்கத்தான் செய்யும். பின்னே வருகிறவர்கள் முன்னே வண்டியில் ஏறிக்கொண்டு தங்களை ஏற விடாமல் தடுக்கிறவர்களின் மனம் புண்படாமல் மெள்ள உள்ளே ஏறி நுழைந்து கொள்வதைப் போலத்தான் நாங்களும் தட்டுத் தடுமாறி இந்த சபைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியல் ரெயில் வண்டிக்குள் ஆதிக்கம் வாய்ந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் முகம் சுருங்கும் வகையில், அவர்களைப்



பார்த்து காலை மடக்கிக் கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்வதற்கு முன்னலேயே, நீங்கள் உங்களுடைய கருணைப் பார்வையினலேயே அவர்கள் காலை மடக்கிக்கொண்டு எங்களுக்கும் இடந்தரச் செய்யவேண்டும். நியாயத்திற்காக கருணை உள்ளத்தோடு நீங்கள் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய ஆட்சியின் கீழ் இந்த மன்றத்தின் கண்ணியம் உண்மையிலேயே சிறப்புறும் என்று சொல்லி, இந்தச் சபையின் கண்ணியத்தையும், கெளரவத்தையும் காப்பதில் எங்களுக்கும் ஏதாவது பங்கு கிடைக்குமானுல் மகிழ்ச்சி அடைவோம் என்று கூறி வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * *

## 6—5—'57 ] [ திங்கட்கிழமை

### [ கவர்னரின் பேருரையைப்பற்றி நிகழ்ந்த விவாதத்தில் ]

பிற்பகல் 1-05

சட்டமன்றத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் அவர்களின் பேருரையின் மீது இந்த சபையிலுள்ள பல தரப்பட்ட கருத்துக்கள் கொண்டவர்கள் தத்தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான இந்த வாய்ப்பில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தினை அதனுடைய சட்டசபை உறுப்பினர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். நேற்றும் முன்பும் நடைபெற்று வருகின்ற இந்த கருத்துரை வழங்குதலிலே ஒரு கட்சி மற்ருெரு கட்சிக்கு நல்லுரைகளையும் ஆற்றியதை நான் தவருக எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும், மாலை நேரத்தில் எல்லாம் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருக்கிற இருகட்சிகள் காலையில் மட்டும் திடீரென்று காதல் கொண்டுவிட முடியாது என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன். காதலைப்பற்றித் திருவள்ளுவர்—

"காலை அரும்பிப் பகல் எல்லாம் போது ஆகி
மாலை மலரும் இந்நோய்"

என்று கூறி இருக்கிருர்கள். அரசியல் உலகத்திலே அந்த நோய் காலையிலே அரும்பி மாலையிலே மலர்கின்றது; என்ருலும் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இந்தச் சட்ட சபை உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துரைகளையும், மறுப்புரைகளையும் நான் உண்மையிலே வரவேற்கிறேன். ஏனெனில், துவக்கத்திலே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறபடி, நாங்கள்

அரசியலில் புகுந்து இருக்கிற இந்த நேரத்தில். எல்லாதரப்பட்ட கருத்துக்களையும் கேட்டு அதன்மூலம் எங்கள் கருத்துக்களை செம்மைப்படுத்திக்கொள்ள தயாராயிருக்கிறோம் சிலர், இந்தகட்சியின் பெயர் மாற்றப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். சிலர், பெயரை மட்டும் மாற்றினால் போதாது, இந்தக் கட்சியை அடியோடு அழித்து விடவேண்டுமென்றும் சொன்னார்கள். இன்னும் சிலர், இந்த கட்சி தனியாக இருப்பானேன் தோளோடு தோள்சேர்ந்து எங்களுடைய பக்கம் நிற்கலாமே என்றும் சொன்னார்கள். தோளோடு தோள் சேர்ந்து நிற்கலாமென்று சொன்ன நேரத்திலே, நான் முதலமைச்சர் அவர்களைத்தான் பார்த்தேன். அவரும் நானும், தோளோடு தோள் சேர்ந்து நிற்பது இயற்கையிலேயே 'முடியாத காரியம் (சிரிப்பு). ஆனால் கை கோர்த்துக் கொண்டு செயலாற்ற முடியும். உருவத்தைப் பற்றிய மட்டிலும் நான் சொல்லவில்லை. உள்ளப் பாங்கைப் பொறுத்தவரையில் பல் வேறு கட்சிகள் தோளோடு தோள் சேர்ந்துப் பணியாற்ற முடியாது. கைகோர்த்துக்கொண்டு பணியாற்றலாம்.

கவர்னர் பெருமகனாரின் பேருரை ஆட்சியாளர்கள் இனி செய்யப்போகின்ற காரியங்களையும் கடைப்பிடிக்க இருக்கின்ற கொள்கைகளின் விளக்கத்தையும் உள்ளடக்கியதாக இல்லாமல் இருப்பது உண்மையில் பெரும் குறையே என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக ஆட்சியாளரின் கொள்கைத் திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அக்கொள்கை திட்டங்களுக்கு ஏற்ப நிதியை பகிர்ந்தளிப்பதாகிய புள்ளி விவரங்களைக் கொண்டதே வரவு செலவு திட்டம் என்பதும் தான், நான் அறிந்துள்ள வரையில் உணர்ந்து இருக்கிறேன். ஆனால் கவர்னர் பேருரையில் குறிப்பிடவேண்டிய கொள்கை விளக்கங்களை நிதி அமைச்சர் அவர்களுடைய வரவு செலவு திட்டப் பிரசங்கத்திற்கு கவர்னர் ஒதுக்கிவிட்டது பெரும் குறை எனச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆனால் நம் நாட்டிலுள்ள வேறு சில காட்சிகளைப் புள்ளி விபரங்களோடு எடுத்துக் காட்டியுள்ளார் கவர்னர். அவர் கொடுத்திருக்கிற பன்னீராயிரத்து ஐநூறு பம்புசெட்டுகளும் தேவையில்லை என்று சொல்லிவிடவில்லை. ஆனால் கவர்னர் பெருமகனார் இந்தப் பொலிகாளைகள் மூலமாகவும், பம்புசெட்டுகள் மூலமாகவும், கிராமாந்தரங்களுக்கு மின்சாரத்தைப் பரப்புவதன் மூலமாகவும் என்ன என்ன மாதிரியான திட்டங்களை இந்த சர்க்கார் செய்யப் போகிறார்



கள். இவர்களுடைய வருங்காலக் கொள்கை என்ன என எதிர் பார்த்து ஏங்கி நிற்கும் மக்களைத் திருப்தி செய்துவிட முடியாது. முக்கியமாக அவர் தம்முடைய உரையில் அறிவித்திருக்க வேண்டிய கொள்கை விளக்கத்தையும் நிதி அமைச்சருக்கே ஒதுக்கி விட்டிருப்பதைக்கண்டு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் ஏற்கனவே ஏகப்பட்ட பாரத்தைத் தூக்கிக்கொண்டிருக்கும் நிதி அமைச்சர் அவர்களுக்கே மேலும் அதிகமாகத் தொல்லை தருவதாக இருக்கிறதே என்று நான் பரிதாபப்படுகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிதிக்கும் அமைச்சர், நீதிக்கும் அமைச்சர், கல்விக்கும் அமைச்சர் இந்த மூன்று பெரும் துறைகளையும் தாங்குவதற்குரிய ஆற்றல் படைத்தவர் தாம் அவர் என்பதை சபைக்கு நெடுந்தொலையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த காலம்முதலே நன்கு உணர்ந்திருக்கிறேன். என்றாலும் பொதுவாக பாராளுமன்றத்தில் நிதி அமைச்சராக இருப்பவர்கள், செலவாகின்ற இலாக்காக்கள் எதையும் தம்மிடத்தில் வைத்துக் கொள்ளாமலிருப்பதுதான் ஜனநாயக பண்பாட்டுக்கு உகந்தது என்று பல்வேறு நாடுகளில் வலியுறுத்தப்படுவதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் மூலமாக அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் இதர இலாக்காக்களுக்கு அள்ளி அள்ளி வாரி வழங்கி விடுவார் என்ற ஐயப்பாட்டினாலே நான் இதைச் சொல்லவில்லை! ஆனால் எங்கேதாம் வாரி வாரி வழங்கிக்கொண்டு விட்டதாக பிறர் தம்மீது குற்றம் காட்டிவிடுவார்களோ என்று அச்சத்தினாலே தம் பொறுப்பில் வரும் இலாகாக்களைப் பட்டினி போட்டு விடுவாரோ என்ற ஐயப்பாட்டினாலேயே நான் இதைக் குறிப்பிடுகிறேன். அதற்காக கனம் உறுப்பினர் ஸ்ரீ சின்னத்துரை "அமைச்சர் அவையை விரிவு படுத்த வேண்டும்" எனச் சொன்னபடி சொன்னால் அதை அமைச்சர் அவையில் உள்ளவர்கள் ரசித்தார்களோ என்னவோ கனம் அங்கத்தினர்கள் ரசித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற நிதி, நீதி, கல்வி ஆகிய மூன்று துறைகளும் நம்முடைய நாட்டில் பொது வாழ்வு பற்றிய முக்கியமான துறைகள். அவை மூன்றும் வெவ்வேறாக வகுக்கப்பட்டு தனித்தனியாக நல்ல முறையில் செயல்பட வேண்டியவைகள். அப்படிப்பட்ட முக்கியமான துறைகள் மூன்றும் ஒருவரிடமே ஒதுக்கப்பட்டு நிதி அமைச்சரி

டத்தில் தந்திருப்பது, உண்மையிலேயே அவருடைய ஆற்றலுக்கு அது ஒரு சான்று என்றாலும் ஆட்சியாளர்கள் அவரிடத்திலே வைத்திருக்கின்ற அபாரமான நம்பிக்கைக்கு ஒரு சான்று என்றாலும், அவரைப்போன்ற ஒரு இளைஞரிடத்தில் அம்மூன்று இலாக்காக்களும் இருப்பது இளைஞர்கள் உலகத்திற்கே பெருமை அளிப்பதாக இருக்கிறது என்றாலும், உண்மையிலேயே இப்படி யின்றி இவை வேறுவேறாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு அமைச் சர்கள் பொறுப்பில் வருமானால், இவர் நிதி அமைச்சர் என்ற முறையில் தம்முடைய நியாயமான தீர்ப்புகளை வகுத்துக் கொண்டு எல்லாத்துறைகளுக்கும் தாராளமாக, ஏராளமான நிதி வழங்கி அதன்மூலம் எதிர் பார்ப்பதைவிட அதிகமாக நல்ல பலன் நாட்டுக்குக் கிட்டும்படியாக பணியாற்ற முடியும் என்று எதிர் பார்த்தே நான் அந்தக்குறையைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

கவர்னர் பெருமகனார் கொள்கை விளக்கத்தை வரவு செலவுத் திட்டத்தின் போது வைத்துக்கொள்ளலாம் என்று ஒதுக்கி விட்டாலும்கூட "வரவு செலவு திட்டம்" கொள்கையின் அடிப் படையில் அமைகின்ற புள்ளி விவரக் கணக்கே தவிர அதில் கொள்கை விளக்கத்திற்கு அதிகமாக இடம் இருக்கப்போவ தில்லை. இருக்கவும் தேவை இல்லை. "படத்திற்குச் சட்டமே தவிர சட்டத்திற்கு படம் அல்ல" என்பது போல் கொள்கையிலே வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவதனால், கொள்கைகளையே முதலில் பேசிய எதிர்க் கட்சிக்காரர்கள் உண்மையிலேயே மிகவும் குறைந்த எண்ணிக்கையினர் என்றாலும் அவர்கள் சொல்கின்ற சிலபல நேர்மையான கருத்துக்களையும் அரசியல் பெருந்தன்மை யோடு ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொண்டு வரவு செலவு திட் டத்தை தாயாரித்துக் கொடுப்பதாக இருந்தால் தான் அந்த வரவு செலவுத் திட்டம் பூர்த்தியானதாக இருக்கும். மக்களுடைய கருத்துக்கள் எல்லாம் அதிலே கலந்து பிரதிபலிக்கும். ஆனால் இன்றைக்குக் கொள்கைகளைப்பற்றி பேசி முடிவுசெய்யாமலேயே, ஒரு திங்கள் கழித்து வரப்போகின்ற வரவு செலவு திட்டத்திலே கொள்கைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றால் நம்முடைய கொள்கைகள் ஒரு பக்கம் இழுத்தால் வரவு செலவு புள்ளி விவ ரங்கள் நம்மை வேறு எங்கோ இழுத்துக்கொண்டு போய்விடும். அப்போது கொள்கைகளை எல்லாம் அலசி ஆராய்வதற்கு நேரமும் இருக்காது. அப்படியே அலசி ஆராய்வதாக இருந்தாலும்



கொள்கை மாற்றத்துக்குத் தக்கபடி வரவு செலவுத்திட்டத்தைத் திருத்தி அமைப்பது என்பது இயலாத காரியம். ஆட்சியாளரை அப்படித் திருத்தி அமைக்கச் செய்யக்கூடிய எண்ணிக்கையும் எங்களிடத்தில் இல்லை என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன்.

ஆகையினாலே தான் கவர்னருடைய உரையில் கொள்கை விளக்கம் இல்லாததைப்பற்றி நான் வருந்துகிறேன் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதோடு மற்றொரு உறுப்பினர் குறிப்பிட்டது போல, உண்மையிலேயே இந்த அரசாங்கத்தினருக்குப் புதுக் கொள்கைகள் ஏதுவும் இல்லையா? நிதி அமைச்சர் உரையில் பின்னே வரப்போகின்ற கொள்கை விளக்கம் எல்லாம் இப்போது இருந்து கொண்டிருக்கும் நலிந்துபோன கொள்கைகளின் தொடர்ச்சியாகத்தான் இருக்குமோ? என்றுகூட ஐயப்பட வேண்டியிருக்கிறது. இந்த ஐயப்பாட்டுக்குக் காரணம் என்ன இருக்கிறதென்றால் புதிய அமைச்சரவை அமைந்தவுடனே, முதல் அமைச்சர் அவர்களை நிருபர்கள் பேட்டி கண்டதாகப் பத்திரி கையில் செய்தி பார்த்தேன். முதல் அமைச்சர் அவர்களிடம் "உங்கள் கொள்கை என்ன? திட்டம் என்ன? என்று கேட்ட காலத்தில் புதிதாகக் கொள்கைகளை விளக்க வேண்டிய அவசியம் என்ன? புது மந்திரி சபையா இது? முன்பு இருந்த கட்சிதானே இன்றைக்கும் வந்திருக்கிறது. அதே கொள்கைதான். அதே திட் டங்கள்தான்" என்று சொன்னதாகச் செய்தித்தாளில் படித்தேன்.

(கனம் ஸ்ரீ காமராஜ்: ஆமாம்).

ஆகவே வரவு செலவு திட்டத்திலும்கூட புதிதான கொள்கை விளக்கம் இருக்காதென்று தெரிந்திருக்கின்ற காரணத்தினால்தான் ஏற்கனவேயுள்ள திட்டங்களைப்பற்றியும் குறைகளைப்பற்றியும் நாங்கள் எடுத்துப் பேச வேண்டியதாயிருக்கிறது.

ஆனால் நாங்கள் குறை கூறுவதைப் பற்றி ஆளும் கட்சியில் உள்ள பலர் குறை கூறினார்கள். முடிவில் எங்களைக் குறை கூறி னவர்களும் நிர்வாகத்திலுள்ள குறைகளையே எடுத்துச் சொன்னார் கள். இதை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றினார்கள் என்றால் "பிச்சைக்காரனுக்கு பிச்சை இல்லை போ" எனச் சொல்லி விரட்டிய தன் நாட்டுப் பெண்ணைப் பார்த்து "அப்படிச் சொல்ல உனக்கு என்ன அதிகாரம்?" எனக் கேட்ட கொடுமைக்கார மாமியார், பிச்சைக்காரனை திரும்பவும் அழைத்து, "நான் சொல்லு கிறேன், பிச்சை இல்லை போ" என்று சொல்லித் துரத்தினதைப் போல இருந்தது. (சிரிப்பு.) பெரும்பாலும் ஆட்சியாளரின் கட்

சியில் இருந்து பேசிய உறுப்பினர்கள் எல்லாம் எங்களைப் பார்த்து "குறைகளையே அடுக்கிக்கொண்டிருக்கிறீர்களே, குறை சொல்ல நீங்கள் யார்?" எனக் கேட்டு விட்டு, "அந்த உரிமை எங்களுக்குத்தான் உண்டு" என்பதுபோல கவர்னர் பெருமகனாரின் உரையில் குறைகளையே பொறுக்கினார்கள். அவர்களுடைய ஜனநாயகப் பண்பு உண்மையிலேயே வளரவேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன். அப்படி வளருமானால் எங்கள் வேலைகளும், தொல்லைகளும் பெரும்பாலும் குறைந்துவிடும் என்று கருதுகிறேன்.

அந்தக் கட்சியில் உள்ள பலர் நிர்வாகத்திலுள்ள குற்றங்குறைகளைத் தாங்கள் எடுத்துக் கூறுவதற்கு காரணமாக சில தத்துவார்த்தங்களை கற்பித்துக் கொண்டு பேசினார்கள். "இப்படி எல்லாம் நாங்கள் குறைசொன்னால்தான் மக்களுடைய ஆதரவு எங்களுக்கு இருந்து கொண்டிருக்கும். திரும்பவும் அவர்களிடத்தில் சென்று குற்றங்களை எடுத்துச் சொல்லி கண்டித்து பேசியிருக்கின்றோம்" என்று சொல்லி வோட்டுப்பெற்று வருவதற்குச் சௌகர்யமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டார்கள். அப்படிப்பட்ட கருத்தைத் தெரிவித்துக்கொண்ட அங்கத்தினர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படியெல்லாம் நடந்து தேர்தலிலே மக்களுடைய ஆதரவைப் பெற வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. காரணம் தாய்த் திருநாட்டை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் படைத்த ஒரே ஒரு சிறுபடை நாங்கள்தான் என்ற முறையில் அவர்களுடைய ஆதரவைக்காட்டி தங்கள் வாக்குரிமையை எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். இனியும் அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்குரிய அன்பை நாங்கள் இழந்துவிடவில்லை. இழந்துவிடவும் மாட்டோம். இங்கே நடைபெறுகின்ற காரியங்கள் எல்லாம் எங்களுடைய குறிக்கோளைக் குந்தகப்படுத்திவிடாது.

ஆகையினால்தான் குற்றங்குறைகளை எடுத்துச்சொல்லி மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு நாங்கள் குறைகளை எடுத்துக்காட்டவில்லை. உண்மையிலே இந்த அரசாங்கத்தார் தங்களுடைய திட்டவட்டமான கொள்கை எதையும் எந்தப் பிரச்னையின் மீதும், கவர்னர் உரையிலே வெளிப்படுத்தவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக நிலச்சீர் திருத்தத்தைப்பற்றி அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்தில் ஸ்ரீ விநோபாவின் பூதான இயக்கத்தைச்

Acc. No. 825
Dt 26.11.97



சுட்டிக்காட்டி இது வெற்றி பெற்றால் நில விநியோகம் வரம்பு கட்டுவதற்கு அவசியமிராது என்று கூறியுள்ளார். இப்படிச் சொல்லும்போது சட்டமன்றத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்கும் ஸ்ரீ விநோபா அவர்களிடம் எங்களுக்கு மதிப்பு இல்லை என்று அர்த்தம் இல்லை. இந்த நாடும், இந்த நாட்டிலுள்ள அத்தனை பேராலும் நன்கு மதித்து போற்றப்படுகிறவர் என்பதோடு கூட வெளிஉலகமெல்லாம் பெரிதும் போற்றி மதிக்கப்படுகின்றவர் ஸ்ரீ விநோபா என்ற காரணத்தினாலே அவர்கள் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி என்ன சொல்லி வருகிறார்கள் என்பதைச் சபையில் எடுத்துக்காட்டி அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஆனால், விநோபா அவர்கள் செய்துகொண்டுவருகின்ற பூதான இயக்கம் வெற்றி பெற்றுவிடுமானால், நிலத்தைப் பங்கிடுவதோ, வரம்பு கட்டுவதோ தேவையில்லாமல் போய்விடும் என்று எடுத்துச்சொல்லி, தங்களுடைய பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்கு விநோபாவை அவர்கள் ஒரு திரையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ என்று நான் ஐயப்படுகிறேன். நான் ஏன் அப்படி ஐயப்படுகிறேனென்றால் இந்த சர்க்காரைப் பற்றியும் இந்தச் சர்க்கார் நிலச்சீர்திருத்தத்தை எந்த வகையிலே கவனிப்பார்கள் என்பதைப்பற்றியும், இந்தச் சபையாலே போற்றிப் புகழப்பட்டு உலகத்தாரால் மதிக்கப்பட்டு வரும் விநோபா அவர்கள் சமீபகாலத்திற்கு முன்னாலேயே எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்தை இந்தச் சபையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

"We cannot except that the present Government manned mostly by the land owning class will enact such land legislation which will harm their own interests. Even when they try to introduce land reforms they give ample time for the landowners to distribute among themselves or sell their lands so that they may not be affected by the law and thus the law becomes a mere force".

"சட்டம் என்பதை ஒரு கேலிக்கூத்து ஆக்குகின்ற தன்மையில் சட்டத்தை கொண்டுவருகிறேன், கொண்டுவருகிறேன். என்று நிலச் சொந்தக்காரர்களை உஷார்படுத்தி சட்டம் வந்த காலத்தில் எப்படி எப்படி அதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்

என்பதற்காக இந்தச் சர்க்கார் வழிவகுக்கிறார்கள். ஏனென்றால் சர்க்காருடைய அமைப்பே இப்படி இருக்கிறது'' என்று சிறுநல்லூர் என்னும் பெயரில் வினோபா அவர்கள் தம்முடைய பேருரையிலே குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

இப்படி இந்தச் சர்க்காருடைய போக்கைப்பற்றி கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கும் வினோபா அவர்கள் இன்றையதினம் பெற்றுக்கொண்டு வருகின்ற நில தானம் நாங்களெல்லாம் கூர்ந்து பார்க்கத்தக்கது. ஆராயத் தக்கது என்று இந்தச் சர்க்கார் பெருமையோடு சொல்லிக்கொண்டாலும், உண்மையிலேயே வினோபா அவர்களாலே ஆற்ற முடிகின்ற இந்தக்காரியம் நாட்டை ஆளும் சர்க்காரால், நம்முடைய இந்திய துணைக்கண்ட அரசியல் வரலாற்றிலேயே எந்த ஒரு கட்சிக்கும் இதுவரை ஏற்பட்டிராத அளவுக்கு செல்வாக்கைப் பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சியால் நடத்தப்படும் இந்தத் துரைத்தனம் ஏன் இந்தச் சீர்திருத்தத்தை செய்வதிலே தயக்கப்பட வேண்டும்? யாருக்காக அஞ்சுகிறார்கள்? யாராவது அவர்களுடைய கரங்களைப் பற்றிக் கொள்வார்கள் என்று கருதுகிறார்களா? என்று நான் இந்தச் சபையிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,

அதுபோல, எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு விஷயத்திலும் தங்களுடைய பொறுப்பையும், தாங்கள் அவசர அவசரமாகக் கவனிக்க வேண்டிய விஷயத்தையும் அவர்கள் உண்மையிலேயே செய்யத் !தவறியிருக்கின்றார்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்திருக்கின்றார்கள் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகின்றேன். அதனாலேயே, கொள்கை விளக்கம் இந்தக் !கவர்னர் பேருரையிலே இல்லையோ என்று கூட நான் உண்மையிலேயே அஞ்ச நேரிடுகின்றது.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், உண்மையிலேயே ஆளும் கட்சியினர் எந்த வகையிலே எங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன் என்றால், நாங்கள் அழிந்துவிடத் தக்கவர்கள் என்று சபிப்பதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, பொறுப்பற்றவர்கள் என்று எங்களைத் தூற்றுவதைப் பற்றி நாங்கள் உண்மையிலே கோபித்துக்கொள்ளப் போவதில்லை, ஏனென்றால், ஒருவரையொருவர் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் இல்லாத நிலையில், ஒருவரையொருவர் இப்படித் தூற்றிக்கொண்டிருப்பது பொது வாழ்வுத் துறையில் உண்மை



யிலேயே சாதாரணமாகிவிட்டது, ஆனால் இந்தக் கோட்டைக்குள் நுழைந்து உள்ளே வந்து பார்க்கையில், இப்பொழுதிருக்கும் ஆட்சியாளரைவிட பல ஆயிரக்கணக்கான மடங்கு அதிகாரம் படைத்தவர்கள் மக்களுடைய எழுச்சிக்குரலைக் கேட்ட நேரத்தில் கோட்டையை விட்டுவிட்டு ஓட வேண்டியிருந்தது என்பதை என்னால் மறந்துவிட முடியவில்லை,

ஆகையால், இன்றையதினம் பெருவாரியான அளவிலேயிருந்து, ஆட்சி நடத்தும் கட்சிக்காரர்கள் அவர்களுடைய வக்கீல்கள் என்று நான் சொல்வேன். பீஸ் வாங்காவிட்டாலும் என்ன சொல்கிறார்கள் என்றால் "அவர்கள் எதிர்க்கட்சியிலிருப்பவர்கள்—என்ன காரியத்தை செய்துவிட முடியும்?'' என்று. ஆனால், ஆளும் கட்சியில் இருப்பவர்கள் என்றென்றைக்கும் ஆளும் கட்சியிலேயே இருப்பார்கள், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் என்றைக்குமே ஆளும் கட்சியாக வரமுடியாது என்னும் ஏகாதிபத்திய தத்துவத்தை எழிலான தமிழிலே எடுத்து சொன்னார்கள், "அத்தைக்கு மீசை முளைத்தால் அல்லவா சித்தப்பா என்று அழைப்பதற்கு? அத்தைக்கு மீசை முளைக்கப்போவதும் இல்லை, சித்தப்பா என்று அழைக்கப்போவதும் இல்லை'' என்று ஒரு உறுப்பினர் எடுத்துச் சொன்னார். ஆனால், அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பா என்று அழைக்கிறார்கள் அண்டைய நாடாகிய கேரளத்தில் என்பதை அம்மையார் அவர்கள் மறந்து விடமுடியாது, அது மட்டுமல்ல, அத்தைக்கும் சித்தப்பாவுக்கும் மீசை ஒன்று தான் வித்தியாசம் என்று உலகம் கருதுவதில்லை. பல அத்தைகளுக்கு மீசை இருக்கின்றன. என்றாலும் நாம் அத்தை என்று கருதிக்கொண்டுதானிருக்கிறோம். ஆகையால், ஆளும் கட்சியிலிருப்பவர்கள் எதிர்க் கட்சியிலிருப்பவர்களை அணைத்துச் செல்ல வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கே ஆளும் கட்சியாக மாறக்கூடும். மாறலாம் இன்றையதினம் ஆளும் கட்சியில் பெருவாரியாக இருப்பவர்கள் எல்லாம்—என்னைப் பொறுத்தவரை இந்தச் சபையினுடைய ஒழுங்கு முறைக்கு அது உட்பட்டதாகத்தான் இருக்குமென்று கருதுகின்றேன். செஞ்சிக் கோட்டையில் ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜாக்கள் அல்ல, காங்கிரஸ்கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் வீர தீரமாக சுதந்திரப் போராட்டத்திலே அவர்களே ஈடுபட்டவர்கள் என்று கருதிக் கொண்டு, அவர்கள் பிறரைப்பற்றி "இவர்களெல்லாம் பிரிட்டிஷ்

ஆட்சிக்கு கால் வருடியவர்கள், வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின் தாசர்கள்" என்று பழைய வார்த்தையை எடுத்துச் சொல்லும் நேரத்தில் என்னுடைய முகம் சுருங்கவில்லை; ஆனால், அவர்களுடைய முகம் சுருங்குகிறது (சிரிப்பு.)

இப்படிப் பழைய பரம்பரை பேசிக்கொண்டிருந்த ஜமீந்தார்கள், மிட்டாதார்கள், சிற்றரசர்களே தங்கள் பட்டம் பதவிகளை விட்டு வெளியேறும் இந்த நேரத்திலே, அரசியலில் மட்டும் இவர்கள் ஜமீந்தாரி முறையைக் கையாளுவார்களேயானால், இந்த ஜமீந்தாரி முறைக்கும் வெகு விரைவிலேயே இறுதிக்காலம் வரும் என்று நான் எச்சரிக்கின்றேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், எங்களை எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆளும் கட்சிக்கு நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், எங்களை ஆயிரம் தூற்றுங்கள்; அதற்காக நாங்கள் அங்கலாய்த்துக் கொள்ளவில்லை. ஆனால், இப்படி ஒரு கூட்டம் இருக்கிறதென்று எடுத்துச் சொல்லி, மத்திய சர்க்காரிடத்திலே வாதாடி, போராடி தமிழகத்திற்கு-நம்முடைய ராஜ்ஜியத்திற்கு நல்ல உரிமைகளை வாங்கித் தாருங்கள். அந்த முறையிலே தொழில் துறையில் நாம் பின்தாங்கி இருக்கிறோம் என்பதை கனம் நிதி அமைச்சர் 'அவர்களுக்கு பல்வேறு கூட்டங்களிலே எடுத்து விளக்கியிருக்கிறோம். சென்னை சர்க்காருடைய ஆலோசனைக் குழுக்களும் பலதடவை எடுத்துச் சொல்லியிருக்கின்றன.

சட்ட மன்றத்திலே ஒரு காலத்தில் உறுப்பினராக இருந்து, பின்னர் அமைச்சராகவும் பணியாற்றியுள்ள திரு. ரோச் விக்டோரியா அவர்கள் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக்கொண்டு. இந்த விஷயத்திலே சொல்லும்போது இந்த வாசகங்களைக் குறிப்பிட்டிருக்கிறார் :

"The Madras Government is, however. helpless in the matter, for the Government of India in the Commerce and Industries Department are dictating the policy as to what should be done or what should not be done in the State of Madras. We are tied to the apron strings of the Central Government".

ஆங்கிலத்திலே உள்ள அந்த கருத்தை கொச்சைத் தமிழில் சொல்ல வேண்டுமென்றால்—கனம் சபாநாயகர் நான் குறிப்பிடும்



பதத்திற்காகச் சற்று மன்னிக்க வேண்டும், மத்திய சர்க்காருடைய பாவாடை - நாடாவில் மாகாண சர்க்கார் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கிறது என்று கருத்துப்பட அவர் சொன்னார். அந்த நாடாவைச் சற்று அவிழ்த்துவிட நாங்கள் விரும்புகிறோம். வேறு ஒன்றுமில்லை அப்படி அவிழ்த்து விட்டால் பலவற்றாலும் ஆற்றல் படைத்த அமைச்சர்கள் அமைந்திருக்கும் இந்த அமைச்சர் அவை உண்மையிலேயே நல்ல காரியங்கள் ஆற்றும் என்ற நம்பிக்கையால் நாங்கள் சொல்லுகிறோமே தவிர, ஆட்சிப் பொறுப்பிலிருந்து அவர்களை விரட்ட வேண்டும் என்பதால் அல்ல.

குறை சொல்லிக்கொண்டிருக்க வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம் அல்ல. நம் ஜனநாயகத்தில் இருக்கின்ற ஒரு சிறு தத்துவத்தை மிகக் குறைந்த நேரத்தில் விளக்கப் பிரியப்படுகிறேன் கனம் அங்கத்தினர் தம்முடைய கருத்துரைகளை எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படாதது பற்றி உண்மையிலேயே வருத்தப்பட்டார். ஆனால், அதற்குக் காரணம் புதிதாக வந்திருக்கும் உறுப்பினர்கள் எங்கெங்கேயோ அலைந்து விட்டுப் பிறகுதான் தங்களுடைய விஷயத்துக்கு வருவார்கள் என்பது மட்டுமல்ல உறுப்பினர்கள் எவ்வளவு காலம் அநுபவம் பெற்றாலும், இப்பொழுதிருக்கும் முறைப்படி, எந்த அங்கத்தினரும் தம்முடைய கருத்துக்களை விரிவான முறையில் எடுத்துச் சொல்வதற்குச் சட்ட மன்றத்திலே உண்மையிலேயே வாய்ப்பு இல்லை, வசதியும் இல்லை, என்று நான் கருதுகிறேன். அதற்காக ஜனநாயகத்தில், உண்மையிலேயே ஒரு சிறந்த சட்டத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியாவிட்டாலும், நமக்குள்ளேயே ஒரு ஏற்பாட்டினைச் செய்துகொண்டால், சாலச் சிறப்புடையதாகும் என்று நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு துறையிலும் விவாதங்கள் செய்கின்ற நேரத்தில் அந்தந்த துறைக்குப் பொறுப்பாளராக இருக்கும் அமைச்சர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களில் ஆளும் கட்சியிலிருந்தும் எதிர்க் கட்சியிலிருந்தும் பதின்மர், இருபதின்மர்; பதினைந்துபேர்கள், பன்னிரண்டுபேர்கள் கொண்ட சிறு சிறு ஆலோசனைக் குழுக்களை வைத்துக்கொண்டால் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு தலைப்பிலே வருகிற விஷயங்களை அந்த ஆலோசனை குழுவிலே உண்மையிலே நன்றாக விவாதிக்கலாம். அப்படி விவாதிக்கும்போது உண்மையிலேயே பேச்சுப்போட்டிபோல் அமையாமல் கொள்

கையை விளக்குகின்ற அளவிலே இந்தச் சட்ட மன்றம் அமையும் என்று நான் கருதுகிறேன். இதற்கு ஆளும் கட்சியினர் ஏதாவது வழி செய்வார்களானால்,—எனக்கு அல்ல—ஜனநாயகத்திற்கு உண்மையிலேயே சேவை செய்தவர்களாவார்கள்.

"வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது" என்பதை அடுக்குச் சொல்லாக சொல்லப்படுவது என்று கருதிக்கொண்டு, அடுக்குச்சொல் எப்படி இருக்கக்கூடாதோ அந்த முறையில், "குண்டா இருக்கிறது, அண்டா இல்லை; கோச் இருக்கிறது, மாச் இல்லை" என்று சொன்னது. அடுக்குமொழி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும், அடுக்கு மொழி தவறான இடத்தில் கிடைத்துவிட்டால், எவ்வளவு அலங்கோலமாகின்றது என்பதையும் காட்டுகிறது.

"வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது" என்பதை அடுக்குச் சொல்லில் சொல்வதால் மட்டும் ஒரு சிறு கூட்டத்தார் நாட்டிலே அந்த மனப்பான்மையை ஏற்படுத்திவிட முடியாது எவ்வளவு ஆற்றல் இருந்தாலும் அதற்குத் தேவையான புள்ளி விவரங்கள் உண்மையிலேயே நமக்கு அடிக்கடி கிடைத்துக் கொண்டு வருகின்றன. அப்படிக் கிடைத்துக்கொண்டு வருகின்ற சில புள்ளி விவரங்களில் ஒரே வகை ஆலைத்தொழிலில் ஈடுபட்டவர்களுடைய குடும்பங்கள் இரண்டை எடுத்து ஒன்று வடநாட்டில்; மற்றொன்று தென்னாட்டில்-ஒப்பிட்டுப் பார்த்தால் வடநாட்டில் உள்ளவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 273-ம் தென்னாட்டில் உள்ளவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 93-ம் வருமானம் கிடைக்கிறது என்று சர்க்காருடைய புள்ளி விவரக்கணக்கு நமக்கு அறிவிக்கிறது.

அதைப்போல, விவசாயத் துறையிலும் சரி, அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் கவனித்தாலும் சரி, வேலை நாட்களைக் கவனித்தாலும் சரி, வடக்கில் இருப்பவர்களுக்கும் தெற்கில் இருப்பவர்களுக்கும் உள்ள தாரதம்மியத்தை அடிக்கடி சர்க்காருடைய புள்ளி விவரங்கள் நமக்கு தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகிறது. இவைகளைப் போக்குவதற்கு எங்களைக் கருவிகளாகப் பயன் படுத்திக் கொள்வார்களானால் உண்மையிலேயே நாங்கள் மெத்த மகிழ்ச்சி அடைவோம்.

பட்டாளத்தில் "Sappers and Miners" பிரிவினர்கள் கள்ளிக் காளான்களை அகற்றி பாதைகளை சரி செய்துவைத்தால்,



பட்டாளத்தார் டாங்குகளை ஓட்டிக்கொண்டு வருவதைப்போல, எங்களையும் நம்முடைய ஆளும் கட்சியினர் "Sappers and Miners" ஐப் போல் பயன்படுத்திக்கொண்டால், கள்ளிக்காளான் களை அகற்றும் காரியங்களில் எங்களை ஈடுபடுத்திக்கொண்டால், எங்கள் கரத்தில், கருத்தில் அல்ல, அழுக்கேறினாலும் அதைப்பற்றி நாங்கள் கவலைப்படாமல், அவர்களுக்குப் பாதைகளைச் சரிப் படுத்தி வைப்போம். மத்திய சர்க்காரிலே இருக்கும் அதிகாரங் களை மாகாண சர்க்காருக்கு மாற்றுவதற்கு அவர்கள் எங்களை மெத்தப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே முறையில், நாங்கள் சர்க்கார் செய்யும் எந்தக் காரியத் தையும் அல்லது அவர்கள் செய்திருக்கின்ற எந்தக் காரியத்தையும் குறைத்து மதிப்பிடுபவர்கள் அல்ல. உண்மையிலேயே சில பல நாட்களாக நம்முடைய மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்பதற்காக போலீஸ் மந்திரி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் தீவிர நடவடிக்கைகளைப் பத்திரிகையில் பார்க் கும் நேரத்தில், இவ்வளவு தீவிரமாக மதுவிலக்கை அமுல் நடத்து வதற்கு நடவடிக்கை எடுக்க இந்தச் சர்க்கார் முன்வந்திருப்பதை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி பாராட்டுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னால், மறுபடியும் குறை சொல்கிறேன் என்று ஆளும் கட்சியார் வருத்தப்படக் கூடாது. இவ்வளவு குற்றங்கள் இருந்தும் முன்னாலேயே தீர்க்க முற்படாதது ஏன்? என்று கேட்பதற்கு என் பேதை நெஞ்சம் நாணுகிறது. ஆகவே, மதுவிலக்கைச் சரிவர அமுல் நடத்த எடுத்துக் கொள்ளும் முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

அதைப் போலவே, சமுதாய நலத்திட்டத்தை நம்முடைய மாகாண முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய சொந்தப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டிருப்பதை நான் மனதாரப் பாராட்டு கிறேன். தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்குக் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற...........செய்கிறார்கள் என்று அல்ல...... செய்ய வேண்டுமென்ற அக்கறை கொண்டவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகையால், அவரிடத்தில் இந்த இலாகா ஒப்படைக்கப் பட்டிருப்பதைப் பற்றி நான் உண்மையிலேயே

மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த இலாகா அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்ட பிறகு தான் நான் சமுதாய நலத்திட்டத்தைப் பற்றி இருக்கின்ற பல்வேறு வகையான கருத்துரைகளைச் சேகரித்துப் பார்த்தேன். அப்படிப்பார்த்து, அவர்களுடைய கவனத்திற்கு உதவவேண்டுமென்ற எண்ணத்தில் எங்களுடைய கருத்துரைகளைத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தாலும், இந்த சமுதாய நலத் திட்டத்தைப்பற்றி, அதற்கு என்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிற அமெரிக்க நிபுணர்களில் டெபுடி டைரக்டராக அங்கே பணியாற்றுகிற பெர்னார்டு அவர்கள் "Commun'ty Development" என்பதை எவ்வளவு எச்சரிக்கையோடு எடுத்துச் சொல்லுகிறார் என்பதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

Buildings can be seen but does this mean that the people themselves are aware of the opportunities for raising their standards of living? Model villages may be instituted but does this mean what a process is under way in which the inhabitants of that village are working to improve even that model villages? Are there more people who can read and write? Are there fewer cases of malaria or dysentry? Has infant morality been reduced? How much has the villager himself done to produce these results?

இவைகளைப் பார்த்துத்தான் சமுதாய நலத் திட்டத்தைக் கணக்கு எடுக்க வேண்டுமென்று டெபுடி டைரெக்டர் சொல்லியிருக்கிறாரே தவிர, சமுதாய நலத் திட்டத்தின் மூலம் எத்தனை பொலிக் காளைகள் வாங்கப்பட்டன, விதைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி அல்ல அதே நேரத்தில் இதுவரையில் இந்தக் காரியம் சரியாக நடந்திருக்கிறதா என்பதைப் பற்றி டெபுடி டைரக்டர் கூறிய உரையின் பேரிலேயே மதிப்பிட்டுப் பார்க்க விரும்புகிறேன்.

சமுதாய நலத்திட்டம் இதுவரையில் நடந்திருப்பதைப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியில் கமிட்டித் தலைவராக இருந்து பணியாற்றிய டாக்டர் பி. கே. ஆர். ராவ் இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்.

"குடிசைத் தொழில் அவ்வளவு பரவலாகவும் இல்லை வெற்றிகரமாக இருக்கிறதென்றும் சொல்ல முடியாது. முதியோர்



கல்வி, சுகாதாரம் ஆகிய அம்சங்களில் அவ்வளவாக வெற்றி காணப்படவில்லை. பொது மன்றங்களுக்குச் செல்வது, வாலிபர் கிளப்புகள், பெண்கள் ஸ்தாபனங்கள் இவைகளில் மக்கள் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளவில்லை, இருப்பதிலேயே மிகக் குறைவான வெற்றி காட்டும் அம்சம் இது தான். கடன் வாங்கும் வசதிக்குத் தவிர கூட்டுறவு ஸ்தாபன முறைகளிலும் மக்கள் அவ்வளவாக உற்சாகம் காட்டவில்லை. இந்த அம்சத்தில் தோல்வி தான் ஏற்பட்டுள்ளது, சுய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணத்தை கிராமங்களுக்கு ஏற்படுத்தும் முயற்சி, அவ்வளவாக வெற்றி பெறவில்லை கிராமப் பஞ்சாயத்துகள் விஷயத்திலும் இதே நிலைமைதான் இருக்கிறது. பஞ்சாயத்துகளின் நோக்கங்களையும் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை. திட்டமிட்டு கிராம அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளும் முன் முயற்சியும் காணப்படவில்லை"

மற்றொன்றும் சபாநாயகர் அனுமதியின் பேரில் சட்ட மன்றத்தின் கவனத்திற்கு எனக்கு இருக்கிற முழு ஆற்றலைக் கொண்டும் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

"அதிகாரிகளேகூட இந்தத் திட்டங்களின் தத்துவத்தைத் தெரிந்து கொள்ளாதவர்களாக உள்ளனர். கிராம சேவகர்கள் (சம்பளம் கொடுத்து வைக்கப்பட்டிருப்போர்) கிராமங்களுக்குப் போவதேயில்லை. அப்படியே போனாலும் தங்களுக்கு நன்றாகப் பழக்கப்பட்டவர்களிடம் மட்டும் சென்று விட்டு வந்து விடுகிறார்கள். இவர்கள் அதிகாரிகள் போல் நடந்து கொள்கிறார்கள்."

இது இதுவரையில் நடைபெற்ற சமுதாய நலத்திட்டத்தைப் பற்றி எடுக்கப்பட்ட கணக்கீட்டின் மதிப்பீடு ஆகும். இதே முறையில் இந்த சமுதாய நல திட்டங்கள் இனியும் சென்று கொண்டிருக்காது என்பதற்கு ஒரே ஒரு உறுதி நமது முதல் அமைச்சர் அவர்கள் அந்த நிர்வாகப் பொறுப்பை தாமே ஏற்றுக் கொண்டிருப்பதுதான். ஆனால் டெபுடி டைரெக்டர் சொல்லியிருக்கக்கூடிய குறைகளை எல்லாம் களைவதற்கு முன்வராவிட்டால் அந்தத் துறையில் நாம் செலவழிக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய்கள் அத்தனையும் பாழ்பட்டு விடும் என்று நான் எச்சரிக்கிறேன்.

சமுதாய நலத்திட்டங்கள் அமெரிக்காவின் துணைகொண்டு இப்போது நாற்பத்தைந்து நாடுகளில் நடந்து கொண்டு வரு

கின்றன. இந்த நாற்பத்தைந்து நாடுகளில் நடந்து வருகின்ற சமுதாய நலத்திட்டத்தில் எவ்வளவு வெற்றி கிடைத்திருக்கிறதோ அதற்குச் சமமான வெற்றி நம் நாட்டிலும் கிடைத்திருக்கிறதா என்று பார்க்கவேண்டுமே தவிர "எத்தனை கிணறுகள் வெட்டப் பட்டிருக்கின்றன" என்றோ, அல்லது அம்மையார் கூறியபடி எங்களை எல்லாம் "எங்களுடைய கிராமங்களுக்கு வந்து பாருங்கள்" என்று அழைப்பதாலோ மட்டும் பயன் இல்லை. இந்த வகையில் இந்தத் திட்டங்களின் மதிப்பீடு அமையவேண்டும்.

உணவுப் ப்ரச்னையைப் பொறுத்த வரையிலும்கூட, திட்டக் கமிஷனின் தலைவர் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள், "மாகாண சர்க்கார் தாம் போட்ட திட்டங்களில் இருந்து தவறி இருக்கிறார்கள்" என்று. ஆகவே "இதுவரையிலும் போட்ட திட்டங்களும் சரியாக நிறைவேற்றப் படவில்லை, எங்கள் கொள்கைகளையும் விளக்க மாட்டோம்" என்று சொல்வது "நாங்கள் எண்ணிக்கையில் பெருத்தவர்கள். நீங்கள் குறைந்தவர்கள். அடங்கிக் கிடவுங்கள் "என்பதாக இருக்கிறது." அவர்களுக்கு நான் சொல்வது என்னவென்றால் பேரழிவு என்ற ஒன்றுக்குப் பிறகு மக்களுடைய பேரெழுச்சி என்ற ஒன்று இருக்கிறது அது நல்ல தீர்ப்பு அளிக்கும். அந்தத் தீர்ப்பு காலம் கடந்து கிடைத்தாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அப்படிச் சொல்கின்ற போது "பேசுகின்ற உரிமை உங்களுக்குத் தந்ததாலே இப்படி எல்லாம் பேசுகிறீர்கள்" என்று எடுத்துச் சொன்னார்கள். அப்போது என் மனக்கண் முன் ஸ்ரீ சத்தியமூர்த்தி தோன்றுகிறார். பிரிட்டிஷாரின் ஆட்சி நடந்த காலத்தில் தன்னந் தனியாக நின்று போராடிய நேரத்திலே இதே கோட்டையில் இருந்துதான் "உங்களுக்குப் பேச்சுச் சுதந்திரம் கொடுத்திருக் கிறோம், அப்படிப் பேசினீர்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். அதே கோட்டை இன்று ஆளும் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் காரர்களுக்கு வந்திருக்கிறது. "பேச்சுச் சுதந்திரம் கொடுத்தோம். நீங்கள் எங்கள் சுதந்திரத்தைப் பறித்து விட்டீர்கள்" என்று அன் றைக்குச் சொன்ன பிரிட்டிஷ்காரர்கள் தேம்ஸ் கரையில் நிற்கிறார் கள். இங்கு கூவம் நதிக் கரையில் நின்று கொண்டு அதே பழைய தத்துவத்தில் நீங்கள் உழன்று கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* * * *



4—7—'57 ] [ வியாழக்கிழமை

[ (1957–'58) வரவு செலவு திட்டத்தின் மீது எழுந்த விவா தத்தில் ]

பிற்பகல் 1–37 சட்டமன்றத் தலைவர் அவர்களே, நமது மாகாண நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னிலையில் விவாதத்திற்காக வைத்திருக்கிற வரவு செலவுத் திட்டத் தைப் பரிசீலனை செய்து பார்க்கிற பொறுப்பு எல்லாக் கட்சிகளுக் கும் இருப்பதைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருப்பதினாலேயும் அதிலே கலந்து கொள்கிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதில் உண்மையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னால் இந்த வரவு செலவுத் திட்டம் எந்த நேரத்திலே நம்மிடத்தில் தரப்பட்டிருக் கிறது என்பதை ஆராய்வது அதனுடைய தன்மைகளை உண்மை யில் புரிந்து கொள்வதற்கு மெத்த உதவியாயிருக்கும் என்று கருதுகிறேன், அப்படி ஆராய்வதில் நமக்கு சாதகமான சூழ் நிலைகள் மொத்தம் எவ்வளவு இருக்கின்றன? இயற்கை நமக்கு இவ்வாண்டு உதவி புரிந்திருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கின்றார்கள். இந்த நாட்டு மக்களிடையே எத்தனையோ மாதிரியான மனக் குமுறல்கள் இருந் தாலும் இந்த நிமிடம்வரை சட்டங்களுக்கு அடங்கி நடக்கிற பொறுப்புள்ள குடிமக்களாக இருந்துகொண்டு, கேட்கின்ற வரிகளை எல்லாம் அவர்கள் தருகிறார்கள், தீட்டப்படுகிற சட் டங்களுக்கு மதிப்பளிக்கிறார்கள், இது நல்ல சூழ்நிலைதான் அதே போன்று நம் நாட்டில் இருக்கிற பத்திரிகைகளில் பெரும்பா லானவை நிர்வாகத்திலே, திட்டங்களிலே, கொள்கைகளிலே எந்தமாதிரி குறைபாடுகள் இருந்தாலும், வலிவோ, பொலிவோ குறைந்திருந்தாலும் அந்தப் பொலிவினை அவர்கள் இழந்துவிடுகிற நேரத்திலே, நல்ல வர்ணப் பூச்சிகளாக அவைகளைக் காட்சி அளிக்கும்படிச் செய்து இன்றைய தினம் ஆதரவு அளித்து வரு கின்றது, இது மட்டுமல்ல, நிர்வாகத் திறமையும், நல்ல நம் பிக்கை பெற்றவர்களையும், திறமை படைத்த அமைச்சர்களையும் பொதுவாழ்விற்கென்று தன்னை ஒப்படைத்துவிட்டு அதைத் தன் கட்சி தவிர வேறு எந்த கட்சியாலும் சாதிக்க முடியாதென்று நம்பிக்கொண்டிருக்கிற, தங்கள் கட்சியை எதிர்க்கிறவர்கள் சிலரை அணைத்து அழித்தும் சிலரை ஒழித்தும் கட்டத் திட்ட மிடும் திரு. காமராஜின் தலைமையில் இன்றைய மந்திரி சபை

இருக்கிறது. அது மாத்திரமல்ல, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பார்த்துப் பாடம் பெறக்கூடிய வகையில் நல்ல திறமை வாய்ந்த அதிகார இயந்திரம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது அதனால் "ஆனால்" என்ற அருவருப்பான சொல்லை நானாகத் தேடிக்கொள்ளவில்லை; அது தானாகவே துரத்திக்கொண்டு வருகிறது, ஆனால் இவ்வளவு நல்ல சூழ்நிலைக்குப் பிறகும் விலைவாசிகள் ஏறியிருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டம் தலை விரித்து ஆடுகிறது நம் நாட்டில். நாட்டில் பற்றுக்குறை எல்லாத் திக்கிலும் துரத்திக்கொண்டு இருக்கிறது. சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்கள், சர்க்கார் துணை அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்கள் அத்தனைபேர்களும் இன்றைய தினம் மனக்குறையோடு தான் இருக்கிறார்கள் அதைப்போக்க நல்ல சூழ்நிலை நம்மிடம் உருவாக்கப்படுவதில்லை. இந்த நிலையில் அலுவலகத் துறையிலுள்ளவர்கள் சர்க்காருடைய உதவியை பெற்றிருக்கிறார்கள் என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அப்படி அலுவலகத் துறையிலுள்ளவர்கள் யாரும் மனத்திருப்தியோடு இல்லை என்பதை அமைச்சரவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நான் இதை நினைவூட்டுவது அவர்கள் பேரில் வைத்திருக்கும் அன்பையும், அபிமானத்தையும் அதிகப்படுத்துவதற்கே தவிர குறை கூறுவதற்கல்ல. குறை கூறுவதற்கு இருக்கின்ற பல காரியங்களைப்பற்றி இம்மன்றத்தில் விளக்கமாகப் பேசப்பட்டது என்று மரியாதையாகச் சொல்லுகிறேன். இம் மன்றம் ஒவ்வொருவரும் தங்களுடைய பேச்சுத்திறமையை காட்டிக்கொள்வதற்காக கூட்டப்படவில்லை ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியங்களையும் பற்றிக் கூறுவார்கள், அதற்கு திருப்பி பதில் அளிப்பது இதுதான் இங்கே நடந்தது—ஆனால் அவ்விதம் இருத்தல் கூடாது என்று மன்ற உறுப்பினர்களுக்கும் எனக்கும் நானே கவனமூட்டிக்கொள்கிறேன். ஆனால் எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் அத்தனை காரணங்களையும் காட்டி முறைப்படி குற்றம் சாட்டுகிறார்கள். காரணம் ஒரு கொள்கையை கடைப்பிடித்து அதன்படி நின்று தக்க ஆதாரங்களுடன், கட்டுப்பாடுடன், கண்ணியத்துடன், எடுத்துரைப்பதற்குள்ள தகுதி எதிர்க்கட்சிக்காரர்களிடம் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடம் இருக்கிறது. இந்திய துணை கண்டமதன் மற்ற சட்டசபைகளில் எல்லாம் என்ன நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த மன்றத்திற்கு கவனமூட்ட



விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் பார்த்தோம் தேர்தலில் தோற்றுப்போன ஒருவர் கவர்னராக பதவி பெற்று சட்டசபையில் வந்து ஆற்றிய உரையை எதிர்த்து பெரிய அமளி நடைபெற்றிருக்கின்றது. நம்முடைய மாகாணத்தில் பெருமையாகவும் திறமையாகவும் தம்முடைய பதவியை நிர்வகித்துக்கொண்டிருந்த கவர்னர் பிரகாசா அவர்கள் பம்பாய் சட்ட மன்றத்தில் தன்னுடைய உரையை நிகழ்த்துவதற்காக சென்ற நேரத்தில் இரு மொழி இராஜ்யம் வேண்டாம் என்ற காரணத்தைக் காட்டி சட்ட சபையில் ஒரு பெரிய அமளி நடைபெற்றிருக்கின்றது. எல்லாவற்றையும் விட மேலாக, சபா நாயகர் அவர்களை, ராஜஸ்தான சட்டசபையிலே திரிலோகசிங் என்பவர் சபா நாயகர் வெளியே போயிருக்கிற சமயம் பார்த்து சபா நாயகருடைய இருப்பிடத்திலே ஏறி இருந்துகொண்டு அகல மாட்டேன் என்றார் இத்தனை சம்பவங்கள் எல்லாம் மற்ற சட்டசபைகளில் நடக்கின்ற இந்தச் சமயத்தில். இங்கு கட்டுப்பாடோடு, கண்ணியத்தோடு, பாசத்தோடு நடந்துகொள்ளுகிற எங்களுடைய தன்மையை நீங்கள் உணர்ந்துகொள்ள மறுக்கின்றீர்கள், அதோடு எங்களைப்பற்றி கண்டித்து குறையும் கூறி வருகிறீர்கள் என்றால், நீங்கள் எங்களை நான் முன்னால் குறிப்பிட்ட அந்த பாதைக்குத் திருப்பி வருகின்றீர்கள் என்றுதான் அர்த்தம். நாங்கள் எப்போதும் ஜனநாயகத்தின் அடிப்படையிலே நின்றுதான் பணியாற்றுகிறோம், நீங்கள் ஆணவமாக வேண்டுமானால் கருதிக்கொள்ளலாம். நாங்கள் இந்த சபைக்கு வந்தது என்றைக்கும் எதிர் அங்கத்தினர்களாகவே இருப்பதற்காக நுழையவில்லை—இன்றைக் கில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத்தான் போகிறோம். (ஆரவாரம்.) ஆகவே நாங்கள் பொறுப்பை உணர்ந்திருக்கின்றோம். பொறுப்பற்ற முறையில் நாங்கள் நடந்துகொள்ள மாட்டோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக இங்கு பல அங்கத்தினர்களும் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன குறைபாடுகளையெல்லாம் நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் ஒரு குறிப்பு எடுத்துவைத்திருக்கிறேன். யார் யார் எதை எதைச் சொன்னார்கள் என்றல்ல—என்னென்ன குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள் என்பதை குறித்து வைத்திருக்கின்றேன். ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியின் நிலைமைகளைப் பன்முறை எடுத்துச் சொல்லியும், அவைகள்

கவனிக்கப்படவில்லை. எங்களுடைய தொகுதி கவனிக்கப்படுமா என்று தெரிய வேண்டும் என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களில் பலரும் கேட்டார்கள். நான் பிறஉறுப்பினர்களைப்பற்றி கவலைப்படவில்லை. காங்கிரஸ்காரர்களே இந்தத் திண்டாட்டம் அடைகின்றபொழுது மற்றவர்களுடைய நிலைமையைப் பற்றி கூறவே வேண்டாம். கனம் அங்கத்தினர் அம்மையார் ஒருவர் கூறினார் "எந்தெந்த மந்திரிகளையெல்லாமோ அழைத்து வந்து எங்களது குறைகளை எடுத்துச் சொன்னோம். கடைசியில் கனம் மந்திரி கக்கன் அவர்களை கூட அழைத்துவந்து எங்கள் குறைகளை சொன்னோம். அவைகளுக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை. எங்களது துன்பக் கண்ணீர் துடைக்கப்படவில்லை" யென்றும் அம்மையார் அவர்கள் கசிந்துருகிக் கண்ணீர்விட்டார்கள். ஏழைகளாகிய நாங்கள், எதிர்க் கட்சியிலுள்ளவர்களாகிய நாங்கள், 'இதுவும் ஒரு கட்சியா'? இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று நீங்கள் நினைக்கின்ற நேரத்தில், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நல்ல சீர்திருத்தங்கள் எல்லாம் கொண்டுவந்த பிறகும், நல்ல நல்ல திட்டங்கள் எல்லாம் கொண்டுவந்த பிறகும், இவைகள் இத்தனை மோசமாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று என் பேதை நெஞ்சம் எண்ணத் துணிகின்றது. மற்றொரு அம்சம், விவசாயிகளுக்கு அறுபது நாற்பது சட்டம் வந்த பிறகு அதனால் நிலச்சுவான்தார்களால் விவசாயிகள் பாதிக்கப்படுவதின் நிலைமைகளைப்பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்து காட்டினார்கள். சட்டங்களை நிறைவேற்றினால் மாத்திரம் போதாது. இதை நடத்துகின்ற நிர்வாக இயந்திரம் பழுது ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பல இடங்களில் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். மட ஆலயங்களில் உள்ள ஏராளமான நிலங்கள் உழவர்களுக்கு தரப்பட வேண்டும், என்று அரசாங்கத்தை கவனப்படுத்துகின்ற வகையில் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும்போது, ஐயோ! இவர்கள் எல்லாம் நம் பக்கத்தில் இருக்கவேண்டியவர்கள், தேர்தலில் பிரிந்து போய்விட்டார்களே' என்று எண்ணக்கூடிய நிலையில் இருக்கிறது. (சிரிப்பு.) இவை தவிர ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. கிராமக்களுக்குச் சரியான பாதை போக்குவரத்து செய்து கொடுக்கப்படவில்லை, மின்சார கெடுபடி அதிகமாக இருக்கிறது, இலங்கையிலிருந்து ஏற்படுகின்ற கஷ்டங்கள், இவைகளுக்கு எல்லாம் நிவா



ரண வழி வேண்டும் என்று இன்று காலையிலிருந்து பல அங்கத்தினர் கூறுகின்றனர். இவைகளையெல்லாம் நாங்கள் உங்களைப் பார்த்துக் கேட்கும்போது நீங்கள் கோபப்படுவானேன்? வருத்தப்படுவானேன்? நாங்கள் இவ்விடத்திற்கு உங்களுக்கு லாலி பாடுவதற்காக வரவில்லை குற்றங் குறைகளை எடுத்துக் கூறவே வந்திருக்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் பொறுப்பு. நாங்கள் இங்கிதம் தெரியாமல் நடந்துகொள்ளவில்லை, வேலையில்லாத் திண்டாட்டம் போகவில்லை. நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை, குடிதண்ணீர் வசதி கிடைக்கவில்லை என்பதனையெல்லாம் பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். இவ்வளவுக்கும் காரணமென்ன? காங்கிரஸ் அங்கத்தினர்களே. உங்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் ஒன்று கூறுகிறேன். எதிர்க் கட்சியிலுள்ளவர்களுக்காவது குறைகள் இருக்கும், அவை நிறைவேற்றித் தருவதற்காக அவர்கள் குறைகளை கூறவேண்டியதுதான். ஆனால் ஆளும் கட்சிக்காரர்களாகிய உங்களுக்கு பல கமிட்டிகள் இருக்கின்றன. அதன் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவித்து உங்களது குறைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கலாம், அவ்விதமிருந்தும் நீங்கள் இங்கு எடுத்துச் சொல்லுவதற்குக் காரணம் என்ன? நீங்கள் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டீர்களா? அல்லது அவர்களது செவிகளில் நீங்கள் கூறுவது ஏறவில்லையா? அல்லது எங்கள் எதிரில் சொன்னாலாவது அமைச்சர்கள் வெட்கப்பட்டுக் கொண்டாகிலும் குறைகளைத் தீர்ப்பார்கள் என்பதற்காக பேசுகிறீர்களா? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது. ஆகவே இம்மாதிரியான குறைகளைப் பற்றி விரிவாக பேசவில்லையென்றால் எதிர்க்கட்சிக்காரர்களாகிய எங்களுக்கு பட்ஜெட்டின் அடிப்படை கொள்கைகளைப்பற்றி இன்னும் அதிகம் பேசுவதற்கு இடம் கிடைத்திருக்கும், இங்கு கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் எல்லாம் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்பதுதான். ஜனநாயகம் வளருவதற்கு நிர்வாகக்கொள்கை அடிப்படையில் கவனிக்கவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களின் அனுமதியின் பேரில் இந்த மன்றத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதியை எடுத்துக்காட்ட விரும்புகிறேன் :—

"The Finance Minister in his Budget Speech will deal with the policies of the new Ministry."

என்று வாக்களித்திருப்பதனால் நிதி அமைச்சர் அவர்களது உரையில் கொள்கை அளவில் அறிவிக்கப்பட்டிருக்கும் என்று எண்ணி

இதைத் துருவித்துருவிப் பார்த்தேன், காணவில்லை. இதில் கொள்கை விளக்கம் இல்லாததற்கு இரண்டு காரணம் காட்டப் படலாம், ஒன்று எங்களது கொள்கை உங்களுக்குத் தெரியாதா என்று கேட்பது, இன்னொன்று பொருளாதாரத்தையும் அரசியல் சாஸ்திரத்தையும் சேர்த்துப் புள்ளி விவரங்களோடு தருகின்றேன், பார்—என்று சொல்லுவது, நான் பள்ளியில் இரண்டு பாடங்களையும் சேர்த்து ஒன்றாய்த்தான் படித்தேன் இருந்தும் இதில் கொள்கை விளக்கம் என்று ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன், ஏனென்றால் உண்மையிலேயே இந்த வரவு செலவு திட்டத்தை நான் ஆராய்ந்த வரையிலும் இந்த வரவு செலவு திட்டத்தில் தரப்படுகின்ற விவரங்கள் எல்லாம் ஒரு குழுவின் கீழ் தயாராக்கப் படுகின்றன. இந்தக் குழுவினால் பரிசீலிக்கப்பட்ட மூன்று அம்சங்களைப் பார்த்தால்தான் இந்த வரவு செலவு திட்டத்தின் தாரதம்மியம் நன்றாக தெரியும்,

உதாரணமாக இன்றையதினம் கானடாவில் இம்மாதிரி வரவு செலவு திட்டத்தை ஆளும் கட்சியினர் கொண்டுவந்தால் உண்மையிலேயே அச்சத்தோடு கொண்டுவந்தார்கள் என்று கருதலாம், ஏனென்றால், அங்கே ஆளும் கட்சியினருக்கும் எதிர்ககட்சியினருக்கும் இடையிலே உள்ள எண்ணிக்கையின் வித்தியாசம் 10, 12 தான், இன்றைய தினம் என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சியினர் நாங்கள் 15 பேர்கள்தான் இருக்கிறோம் என்று கூறுவார்கள். அதுமாத்திரமல்ல, எதிர்க் கட்சியிலுள்ள எல்லோரையும் கூட்டிச் சேர்த்துப் பார்த்தாலுங்கூட, கூட்டுவதும் சேர்ப்பதும் கடினம், அத்தனை பேர்களையும் காட்டிலும் 8 மடங்குக்கு மேல் அதிகமான பலமுள்ளவர்கள் ஆளும் கட்சியினர். அதனால் அவர்களுக்கு நிச்சயம் தெரியும். என்ன குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டாலும் என்ன ஒழுங்கீனங்கள் எடுத்து விளக்கப்பட்டாலும், எந்தக் கொள்கை விமர்சனம் செய்யப்பட்டாலும், இன்றுதானே பேசப் போகிறார்கள், பேசி என்ன காரியம் நடக்கப்போகிறது, என்ன ஆகிவிடப் போகிறது என்ற எண்ணம் தோன்றியிருக்கக்கூடும். இந்த நம்பிக்கையின் பேரிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன், எங்கள் எண்ணிக்கையை மட்டும் கருதாமல், எண்ணத்தைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்,



நிதி அமைச்சர் அவர்களைப் பலர் பாராட்டினார்கள். பாராட்டுதலினால் அவருக்கு அஜீரணம் ஏற்பட்டுவிடுமோ என்ற முறையில் பல அங்கத்தினர்கள் பாராட்டினார்கள், ஆனால் என்னுடைய பாராட்டுதல் இனிப்போடு கொஞ்சம் காரம் கலந்ததாக இருக்குமாதலால் அவருக்கு ஏற்பட்ட அஜீரணம் மாறி ஜீரணம் ஆகிவிடும் தான் யார் என்று நாங்கள் அவரை அறிந்துகொள்ள முடியாமல் நடந்து கொண்டதற்கு நிதி அமைச்சரை வெகுவாகப் பாராட்டுகிறேன். தான் யார் என்று காட்டாமல் இருப்பதற்குக் காரணம் கண்டு பிடிப்பதற்கு முன்னால் தான் யார் என்று காட்டிக் கொள்வது நல்லது அல்ல என்று கருதினார்களோ, அல்லது தான் யார் என்று கண்டு பிடிக்கக்கூடாது என்று கருதினார்களோ, தான் யார என்று காட்டிக்கொள்ளவில்லை. நான் சொல்லுவது பொருளாதாரப் பாஷையிலே சொல்லுகிறேன். அதிக வரி போட்டுப் பொருளாதாரத்தை பெருக்குவதை ஆதரிக்கின்றாரா? கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு நாட்டு நிர்வாகத்தை ஓட்டிச் செல்லுகின்ற பரம்பரை பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா? துண்டு விழும் பட்ஜெட்டினால் நாட்டிற்கு நன்மை உண்டு என்று கருதுகின்ற பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா? உபரி பட்ஜெட் நாட்டிற்கு நல்லது என்று கருதுகின்ற பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா? என்பதை அவர் வார்த்தைகளில் காணமுடியவில்லை. துண்டு விழும் பட்ஜெட்டைப் பற்றி பேசுகின்ற பொழுது "Deficit Budget is not bad. It is a virtue also" என்று சில அங்கத்தினர்கள் பாராட்டினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ முத்தையா செட்டியார் அவர்கள் "இதுதான் ஒரு நல்ல பொருளாதாரம். பன்னெடுங்காலமாக நான் கூறிக்கொண்டு வந்த யோசனையை இப்பொழுதுதான் ஏற்றுக்கொண்டார்கள்" என்று மிக மிக அவசரமாக கூறிச் சென்றார்கள். பற்றுக்குறை பட்ஜெட்டின் மூலம் நாட்டு நலனைச் சரிக்கட்ட விரும்பினாரா? அல்லது நிதி அமைச்சருக்குகட்டுக்கடங்காத நிலைமையில் இந்தப்பட்ஜெட்டை கொண்டுவந்திருக்கிறாரா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இரண்டிற்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்,

ஜெர்மன் தேசத்தை ஆண்ட ஹிட்லர் துண்டு விழும் பட்ஜெட்டை சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மகத்தான

ஆயுதம் என்று கருதி, கட்டுக்கடங்காத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, ஏராளமான ஜெர்மன் மார்க்கு நோட்டுகளை அடித்து துப்பாக்கியின் துணை கொண்டு விநியோகித்து, தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. பற்றாக்குறை பட்ஜெட்டின் மதிப்பையும் நிதி அமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. ஒரு சமயம் நிதி அமைச்சர் அவர்கள் துண்டு விழும் பட்ஜெட் இருப்பதுதான் சரி என்று கருதுகிறாரா என்பதற்காக சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மீது அவர் நிகழ்த்திய பேருரையை நான் மிக்க கவனத்தோடு பார்த்தேன். விசித்திரம் என்னவென்றால் இன்று அவர் துண்டு விழும் பட்ஜெட் சமர்ப்பித்ததற்காக எப்படி பாராட்டப்பட்டிருக்கிறாரோ, அதே மாதிரிதான் அன்று இதே மன்றத்தில் அவர் அதிக வரி போட்டதற்காகப் பாராட்டப்பட்டிருக்கிறார். (சிரிப்பு.) நிதி அமைச்சர் தனது நிலைமைக் கேற்ப வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கிறார் என்று கருதுகிறேன், பாராட்டுதல் ஜனநாயகத்தில் சகஜம்தான். ஆனால் கொஞ்சம் அது அதிகமாய் போய்விட்டது என்பது உள்ளபடியே என்னுடைய வருத்தம்

துண்டுவிழும் பட்ஜெட் போடுகின்ற நேரத்திலே புதிய வரிகளை அவர் போடவில்லை என்பதைப்பற்றியும் சில உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசினார்கள். என்னை பொறுத்த வரையில், என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில் வரி அதிகமா, குறைவா என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் கஷ்ட நஷ்டமில்லை என்ற கருத்துக்கொண்டவர்கள் நாங்கள். தாங்குபவர்கள் மீது வரி போடுவதும் தாங்கமுடியாதவர்கள் மீது இருக்கும் வரியைக் குறைப்பதும்தான் நான் படித்த பொருளாதார அரிச்சுவடியில் போதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமயம் நிதி அமைச்சர் அதற்கு மேல் படித்த பொருளாதாரத்தில் வேறு விதமாக போதிக்கப்பட்டிருக்கலாம். அல்லது அவருக்கு நிர்வாகத்தில் ஏதாவது புதிய அநுபவம் ஏற்பட்டிருக்கிறதோ என்னவோ! (சிரிப்பு.) பொருளாதார தத்துவத்தை விளக்கினவர்கள் 'Progressive taxation,' 'regressive taxation' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையே வேறு விதமாக 'direct taxation,' indirect taxation' என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

இந்த நிமிடம் வரையிலே நமது வரவு செலவுத் திட்டத்தில் பார்த்தால் ஏழை மக்கள் தருகின்ற விற்பனை வரியிலிருந்துதான்



நமக்கு கணிசமான அளவுக்கு பணம் வருகிறது. எத்தனையோ துறைகள் இந்த நேரத்திலே கவனிக்காமல் விட்டு வைக்கப்பட்டிருக்கின்றன என்று எத்தனை பெரிய கூக்குரல் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது? உண்மையிலேயே விற்பனை வரி மக்களை வாட்டி வதைக்கின்றது என்பதை பல்வேறு கட்டத்தில் எடுத்து காட்டியிருக்கிறோம். இந்த நேரத்தில் நாம் எல்லாம் எதிர் பார்த்தது என்னவென்றால் உணவுப் பொருள்களுக்காவது நமது நிதி அமைச்சர் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பார்கள் என்பதுதான். தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகளும் வியாபாரச் சங்கங்களும் பலகாலமாக பல்வேறு மகாநாடுகள் கூட்டி, அவைகளுக்கு அமைச்சர் சிலரைக் கூட வரவழைத்தும், அவர்களிடம் மகஜர்கள் சமர்ப்பித்தும் தங்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்லி "பல்வேறு கட்டங்களில் போடுகின்ற விற்பனை வரியை ஒரேகட்டத்தில் போட்டால் நாங்கள் திருப்தி அடைவோம்" என்று எடுத்துச் சொன்னார்கள். முதலமைச்சர் வியாபாரக் கூட்டம் நிறைந்த விருதுநகரைச் சேர்ந்தவர் என்பதால் அவ்வாறு செய்வார் என்று நினைத்தோம். வியாபாரிகளுக்குச் சலுகை காட்டுகிறார் என்று நாங்கள் சொல்லுவோம் என்று அஞ்சி ஒருவேளை அக் காரணத்தினால்தான் விற்பனை வரி விஷயத்தில் கொஞ்சம் கண்டிப்பாக இருக்கிறார்களோ என்று எண்ணுகிறேன். அப்படி நாங்கள் சொல்லமாட்டோம், மற்ற விஷயங்களைக் கருதி அப்படிச் செய்திருந்தால் போகட்டும். ஆனால் எங்களுக்காக அப்படிச் செய்திருந்தால் தயவு செய்து அதை மாற்றிக்கொள்ளுங்கள். ஒருமுனை விற்பனை வரி போடவேண்டுமென்றும், உணவுப்பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் கருதுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் foodgrains என்பதை foodstuffs என்று மாற்றினால் ஓரளவுக்கு நாட்டிலே நல்ல திருப்தி ஏற்படும். வார்த்தைகள் மாற்றம், ஊர்களின் பெயர்கள் மாற்றம்தான் "எங்கள் கட்சியின் திட்டம்" என்று சொல்லுவதாக அவர் புன்னகை எடுத்துக்காட்டுகிறது. (சிரிப்பு.) நாங்கள் சொல்லுகின்ற திட்டங்களெல்லாம் செலவு இல்லாத திட்டங்கள்தான். பெரிய செலவுத் திட்டங்கள் கொடுத்தால் அவர்கள் தான் எங்கு போவார்கள்? வடக்கே போகிறார்கள். ஆனால் அங்கு கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள். (சிரிப்பு )

உணவு தானியங்கள் என்பதை உணவுப் பொருள்கள் என்று மாற்றி அவைகள் மீது விற்பனை வரியை நீக்கினால், அதனால் சில லட்சரூபாய் தான் வருமானம் குறையும். ஆனால் மக்கள் சாப்பிடுகின்றபொழுது சர்க்காரை மனமார வாழ்த்துவார்கள். உணவு சாப்பிடுகின்ற நேரத்திலே "நல்ல சர்க்கார் நாட்டில் நிலவுகிறது, நல்ல மந்திரி சபை நாட்டிலே ஆளுகிறது, உணவுப் பொருள்கள் மீது வரியை எடுத்துவிட்டார்கள்" என்று மனமார வாழ்த்துவார்கள். சட்ட சபையிலே பலபேர்கள் வந்து போகிறார்கள், ஜனநாயகத்தின் பரிசாக இதை மதிப்பார்கள். முதல் கவளத்தில் முதலமைச்சரை வாழ்த்துவார்கள். இரண்டாவது கவளத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள். நிதி அமைச்சர் C. சுப்பிரமணியம்:- மூன்றாவது கவளத்தில் இதை எடுக்கச் சொன்னவரை வாழ்த்துவார்கள். (சிரிப்பு.)

திரு. C. N. அண்ணாதுரை:—சாப்பிடுகின்ற நேரத்திலே சாப்பாட்டுப் பொருள்கள் மீது வரியில்லை என்று பொதுமக்கள் ஒருமுகமாக வாழ்த்துவார்கள். சாப்பிடும்பொழுது வாழ்த்துவது நல்லது என்று வைதீகர்கள் கூறுவார்கள். மற்ற விஷயத்தில் வைதீகத்தில் வேறுபட்ட கருத்தைக்கொண்ட நான் இது விஷயத்தில் வேண்டுமானால் ஒத்துக்கொள்ளுகிறேன்.

வரவு செலவுத்திட்டத்தில் புதுவரி போடாதது பற்றி இங்கே பேசிய பல காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். நிதி அமைச்சர் வரி போடாததற்குக் காரணம் பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் ஏற்கனவே பட்ட அடியால் ஏற்பட்ட தழும்பு மாறாமல் இருக்கும்பொழுது தானும் அதன் மேல் அடிக்கவேண்டுமென்று வரி போடாமல் விட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். (சிரிப்பு ) எப்பொழுதும் நிதி அமைச்சர்கள் மன அரிப்புக் கொண்டவர்கள். ஒரு தடவை நிதி அமைச்சர் பீடத்தில் உட்கார வைத்துவிட்டால் எப்பொழுதும் கனவிலும் நினைவிலும் அவருக்கு வரி என்ற நினைவுதான். ஒரு ஹாஸ்ய பத்திரிகையில் படித்தேன். மனைவி கட்டிக் கொண்டிருக்கும் சாதாரண சேலையைப் பார்த்து நிதி அமைச்சர் "இதில் வரி இல்லையா? என்று கேட்டாராம். அங்குகூட நிதி அமைச்சருக்கு வரியின் கவனம் போகவில்லை. கற்பனை நிதி அமைச்சரைப்பற்றி நான் குறிப்பிட்டேன் ; இந்த நிதி அமைச்சரைப் பற்றி அல்ல, (சிரிப்பு.)



நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வரி போடாமல் விட்டிருக்கின்றார். எங்களுக்குப் பயந்து அவர் வரி போடாமல் விட்டிருக்கின்றார் என்று நாங்கள் சொல்லவில்லை ஆனால் அவர்களுடைய கட்சியிலே இருப்பவர்களில் ஒரு சிலர் அப்படிச் சொன்ன காரணத்தால், என்னுடைய கழகத்தைச் சேர்ந்தவர்களும், "ஆமாம், எங்களுக்குப் பயந்துதான்" என்று சொன்னார்கள். நிதி அமைச்சர் அவர்கள் வரிபோடாமல் இருப்பார் என்பதிலே எனக்கு உண்மையிலே நம்பிக்கை இல்லை. ஏனென்றால், அவர்களுடைய வாக்கியத்தை நல்ல தமிழில் எழுதியிருக்கிறார் என்று அங்கத்தினர்கள் எல்லோரும் பாராட்டினார்கள் தமிழ் எப்பொழுதும் பொய்க்காது தமிழிலே இருக்கும் வாக்கியத்தைப் பார்த்தால், "இந்த எண்ணத்தில், எப்பொழுது எஞ்சிய பற்றுக்குறையை ஈடு செய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்" என்று இரண்டு மூன்று ஆபத்தான பதங்களை மிக அழகாக உபயோகப்படுத்தி இருக்கிறார்கள்,

இதற்கு நேர்மாறாக, பம்பாய் மாநில நிதி அமைச்சர் ஜிவராஜ் மேத்தா அவர்களும் இதைப்போல் துண்டுவிழுந்த பட்ஜெட்டை சமர்ப்பிக்கும்போது, 'என்னுடைய மாநில மக்கள் ஏகமாக வரி விதிக்கப்பட்டிருக்கின்றார்கள். புதிதாக மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியிலே பெரும் பாகம். அதாவது 40 சத விகிதம் வரை, என்னுடைய மாநிலத்திலிருந்து வசூலிக்கப்படும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகையால், வரவு செலவுத் திட்டத்திலே துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்கு நான், புதுச் செலவுத் திட்டத்திலே துண்டு விழுவதைச் சரிகட்டுவதற்கு நான், புதுவரித் திட்டங்கள் எத்தனையும் போடவில்லை," என்று காரணம் காட்டுகிறார்.

ஆனால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் காரணம் காட்டவில்லை—காரணம் காட்டாதது மாத்திரம் அல்ல—காரணம் காட்டியிருக்கிறார்களா என்று ஆவலோடு அலசிப் பார்த்தேன், காரணம் காட்டாததிலே ஒரு பயம் பிறந்தது. கடைசியில் பார்க்கும்போது, "எந்த எண்ணத்திலோ இப்பொழுது எஞ்சிய பற்றுக் குறையை ஈடு செய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். அதில், "தற்காலிகமாக" என்று இருப்பதாலே "இந்த ஆண்டு தான் அங்கிருந்து விழுந்திருக்கிறது அடி, அந்த அடித்தழும்பே இன்னும் மறையவில்லை, அடுத்துத் துண்டு நான் தருகிறேன், அது

வரையில் பொறுங்கள்" என்று அடுத்த ஆண்டுக்குக் காக்க வைக்கிருர் என்று தோன்றுகிறது.

வரி என்று குறிப்பிடுகிற நேரத்தில், வரிகளுடைய முறைகளைப் பார்த்துத்தான் ஆளும் கட்சி அல்லது சர்க்காருடைய போக்குகளை நாம் தீர்மானித்துக் கொள்ள முடியும். அதனுலே தான் பல்வேறு கட்சிகள், முற்போக்குக் கட்சிகள்—இந்த நாட்டை இன்று யார் ஆளுகிருர்களோ, அவர்களுடைய திட்டங்கள் சமதர்மம் பொருந்தியவை என்று எடுத்துச் சொல்லியும், அதற்கேற்றபடி நடக்கவில்லையே என்று வருத்தப்பட்டார்கள். அப்பேர்ப்பட்ட வருத்தத்திற்குக் காரணம் புரிகிறது. நம்முடைய ஆட்சியாளர்கள், "சமதர்மம்" சமதர்மம் என்று எடுத்துச் சொல்கிருர்களே தவிர, அவர்கள் இன்றைய தினம் கையாளுவதெல்லாம் சமய தர்மமே தவிர, சமதர்மம் அல்ல. அதாவது, சமயத்திற்கேற்றபடி சில தர்மங்களை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். ஐயோ, போதும் வரி போடுவதற்கு இது சமயம் அல்ல, ஆகவே, இப்பொழுது வரி போட வேண்டாம் என்ற அந்த முறையிலே தான் இவர்களுடையது சமதர்மமாக இல்லை, சமய தர்மமாகத்தான் இருக்கிறது.

இனி வரவு செலவுத்திட்டத்தின் காலத்தைப்பற்றி யோசிக்கும்போது முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் இருக்கிருேம். முதல் ஐந்தாண்டுத் திட்டம் நம் நாட்டை ஓரளவு சீர்படுத்தி இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேலும் சீர்படுத்தும். ஆகையால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியிலே புதிய வரியைப் போட்டாலும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்ற வாதத்தை என்னுல் புரிந்துகொள்ள முடியாது. எப்பொழுது புரிந்து கொள்ள முடியும் என்றுல், முதல் ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலேயே சகல ஏழைஎளிய மக்களுக்கும் நன்மை பயக்கிறது என்று புள்ளி விவரங்களோடு காட்டி, நாட்டு மக்கள் அதனை ஏற்றுக்கொண்டு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே அவர்களுக்குக் கிடைத்த வலுவு காரணமாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வாங்கிக்கொள்ள கூடிய வலுவு ஏற்படுமானுல் அப்பொழுது அவர்களுடைய வாதத்தை உண்மையில் பாராட்டக் கூடும்,



நல்ல வேளையாக சபா நாயகராக அமர்ந்திருக்கும் தாங்கள், மருத்துவத் துறையில், மெலிந்திருப்பவர்களுக்குக் கொஞ்சம் கடினமான டானிக்கு தந்திருக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னுல், அடிப்படைத் தேவையாக உணவு, உடை, குடியிருப்பு இடம் ஆகிய இந்த மூன்று அடிப்படைத் தேவைகளைப் போதுமான அளவு நாம் பெற்றிருக்கிருேமா என்று பார்த்தால், Mr. Sriman Narayanan, The General Secretary of the Congress Party has written in the Economic Review like this:

"The people feel that while the poorer sections cannot escape taxation of an indirect nature in the form of sales tax and excise duties on various necessaries of life, the richer classes have become experts in managing evasion and avoidance of taxes" ஐந்தாண்டுத் திட்டத்திற்காகப் போடப்பட்ட வரிகளைப் பற்றி அகில இந்திய காங்கிரஸின் செயலாளர் ஸ்ரீமன் நாராயண், காங்கிரசுக் கட்சியால் நடத்தப்படுகின்ற, ஏறக்குறைய Official Journal என்று சொல்லக்கூடிய Economic Review வில் என்ன சொல்லியிருக்கிருர் என்றுல், பணக்காரர்கள் தங்களுக்குப் போடக்கூடிய வரியிலிருந்து இலகுவாகத் தப்பித்துக் கொள்கிருர்கள்; ஆனுல், ஏழை மக்களால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை" என்கிருர்.

தாம் மட்டும் சொன்னுல் போதாது என்ற காரணத்தால், பொருளாதாரப் பேராசிரியர் கால்டர் என்பவருடைய கருத்தையும் தெரிவிக்கிருர்.

"According to Prof. Koldor's estimates, evasion of direct taxes in India is of the order of Rs. 200 to 300 crores per year." இப்படி கால்டர் என்ற பொருளாதாரப் பேராசிரியரின் மதிப்பீட்டின்படி, இந்தியத் துணைக்கண்டத்தில் ஆண்டொன்றுக்கு இப்படி ஏமாற்றும் வரி 200 அல்லது 300 கோடி ரூபாய் வரையில் இருக்கும் என்ற புள்ளி விபரத்தை தந்திருக்கிருர், 200 அல்லது 300 கோடி ரூபாய் என்பது அதிகமானது; 30 அல்லது 40 கோடி தான் இருக்கலாம். எவ்வளவு தாராளமாக பார்த்தாலும் 60 கோடிக்கு மேல் இருக்காது என்று இந்திய சர்க்கார் சொன்னதையும் அறிந்திருக்கிறேன். எனினும் இப்படிப் பெருத்த

அளவுக்கு வரி போய்க் கொண்டிருக்கிறதென்பதை ஸ்ரீமன் நராயண் அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அது மட்டுமல்ல, குறிப்பாக, ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி அவர் குறிப்பிடும்போது, "The common man has not been able to feel the glow of freedom during the last few years !n accordance with his expectation" என்று சொல்லியிருக்கிறார்.

இந்தச் சர்க்காரிடத்திலே இதைச் செய்யவில்லை அதைச்செய்யவில்லை என்று பல பேர்கள் கேட்கும்போது, சர்க்கார் கட்சியில் இருப்பவர்கள் இது என்ன எப்பொழுது பார்த்தாலும் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே !" என்று சொல்லலாம். சர்க்காரிடத்திலே அபாரமான நம்பிக்கை காரணமாகத்தான் மக்கள் இன்றைய தினம் கேட்கிறார்கள், அதைக்குறித்து சர்க்கார் கட்சியிலே இருப்பவர்கள் பெருமைப்படவேண்டும். வெள்ளைக்காரர்களாக இருந்தால் அவர்களைக் கேட்டிருக்க மாட்டார்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில் அரிக்கேன் விளக்குத்தானே இருந்தது? இப்பொழுது நம் காலத்தில் பெரிய ட்யூப் "விளக்குப் போடப்பட்டிருக்கிறதே" என்று பெருமை பாராட்டிக் கொள்ளாதீர்கள். அப்படிப் பெருமை பாராட்டிக் கொள்வீர்களானால், வெள்ளைக்காரனும் அப்படித்தான் சொன்னான் "ரயிலையே பார்க்காத உங்களுக்கு ரயிலை நான்தானே காட்டினேன்: அப்படியிருக்க, அதிலேயே ஏறி என்னைப் போகச் சொல்கிறாயே" என்று. ஆகையால் வெள்ளை ஏகாதிபத்தியத்திலிருந்து பழுப்பு ஏகாதிபத்தியமாக காங்கிரஸ் ஜனநாயகம் மாறக்கூடாது என்று கவலை கொண்டு ஸ்ரீமன் நாராயண் சொல்கிறார்.

The fact remains that our plans and projects have not yet been able to touch visibly the poorest sections of the population" என்று.

மற்றும் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் வந்திருக்கிற "கம்யூனிடி பிராஜெக்ட்" டைப்பற்றியும் ஸ்ரீமன் நாராயண் குறிப்பிடும்போது. அதை திருப்திகரமான நிலையில் இல்லை என்று சொல்லியிருக்கிறார். அதாவது : "Even in the Community Projects and National Extension Services, it is now being admitted that the lowest sections of the rural population have not been benefited to any considerable extent."



இவைகள் மட்டும் அல்லாமல், 'Infact, all the available statistics tend to show that difference between the living standards of the richer and poorer sections instead of being narrowed down has increased further during the last 9 or 10 years." என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது நான் இந்த மன்றத்தின் முன்னாலே, கனம் சபா நாயகர் அவர்களுடைய அனுமதியின் பேரில் கேட்டுக்கொள்வது என்னவென்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த அளவு மக்களை ஏமாற வைத்திருக்கிறபோது அதே ஏழை மக்களை வரி கொடுக்கச் சொல்லிக் கேட்பதில் என்ன பயன்? ஆகையினால், வரி யாருக்குப் போடுகிறார்கள் என்பதைப் பொறுத்தும், எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இந்த பட்ஜெட்டைப்பற்றி தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஐந்தாவது பாராவில், நிதி அமைச்சர் அவர்கள், "விலைவாசிகள் ஏறுமுகம், அன்னியச் செலாவணிக் குறைவு இவை இரண்டுமே நாட்டின் பொருளாதார நிலைமையை இன்று பாதிக்கும் பெரும் சிக்கல்கள்" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இதை மறுப்பவர்கள் உண்மையை மறைப்பவர்கள் ஆவர். இன்றைய தினம், உண்மையில் இரண்டு பெரிய குறைகள் இருக்கின்றன. ஒன்று, விலைவாசி ஏறுமுகம்; மற்றொன்று அன்னியச் செலாவணிக் குறைவு. ஆனால், நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த இரண்டுக்கும் நல்ல பரிகாரங்கள் தேடுகிற திறமை, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக உண்டு ஆனால், இந்த இரண்டுக்கும் அவருடைய நேரடியான மேற்பார்வையிலே, நேரடியான நிர்வாகத்திலே அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை. அகில இந்தியாவில் இருக்கும் நிலைமைகளைப் பொறுத்துத்தான் விலைவாசி ஏறுமுகம், அன்னியச் செலாவணிக் குறைவு ஆகிய இரண்டு சிக்கல்களையும் தீர்க்க முடியும். இதனை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிற காரணத்தால், நாம் இவைகளை இங்கும் தீர்க்கப் போகிறோம் என்று எடுத்துச்சொல்லி, தங்களால் செய்யக்கூடிய சில பல காரியங்களைச் சொல்லியிருக்கிறார். அதற்காக, அவர்களைப் பாராட்ட வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களெல்லாம் விரும்பினார்கள். ஒரு அங்கத்தினர் அவர்கள் உருக்கமாகக் கேட்டார்கள். ஒன்றுகூட நல்லது சொல்ல மாட்டீர்களா?" என்று, நாங்கள் நஷ்டம் அடை

யாமல் நீங்கள் லாபம் அடைந்தால், நாங்கள் ஏன் குறுக்கேநிற்கப் போகிறோம்? வியாபாரத்தில் அதெல்லாம் சாதாரணமாக ஏற் படக்கூடியது தான். ஆனாலும், இப்படி யாரோ ஒன்றிரண்டு பேர் புகழ்ந்து பேசிவிட்டார் என்பதற்காக இலகுவாகத் திருப்தி அடைந்துவிடக்கூடிய சபல மனம் படைத்தவர் அல்ல, நம் நிதி அமைச்சர் அவர்கள் என்பதை அறிந்த காரணத்தால் நான் அவர் களைப் பாராட்டாமல் இருக்கிறேன். அவர்களுக்கு இருக்கும் அன்பு காரணமாக சிலர் பாராட்டிப் பேசினார்கள். அப்படி பேசுவதும் நல்லது தான் அது இருக்கட்டும். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், தம்முடைய வசதிக்கேற்ற அளவில், பிரித்து வைத்திருப்பதில் அவர்கள் செய்திருக்கிற நல்ல ஏற்பாடுகள், உண் மையிலேயே வரவேற்க வேண்டியதாய் இருக்கின்றது. ஆனால், அந்த ஏற்பாடுகளை வரவேற்கின்ற நேரத்திலே, அவைகளை மூன்றாக வகுத்துப் பார்த்துத்தான் நம்முடைய தீர்ப்பை அளிக்க வேண்டி இருக்கின்றது. அதாவது ஒன்று, போடுகின்ற திட்டம்; இரண்டாவது, திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணம்; மூன்றா வது, அந்தப் பணத்தைச் செலவு செய்கின்ற நிர்வாக முறை இந்த மூன்றும் சரிவர இருந்தால் தான் உண்மையிலேயே நம்முடைய திட்டங்கள் நல்ல பலனை அளிக்கும். உதாரணமாக, நமது நிதி அமைச்சர் அவர்கள், போன ஆண்டு 38 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன, இவ்வாண்டிலே 136 பண்ணைகள் திறப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது நியாயமான, தேவையான. மக்களால் வரவேற்கத்தக்க ஒரு திட்டமாகும். இத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில், இந்தப் பண்ணைகள் எந்த முறையில் வளர்க்கப்படுகின்றன, இந்தப் பண்ணைகளுக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலங்கள் யாரிடத்திலே வாங்கப்படப் போகின்றது, அப்படி வாங்கப்படுகின்ற நிலங்களுக்கு விலை எப்படி நிர்ணயிக்கப்படும் என்பதையெல்லாம் பார்க்கவேண்டும். அந்த நிலங்களுக்குப் பதிலாக, நிலச் சுவான்தார்களைக் கூப்பிட்டு- அந்த நிலச்சுவான்தார்களிடத்திலே இருக்கிற ஏராளமான நிலத்தில் ஒரு பகுதியில் கட்டாயமாக விதைப் பண்ணைகள் வைக்க வேண்டும் என்று சட்ட பூர்வமாக சொல்லிவிடலாம்—ஆனால், ஆளும் கட்சியில் அன்பு பாராட்டும் பல நிலச்சுவான்தார்கள் இருப்பதால்—அவர்களுக்கு கனிவாக எடுத்துச் சொல்லி, உங்க ளிடத்திலே இருக்கும் நிலத்திலே ஒரு பகுதியை விதைப் பண் ணைக்கு ஒதுக்கி வைக்கவேண்டும் என்று சொன்னால் அவர்கள்



கொடுத்துவிடுவார்கள். இப்படிச் செய்தால் நாம் அந்தப் பண் ணைகளுக்கு முதலீடு செய்யவேண்டியதில்லை. இப்படி இந்த திட்டத்தை சுலபத்தில் நிறைவேற்றலாம் என்று நான் கருது கிறேன். விதைகள் கொடுப்பதனைப்பற்றி, அந்த விதைகள் ஏழை உழவனுக்குக் கிடைக்கவில்லை என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். எந்த நேரத்தில் "விதைக்க விதை வேண்டுமே" என்று பரிதாபத் துடன் காத்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த நேரத்தில் விதை கள் வராமல், அறுவடை காலத்தில் வருவதால் அதையும் சேர்த்து மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் அநுபவம் காரணமாக கிராமப்புறத்தில் இருக்கும் நிலை மையைத் தெளிவாகச் சொன்னார்கள். ஏட்டிலே திட்டங்களைக் காட்டுவதால் மட்டும் பாராட்டுதலுக்குரியவர்களாக மாட்டார் கள் நாட்டை ஆளுகின்ற சர்க்கார். ஏட்டிலே போடுகின்ற திட்டம் எந்த அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் இதற்கு முன்னாலே இருந்ததைவிட வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு அதிகமாகியிருக் கின்றது தலைக்கு ஒரு உச்சிக்கரண்டி எண்ணெய் அதிகமாகியிருக் கின்றது வாழ்வுக்கு ஒருவேளை நிம்மதி அதிகமாகி இருக்கின்றது என்பதைப் பார்க்கவேண்டும். நிம்மதி கலந்த புன்னகை தான் ஒரு நிதி அமைச்சர் எதிர்பார்க்கும் பரிசும் புகழுமாகும். தங்கள் கட்சிக்காரர்களும், எதிர்க் கட்சிக்காரர்களில் இரண்டொரு பேரும், புகழை வீசி விட்டார்கள் என்றால் அது எந்த அளவும் பலனளிக்காது. அதை நான் நிச்சயமாக உணர்ந்திருக்கிறேன்.

போன ஆண்டு 36 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன, இந்த ஆண்டு 136 பண்ணைகள் திறக்கப் போகிறோம், என்று நிதி அமைச்சர் அவர்கள் அவலோடு சொல்லுகின்ற காரணத்தால் நாம் அதனை நம்பவேண்டி இருக்கிறதே தவிர, இதுவரை நடந்து வந்திருக்கிற முறையைப் பார்த்தால், அந்த 136 பண்ணைகளும் இந்த ஆண்டிலேயே திறக்கப்பட்டுவிடுமா என்கிற ஐயப்பாடு இருக்கின்றது சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்திலே, "இந்த ஆண்டு 50 விதைப் பண்ணைகள் திறக்கப் போகிறோம்" என்று வாக்குறுதி அளித்தும் அதில் 38 தான் திறந்தார்கள். அதாவது 50 சொல்லி 38 என்றால், இப்போது 136 சொல்லி 36-ஓடு நின்று விட்டால் என்ன செய்வது—"ஆண்டவனே, அவருக்கு அப்படிப் பட்ட ஒரு எண்ணத்தைத் தராமல், எல்லாப் பண்ணைகளையும் திறக்கவேண்டும் என்ற ஒரு எண்ணத்தைத் தரவேண்டும்" என்று நான் ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

மற்றொன்று, நீர்ப் பாசனத்திற்காக, சிறு பாசனத் திட்டங்கள் 55 லட்ச ரூபாய் செலவில் இந்த ஆண்டு தொடர்ந்து நடக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பார்த்தால் 1 கோடியே 23 லட்சம் ஒதுக்கப்பட்டதாக புள்ளி விவரங்கள் காட்டுகிறது. நமது நிதி அமைச்சர் அவர்கள் நீண்டகாலமாக நிதி அமைச்சராக இருக்கிறதாலோ அல்லது நான் முதன் முறையாக பார்க்கின்றேன் என்பதாலோ சில குறைபாடுகள் இருக்கலாம்—உண்மையில் அதன் பொருளாதாரத் தத்துவத்தை—சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக இருக்கும் அரசியல் காரணத்தை—விளக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி இங்கு நடந்த விவாதத்திலே இரண்டு பெரிய பிரச்னைகள் பேசப்பட்டன, ஒன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டு வருவது "பெரிய ஆறுகள் இல்லை, அதனால் அணைக்கட்டுகள் கட்டுவதற்கில்லை"—உண்மையிலேயே பெரிய ஆறுகள் இல்லை—பெரிய ஆறுகள் கிடையாது அணைக்கட்டுகள் கட்ட என்று நாகரீகமான முறையில் எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் கட்சியைச் சேர்ந்த சிலபேர்கள் "ஆறுகள் இல்லை அணைகட்ட. அண்ணாதுரை வாய்க்குத் தான் அணை கட்டியாக வேண்டும்" என்று. முடிந்த வரையில் கட்டுங்கள்—வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இன்று சிறு நீர்ப்பாசனத் திட்டத்தைப்பற்றி பேசுகிற காலத்தில், உண்மையிலேயே நம் நாட்டில் இன்னமும் வீணாகிக் கொண்டிருக்கிற மலை அருவிகளைக் கட்டுப்படுத்தி, சிறு நீர்ப்பாசன திட்டங்கள் செய்யக்கூடியது நிறைய இருக்கின்றன. அவைகள் தள்ளப் படுவதற்கு காரணம், அப்படி செலவழிக்கப்படுவதின் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவானதாக இருக்கிற ஒரு காரணத்தால் ஒதுக்கி வைக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதால் கிடைக்கும் நேரமுகமான லாபத்தைப் பார்க்கிறார்களே தவிர, அந்த மக்கள் மனதிலே ஏற்படக்கூடிய சந்தோஷம், அந்த மக்களுக்கு ஏற்படக் கூடிய திருப்தி, இவைகளை ரூபாயாக மாற்றிப் பார்த்தால், உண்மையிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டை ஏற்றுக்கொள்வார்கள்—என்று நான் கருதுகிறேன்.



அதைப் போலவே என் தொகுதியைப் பற்றிப் பேசாவிட்டால், அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிப் பேசினாரே தவிர தன் தொகுதியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று நாங்கள் கருதமாட்டோம், என் தொகுதியில் உள்ளவர்கள் கருதமாட்டார்கள்' ஆனால் இங்கு எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சொல்லுவார்கள் என் தொகுதியில் இருக்கும் வறண்ட ஒரு ஆற்றைப்பற்றி, முதலமைச்சர் அவர்களின் ஈரமான நெஞ்சத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், நான் ஒரு சிறுவனாக பள்ளியில் படித்த காலத்திலே படித்துக்கொண்டிருக்கும்போது அங்கே இருந்த ஒரு ஆசிரியர், மணியை அடித்து "பிள்ளைகள் வீட்டிற்குப் போகலாம், பாலாற்றிலே தண்ணீர் வந்தது என்றார், எங்கள் பகுதியிலே பாலாற்றிலே தண்ணீர் வந்தது என்றால் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டுக் கொண்டாட வேண்டிய ஒரு காட்சியாகும். ஆனால் அது ஒரு நல்ல ஆறு—பெரிய ஆறு—ஆண்டுக்கொருதடவைச்—சபாநாயகருக்கு எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்—நாலு நாள் மூன்று நாள் பெய்கிற மழையில் தண்ணீர் வெள்ளமாக வருகிறது. அந்தத் தண்ணீரை ஆங்காங்கு சிறுசிறு தேக்கங்களாக நிரப்பி, அங்குள்ள பெரிய பெரிய ஏரிகளையும் குளங்களையும் நிரப்பி, செங்கல்பட்டில் நீர்ப்பாசனம் நடந்து வருகிறது, இரண்டு குறைபாடுகளை நான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆற்று வெள்ளம் ஏரியில் தேக்கப் படுவதால், அந்த வெள்ளத்தில் அடித்துவரும் "சில்ட்" அதாவது வண்டல் மண், அந்த ஏரியில் படிந்து, ஆழம் குறைந்து, அது நாளா வட்டத்தில் வடிகால்களை உடைத்துக்கொண்டு வெள்ளம் வந்தாலும் தண்ணீர் தங்காமல் கக்கிக்கொண்டு வெளியில் போகிறது, எப்படிச் சில விஷயங்களைப் படித்தாலும், உண்மைப் பொருளைத் தெரிந்துகொள்ள முடியாமல் தவறாக வெளியே கக்கி விடுகிறோமோ, அதுபோலப் பொங்கிவரும் நீரை, வெளியே கக்கி விடுகிறது. பல தடவைகளில் சென்னை சர்க்காரும் மைசூர் சர்க்காரும் நடத்திய பல்வேறு மாதிரியான பேச்சு வார்த்தைகள் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று அறிய விரும்பினால், அது முடிந்துவிட்டதென்று சொல்லுகிறார்கள். நம்முடைய நிர்வாகப் பிரச்னை எதனையும் முடிந்து விட்டது என்று கருதாமல், நமது மாநில முதலமைச்சர் அவர்கள் பாலாறைப் பற்றி மைசூர் ராஜ்ய முதலமைச்சரோடு மறுபடியும் கலந்து பேசி—முன்னாலே நிபுணர்களெல்லாம் கலந்து பேசினார்கள்—நமது முதலமைச்சர் காமராஜ் அவர்கள் நிபுணர் அல்ல—நிபுணர் அல்லாத ஒரு காரணத்தால்

நாட்டு மக்கள் அவர்களிடத்தில் இன்றைய தினம் நிறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்—நிபுணர்கள் புள்ளி விவரங்களை நம்புவார்கள்—நிபுணரல்லாத இவர் நாட்டு மக்களுடைய பசித்த வயிற்றினையும், காய்ந்த தலையினையும், கவலை படிந்த முகத்தினையும் பார்த்துத்தான் நாட்டு நிலையைத் தெரிந்து கொள்கிறார்—ஆகையால் பாலாற்றுக்குத் தண்ணீர் வருவதற்கு மைசூர் சர்க்காரிடம் உடனடியாக மறுபடியும் பேச்சு வார்த்தைகளைத் துவக்கி வைக்க வேண்டும். அதுவுமில்லையென்றால், இன்றைக்கு ரஷியா நாட்டிலே இது போன்ற நிலைமையில், ஆற்றுக்கு மேலே தண்ணீர் இல்லாமல் போனாலும், "ஸப்ஸாயில் வாட்டர்" அதாவது பூமிக்கடியிலே இருக்கும் தண்ணீரை மின்சாரத்திட்டம் மூலமாக ஆங்காங்கு வெளியே கொண்டுவந்து, அதன் மூலமாக நீர்ப்பாசனம் நடத்துகிறார்கள். இதை நமது என்ஜினியரிங் டிபார்டுமென்ட் எடுத்துச் சொல்லக்கூடும், அந்த முறையிலே, பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், அப்படிப் பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டுவந்துவிட்டு, எங்கள் கழகத்தைப் பற்றிச் செங்கல்பட்டு மாவட்டத்திலே எந்த மூலை முடுக்கில் போய் திட்டினாலும்—மாலை போடுவார்கள்-"எவ்வளவு வேண்டுமானாலும் திட்டட்டும், மன்னர், தண்ணீர் கொண்டு வந்தாரே" என்று பாராட்டுவார்கள். அதிலே, இரண்டு லாபம் இருக்கிறது—ஒன்று மக்களுடைய ஆதரவு கிடைக்கிறது, இரண்டு, எங்களை அடக்குவதற்கு ஒரு வழி கிடைக்கிறது, இன்றைக்கு பாலாற்றுக்குத் தண்ணீர் வந்தால் போதும், அதற்கு ஆவன செய்யவேண்டும்.

**Mr. SPEAKER:** I suppose, the Hon. Member will finish his speech soon.

**Sri. A. A RASHEED:** How much more time, the Hon. Member will take.

**Mr. SPEAKER:** I hope the Hon Member will finish reasonably quickly.

**திரு. சி. என். அண்ணாதுரை :** சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சபையில் கொண்டுவந்து பேசியபோது, நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர் விடுத்த வேண்டுகோளை இந்த இடத்தில் படிக்க விரும்புகிறேன் :—

ஆனால் நமக்கு உண்மையில் ஆழ்ந்த கவலை ஊட்டக்கூடிய அம்சம் ஒன்று உள்ளது. நம் இந்திய தேசியத்திட்டத்தில் மொத்தச் செலவின் பெரும் பகுதி, இரும்பு, எஃகு போன்ற அடிப்படைத் தொழில்கள் அபிவிருத்திக்காகவும், அந்த வளர்ச்சிக்கு ஏற்றாற் போல அதை ஒட்டிப் போக்கு வரத்து சாதனங்களில் முன்னேற்றம் காணவும் பயன்படும். பொதுத்துறையில், இந்த இனங்களுக்காகச் சுமார் 2,000 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இப் பெருந் தொகையில் குறிப்பிடத்தக்க பகுதி எதுவும் தென்னிந்தியாவில் செலவு செய்யப்படுவதாகத் தோன்றவில்லை, நம்மிடம் நிலக்கரி இல்லையென்பது உண்மைதான். ஆனால், தெற்குப் பிராந்தியத் தொழில் வளர்ச்சிக்காகத் தேசத்தின் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முயற்சி எதுவுமில்லை என்ற உண்மை மாறிவிடாது.



நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்துக்காக சுமார் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 50 கோடி ரூபாயும் கணக்கில் எடுத்துக்கொண்டால் கூட தெற்கு ராஜ்யங்களுக்காகச் செலவாகும் தொகை விகிதம் அவ்வளவாக உயராது. மேலும் நெய்வேலித் திட்டம் பரீட்சார்த்த நிலையில் இன்னும் உள்ளது. முக்கிய இயந்திரத் தொழில்களை நிறுவுவதற்கு ஏற்ற இடங்கள் தென்பிராந்தியத்தில் நிறைய இருக்கின்றன. அத்தொழில்களுக்காக இடத்தைத் தேர்ந்தெடுக்கும் போதாகிலும், இந்தப் பிரதேசத்துக்குச் சற்று சலுகை காட்டுவது மிகவும் அவசியமாகும். நிலத்தை நம்பி வாழும் மக்கள் தொகையையும், சாகுபடியாகும் ஏக்கரா அளவையும் எடுத்துப் பார்த்தால், இந்தப் பிரதேசத்தில் இருக்கும் ஜனநெருக்கடிபோல், நாட்டில் வேறெங்கும் கிடையாது. கன மின்சார இயந்திரத் தொழிற்சாலை நிறுவ உத்தேசம் உள்ளது. அதற்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் நாம் செய்து தரமுடியும். சேலத்தில் "பாக்ஸைட்" கனிகளிலிருந்து அலுமினியம் உற்பத்தி செய்ய, நம் மின்சார இணைப்பில், போதிய மின்சாரம் உள்ளது. புதிதாக உற்பத்தியாகவிருக்கும் எஃகிலிருந்து கன இயந்திரங்கள் செய்ய ஒரு தொழிற்சாலை இங்கு நிறுவுவதற்கும் இடமிருக்கின்றது. இப்பிரச்னைகள் குறித்து, நம் கருத்தை, நாம் வற்புறுத்தியுள்ளோம். இச்சபையும் என்னுடன் சேர்ந்து இக் கருத்தை மேலும் வன்மையாக ஆதரிப்பதின்மூலம் நம் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ள இந்த அம்சங்களைத் திட்டக் கமிஷனும் இந்திய அரசாங்கமும் உரிய முறையில் கவனிக்கும்படி செய்யமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு."

கடைசியில் ஒரு வேண்டுகோளையும் விடுத்திருக்கிறார்கள். "இவைகளை எல்லாம் செய்ய என்னுடைய கரத்தை வலுவடைய செய்யவேண்டும்,'' என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த நாட்டை தொழில் துறையிலே வளர்ச்சியுற செய்வதற்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் ஒத்துழைப்பை உண்மையிலேயே விரும்பினால் இன்றைய தினம், திராவிட முன்னேற்றக் கழகம் அதற்குத் தயாராக இருக்கிறது, ஆனால் தொழில் முன்னேற்றம், தொழிலாளர்களைப் பாதிக்காமல் வாழ வைக்கக்கூடியதாகவும், நாட்டில் செல்வத்தை பெருக்கக்கூடியதாகவும், அதே நேரத்தில் முதலாளித்துவ வர்க்கத்தை மாற்றி அமைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமானால் அதற்கு எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பு எப்போதும் கிடைக்கும் ஆனால் இந்த ஒத்துழைப்பை ஆட்சியாளர்கள் எந்த நேரத்தில் எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தீர்மானிக்கப்படவேண்டும். எதிர்க் கட்சி ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்கிறார்களே தவிர எந்த நேரத்தில் எந்த கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தெளிவுபடவில்லை, நான் கருதுகிறேன் திட்டங்களைத் தீட்டும் நேரத்தில் ஒத்துழைப்பைக் கேட்டால் நாங்கள் தயார், இராமாயணத்தில் இருந்து சொன்னால் இங்குள்ளவர்கள் திருப்தி அடைவார்கள் என்ற எண்ணத்தில் சொல்கிறேன், அணில்கூட அல்லவா இராமனுக்கு உதவி புரிந்தது. அந்த முறையில் அண்ணாதுரையும் பயன்படக்கூடும். (சிரிப்பு.) முன்னால் திட்டம் தீட்டும் நேரத்தில் கேட்டால் எங்கள் ஒத்துழைப்பு நிச்சயம் கிடைக்கும் என்று சொல்லி, வரவு செலவுத் திட்டத்தில் தாற்காலிகமாக வரி விதிக்காத நிதி அமைச்சரைத் தற்காலிகமாகப் பாராட்டுகிறேன்.

* * * *

17—7—'57 ] [ புதன்கிழமை

[ கல்வி மான்ய வெட்டுப் பிரேரணையைப் பற்றி எழுந்த விவாதத்தில்...........]

சட்டமன்றத் தலைவர் அவர்களே, கல்வி மான்யத்திற்காக வெட்டுப் பிரேரணையில் நான் கலந்து கொள்வதில் நிதி அமைச்சர் அவர்கள், கல்வி அமைச்சர் அவர்கள், ஏற்கனவே எடுத்துக் காட்டியதுபோல், இது பெயருக்குத் தான் வெட்டே தவிர, அதிகமான அளவில் கல்வித் தலைப்புக்குப் பணம் ஒதுக்கப்பட வேண்டும்



என்பதை வெளிப்படுத்துவதற்கு இந்த முறையிலே நடக்க எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே நாங்கள் காட்டக்கூடிய குறைபாடுகளை எடுத்து விளக்குவதற்கு முன்னால் நான் ஒன்றைத் தெளிவாக தங்கள் மூலமாக இந்தச் சபைக்கு தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன், வேறு எந்த அமைச்சரவையைவிட இந்த அமைச்சரவையிடத்தில் நாங்களும் நாடும் மிக அதிகமாக எதிர்பார்க்கிறோம் என்பதை அமைச்சர் அவையும், அமைச்சர் அவை நடத்துவதற்குரிய கட்சியும் பெருமைக்குரியதாக எடுத்துக் கொள்ளவேண்டும். எதற்கு எடுத்தாலும், நம்மால் வெறுத்து ஒதுக்கப்பட்ட, நல்லாட்சிக்கு உகந்தது அல்ல என்று ஒரு காலத்திலே கருதப்பட்ட, வெள்ளையர் ஆட்சிக் காலத்தைவிட நாம் இப்பொழுது எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம்'' என்ற வாதத்தை இந்தச் சபையிலே அடிக்கடி எடுத்துச்சொல்லி, வெள்ளையர் ஆட்சி காலத்திலே நடைபெற்றது அத்தனையும் சரி என்று இந்தப் பகுதியில் உள்ளவர்கள் சொல்லியதாக நீண்ட நாட்களாக குற்றம் சாட்டுவது உடனடியாக பிரச்சனையை நழுவி விடுவதற்கு பயன்படுமே தவிர, பிரச்சனையை உண்மையாக அறிந்து கொள்வதற்கு நிச்சயமாக பயன்படாது. ஆகையினால்தான் நாட்டை ஆளுகிற இன்றைய அமைச்சர் அவை உண்மையிலேயே நாட்டு மக்களுக்கு மிக அதிகமாகச் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது மாத்திரமல்ல, அதற்கேற்ற திறமை அவர்களிடத்திலே இருக்கிறது என்று நாட்டு மக்கள் நிச்சயமாக நம்புகிறோம் என்ற காரணத்தினால்தான், செய்யப்படுகின்ற பல காரியங்களில் குறைபாடுகளை எடுத்துக் காட்டி, இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். உண்மையிலேயே இன்றையதினம் இருக்கிற அரசியல் சூழ்நிலையில் இந்த அமைச்சர் அவையைவிட, வேறு ஒரு அமைச்சர் அவை இதே கட்சியாலே நிறுவப்பட்டாலும் கூட, அந்த அவையினால் அதிகமான அளவுக்கு நன்மை கிடைக்கும் என்று நாங்கள் யாரும் எண்ணி ஏமாந்து கொண்டிருக்கவில்லை. ஆகையினால் நான் சொல்லுகின்ற சிலபல குறைபாடுகள் மேலும் அதிகமான அளவுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தவிர, அதிகமாக குற்றங்குறைகளை எடுத்துக் காட்டுவதற்காக அல்ல.

நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மான்யக் கோரிக்கையை இந்தச் சபை முன்னிலையில் வைத்த நேரத்திலே 1933-34 லிருந்து 1957-58 வரையில் எப்படி படிப்படியாக கல்

விக்கு ஒதுக்கப்பட்ட மான்யம் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது என்பதை மிக ஆர்வத்தோடு, மற்றவர்களும் ஆர்வம் பெற வேண்டுமென்ற கருத்தோடு, மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்திலே அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எப்படி கல்வி மான்யத்திற்கு தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறதோ, அதுபோல 1933—34-ல் கொடுக்கப்பட்ட வரித்தொகையை விட 1957—58-ல் மக்கள் கொடுக்கும் வரித் தொகையும் அதிகமான அளவுக்கு வளர்ந்து கொண்டே போவதை நினைவுக்குக் கொண்டு வருகிறார்கள். அது மாத்திரமல்ல—அன்றைய தினம் ஆரம்பப் பள்ளியிலே படிக்கின்ற ஒரு பிள்ளைக்கு செலவிடப்படும் பணம் முதல் முதலிலே ரூபாய் 9-ல் துவக்கி, இன்றையதினம் 'together with the contingent cost of pension, the cost per pupil per annum must now be some where near thirty rupees.'' அதாவது ஆரம்பப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனுக்கு ரூபாய் 30 செலவழிக்கிறோம் என்று பெருமைக்குரியதாக அவர்கள் சொன்னார்கள். இந்த ஆற்றல் பெருமைக்குரியதுதான் என்றாலும், 1933—34 ல் 9 ரூபாயாக இருந்தது, இன்றைய தினம் அந்த ரூபாயின் மதிப்பு 4 மடங்கு அதிகமாகி யிருக்கிறது, பொருளாதார தத்துவப்படி 4 மடங்கு அதிகமாயிருக்கிறது. ஆகையினால் இப்பொழுது ரூபாய் 30 செலவிடப்படுவது அதிகமான அளவுக்குப்பெருமைப்படக்கூடியதல்ல. கராச்சி தீர்மானத்தில்கூட அமைச்சர்களுக்கு ரூபாய் 500 சம்பளம் தரப்படவேண்டும் என்று இருப்பினும் இப்போது வளர்ந்துள்ள பொருளாதார சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப அதிகச் சம்பளம் அளிக்கப்படுவது நியாயம்தான் என்று இங்குள்ளவர்கள் மட்டுமல்ல, பாரதநாட்டு பிரதமருங்கூட வாதாடி யிருக்கிறார்கள். ஆகையினால் 1933—'34-ம் ஆண்டில் 9 ரூபாய் செலவழித்தார்கள், இப்போது 30 ரூபாய் செலவழிக்கிறார்கள் என்று சொல்லுவது உண்மையிலேயே அது பாராட்டுவதற்குரிய விஷயமல்ல, ஏதோ முயற்சிக்கின்றோம் என்ற வகையில் அதை எடுத்துக்கொள்ளலாமே தவிர, அதிகமான அளவுக்குக் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு முடியாது. 1933—'34-ல் இருந்த நிலைமை, 1957—58-ல் இருக்கின்ற நிலைமை வேறு. நாட்டு மக்கள் ஆண்டுக்கு ஆண்டு வரிகள் அதிகப்படியாகவே கொடுத்துக் கொண்டிருக்கின்றனர், எவ்வளவு இருந்தாலும் கல்விக்காக இந்த வரிகளைப் போடுகிறோம் என்றால் அந்த வகையில் நாங்கள் உண்மையில் மகிழ்ச்சியுறுகின்



றோம், பாராட்டுகின்றோம். இன்னும் இந்த அமைச்சரவையில் நாம் எதிர்ப்பார்ப்பது போல வெள்ளைக்கார அமைச்சரவையில் நாம் எதிர்ப்பார்க்க முடியாது, எதிர்ப்பார்க்கவும் கூடாது. வெள்ளைக்கார ஆட்சி காலத்தில் நாம் எல்லாம் படித்தால் வெள்ளைக்கார ஆட்சிக்கு நஷ்டம், ஆனால் இப்பொழுது நாம் எல்லாம் படித்தால் இந்த ஆட்சிக்கு லாபம். ஆகவே அதிகமான அளவில் கல்வித் துறைக்காக ஒதுக்குவதைப்பற்றி உண்மையிலே நான் பாராட்டுகிறேன். இதோடு இன்னும் இப்போதிருக்கின்ற நிலைமைக்கு அதிகப்படியாக ஒதுக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்ளுகிறேன். கல்வித்துறையைப்பற்றி குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற காலத்தில் கட்டாய இலவச கல்விக்காக, 30 லட்சம் பிள்ளைகளுக்கு 9 கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். இன்னும் அதிகம் தொகை ஒதுக்கப்படவேண்டுமானால் வரி போட்டால்தான் கிடைக்கும் என்றும், வரி போடுவதாயிருந்தால் 'வரி போட்டிருக்கிறீர்களே'' என்று நாங்கள் சொல்வோம் என்றும் உள்ள கருத்து. அவருடைய பேச்சில் தொக்கி நிற்கிறது. என்னுடைய கட்சியின்சார்பில் சொல்லுகிறேன், நாங்கள் யாரும் இம்மாதிரியான காரியங்களுக்காக வரிகள் போடுவதை எதிர்க்கவில்லை. அதோடு போடுகின்ற வரிகள் யாரைத் தாக்குகின்றன, வரி போடுவதால் யாருக்குப் பலன் ஏற்படுகிறது என்பதை கணக்கிட்டு பார்க்கவேண்டுமென்றுதான் நாங்கள் கூறுகிறோம். இங்கு ஒரு நாள் காங்கிரஸ் சட்டசபை கொறடா அவர்கள் சற்றுக் கோபத்தோடு தான் பேசினார்கள் என்றே நினைக்கிறேன். நாங்கள ஏதோ கொடி பிடித்துக்கொண்டு வரிகளை எதிர்க்கிறோம் என்று. நாங்கள் இந்த சென்னை சர்க்காரால் விதிக்கப்பட்டிருக்கிற வரிகளை எதிர்த்ததாக எனக்கு நினைவு இல்லை. வேண்டுமானால் மத்திய சர்க்காரால் விதிக்கப்பட்ட வரிகளை எதிர்த்திருக்கலாம். ஆனால் எந்த வரிகளைப் போட்டாலும் எதிர்க்காமல் இருப்பது உண்மையில் ஜனநாயகத்திற்கு புறம்பானது என்பதை வலியுறுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு கல்விக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிற முறையை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஒன்று கூற விரும்புகிறேன். ஆரம்பக் கல்விக்கு அதிகமாய் செலவு செய்யப்படுகின்ற பணம், அதன் மூலம் பெறுகின்ற கல்வி பிற்காலத்தில் அவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன்படுகிறதா என்பதைப் பார்த்து அதற்கு அதிகமான பணம் செலவு செய்யப்பட வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். நாம் செலவு செய்வதில் மாத்திரமல்ல அதன்மூலம் கிடைக்கிற பலன் என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும் உண்ட சோறு ஜீரணமானால்தான் வலுவு பெற முடியும். ஆகவே ஏதோ 6 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று மாத்திரம் பெருமைப்பட்டு கொள்ளலாமே தவிர இதனால் எந்தவிதமான பலன் ஏற்படுகிறது. இதிலிருந்து எத்தனை சதவிகிதம் மேற்படிப்புக்கு பயன்படுகின்றது என்பதையும் நாம் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. இன்றைக்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிற பொருளாதார கஷ்டத்தினாலும் வாழ்க்கைத் தரத்தினாலும் மேல்படிப்புக்கு அதிக சதவிகிதம்பேர்கள் போகமுடியாமல் இருக்கின்ற நிலைமையில் இந்த ஆரம்பக் கல்வி எந்த அளவு சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பயன்படும் என்பதை சொல்ல வேண்டுமென்றால் நாம் அறிந்தவரையில், அடக்கமாகவே சொல்லிக்கொள்கிறேன், இதுபற்றிய புள்ளிவிவரஇலாகா எதிர்க்கட்சியில் இல்லாத காரணத்தால், சரியாகக் கூறமுடியாவிட்டாலும் ஓரளவு கூறமுடியும், தங்களது பொருளாதார நிலையின் காரணமாக மேல் படிப்புக்குப் போக முடியாமல் ஏதோ கொஞ்சம் படித்ததையும் மறந்துவிட்டு, ஏதோ இரண்டு மூன்று ஆண்டுகள் படித்துவிட்டு கார்டு, கவர் வந்தால் எடுத்துக்கூட்டி படிக்கிற அளவுக்குத்தான் அதிகம்பேர் இருக்கின்றனர் என்பதை எனக்கு சொல்லமுடியும். அடுத்ததாக சொல்வேன், கல்வித்துறையில் இன்று நாளுக்குநாள் பற்பல பரீட்சைகள் அனாவசியமாக என்று கூட சொல்வேன், பல்வேறு பரீட்சைகள் வைக்கப்படுகிறது. இவ்விதமான பரீட்சைகள் நாம் வரவேற்கத்தகுந்த நிலையில் இல்லை. மனிதனுடைய வாழ்நாள் பூராவுக்கும் அவர்கள் ஒரே அடிப்படையில் இருக்க வேண்டும் என்று விரும்பினாலும் அவ்விதம் இருக்க முடியாது என்பதை நாம் கண்டு வருகிறோம். இப்போதுள்ள முறையில் மாற்றம் காணவேண்டும் என்றுள்ள கருத்து சர்க்காருக்கு இருப்பதாக காணவில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் கண்டிப்பாக சொன்னார்கள். இந்த சர்க்காருடைய கொள்கை ஆதாரக் கல்விதான் என்று சொன்னார்கள். அதைப்பற்றி அவர்கள் கண்டிப்பாக சொல்வதற்குக் காரணம், ஆதார கல்வியைப்பற்றி நீங்கள் ஆயிரம் குற்றங்கள் சொல்லலாம். அதற்காக எல்லாம் நாங்கள் இந்தக் கொள்கையை மாற்ற தயாராயில்லை, என்றுதான் அவர்கள் கூறினதை நமக்கு எடுத்துக்கொள்ள முடியும். நாங்கள் அமைச்சர் அவர்களிடம் சொல்லி அதை மாற்றாவிட்டாலும்கூட பிளானிங் கமிஷன்



மெம்பர் டாக்டர் கோஷ் அவர்கள் இரண்டொரு நாட்களுக்கு முன்னால் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் சாமான்யமானவர்கள் என்பதற்காக நீங்கள் நாங்கள் சொல்வதை கேட்காவிட்டாலும் பிளானிங் கமிஷன் மெம்பர் சொல்லியிருப்பதை நீங்கள் கவனிப்பீர்கள் என்ற காரணத்தால் அதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

"Perhaps the time has come when we may forget the artifical difference between the basic and non-basic type of schools What we want are better type of schools and better type of teachers. This is because in some States, there is a feeling that basic schools are creating a caste of pupils who are meant to live for ever in rural areas." இதைவிட தெளிவாக உண்மை நிலைமை யாரும் எடுத்துக்காட்ட முடியாது. மேலும் இந்த ஆதாரக் கல்வியைப்பற்றி பொறுப்புள்ள தலைவர்களில் ஒருவர் சொல்லியிருப்பது என் நினைவுக்கு வருகிறது. இந்த ஆதாரக் கல்வியின் திட்டவட்டமான கொள்கை என்ன என்பது அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகையினால் ஆதாரக் கல்வியை நாம் கையாளுவதற்கு முன்னால் இன்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காருடைய கொள்கையில் கீழ் இருந்தாலும்கூட ஆதாரக் கல்வி சம்பந்தமாக இந்தச் சர்க்காருடைய கொள்கை என்ன, கல்வித்துறையின் அடிப்படையான கொள்கை என்ன என்பதை வகுத்தால் நல்லது என்று கருதுகிறேன். கல்வித்துறையில் மாற்றம் காணவேண்டும் என்று சின்னதுரை அவர்கள் சோஷலிஸ பாணியில் கல்வி இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொன்னதை கட்சிக்குரியதாக எடுத்துக்கொண்டாலும் கவலையில்லை, உண்மையில் சமுதாயத்தின் நன்மைக்காக அப்படி இருக்கவேண்டும் என்றும் அதற்குரிய விதத்தில் கல்வித்திட்டம் அமையவேண்டும் என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன், உண்மையில் ஆதாரக் கல்வி கொள்கையை எடுத்துப்பார்த்தால் கிராம சுய ராஜ்யம்தான் புகுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இதை குறிப்பிடுகிற நேரத்தில் இன்றைக்குப்புதிய நவீன முறைகளுக்கும், விஞ்ஞான முறைகளுக்கும் செலவு செய்யப்படுகிற கோடிக்கணக்கான பணங்கள் எல்லாம் விரயம் என்றுதான் கருதவேண்டியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மட்டும் கனரகத்தொழில்களுக்காகவும்,

நவீன விஞ்ஞான தொழில்களுக்காகவும் ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாரத நாட்டு பிரதமர்கூட அணுசக்தி குறித்து, அவை எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதில் அக்கறை காட்டிக்கொண்டு இருக்கிறார். தனது வெளிநாட்டு பிரயாணத்தின்போது எல்லாம் நவீன விஞ்ஞான முறைகளையும் எவ்விதம் கொண்டு வரவேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் அடிக்கடி அறிக்கை மூலமாகவும் சொற்பொழிவு மூலமாகவும் தன்னுடைய கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கிறார். ஒரு புறத்தில் நவீன விஞ்ஞான முறைகள் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிற அதே நேரத்தில் மற்றொருபுறம் கிராம சுயராஜ்யத்திற்கு மட்டும் வழிவகுக்கக்கூடிய ஆதாரக் கல்வியை கொண்டு வருகிறோம் என்று சொன்னால் நம்மை இவர்கள் எங்கே அழைத்து செல்கிறார்கள் என்பதை கண்டு நானும் திகைக்கிறேன், நாடும் திகைக்கிறது. எவ்விதமிருந்தாலும் இதைக் கொண்டு வந்தவர்களுக்கு இதைப்பற்றித்தெளிவான காரணம் இருக்கவேண்டும், அதை நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக ஓராசிரியர் பள்ளிகளைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களைப் பற்றி நான் கொண்டிருக்கின்ற எண்ணம் தவறாக இருக்குமானால், அதிலுள்ள உண்மைகளை எடுத்துச் சொல்லி என்னை திருத்தவேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது மேற்படி பயிற்சிபெறாத ஆசிரியர்களைக் குறித்து முன்பு சட்டசபையில் சொன்னதிலிருந்து முதலில் அவர்களுக்கு 4 வார பயிற்சி கொடுத்து அவர்கள் ஆசிரியர் தொழிலில் 3 வருஷம் அனுபவம் பெற்றவுடன் குறுகிய கால பயிற்சி அளித்து நிர்ணயிக்கப்படுவர் என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் மேற்படி கொள்கையை அறிவித்தார் என்று ஓராசிரியர் கழகம் ஒன்று எனக்கு எழுதியிருக்கிறது. சுப்பிரமணியம் அவர்கள் இந்தக் கொள்கை விளக்கத்தை அளித்த போது அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ நான் இங்கு இல்லாத காரணத்தால் இதற்கு ஒரு விளக்கத்தை அவர்கள் அளிக்க வேண்டுமென்று தான் இதைக்குறிப்பிட்டேன். அடுத்தபடியாக, "ப்ரீவொக்கேஷனல் டீச்சர்ஸ்"க்கு முதலில் 39 ரூபாய் சம்பளமும் படியும் என்று அறிவிக்கப்பட்டு கடைசியாக அவர்களுக்கு:



**"The pay of part time pre vocational teachers in Board Higher Elementary Schools is fixed at rupees ten only with effect from 12th June 1957."**

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிற் கல்வி வளர வேண்டும் என்பதைப் பற்றி யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லாதிருக்கிற இந்த நாளில் தொழில் கல்வியை சாதாரணமாக பள்ளிக்கூடங்களில் கற்றுத் தருகிற ஆசிரியர்களுக்கு 10 ரூபாய் மாதச் சம்பளம் என்று கூறப்பட்டிருப்பது உண்மையிலே சர்க்காரின் கண்ணியத்திற்கும் நாட்டின் நிலைமைக்கும், கல்விக்கு நாம் அளிக்கும் அக்கறைக்கும் உகந்ததல்ல. அடுத்தபடியாக கல்லூரிகளிலும் தமிழை போதனா மொழியாக ஆக்க வேண்டுமென்று கனம் கல்வி அமைச்சரவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். உண்மையிலே, இந்தத் தலைமுறையில் ஆங்கிலம் படித்தவர்கள்தான் அறிவாளிகள் என்ற மூடப்பழக்கத்தையும் ஆங்கிலத்திலேதான் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றிருக்கிற வைதீகத்தையும் போக்கிட, தமிழ்மொழி மூலம் எல்லாத்துறைகளிலும் பயிற்சி பெற முடியும், எல்லாத் துறைகளிலும் நன்கு நிர்வாகம் நடத்தமுடியுமென்று எடுத்துக்காட்டும் பொறுப்பு நமது சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது அந்தக் காரியத்தை சாதிக்கும் வாய்ப்பு நமது கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்கு ருக்கிறது அத்துறையில் கனம் கல்வி அவர்கள் எடுத்துச் சொல்கிற எல்லா முயற்சிகளுக்கும் நானும் என் கட்சியும் அவருக்கு துணையாக நிற்போம் என்று இங்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். அதோடு, கல்வித்துறையின் அடிப்படைக் கொள்கையை சரியான முறையில் வகுத்துக் கொண்டு அதற்கேற்றபடி அதற்கு அதிகம் நிதி தேவை என்று இருக்குமானால் அதற்காக கனம் நிதிமந்திரியவர்கள் கூடுதல்வரிபோட நிச்சயமாக தயங்கவேண்டாம். ஆனால் போடுகிற வரி யார் பேரில் இருக்க வேண்டும் என்பதும் அது எப்படி எப்படி வசூலிக்கப்படவேண்டும் என்பதும் அதன் பலன் யார் யாருக்குக் கிடைக்க வேண்டும் என்பவைகளைத்தான் நாங்கள் முக்கியமாக கருதுகிறோமே தவிர அதிகமாக செலவு செய்யவேண்டாம் என்றோ அல்லது வரி போடாமலேயே ஆட்சி நடத்தலாம் என்றோ நாங்கள் சொல்லவில்லை அதற்கு, இந்த சர்க்காரிடம் ஒரு அலாவுதீன் தீபம் இல்லை என்பதை நாங்கள் உணருகிறோம். ஆகவே பெற வேண்டிய இடங்களில் பெறுங்கள் தர வேண்டிய இடங்களில் தாருங்கள் என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம், என்று சொல்லிக்கொண்டு

இந்தக் கோரிக்கையின் மேலுள்ள வெட்டுப்பிரேரணையில் நான் கலந்து கொண்டதின் முக்கியமான நோக்கம் இதிலுள்ள குறைபாடுகளை நீக்கவேண்டும் என்பதே ஆனால் இதுவரையிலும் எதிர்க்கட்சியிலிருந்து வந்த எந்த யோசனையையும், எந்த பரிவான வேண்டுகோளையும் கவனித்து சர்க்கார் தரப்பிலிருந்து அவைகளை நீக்கவோ அல்லது திருத்திக்கொள்ளவோ செய்யவில்லை என்றிருந்தாலும் நாங்கள் பொறுமை இழந்துவிடப் போவதில்லை ஒவ்வொரு நேரத்திலும் சொல்கிறோம், சொல்லிக்கொண்டுதான் இருப்போம். நாங்கள் சொல்கிற சிலபல நல்ல கருத்துக்களை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று எங்களுக்குத் தெரிந்தால் எங்களுக்கு இத்துறையில் கூடுதல் ஊக்கம் பிறக்கும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த வெட்டு பிரேரணையை ஆதரிக்கிறேன்.

* * * *

**20—7—'57 ]** **[ சனிக்கிழமை**

**[ஹரிஜன முன்னேற்றத்திற்கான மானிய கோரிக்கையைப் பற்றி எழுந்த விவாதத்தில்......]**

கனம் சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்காகக் கோரப்பட்டிருக்கிற மான்யத்திற்குப் பிரரேபிக்கப்பட்டுள்ள ஒரு வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்துப் பேச முன்வந்திருக்கிற காரணத்தால் இதுவரையில் ஆட்சியாளர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல முயற்சிக்கு இடையூறு, உற்சாகத்திற்கு குறைவு ஏற்பட்டு விடக்கூடாதென்பதை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாவதாக இந்த நல்ல ஹரிஜன முன்னேற்றத்தை நடத்துவதற்கு இப்போதுள்ள அமைச்சரைவிடத் தகுதியானவர்கள் அந்தக்கட்சியிலேயே வேறு ஒருவர் இருக்கிறார் என்கிற நம்பிக்கையின் பேரிலோ அல்லது எங்கள் கட்சியிலே உடனடியாக ஆட்சியை எடுத்து நடத்தக்கூடியவர் இருக்கிறார் என்கிற நம்பிக்கையின் பேரிலோ அதிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துச்சொல்ல நான் முன்வரவில்லை.

ஹரிஜன முன்னேற்றம் என்பது தேசியப் பிரச்னை என்கிற விஷயத்தை—ஹரிஜனங்கள் என்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட பெருங்குடி மக்கள் யாரால் தாழ்த்தப்பட்டார்கள்,



யாரால் ஒடுக்கப்பட்டார்கள், அவர்களை தாழ்த்தி ஒடுக்கினவர்கள் யார் என்று—அலசிப் பார்க்கிற சமயத்தில் ஒவ்வொரு காலத்தில் நாம் எல்லோருமே அந்தப் பெரும் குற்றத்தைப் புரிந்தவர்களாக இருக்கிறோம் என்கிற மனச்சாட்சி உறுத்தல் எல்லா சமூகத்தாருக்கும் இருக்கும். ஆகவே இந்த பெருங்குற்றத்திற்கு, அநீதிக்குக் கழுவாய் தேடுகிற வகையில், பரிகாரம் தேடுகிற வகையில் எல்லாச் சமூகத்தினரும் தமது தமது சொந்தப் பிரச்சனையாக ஹரிஜன முன்னேற்றப் பிரச்சனையைக் கவனித்தாக வேண்டும். அந்த வகையில் நானும், என்னைச்சார்ந்த கட்சியினரும், "காங்கிரஸ் கட்சியார் இதில் சாதித்திருப்பதைவிட மற்றவர்கள் சாதித்திருக்கிறார்கள், சாதிக்க முடியும்" என்று எடுத்துச் சொல்கிற நேரத்தில் "எங்களைத்தவிர இதர கட்சியார் என்ன என்ன சாதித்தார்கள்?" என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்ல இப்படியாக விவாதத்தில் இறங்கிவிடுகிறோமே என்று வருத்தப்படுகிறேன்.

இந்த விவாதத்திற்கு இரண்டு காரணம். ஒன்று காங்கிரஸ் உறுப்பினர்களாக இருக்கிற பல பேர்கள், இன்றைக்கு எதிர்தரப்பில் உட்கார்ந்துகொண்டு நாங்கள் சொன்னவற்றையே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகச் சொல்லி வந்தார்கள். அவர்களை எல்லாம் அந்தப்பக்கத்திலே இழுத்துப் போட்டுக்கொள்ளும் சக்தி படைத்த கட்சியார். நாளைக்கு இந்தத் தரப்பில் இருக்கக்கூடிய சில பேர்களையும் அந்தப் பக்கத்திலே இழுத்துப்போட்டுக்கொள்ளுகிற சக்தியை அபாரமாகப் படைத்திருக்கிறார்கள். ஆகவே இது கட்சிப் பிரச்சினை அல்ல; சக்திப் பிரச்னையும் அல்ல என்பதை உணர்ந்தே நாங்கள் நாட்டைப் பிடித்துக் கொண்டிருக்கிற ஒரு கேட்டைத் தீர்ப்பதற்காகத்தான் இந்த விவாதத்தில் கலந்துகொள்கிறோம்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சம் ரூபாய் ஹரிஜன முன்னேற்றத்திற்குச் செலவிடுவதற்காகக் கோரியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க தொகைதான். அதற்கு முன்னால் ஒருகோடியே அறுபத்தைந்து லட்சம் ரூபாய்தான் செலவழித்தார்கள் என்றும் இப்போது கிட்டதட்ட 30 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியோடு அந்தக் குறிப்பேட்டை வாங்கிக்கொள்கிற காலத்தில் எனக்குச் சோகம் தருகிற ஒரு இடம் கண்ணில் பட்டுவிட்டது. அங்கே—

"The increase in the Budget Estimate (Revise1) for 1957—58 is mainly due to the provision made for schemes included in the Five-Year Plan relating to the removal of untouchability, welfare of scheduled tribes and scheduled areas, ex criminal tribes and backward classes."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செய்யப்பட இருக்கிற பல காரியங்களுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர சென்ற ஆண்டு செய்யப்பட்ட காரியங்களைவிட இவ்வாண்டு அதிகப்படியாக காரியங்களைச் செய்வதற்குச் செலவழிக்கப்பட அல்லஎன்று உணருகிறேன். மற்றொன்றையும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். "இவ்வாண்டு ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம், சென்ற ஆண்டைவிட 30 லட்சம் அதிகமாக இவ்வாண்டு செலவிடப்போகிறோம்" என்றெல்லாம் சொல்லும்போது உண்மையிலேயே சென்ற ஆண்டு செய்யப்பட்டுள்ள காரியங்களை விட அதிகமான காரியங்களை இவ்வாண்டு இந்தச் சர்க்கார் செய்யப்போகிறார்கள் என்கிற எண்ணம் உண்டாகிவிட்டால் அது தவறாகக்கூட இருக்கும். காரணம் சென்ற ஆண்டு இருந்த வாழ்க்கைத்தரத்தைவிட, இவ்வாண்டு வாழ்க்கைத்தரம் கடுமையாகப் போனதற்குக் காரணம் விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. "ஒரு கோடி ரூபாயில் சென்ற ஆண்டு என்ன என்ன காரியங்களைச் செய்தோமோ அதே காரியங்களைச் செய்வதற்கு இவ்வாண்டு ஒரு கோடியே ஐம்பது லட்சம் செலவழித்தாக வேண்டும்" என்று பொருளாதார நிபுணர்கள் எல்லாம் வற்புறுத்துகிறார்கள். ஆகவே "நாமும் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு 30 லட்சம் ரூபாய் அதிகமாகவே ஹரிஜன முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கப் போகிறோம்" என்று பெருமை பட்டுக்கொள்ளவோ, சந்தோஷப் பட்டுக்கொள்ளவோ அவசியம் இல்லை அந்தச் சமுதாயத்தைத் திருத்தி அமைப்பதிலே, வளர்ச்சி அடையச் செய்வதிலே நாம் இன்னும் என்ன என்ன புதுக்காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று கணக்கு எடுத்துக்கொள்வதே உண்மையில் பெருமைக்கு உரியதாகும். அப்படிப் பார்க்கிற காலத்தில், நாட்டுச் சுதந்திரம் வந்து பத்து ஆண்டுகள் கழிந்துவிட்ட ஏற்பாடும் அவர்களுடைய முன்னேற்றத்துறையில் பெருமைப்படத்தக்க மாறுதல்கள் இல்லை என்பதை எல்லாக் கட்சியினரும் உணர்வார்கள். ஓரளவு முன்னேற்றம் உண்டு. இந்தப் பேரவையிலும்கூட அந்தச் சமூகத்தைச்



சார்ந்தவர்கள்—நல்ல ஆர்வம் உடைய இளைஞர்கள், உரிமைக் குரலை எழுப்பக்கூடியவர்கள், உள்ளுணர்ச்சி நிறைந்தவர்கள்—ஏராளமாக இருப்பதும் தங்கள் சமூக உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள அவ்வப்போது விழிப்போடு செயலாற்றுவதும் நாம் செலவழிக்கும் ஒரு கோடி, நாட்டுக்கு அளிப்பதைவிட அதிகமாக நல்லபலன் அளித்திருக்கிறதென்றே நான் கருதுகிறேன்.

பொதுத் தொகுதி முறையில் சமுதாயத்தில் மக்கள் ஆற்றலும் அறிவும் படைத்து ஏராளமாக மீண்டும் மீண்டும் இங்கு வர வேண்டுமானால் அவர்களின் வாழ்க்கைத் தரம் நன்றாக உயர்த்தப் படவேண்டும் இந்த தலைமுறைதான் கடைசி ஹரிஜன தலைமுறை ஹரிஜனம் பிற ஜனம் என்று இருக்கிற சமுதாய அமைப்பை இந்தத் தலைமுறையோடு கட்டி விடுவதற்கு ஏதாவது ஒரு தீவிரமான ஒரு நடவடிக்கையை உண்மையிலே எடுத்தாலொழிய. உண்மையில் தனித்தொகுதி போய்விட்டால் தனித் தொகுதி கைவிடப்பட்ட பிறகும் இத்தனை மக்கள் பொதுத் தொகுதியிலிருந்து இந்தப்பேரவைக்கு வருவார்களா என்பது ஐயுறுவதற்கு உரியதுதான் இதை எடுத்துச் சொல்ல ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் தங்கள் காலத்திலே செய்யப்பட்ட காரியங்களை எடுத்து விளக்கும் நேரத்தில் பலருக்கு வருத்தமாக இருந்தது, ஆனால் ஒன்று நான் சொல்லிக்கொள்வேன், இந்த காங்கிரஸ் சர்க்கார்—காங்கிரஸ் ஆட்சி—ஏற்பட்ட பிறகு தான் ஹரிஜனங்களைப்பற்றிக் கவனிக்க ஆரம்பித்தார்கள் என்று எடுத்து சொல்லுவது நம்முடைய மாநிலத்தின் அரசியல் வரலாற்றைக் கூர்ந்து பார்க்காத குறையே என்று உணருகிறேன்,

சர்க்கார் வெளியிட்டிருக்கிற அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது :—

'Madras is one o' the earliest Provinces to take up this question on Government level and as early as 9 9 an effort was made to make an exhau t ve enqu ry into the conditions of the depressed and backward classes and the disabil ties of improving their conditions. It was in that year that the Commissioner of Labour was entrusted by the Government with the duty of the betterment of the cond tions of the depressed and backward classes in the State."

ஆசையினால் இந்த சமூகத்தின் நிலையை மாற்ற வேண்டுமென்ற கருத்து 1919 லிருந்தே சர்க்கார் அளவுக்கு வந்து, அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த முயற்சி எங்கே? இன்றையத்தினம் எடுத்துக்கொள்ளுகிற முயற்சிகள் எங்கேயென்று ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் மலைக்கும் மடுவுக்கும் ஆக வித்தியாசம் இருப்பதை நான் அறிகிறேன். ஆனால் அப்போது வசூலிக்கப்பட்ட வரித்தொகையையும், அப்போது வசூலிக்கப்பட்டு வரும் வரித்தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அன்றைய நாட்டு நிலைமையையும், இன்றைய நாட்டு நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அன்றைக்கு என்ன என்ன காரியங்களைச் செய்திருக்கிறார்களோ அதே காரியங்களை இன்றைக்கு இருக்கின்ற வசதிக்கேற்றபடி விரிவாக்கிக்கொண்டு இருக்கின்றோமே தவிர, புரட்சிகரமான மாறுதல் எதுவுமே இல்லை.

ஹரிஜன முன்னேற்றத்திற்கு என்று குறிப்பிட்டுக் கேட்கிற நேரத்தில், ஹரிஜன நலனுக்குச் செலவிட என்று கேட்பதைக் காட்டிலும் ஹரிஜனங்களுடைய நலனுக்காக இன்ன இன்ன காரியங்களைச் செய்திருக்கிறோம், செய்யப் போகிறோம் என்பதாக ஆராய்ந்து அலசிக்காட்டி இருக்கலாம். ஹரிஜனங்கள் பெரும் பெரும் தொழில்களிலும் உயர்ந்த உத்தியோகங்களிலும் இருப்பதாகக் காட்டுகின்ற நேரத்திலே காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, காங்கிரஸ் ஆட்சி ஏற்படுமா என்று காங்கிரஸ்காரர்களே ஐயமுற்றுக்கொண்டிருந்த காலத்திற்கு முன்னால் காங்கிரஸ் கட்சி நாட்டை மீட்குமா என்று அரசியல் உலகத்தில் ஐயப்பாடு இருந்தபோதே இதே மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி வகுப்பைச் சேர்ந்த M. C ராஜா மந்திரியாகவும், ஸ்ரீ சிவராஜ் என்ற பெருங்குடி மகன் சட்டக் கல்லூரி பேராசிரியராகவும் ஸ்ரீ சிவசண்முகம் வேறு துறையில் நல்ல திறமை பெற்றவராகவும் அகில இந்தியாவுக்கும்—அகில இந்தியா என்ன—உலகம் முழுவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை எடுத்துக் காட்டி அமரராக டாக்டர் அம்பேத்கார் விளங்கியிருப்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

ஹரிஜன பிரச்னையைக் கவனித்துப் பார்த்தால், ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொருவருடைய துணையை அவர்கள் நாடவேண்டியிருக்கிறது. ஆங்கில ஆட்சி வந்தவுடன்தான் ஹரிஜன மக்கள் முதன் முதலில் நாகரீகமாக நடத்தப்பட்டார்கள் என்பதை



அக்காலத்தில் வெளிவந்த இலக்கியத்தைப் பார்த்தால் தெரியும் அவர்கள்தான் முதன் முதலில் தாழ்த்தப்பட்டவர்களைத் தொட்டார்கள். அவர்கள் தொட்டுக் கொடுத்த பண்டங்களை உண்டார்கள். அதன் மூலமாக அந்தச் சமூகத்தைப் பிடித்திருந்த கஷ்டம் அந்தக் காலத்தில் நீங்க வழி ஏற்பட்டது. ஓரளவுக்கு மதிப்பு கிடைத்தது அதற்குப் பிற்பாடு ஏற்பட்ட வெள்ளைக்கார ஆட்சியில் நான் முன்பு படித்துக் காட்டியபடி 1919—ல் ஏற்பட்ட லேபர் இலாகாவின் மூலம் அவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன அதற்குப் பிற்பாடு ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. சபாநாயகர் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்-மதுரைமாவட்டத்தில் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலஞ்சென்ற எங்கள் பெரும் தலைவர்களில் ஒருவரான சௌந்தரபாண்டியன் அவர்கள் ஆதித்திராவிடரை பஸ்ஸில் ஏற்றக்கூடாது என்ற கொடிய சட்டத்தை நீக்கி, அவர்களை ஏற்றவிட்டால் மோட்டார்களுக்கு லைசென்ஸ் தரப்படமாட்டாது என்று ஒரு சட்டத்தை வகுத்தார்கள் ' அந்தக் காலம் எப்படிப்பட்டது' அந்தக் காலத்தில் போடப்பட்ட சட்டம் எங்கே? இந்தக் காலத்திலே போடுகிற சட்டம் எங்கே'' என்று உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரச் சொல்லுகிறேனே தவிர நாங்கள் ஒன்றும் புதிதாகப் பெரிதாகச் செய்துவிட்டோம் எனப் பெருமையடித்துக் கொள்ளச் சொல்லவில்லை. ஆயினும் இன்றைக்குச் செய்யக்கூடியது என்னவென்று பார்த்தால், ஒரு கோடி செலவழிக்கிறோம் என்று சொன்னால் ஒரு கோடி செலவழிக்கப்படுகிறது என்று எடுத்துக் காட்டுகிற அங்கத்தினர்கள் அத்தனைபேரும், ' செலவழிக்கிற தொகை எப்படிச் செலவழிக்கப்படுகிறது? யார் யாரால் செலவிடப்படுகிறது? அது எங்கெந்த இடத்திற்குப் போய்ச் சேருகிறது'' என்பதைப் பார்த்தால் உண்மையிலேயே அவர்கள் வளர்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள முடியும்.

இந்த நேரத்தில் எனக்கு ஒரு சரித்திர வரலாறு நினைவுக்கு வருகிறது, பேரரசன் Frederic மக்களுக்குத் தேவையான நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வந்தான். பெருந் தொகையைச் செலவிட்டான். மக்களோ ஏழ்மையிலேயே வாடியிருந்தார்கள். ஒரு பெரும் சபை கூடியிருந்த நேரத்தில் பல பிரபுக்கள் வீற்றிருந்த அந்த அவையிலே "நான் ஏராளமான தொகையை மக்க

ளுக்காகச் செலவிடுகிறேனே! ஆனால் மக்கள் வாட்டத்தோடும் வறுமையோடுமே இருக்கிறார்களே! அதன் காரணம் என்ன?" என்று பெடரிக் பெருமகன் வினவ, பிரபுக்களில் ஒருவர் முதியவர் "அதற்குப் பதில் நான் அளிக்கிறேன் மன்னா" என்று சொல்லி தன் தட்டிலிருந்த பனிக்கட்டி ஒன்றை எடுத்து 'இதை மன்னரிடத்து அனுப்புங்கள்' எனப் பக்கத்திலிருந்த ஒரு பிரபுவிடம் கொடுக்க, அந்தப் பிரபு இன்னொரு பிரபுவிடம் கொடுக்க—இப்படியாக அந்தப் பனிக்கட்டி பிரபுக்களின் கை பட்டுப்பட்டு அரசன் கைக்குப் போய்ச் சேர்ந்த காலத்தில் இரண்டு சொட்டு தண்ணீர்தான் மிச்சமாக இருந்தது." இதுதான் ராஜரீதி மன்னா" என்று முதியவர் சொன்னதான வரலாற்றுக் கதை நினைவுக்கு வருகிறது.

அக்கதைபோல் இன்றைக்கு ஹரிஜனத்துறை அமைச்சர் அவர்கள் ஹரிஜனங்களுக்காக ஒரு கோடி ரூபாய் உதவி செய்கிறார்கள்" என்று சொன்னாலும், அந்தத் தொகை பிரபுக்களின் கை பட்டுப்பட்டு பிறர் பணத்தைப் பெறுவதிலே பிரபுத்தன்மையுடைய பிரபுக்களின் கை பட்டுப்பட்டு சேரிக்குப் போகிற நேரத்தில் இரண்டு சொட்டுத் தண்ணீராக மாறிவிடுகிறது என்று நினைக்கிறேன். (சிரிப்பு) ஆகவே உண்மையிலேயே நம்மால் ஒதுக்கப்படுகின்ற இந்தத் தொகை எப்படி செலவழிக்கப்படுகிறது என்பதிலே மிக மிகக் கண்காணிப்பு தேவை என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மற்றொன்று, குடியிருப்பு வசதிக்காக, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப்பற்றி, பல்வேறு மக்களால் பல்வேறு முறைகள் சொல்லப்பட்டன, பல்வேறு கருத்துக்களைக் கூறவில்லை. ஒரே கருத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்தார்கள் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

சிலர் ஹரிஜனங்களுக்கு வீடு தேவை என்கிறார்கள். சிலர் ஹரிஜனங்களுக்கு வீடு சேரியில் தேவை என்றார்கள். வேறு சிலர் சேரியிலேயே இருந்தால் 'சேரி' மனப்பான்மை இருக்கும், ஊருக்குள் இருக்கவேண்டும் என்கிறார்கள்.

இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறை இருப்பதாக நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் புரிந்துகொள்ளலாம். "ஹரிஜனங்களுக்கு சேரியில் வீடு வேண்டாம், ஊருக்குள்ளேயே கட்டித்



தரவேண்டும்" என்று சொல்வதில் ஒரு குறை இருக்கிறது. அப்போது பலபேர்கள் ஹரிஜனங்களாக மாறிவிடுவார்கள். ஹரிஜனங்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகளை தாங்களும் பெற வேண்டும் என்ற காரணத்திற்காக தங்களை ஹரிஜனங்கள் என்று சொல்லிக்கொள்ளப் பல பேர்கள் தயாராய் இருக்கிறார்கள், சர்க்கார்தான் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஊருக்கு வெளியே ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துவிடலாம் என்றாலோ பிற சமூகத்தாரோடு கலந்து உறவாடிப் பழகும் நிலைமை இல்லாமல் போய்விடுகிறது. சேரிகள் ஒதுக்கி வைக்கப்படுகிறது.

கலாம் அங்கத்தினர், லாலர் சொன்னபடி ஒதுக்கி வைக்கும் தன்மைதான் காரணம். அப்ரஹாம் லிங்கனின் அறிவு அமெரிக்க நாட்டுக்குப் பயன்பட்டது. நீக்ரோ பிரச்சனையை ஒழிக்க என்று சரித்திரம் கண்டறிந்தாலும் கூட—அன்றைக்கு அவர்களை ஒதுக்கித் தனியாக வைத்து முன்னேற்றம் காண முற்பட்டதால் தான் இன்றைக்கு அந்தப் பிரச்னை அந்த நாட்டில் முழுக்கத் தீர்ந்தபாடில்லை, ஆங்காங்கே தெரிந்து கொண்டிருக்கிறது என்பதை உணருகிறோம் ஆகவே அவர்களை ஒதுக்கி சேரியில் வைக்கும் மனப்பான்மையும் சரியல்ல. "இந்தத் தலைமுறையினர்தான் கடைசித் தலைமுறை ஹரிஜன மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் கடைசித் தலைமுறையினர். இனிமேல் ஏற்படக் கூடியவர்கள் எல்லோரும் தமிழர்கள்—ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் தான்' என்கிற விதத்திலே ஏதாவது செய்யவேண்டும்.

யார், யார், என்ன என்ன செய்தார்கள் என்பதைப்பற்றி விவாதிப்பதில் பயன் இல்லை அனைவரும் கூடி ஏதாவது ஒன்றைத் தீவிரமாகச் செய்து இந்தப் பிரச்னையைத் தீர்த்தாலொழிய, கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்தாலும் சரி, மாறி மாறி மந்திரி சபைகள் ஏற்பட்டாலும் சரி, மாற்றுக் கட்சியார் அரசியலை ஆள வந்தாலும் சரி, இந்தப் பிரச்னை அப்படியே நீண்டுகொண்டு போகும். நான் வேண்டுவது ஊருக்குள் வீடு கட்டிக் கொடுக்கும் நல்லத் திட்டத்தை தொடர்ச்சியாகச் செய்து வருவதோடு மற்றொன்றையும் கவனித்தாக வேண்டும்,

மாதத்திற்கு ஒரு தடவை ஹரிஜன தினம் என்று கொண்டாடப்படுவதாகக் கூறப்பட்டது அந்த ஹரிஜனத் தினங்கள் சிலவற்றை கண்ணுறுகின்ற துர்ப்பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

8

அரசாங்க அதிகாரிகள் தம்தம் பட்டியலைப் படிக்கவும், அதிகாரியிடம் சலுகை பெற வேண்டியவர்கள் தாமே புன்னகையை அடிக்கடி வருவித்துக்கொள்ளவும், பக்கத்திலே இருக்கும் ஒருவரிடம் 'இவர் யார்' என்று அதிகாரி கேட்க, "இவர்தான் இந்த வேலைக்கு கண்டிராகட் எடுத்துக்கொள்ள விண்ணப்பம் போட்டவர்" என்று கவனப்படுத்துவதும் ஆக இந்த முறையில்தான் இந்த ஹரிஜன தினம் கொண்டாடப்படுகிறது. இப்படிப்பட்ட தினங்கள் நாம் வாரத்திற்கொருமுறை நடத்தினாலும் கூட நிச்சயமாக ஹரிஜனப் பிரச்னை தீராது எனச் சொல்வேன்.

ஆகையால் கனம் அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு ஹரிஜன தினங்களை மிகவும் தீவிரமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயிர் ஊட்டும் வகையில் உள்ளத்துக்கு உறுதியை, வீரத்தை ஊட்டும் வகையில் மாபெரும் தினமாகக் கொண்டாடச் செய்தாலேயே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுவிடும். ஹரிஜன தினத்தில் சேரியில்—ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் அன்றைய தினம் பூராவும் 24-மணி நேரமும் ஒன்றாகக் கலந்து உறவாடத் தக்க வகையில், ஒரு ஒட்டுறவை ஏற்படுத்த ஒரு பெரும் கோலாகலத் திருவிழாவாகக் கொண்டாடப்பட ஏதாவது வழிமுறைகளை வகுத்துத் தந்தால் அந்தச் சமுதாயத்தின் நிலைமையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்ய முடியும். அன்றைய தினம் ஆண்டவனை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். வீழ்ந்து வணங்குவோம். வணங்கச் சொல்வோம். நல்ல காரியத்திற்கு வணங்கினாலும் வணங்கலாம். அதை விட்டு இந்த ஹரிஜன தினத்தில் அதிகாரிகள் பட்டியல் படிப்பதும், அவரோடு உள்ளவர்கள் புன்னகைப் பூப்பதுமாக, சுவையற்ற தினமாக இருந்து வருவதை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் ஒன்று, கலப்பு திருமணத்தைப் பற்றி இங்கே வலியுறுத்தப்பட்டது. என்னைப் பொறுத்த வரையில் கலப்புத் திருமணத்தை நான் ஆதரிப்பேன். 'கலப்புத் திருமணம் செய்து கொள்வதுதானே' என்று கேட்டால் அந்தப் பருவத்தை நான் தாண்டிவிட்டேன். எனக்கு அது அவசியமில்லாமல் இருக்கிறது.

முதலமைச்சர் காமராஜ் அவர்கள் நல்ல வேளையாகத் திருமணம் ஆகாமல் இருக்கிறார்கள். அவர் மட்டும் கலப்புத் திருமணத்திற்கு முன்மாதிரியாக இருந்து வழிகாட்டினால், இந்த



மாநிலமே ஆச்சரியத்தில் அதிர்ச்சி உறும்; பாரதமே துள்ளி எழும், கொள்கைக்காக வாழ்கிறவர் என்று எல்லோரும் பாராட்டுவார்கள். அவர் தலைமையில் இயங்குவதில் நாம் எல்லோரும் பெருமைப் படுவோம். (சிரிப்பு.)

கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதற்கு முன், மற்றொன்றையும் யோசித்துப் பார்க்கவேண்டும். கலப்புத் திருமணம் செய்துவிட்டு அதற்குப் பிறகு பிறக்கும் குழந்தைகள் சமுதாயத்தில் எப்படி ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் என்கிற பிரச்னையை நாம் தீர்க்கவேண்டும். சமுதாயத்தில் சாதி மனப்பான்மையை ஒழித்து, சாதி பாகுபாடுகளையும் நீக்க வேண்டும். சாதி பாகுபாட்டை யார் ஆதரித்தாலும் சரி, எந்த உரிமையின் பெயரால் ஆதரித்தாலும் சரி எத்தனை பழைய ஏடுகளை எடுத்துக் காட்டினாலும் சரி, சாதி பேதம் ஆகாது. இந்த சமுதாயத்தின் சாதி மனப்பான்மை மாற்றப்பட்டாலொழிய கலப்புத் திருமணத்தால், பிறக்கின்ற குழந்தைகள் தாங்கள் மணம் செய்து கொள்ளுகின்ற நேரத்தில் நல்லபடியாக சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆர்வத்தின் காரணமாக கலப்புத் திருமணம் செய்துகொண்டு, பின்னர் அதன்மூலம் பிறக்கின்ற குழந்தைகள் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத நிலமை நீடித்தால், பிரச்னை தீர்ந்துவிட்டதாகக் கருத முடியாது. ஆகவே கலப்புத் திருமணம் அதிகமாகப் பரவ வேண்டுமானால், அடிப்படையிலே நாட்டிலுள்ள சாதி மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டும் என்பதை அறிவும் ஆர்வமும் உடைய அமைச்சருக்கும் இப்பேரவையின் உறுப்பினர்களுக்கும் சபாநாயகரின் மூலமாக கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கலப்புத் திருமணம் என்பது லட்சியத்துக்காகச் செய்யப்படுவது மாத்திரம் அல்லாமல், நம் சமுதாயத்தையே மாற்றி அமைக்க எடுத்துக் கொள்ளப்படுகிற ஒரு தேசிய முயற்சியாக இருக்க வேண்டும். இந்தத் தேசிய முயற்சி, முயற்சி அளவிலே இல்லாமல் நிச்சயமாகச் செயல்பட வேண்டும். அப்போது தான் நிச்சயமாக சாதிபேதத்தை ஒழிக்க முடியும். ஆகவே, உடனடியாக சாதி பேதத்தைப் போக்குவதற்காக நல்ல சீர்திருத்தப் பிரச்சாரத்தில் நாட்டை ஆளுகின்ற சர்க்கார்—சகல துறைகளிலும் திட்டங்களிலும்—ஈடுபட்டாக வேண்டும்.

சாதியை உண்டுபண்ணினவர்கள் திருந்தி விட்டார்கள்—உலகப்போக்கை உணர்ந்து மாறிவிட்டார்கள். ஆனால் இதர

சாதிக்காரர்களால் விளையும் தொல்லைதான் அதிகம்'' என்பதாக ஒரு உறுப்பினர் குற்றம் சாட்டினார். அது உண்மைதான். சாதிப் புற்று தோன்றிவிட்டதனால், அதிலே தோன்றியவை பலபல இன்றைக்கு கிராமப் புறங்களிலே தம்தம் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்குப் போராட்டத்தான் போராடுகின்றன. தூங்கிக் கொண்டிருப்பவனை தேளும் கொட்டும், பாச்சையும் கடிக்கும். ஏமாந்தால் பாம்புந்தான் காலைச்சுற்றிக் கொள்ளும். இவற்றில் எதற்கு கொடிய விஷம் அதிகம் என்பது அல்ல பிரச்னை எந்தப் புற்றிலிருந்து அவை வெளிப்பட்டவை எனக் கண்டு, அந்தப் புற்றையே அழித்தாலொழிய அதிலிருந்து கிளம்புகின்ற இந்த விஷ ஜந்துக்கள்—தேள், பாச்சை, பாம்பு—நாட்டிலே பரவிக் கொண்டுதான் இருக்கும். புற்றையே அழிக்கும் வேலையில் மிக மிக துரிதமாக ஈடுபட்டாக வேண்டும்.

நான் ஒன்றைக் குறிப்பிட விருப்புகிறேன். "சமூகம் இன்று ஒரு விதமாக இருக்கிறது. சாதியைப் பற்றிய பற்றுதல் தேர்தல் காலத்தில் வருகிறது''—என்று கனம் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார் துரதிர்ஷ்டவசமாக அப்படித்தான் இருக்கிறது. ஆனல் அதிர்ஷ்டவசமாக அதனுல் சில வோட்டுகளும் கிடைக்கின்றன (சிரிப்பு). எந்தத் தொகுதியில் எந்த சாதியார் பெருவாரியாக இல்லையோ, அந்தத் தொகுதியில் அவர்களுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. இந்த நேரத்தில் எனக்குத் தமிழில் வழங்கும் ஒரு கொச்சைப் பழமொழி நினைவுக்கு வருகிறது "சாதி சோறு போடுமா'' என்பர். நம்முடைய சாதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக, ஒருவனுடைய வறுமை காலத்தில் பசியால், துன்புறும் காலத்தில், யாராவது அவனுக்குச் சோறு போடுகிறார்களா என்று பார்த்தால் கிடையாது. ஆனல் தேர்தல் காலத்தில் சாதியைச் சொல்லிதான் வோட்டுக் கேட்கிறார்கள். "நமக்குள் எவ்வளவோ இருக்கலாம்... ஆனல் நாம் எல்லாம்....!'' என்று சொல்வதற்குள்ளேயே, 'ஆமாம் ...ஆமாம்......உங்களைத் தவிர வேறு யாருக்காவது வோட்டுப் போடுவேனா'' என அவனும் ஒப்புக் கொள்ளுகிறான் எந்த சாதி பெருவாரியாக ஒரு தொகுதியில் இருக்கிறதோ, அந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள்தான் கவனிக்கப் படுகிறார்கள், ஆகையினாலே, சாதியினால் கிடைக்கக் கூடிய லாபத்தைப் போக்கத் தேவையான அளவில் இந்த அடிப்படை பிரச்னையாகிய சாதிபேதத்தை மாற்றி அமைக்க, நாட்டை ஆளுகின்ற சர்க்கார் நல்ல முறையில் திட்டங்களை வகுத்து தீவிரமான பிரசா



ரத்தில் ஈடுபடவேண்டும் இந்தப் பிரசாரத்திற்கு ஹரிஜன தினம் தான் மிகப் பொருத்தமானதாக இருக்கும். ஹரிஜன தினத்தில் இதற்கான மனமாற்றத்தை மக்களிடத்திலே ஏற்படுத்த பிரச்சாரம் நல்ல முறையில் நடத்த வேண்டும்.

சாதாரணமாகப் பல விஷயங்களை நாம் கனவு காண்கிறோம். நான் கண்ட அப்படிப்பட்ட ஒரு கனவை சபாநாயகர் மூலமாக இந்தச் சபைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆண்டவன் எத்தனையோ பெரிய திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறான் என்பதை புராணங்களைப் படித்து அறிந்து கொள்ளலாம் பல பல திருவிளையாடல்களைப் புரிந்த ஆண்டவன் இந்த நாற்றண்டிலே ஒரு புதிய திருவிளையாடலைப் புரிய மாட்டானா' ஒரு நாள் இரவு தூங்கிக்கொண்டிருக்கும் நேரத்திலே, நம் வீட்டிலிருந்து 4, 5 பேர்கள் அவர்கள் வீட்டிற்கும், அவர்கள் வீட்டிலிருக்கும் 4, 5 பேர்கள் நம்முடைய வீட்டிற்கும் வந்து விட்டால், விடிந்து பார்க்கும்பொழுது இரண்டு பேர்களும் ஒன்றாக சேர்ந்து கலந்து விட்ட திருவிளையாடலை ஆண்டவன் புரிய, அதைக் காண்பவனில் நான் முதல்வனாக இருக்கமாட்டேனா.......என்று கனவு காண்பதுண்டு ஆனல் அந்த ஆண்டவன் தம்முடைய திருவிளையாடல்களை பத்தோடு நிறுத்திக்கொண்டு விட்டான். மனிதர்கள்தான் அதைப்போல் இப்பொழுது செய்ய வேண்டும் இப்படிச் செய்வதற்கு இந்த மந்திரி சபையை விட திறமையான மந்திரி சபை காங்கிரஸ் கட்சியிலே இல்லை என்று சொல்லிக் கொள்ள பெருமைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் அன்றொரு நாள் ஹரிஜன மக்களின் நிலைமையை எடுத்துக் கூறியபோது "இப்பொழுதுதான் என் தங்கைகளின் கழுத்தில் வெள்ளியையும், தங்கத்தையும் பார்க்கிறேன்'' என்று உணர்ச்சி ததும்பச் சொன்னது இன்றும் என்னுடைய செவியிலே ஒலித்துக்கொண்டிருக்கிறது. உண்மையிலேயே இந்தப் பிரச்னையை நன்றாக அறிந்தவர்—பெரிய தலைவர்—என்றும் பெருமைப்பட்டு. அந்தச் சமுதாயத்தை ஒடுக்கும் வேறு எந்தச் சமுதாயத்தையும் கண்டிப்பதற்கு பூரண உரிமை உடையவர் இன்றைக்கு அந்த இலாகா பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து இந்த நேரத்தில் நான் சொல்லுவேன். நீங்கள் எங்களை விரும்பி ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும், ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், மதிப்பளித்

தாலும், மதிப்பளிக்காவிட்டாலும்—ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்—'உங்கள் நிழலைப்போல் ஹரிஜன முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம் நானும் என் கட்சியினரும்' என்பதைச் சொல்லி, இந்த மான்யக் கோரிக்கையின் பேரில் கொண்டுவந்துள்ள வெட்டுப்பிரேரணையின் மீது என் கருத்துக்களைக் கூறிக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

* * *

24—7—'57 ] [ புதன்கிழமை

[ தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற மான்யத்தைப் பற்றி எழுந்த விவாதத்தில்...]

முற்பகல் 10-26. சட்டமன்றத் தலைவர் அவர்களே, தொழில் துறையிலே ஒதுக்கப்பட்டிருக்கிற மான்யத்தின் பேரில் தரப்பட்டிருக்கிற வெட்டுதிட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகளை நான் பேசுகின்ற காலத்தில், தொழில் துறையிலே இன்னும் அதிகமான அளவுக்கு கவனம் செலுத்தப்படுமென்று சர்க்காருடைய திறமையை தூண்டுவதற்காக இந்தக் கருத்துக்களைச் சொல்லுவதாக சர்க்கார் கட்சியினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தாங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, தொழில் துறையைப் பொறுத்த வரையிலே, இந்த சர்க்காருக்கு ஒரு நல்ல திட்டம் இல்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அம்மாதிரி குற்றம் சாட்டுகிற நேரத்திலே, நான் அவர்கள் சார்பிலே வாதாடி, அவர்களுக்கு ஒரு திட்டம் இல்லாததற்கும் காரணம், திட்டம் வகுக்கின்ற பொறுப்பு அவர்களிடம் இல்லை என்ற சமாதானத்தை அவர்கள் சார்பிலே நான் தேடிக்கொள்ளுகிறேன் அப்படி தேடிக்கொள்ளுகின்ற நேரத்திலே, மாநில ஆட்சி பொறுப்பில் இருக்கின்றவர்கள் திட்டம் வகுக்கின்ற பொறுப்பு வேறு ஒரு இடத்தில் இருப்பது தங்கள் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்ற கருத்துப்பட, தங்களுடைய சொல்லையும், செயலையும் ஓரளவுக்கு பக்குவப்படுத்திக் கொள்வார்களேயானால், தொழில் துறையிலே நல்ல திட்டங்கள் வகுப்பதற்கு இந்த மாநிலத்திற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். நான் இதற்கு நாட்டுப் பிரிவினையை ஆதாரமாகக் காட்டவில்லை.' நான் அப்படி ஆதாரமாகக் காட்டினால் அதனால் ஆட்சியாளர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படலாம்.



ஆகையால், நாட்டுப் பிரிவினையை நான் ஆதாரமாக வற்புறுத்தாவிட்டாலும்கூட, ஜப்பான் நாட்டில் பொதுவாக நடந்ததுபற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன். அந்த நாட்டில் அந்தந்த பிரதேசங்களுக்கு (ரீஜனல் போர்டு) தொழில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாத வகையில் பொதுவான திட்டங்கள் வசதியாக இருக்கின்ற நேரத்தில், அந்தந்த பிரதேசங்களுடைய திறமைக்கும், தட்ப வெட்ப நிலைமைக்கும், மக்களுடைய வருவாய்க்கும் உகந்த நிலைமையில் தேவைப்படி திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி வழியில் ஜப்பான் நாட்டில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை ஆட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தொழில் துறையிலே நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்பது ஒரு கட்சி எடுத்துச்சொல்லி, அதை மாற்றுக்கட்சி மறுக்கும் பிரச்னை இல்லை. எல்லா கட்சியில் உள்ளவர்களும் தொழில் துறையிலே தென்னாடு பின்தங்கியிருப்பதைஅறிவார்கள். தொழில் துறையிலே நம் முன்னேற்றத்திற்காக தீட்டப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்பதையும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட தென்னாட்டினுடைய வளர்ச்சியை முக்கியமாக கருதாதபடி, நம்முடைய மாநில அரசு கேட்ட தொகையை பெறமுடியாமல்கூட திகைத்துத் திரும்பியதையும் நாடு பூராவும் நன்றாக அறிந்திருக்கிறது. நம்முடைய பொருளாதார திட்டத்தை அகில இந்திய அடிப்படையிலே வைத்திருக்கிறவரையில் அகில இந்திய திட்டங்கள் நாட்டிலே அமுல் நடத்தப்படுகிற வரையில் உண்மையிலேயே பல பிரதேசங்கள் பஞ்சப் பிரதேசங்களாக— வேண்டுமென்று அல்ல' விரும்பினாலுங்கூட முன்னேற்றத்துக்கு வழிவகுக்கமுடியாத காரணத்தினாலே, பஞ்சப் பிரதேசங்களாகத்தான் நடத்தப்படும். உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், எங்கள் கட்சியிலே நாங்கள் எப்பொழுதுமே ஏதோ வேடிக்கையாக எடுத்துக்காட்டுகிறோம் என்று நாட்டை ஆளுகின்ற கட்சி அலட்சியம் காட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். உடல் முழுதும் குளிக்கவேண்டுமானால், முதுகுப்புறத்தைத் தேய்ப்பதற்கு வாலிபர்களாக உள்ளவர்கள் மனைவிமார்களையும், வயதானவர்கள் தங்களுடைய துணைவர்களையும், வைத்துக்கொள்ளுகிறார்கள். சாதாரணமாக நாடு பூராவும் பொருளாதாரத் திட்டம் போடுகின்ற

நேரத்தில், சில பகுதிகள் பஞ்சப் பிரதேசங்களாக, வேண்டுமென்றல்ல முடியாத காரணத்தினால் ஆக்கப்பட்டு வருகின்றன

அகில இந்திய ரீதியில் தரப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தில் கூட பம்பாய்மாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 43 பேர்கள் என்றும், அவர்களால் பாதுகாக்கப்படுகின்றவர்கள் 57 பேர்கள் என்றும், சென்னைமாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 31 பேர்கள் என்றால், அவர்களால் காப்பாற்றப்படவேண்டியவர்கள் 69 மக்கள் என்றும் கணக்குப் போடப்பட்டிருக்கிறது ஆகையினால் இங்கே சம்பாதிக்கிறவர்கள் தொகையும் குறைவு. அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு' பிழைப்பு தேடவேண்டியவர்களின் தொகையும் அதிகமானதாக இருக்கிறது. பிழைப்பு எந்த அளவுக்கு கிடைக்கின்றது என்று பார்த்தால், தென்னாட்டிலே உழவுநாட்கள் ஆண்டு ஒன்றுக்கு 181 என்றால் அதே உழவனுக்கு வடநாட்டிலே 292 நாட்கள் என்றும், தென்னாட்டிலே உழவனுக்குக் கிடைக்கின்ற வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 382 என்றால், வடநாட்டிலே உழவனுக்குக் கிடைக்கின்ற வருவாய் ரூபாய் 512 என்று சர்க்கார் தருகின்ற புள்ளிவிவரங்களே சொல்லுகின்றன.

புள்ளி விவரங்களிலுள்ள நன்மை தீமையைப் பற்றி நான் ஓரளவிக்கு அறிந்திருக்கிறேன் என்றாலும் சர்க்கார் தந்திருக்கின்ற புள்ளி விவரங்களிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. எந்த வகையில் பார்த்தாலும் வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கின்றது என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லும் போது ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்கு எரிச்சல் ஏற்படும் என்று நினைத்தோ அல்லாமலோ அடிக்கடி வடக்கு தெற்கு என்று கேலி செய்வது போன்று ஏதோ சொல்ல வேண்டுமென்று நினைத்து இடக்கு பேசி மடக்கி வருகிறார்கள் என்கிறார்கள். நாங்களும் இதைப் போன்று சொல்லமுடியும் இவ்விதம் பேசுவதின் காரணம் அவர்களின் மனதிற்கு நாங்கள் சொல்லும் உண்மையைப் பார்த்து, அவர்களின் மனம் 'படக், படக்' என்று அடித்துக் கொள்ளுகிறது. மற்றொரு வகையில் பிரச்னையை மழுப்புவதற்காகச் சொல்லப்படுகிறது. நாங்கள் எல்லாம் ஒன்று, அகில இந்தியா பூராவும் ஒன்று என்று பார்த்து காரியங்களை நடத்துவோம். நீங்கள் பிளவு மனப்பான்மையுடையவர்கள் நீங்கள் பேத புத்தியோடு பிரச்னைகளை பார்க்கிறீர்கள் என்று வாதங்களை



சொல்லி பிரச்னையை மழுப்புகின்றார்கள். ஆனால்தெற்குப்பகுதியை தாழ்த்திவிட்டு எத்தனை பெரிய தூய்மையான வாதங்களை எந்த பெரிய தலைவர்கள் சொன்னாலும் அதை ஒத்துக்கொள்வதற்கில்லை, தென்னாட்டில் இருக்கின்ற குறைகளை நீக்கினால் ஒழிய தென்னாடு முன்னேற்றம் அடையாது. இதை மறுத்து எந்தவிதமான அரசியல் வாதங்களை கூறினாலும் ஒத்துக் கொள்வதற்கில்லை. சென்னையில் பொருளாதார நிபுணராக இருந்த திரு. பி. ஜே. தாமஸ் அவர்கள் சென்ற கிழமையில் குறிப்பிட்டிருப்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன் முதல் ஐந்தாண்டு திட்டத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் சரி பொதுவாக தென்னாட்டை விட வட நாட்டில் வளம் பெறுகிறது என்று எடுத்துச் சொல்லி, தென்னாடு முன்னேற வில்லை என்று தென்னாட்டார்கள் பொறுமையின் காரணமாக பேசவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லி ஒரு பகுதியில் மாத்திரம் விலைவாசி ஏறியிருப்பதின் காரணங்களையும் எடுத்துச் சொல்லி இதை மாற்றுவதற்கு தென்னாட்டுக்கு ஒரு திட்டம் தேவை என்பதையும் எடுத்துச் சொல்லி தந்து நல்ல பாதுகாப்பு உணர்ச்சியோடு அரசியல் கலப்பு இல்லாதவாகப் பணியாற்றினால் நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவில் நாங்கள் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்லுகின்றோமோ அதேதான் இன்று நாலாபக்கங்களிலும் பேசப்படுகிறது, ஆதரிக்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்தக் காற்று எந்தப்பக்கம் அடிக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும் என்பதைக் கூற விரும்புகிறேன். இது வெறும் கேலிக்குரியது என்று கருதக்கூடாது. நாட்டுக்கு எது தேவை என்பது எங்களுக்குத் தெரியும், நாட்டில் எவ்விதம் இருந்தாலும் நீங்கள் கவலைப் படவேண்டியதில்லை நாட்டுக்கு உழைத்தவர்கள் நாங்கள்தான். எங்களுக்குத்தான் அந்த உரிமை உண்டு என்று ஆளும் கட்சியிலிருந்து பதில் அளிக்கப்படுகிறது. நாட்டுக்கு உழைத்தவர்களுக்கு நாங்கள் தலைவணங்குகிறோம். அவ்விதம் தலைவணங்குகின்ற நேரத்தில் அதை வைத்துக்கொண்டு ஆட்சியில் இருக்கும் அமைச்சர்களால் நாடு எவ்விதம் நடத்தப்படுகிறது என்பதை பார்த்துப் பரிதாபப்படுகிறேன். நாட்டை மீட்டு நல்வழிக்கு கொண்டு வரவேண்டும் என்றுள்ள உணர்ச்சி அதன் மூலம் எழுகின்ற நம்பிக்கை அந்தப்பக்கத்திலுள்ளவர்களுக்கு மாத்திரம்தான் இருக்கிறது என்பதல்ல. இந்தப்புறத்தில் இருப்பவர்களுக்கும் அந்த நம்பிக்கை வரக்கூடும் என்பதை, சபாநாயகர் மூலமாக அவர்

களுக்குப் பணிவன்புடன் கூறிக்கொள்கிறேன். இந்த சட்டமன்றத்தில் அடிக்கடி கூறப்படுகிறது. நாங்கள்தான் இந்நாட்டுக்குத் தியாகம் செய்திருக்கிறோம், நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கப்படுகிறது. என்னுடைய கட்சியை பொறுத்தவரையில் எங்களைச்சார்ந்திருந்த தலைவர்கள் வேண்டுமானால் நீங்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளலாம். அவர்களில் ஒரு சிலர் இன்றைய தினம் உங்கள் நண்பர்களாகிவிட்டார்கள். (கைதட்டல்) எங்களை பொறுத்தவரையில் "ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி" என்பது போன்று நாங்கள் பிரச்னைகளைப் பற்றி சொல்லுகின்ற நேரத்தில் நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்று நினைத்து சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதை விட்டுவிட்டு பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் சில யோசனைகளை சொல்லுவதற்கு முன்னால் தொழில் துறையில் எந்த நிலையில் இருந்தது என்பதற்கு 1945—1951-ல் Under the Post War Development Scheme—the industries development-ல் என்னென்ன தொழில்கள் இருந்தன என்பதை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்—

1. The Soap Institute and Soap Factory at Calicut;
2. The Oil Factory and Hydrogenation Unit at Calicut;
3. Shark Liver Oil Unit at Calicut;
4. Coir School and Coir Production in Andhra;
5. Oil Institute at Anantapur;
6. Ceramic Factory at Gundur;
7. Bangle Manufacturing Unit at Kalahasti;
8. Paper Factory at Rajahmundry;
9. Kollegal Silk Filature Factory;
10. A Cottage Industrial and Chemical Testing Laboratory at Madras.

இவைகளில் முக்கியமான பெரும்பகுதியை மொழி வழி மாகாண பிரிவினையின் காரணமாக நாம் இழந்திருக்கிறோம். இதில் இருக்கின்ற வேடிக்கை என்னவென்றால் இந்தத் திட்டங்கள் இருந்த காலத்தில் இதற்காக எவ்வளவோ அதிகாரிகள் இருந்தார்கள். இப்போது இதே துறையில் அதிகமாக அதிகாரிகள் இருப்பதாக அறிகிறேன். நான் கூறுவதில் தவறு இருக்குமானால் என்னை திருத்தவேண்டிய கடமை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது.



இந்த விதத்தில் கூடுதலாக அதிகாரிகள் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை இதில் உண்மையிருக்குமானால் அதைக் கூற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. இந்த நாடு நன்றாக இருந்த காலத்தில் ஒரு டைரக்டரும் ஒரு ஜாயிண்ட் டைரக்டரும் இருந்த அதே இடத்தில், இப்போது ஒரு டைரக்டரும், ஒரு அடிஷனல் டைரக்டரும், மூன்று ஜாயின்ட் டைரக்டரும் அதன் கீழ் பல கெஜெட்டட் ஆபீஸர்களும் 20, 30 இன்ஜினியர்களும் இருப்பதாக நான் அறிகிறேன். இவ்விதம் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் விளக்க வேண்டும். இதில் உண்மையில்லையென்றால் திருத்த வேண்டிய கடமையும் அவர்களுக்கு இருக்கிறது. அடுத்ததாக சிறிய தொழில்கள் அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தத்தொழில்களை சர்க்கார் நேரடியாக நடத்த வேண்டும். இல்லையானால் இதில் அதிக லாபம் கிடைக்கிறதாக இருந்தால் தனிப்பட்டவர்கள் இதை நடத்துவதற்கு வருகிறார்களே தவிர ஏதோ ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்ற தர்ம உணர்ச்சியோடு அல்லது நாட்டுக்கு முன்னேற்றம் அடைவதற்காகவோ, பொருளாதார துறையில் முன்னேற்றம் அடைவதற்காகவோ, தனிப்பட்டவர்கள் எப்பொழுதும் முன்வரமாட்டார்கள். உடனடியாக லாபம் கிடைப்பதாக இருந்தால் தனிப்பட்டவர்கள் தொழிலை ஏற்று நடத்துவதற்கு முன்வருவார்கள். ஆகவே கீழ்க்கண்ட தொழில்களை உடனடியாக சர்க்காரை ஏற்று நடத்த வேண்டுமென்று ஒரு யோசனை கூற விரும்புகிறேன் :—

(1) A paper factory or some factories where bamboo is available.

நம்முடைய நாட்டில் இன்றைக்கு 600-க்கு மேற்பட்ட பத்திரிகைகள் நடந்து வருவதாக தகவல் கிடைத்திருக்கிறது. இதற்கு வேண்டிய காகிதங்கள் கிடைப்பதற்கு காகித ஆலைகள் அதிகமாக வேண்டியிருக்கிறது இதற்கு வேண்டிய நாணல் காடு மூங்கில் காடு, நமக்கு வசதியாக இருக்கிற காரணத்தால் இதை உடனடியாக ஆரம்பித்து நடத்த முடியும், அடுத்ததாக,

(2) An Oil and Soap Factory in North or South Arcot

(3) A Silk Filature Factory at Hosur taluk, Selem District

இந்தப்பட்டு விஷயத்தில் இங்கு சபை அங்கத்தினர்களால் உருக்க

மாக பேசப்பட்டது பட்டை கொண்டு பார்வையர்களுடைய மனத்தை திருப்தி செய்வதற்காகவாவது இதை உடனடி கொண்டு வரவேண்டும், நமக்கும் சில நேரங்களில் பட்டு தேவைப்படு கிறது. சில நேரங்களில் பட்டு வாங்குவதில் ஆடவர்களுக்கு இதனால் தொல்லை இல்லாமல் இருக்கும். ஆகவே பெண்களின் திருப்திக்கு வேண்டியாவது இந்தப் பட்டுத் தொழிலை ஆயிரக் கணக்கான ஆண்டு காலமாக மேற்கு நாடுகளுக்கு எல்லாம் அனுப்பிக்கொண்டிருந்த இந்தப் பட்டை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக இந்த பட்டுத்தொழிலை நடத்துவதற்கே உடனே முயற்சிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன் அடுத்ததாக,

(4) A glue and gelatine factory with the huge quantity of tannery flushings available நம்முடைய நாட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. தோலைப் பதனிடும்பொழுது அதிலுள்ள கொழுப்பையும் சத்தையும் வீணாக் காமல் அதை உற்பத்தி செய்யலாம் என்று நிபுணர்கள் குறிப்பிட் டிருக்கிறார்கள். அடுத்ததாக,

(5) Development of Coir Industry in Tirunelveli and Ramanathapuram Districts

6) Metal Industry with improved alloys அதற்காக என்று எத்தனையோ இன்ஜினியர்கள் வைத்திருப்பதாக கூறப்படு கிறது. எந்தெந்த உலோகங்களிலிருந்து புதிய உலோகம் கிடைக் கும் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக நம்மாநிரிப்பட்ட தொழிற்சாலைகளை உடனடி ஏற்படுத்தவேண்டும். அடுத்ததாக,

(7) Wood Industry

8) Pigment manufacturing and paint manufacturing and mixing;

(9) Manufacture of Musical Instruments;

(10) Ink Manufacture;

(11) Boot Polish making;

(12) Manufacture of Purchasement Paper

(13) Evolving plastic from materials like cashew kernals, etc

சபாநாயகர் அவர்களே நான் இந்த பிரச்னையிலிருந்து சற்று விலகுவதற்குக் காரணம், இந்தச் சபையில் பேசப்பட்ட சிலவற் றிற்கு பதில் அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். நமது நிதி



அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது முந்திரி காடுகளை வளர்ப்பதற்காக நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று அவர்களது வக்கிரமான புன்னகையை வீசி என்னைப் பார்த்துச் சொன்னார்கள். சிந்திரி முந்திரி என்று பேசியவர்களுக்கு இது திருப்தி அளிக்கலாம் என்று சொன் னார்கள்.

நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம்: ஓரளவிற்கு திருப்தி அளிக்கலாம் என்றுதான் சொன்னேன்.

திரு சி. என். அண்ணாதுரை: அங்கே தொழில், இங்கே தொழில், அங்கே சிந்திரி இங்கே முந்திரி என்று நாங்கள் அடுக்கு மொழி கூறவில்லை. நாங்கள் அடுக்குமொழி பேசுவதில் நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் கூறுகிறோம் அவைகள் ஓரளவிற்கு பயன் அளிக்கத்தக்க வகையில் இருப்பதையும் நாங்கள் பார்க் கிறோம். முந்திரித் தொழில் என்று நாங்கள் சொல்வது முந்திரிப் பழத்தை அல்ல. அதிலிருந்து, முந்திரிச் செடியிலிருந்து, கிடைக்கும் உப பொருள்களை வைத்துக்கொண்டு பிளாஸ்டிக் போன்ற சாமான்கள் செய்து தொழிலை வளப்படுத்தவேண்டுமென்று கூறு கிறோமே யொழிய, முந்திரி பழத்தை நாங்கள் கூறவில்லை யென் பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, முந்திரி என்று நாங்கள் சொல்வது அதிலிருந்து பிளாஸ்டிக் சாமான்கள் போன்றவைகள் செய்யலாம் என்பதை உள்ளடக்கித்தான் சொல்கிறோமே தவிர, முந்திரிப் பழத்தை நாங்கள் கூறவில்லை, முந்திரிபழக் காடுகள் நிதியமைச்சரவர்களின் மாவட்டத்தில் மட் டுமல்ல இருப்பது, நான் சிறு வயதில் ஓடி விளையாடிக்கொண் டிருந்த காலத்தில் கைக்கு எட்டிய தூரத்தில் ஆத்தூரில் முந்திரிப் பழம் கிடைத்துக்கொண்டிருந்தது அவைகளை நான் வேண்டிய மட்டில் டுத்துக்கொண்டிருக்கிறேன். அம்முந்திரிப் பழங்களை நான் தின்று பழக்கப்பட்டவன்தான். ஆதலால் நிதியமைச்சரவர் கள் முந்திரிப் பழத்தை வளர்த்துத் தரவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. அந்தகு தொழிலை வளப்படுத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லும்போது, சர்க்காரிடம் அதற்கு செலவழிக்க பணம் இல்லையென்று சொல்லக்கூடும். நிதி இல்லையென்றால் வரி போடுங்கள் என்று சொன்னால் காங்கிரஸ் கொறடா அவர்கள் எனக்கே கொறடா கொடுப்பார்கள் நாங்கள் வரிபோட்டால் நீங் கள் அதை எதிர்ப்பீர்களே என்று. வரிகளைப் போட்டுத்தான்

நாட்டை ஆளவேண்டுமென்றால் சர்க்காருக்கும், சத்திரம் சாவடிகளுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு சர்க்காருக்குள்ள வருவாய் இரண்டு விதத்தில்தான் இருக்கவேண்டும் ஒன்று வரிமூலம், இரண்டாவது, வருவாய் தரக்கூடிய எல்லா துறைகளையும் சர்க்கார் கைப்பற்றவேண்டும். தனியார் கையில் இருக்கிறதே தனவந்தர் கையில் இருக்கிறதே என்ற பற்றோ பாசமோ குறுக்கிடக்கூடாது. இன்றையதினம், தொழில்களை பப்ளிக்செக்டர், பிரைவேட் செக்டர் என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். பிரைவேட் செக்டர் என்றால் தனிப்பட்ட முதலாளிகள் பணம்போட்டுத் தொழில் நடத்துவதாகும். பப்ளிக் செக்டர் என்றால் சர்க்காரே பணம்போட்டு நடத்துவதாகும் அதிலே பிரைவேட் செக்டருக்கு நாட்டை ஆளுகிற சர்க்கார் சில நேரங்களில் அவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். உதவியும் அளிக்கிறார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் இத்தொழிலை நடத்துகிறவர்களுக்கும் உள்ள நெருக்கத்தைப் பொறுத்துத்தான் கடனும், உதவியும் அளிக்கப்படுகிறது ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவெனில் அந்த முறையை மாற்றி நம் நாட்டில் தொழில்கள் பப்ளிக் செக்டரில்தான் இருக்கவேண்டும். அதை இரண்டாகப் பிரித்து ஒன்று சர்க்காரே முழு மூலதனம் போட்டு நடத்துகிறது, இரண்டாவது சர்க்கார் 51 பங்குபோட்டு மற்ற பங்கை பொதுமக்களிடமிருந்து பெற்று நடத்தவேண்டும் பொதுமக்கள் தாராளமாகப் பணம்தர முன்வருவார்கள், தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் தொழிலுக்கே அவர்களிடமிருந்து பங்குகள் வாங்க பொதுமக்கள் முன்வரும்போது சர்க்காரே தொழிலை நடத்தப்போகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டால் முதலாளிகளிடம் உள்ள நம்பிக்கையைவிட அரசாங்கத்தினிடம் அதிக நம்பிக்கை வைத்து பங்குகளை வாங்க முன்வருவார்கள். இன்றுள்ள சிறுதொகை சேமிப்பிற்குப் பாடல், ஆடல் மூலமாகவும், நாடக மூலமாகவும், நண்பர்களின் ஒத்துழைப்பு மூலமாகவும், கடைசியாக அதிகாரிகள் மூலமாகவும் நிறைவேற்றலாம் என்று கருதுகிறார்கள். சிறு சேமிப்புத் திட்டத்துடன் நான் சொல்லுகிற ஒரு சிறிய யோசனையையும் அதனுடன் இணைக்கவேண்டும் பணத்தைச் சேமித்து வையுங்கள் 12 ஆண்டில் 100 ரூபாய் 165 ரூபாயாகிவிடும் என்று கூடையில் மாஞ்செடியை வைத்துவிட்டு கூடையை எடுத்துவிட்டு மாஞ்செடி இருக்கிறது பாருங்களென்று சொல்வது மாதிரி இல்லாமல், விளம்பரம் கொடுப்பதைவிட்டு அதை மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் உபயோகப்படுத்தப்பட,வேண்டும்.



அப்பணத்தை சேலம் அலுமினியம் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளுக்கு இயர்மார்க் செய்து அத்தொழில்கள் வளம்பெறச் செய்வதற்கு அத்தொழில்களுக்கு இதை பங்காக மாற்றினால் இத்திட்டம் விரைவில் வெற்றியடையும் என்று எடுத்துச் சொல்லிக்கொள்ளுகிறேன். அந்த முறையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் இவ்வளவு சொன்னாலும்கூட கடைசியில் நான் என்னுடைய அதிருப்தியைக் கூறிக்கொள்ளாமல் இருப்பதற்கு இல்லை, அது யாருடையபேரிலும் இல்லை, எந்தக் கட்சியின்பேரிலும் இல்லை, காலத்தின்பேரில்தான் என்னுடைய அதிருப்தி அது. ஒரு காலத்தில் பட்டையும் முத்தையும் உலகத்திற்கெல்லாம் அனுப்பி வந்த தமிழ்நாடு இன்றைய தினம் கூலிகளைத்தான் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறது என்று. அதற்காக காலத்தைத்தான் நான் நொந்துகொள்ளுகிறேன். ஆற்றலும், அறிவும், திறமையும் படைத்த அமைச்சர்கள் எங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தும் டெல்லியில் போதுமான அளவு அதிகாரம் அளிக்கப்படாததால் அவர்கள் செயல்படமுடியாமல் இருக்கிறார்கள். ஆகையால்

நிதி அமைச்சர் திரு. சி சுப்பிரமணியம்: இன்று கூலிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில்லை, முன்தாலத்தில் அப்படி நடந்திருக்கலாம்.

திரு. சி என். அண்ணாதுரை: வெளிநாடுகளில் கூலிகளை இப்பொழுது எடுத்துக்கொள்ளுவதில்லை, இங்கிருந்து சிலோனுக்குச் சென்றவர்களை அவர்கள் துரத்துகிறார்கள். பொருளாதாரத்தை நாம் சரிவர உணர்ந்து பேராசிரியர்கள் சொல்லியிருக்கும் கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு நமக்குள்ள அதிகாரங்களை நாமே வைத்துக்கொண்டு, தொழில் துறையில் நல்லபடி முன்னேற்றம் காணவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன், ஏனென்றால், நம் நாட்டில் வறுமை சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை. அந்த அளவுக்கு வறுமை இருக்கிற காரணத்தால் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* * *

26—7—'57 ] [ வெள்ளிக்கிழமை

[ அமைச்சரவையிடத்துச் செலவுத் தொகையை 'ஒப்புவிக்கின்ற' தருணத்தில் ஆற்றிய உரை ].

பிற்பகல் 12-39 சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தச்சபையின் முன்னாலே நீண்ட நாட்களாக மிகச் சிறந்த ஆர்வத்தோடு, பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு இன்றையதினம் இறுதிக் கட்டத்தில், "ஒப்படைத்தல்" (Appropriation) என்ற சம்பிரதாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய தொகையை ஒப்படைப்பதற்கு வேண்டிய நம்பிக்கையைப் பெற்ற ஒரு அமைச்சரவை இன்றையதினம் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன். அந்த அமைச்சரவை நல்ல எண்ணம் படைத்தது என்பதையும் இந்த மன்றத்திலே நான் பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன் ஆற்றல் படைத்தது என்பதையும் நான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன், ஆனால், நல்லஎண்ணமும் ஆற்றலும் படைத்தவர்கள் தங்களுடைய சிந்தனா சக்திக்குத் தடை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒரு துர்ப்பாக்கியமான அரசியல் சூழ்நிலைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் எனக்கு இருக்கும் முக்கியமான குறைபாடு. ஆற்றல் இவர்களுக்குக் குறைவாக இருந்திருக்குமானால், அதற்கான அளவுக்கு இவர்களுக்கு அதிகாரம் இல்லாததைப்பற்றி நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். வேண்டிய ஆற்றலுள்ளவர்களும் நல்ல மனம்படைத்தவர்களும் நம் மாநில அரசாங்கத்திற்குக் கிடைத்திருந்தும், அவர்கள் மக்களின் குறைபாடுகளை அறிந்துகொள்வதற்கு நல்ல அக்கரை எடுத்துக்கொண்டிருந்தும் மக்களின் குறைபாடுகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் காண்பதில் திறமைபெற்றிருந்தும் அந்தத் திறமையைத் தூண்டுவதற்கு எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் எடுத்துச்சொல்லும் கருத்துக்களைப் பெருமையோடு ஏற்றுக்கொள்ளும் பெருந்தன்மை கொண்டிருந்தும், அவர்கள் சுயசிந்தனையோடு காரியங்களைச் செய்யமுடியாத அளவுக்கு இன்றைய அரசியல் சூழ்நிலை இருப்பதைப்பற்றி நான் உண்மையிலேயே கவலைப்படுகிறேன். நிர்வாக யந்திரத்திலுள்ள கோளாறுகளைப்பற்றி பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விஷயங்களை ஆளும் கட்சியாளர்கள் அடியோடு மறுக்கிறார்கள் என்று நான் கருதவில்லை,



ஆட்சியாளர்கள் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும், அந்த நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறவும் தயாராக இருக்கிறார்கள் என்றுதான் நான் உண்மையிலேயே நம்புகிறேன், ஆட்சியாளர்களுடைய கொள்கைகளில் இருக்கின்ற முரண்பாடுகளைப்பற்றித்தான் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆட்சியாளர்களின் கொள்கைகளைப் பொதுப்படையாகப் பார்க்கும்போது, மக்களின் நலன்களை வளர்க்கத்தக்க ஒரு நல்ல நிர்வாகத்தை நாட்டுக்கு அளிக்கவேண்டும் என்ற பொதுக் கொள்கை அவர்களிடத்தில் இருந்தாலும், அந்தக் கொள்கை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பல கொள்கை முரண்பாடுகள் அவர்களுடைய நிர்வாகத்தில் காணப்படுகின்றன என்பது தெரிகிறது. அந்தக் கொள்கை முரண்பாடுகளை எடுத்துச் சொல்லுவதற்கு எனக்கு உறுதுணையாக இருப்பது நான் அறிந்த உண்மைகள் மட்டுமல்ல, கனம் சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொன்ன பல்வேறு கருத்துக்களை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் அந்த முரண்பாடுகளை நான் எடுத்துச் சொல்லுகிறேன்.

உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை ஆட்சியாளர்கள் மதித்துப் பறைசாற்றுகின்ற இதே நேரத்தில் "மெகனைஸ்ட் அக்ரிகல்சர்" — பெரும் பெரும் விவசாயப் பண்ணைகள் விஞ்ஞான முறையில் வளர்க்கவேண்டும்—என்ற கொள்கையையும் ஆட்சியாளர்கள் வலியுறுத்துகிறார்கள். இந்த இரண்டும் முரண்பட்ட கொள்கைகள் என்பதையும், உழுபவனுக்கு நிலம் என்ற திட்டமும் மெகனைஸ்ட் அக்கரிகல்சர் என்ற திட்டமும் ஏககாலத்தில் நிறைவேற்றப்பட முடியாது என்பதையும் சாதாரண பொருளாதார சாஸ்திரத்தைப் படித்தவர்கள் உணர்ந்து கொள்ளுவார்கள். அவர்களுடைய கொள்கையில் இந்தப் பெரிய முரண்பாடுகள் இருக்கின்ற காரணத்தால்தான் நம் ஆட்சியாளர்கள் உழுபவனிடத்தில் பரிவும் பாசமும் காட்டினாலும், பெரிய நிலமுதலாளிகளைக் கட்டுப்படுத்தமுடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆட்சியாளர்கள் பெரிய நிலமுதலாளிகளைக் கட்டுப்படுத்துவார்கள் கட்டுப்படுத்துவார்கள் என்று இலவுகாத்த கிளிபோல், இந்த நாட்டுமக்கள் பன்னெடுங்காலமாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். "தேர்தல்கள் முடிந்த பின் ஆட்சியாளர்கள் புதிய வலு

வைப் பெறுவார்கள். அடுத்த தேர்தல் வரட்டும், அது வந்துமுடிந்ததும் ஆட்சியாளர்கள் மறுபடியும் புதிய வலுவைப் பெறுவார்கள்" என்று எண்ணி "நிலச் சீர்திருத்தம் வரும், வரும்" என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் இடைக்காலத்தில், ஆச்சர்ய விநோபா பாவே அவர்கள் அருமையாகச் சுட்டிக் காட்டியது போல, நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டம் வந்தாலும் அது தங்களைக் கட்டுப்படுத்த முடியாதபடி பெரிய நில முதலாளிகள் பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டார்கள் என்பது இந்த நாட்டு மக்கள் அறிந்த ரகசியம் ஆகும்.

அடுத்தபடியாக, தொழில் துறையை எடுத்துக்கொண்டால், அந்தத்துறையிலும், விவசாயத் துறையில் போலவே, இந்த ஆட்சியாளர்கள் தனியார் துறையையும் பொதுத்துறையையும் ஆதரிக்கிறார்கள். காரணம் கேட்டால் ஆட்சியாளர்கள் சொல்லக்கூடும். எங்கள் கொள்கையே 'கோ-எக்ஸிஸ்டென்ஸ்' கொள்கைதானே? தொழில் துறையிலும் 'கோ-எக்ஸிஸ்டென்ஸ்' கொள்கையானது உலகப் பூசலைத் தடுப்பதற்காக—ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காக-கடைப்பிடிக்கப்பட்டால், அப்போது அது வரவேற்கக் கூடியதாக இருக்கும். ஆனால், ஒரு பக்கத்தில் கொழுத்த முதலாளிகளும் மற்றொரு பக்கத்தில் ஏழைத் தொழிலாளிகளும் இருக்கும் நிலைமையிலும், ஒரு பக்கத்தில் பெரிய மடாதிபதிகளும், மற்றொரு பக்கத்தில் அவர்களுக்கு அடிமையாக வாழ்கின்ற ஆண்டிகளும் இருக்கும் நிலைமையிலும், ஒரு பக்கத்தில் ஆலை முதலாளிகளும் மற்றொரு பக்கத்தில் அவர்களால் கசக்கிப் பிழியப்படும் தொழிலாளிகளும் இருக்கும் நிலைமையிலும்—இப்படிப்பட்ட முரண்பாடுகளை வைத்துக்கொண்டு— 'கோ-எக்ஸிடென்ஸ்' கொள்கையைக் கடைப்பிடித்தால், அப்போது ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு நிர்வாகத் திறமையும், அறிவும், ஆற்றலும் இருந்தாலும், மக்களிடத்தில் அவர்களுக்கு எவ்வளவு அன்பும் அக்கரையும் இருந்தாலும், தேவைப்படும் அளவுக்கு அவர்களால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்,

இந்த அரசாங்கம் மக்களுக்கு எவ்வளவோ நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டிருந்தாலும் அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது இதனை நான் விளக்கவேண்டுமானால், கனம் சபாநாயகர் மூலமாக இந்த



சபைக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆட்சியாளரை நான் ஒரு டாக்டருக்கு ஒப்பிடுவதற்கில்லை; ஒரு கம்பவுண்டருக்கு ஒப்பிட்டால் அதனால் ஆட்சியாளர்கள் வருத்தமடைய மாட்டார்கள் என்று நான் எண்ணுகிறேன். இந்த ஆட்சியாளர்கள் நல்ல கம்பவுண்டர்கள். அவர்களிடம் நோயாளி வரும் நேரத்தில் நோயாளியை அவர்கள் பரிவோடு பார்க்கிறார்கள். நோயாளியிடமுள்ள நோயைக் கண்டுபிடிக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். கண்டுபிடித்த நோயை நீக்க விரும்புகிறார்கள். ஆனால், எந்த டாக்டரிடம் வேலை செய்கிறார்களோ, அந்த டாக்டர் கொடுக்கும் மருந்து பாட்டில்களில் தண்ணீர் அதிகமாகவும் மருந்து குறைவாகவும் இருப்பதால் தங்களுக்கு உண்டாகும் வருத்தத்தைப் புன்னகையாக மாற்றிக்கொண்டு, கிடைக்கும் மருந்தை நோயாளிகளுக்கு கொடுக்கிறார்கள். இந்த நிலைமையில் இன்றைய ஆட்சியாளர்கள் இருக்கின்ற காரணத்தினால்தான் நான் குறிப்பிட்ட முரண்பாடுகளும் குறைபாடுகளும் இருக்கின்றன என்று நான் உண்மையிலேயே கருதுகின்றேன். அதனால்தான் போலும் இந்த மாமன்றத்தை ஒரு காலத்தில் நேரில் அலங்கரித்துக்கொண்டிருந்தவர்களும், இப்போது படரூபமாக அலங்கரித்துக்கொண்டிருப்பவர்களுமான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் "இந்த மாநில அரசாங்கங்கள் Grant receiving corporation டெல்லியிலிருந்து கிராண்டுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; நன்கொடைகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களைப்போல் இந்த அரசாங்கங்கள் இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். நாட்டில் வளர்ந்துவரும் இந்தப் புதிய கருத்தை ஆட்சியாளர்களுக்கு நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம். இந்தக் கருத்து மிகப் பிற்பட்ட மக்கள் தொகுதியிலிருந்து வருகிறது என்ற காரணத்தினால் இதை ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்தினால், 'சாதாரணமாக, ரெயில்வே ஸ்டேஷனிலுள்ள செவிடர்கள் ரெயிலில் போகும்போது மணி அடித்ததைக் கேட்காமல் உறங்கிக்கொண்டிருந்துவிட்டு, ரெயில் போனவுடன் பதைபதைக்கும் அவல நிலையை அடைவது போல, நல்ல திட்டங்களைத் தீட்டினாலும், அவை நிறைவேற்றப்படாமல் இருக்கும் நேரத்தில், மக்கள் அல்லோல கல்லோலப்படும்போது, ஆட்சியாளர்கள் அவல நிலையை அடைவார்கள் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

இப்போது ஆட்சியாளர்கள் தொழில் துறையில் எவ்வளவு நல்ல திட்டங்களைத் தீட்டினாலும் நாட்டு மக்கள் நலனடைய

முடியவில்லை. சென்ற பத்தாண்டு காலமாக, நாட்டு மக்களின் மனக்கண் முன்னால், 'பழைய மாஞ்செஸ்டர்கள் போய் புதிய மாஞ்செஸ்டர்கள் வருவதும், பழைய லங்காஷயர்கள் போய் புதிய லங்காஷயர்கள் வருவதும், பழைய ஷெப்பீல்டுகள் போய் புதிய ஷெப்பீல்டுகள் தோன்றுவதும்' நிகழ்ந்து வந்திருக்கின்றன. பாலைவனங்கள் எல்லாம் சோலை வனங்களாக ஆக்கப்பட்டுவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். "பாலைவனம் எல்லாம் சோலைவனமாக வேண்டும்" என்று ஒரு தமிழ்ப் புலவர் பாடியது போல், பாலைவனங்கள் எல்லாம் சோலை வனங்கள் ஆகும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் நடந்துவருவது என்ன? சோலை வனங்கள் எல்லாம் பாலை வனங்களாக மாறி வருகின்றன. இந்தக் குற்றத்திற்கு யார் உடந்தை என்று பார்த்து குற்றவாளியை அவர்கள் தேடிக் கண்டுபிடிக்க விரும்புகிறார்கள். குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய ஆற்றலும், திறமையும் அவர்களுக்கு இன்று போதாமல் இருக்கலாம். ஆனால் என்றைக்காவது ஒருநாள் வேண்டிய ஆற்றலைப் பெற்று இந்த ஆட்சியாளர்கள்தான் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டு விட்டால், "இவ்வளவு நல்லவர்களா இவ்வளவு பெரிய கெட்ட காரியத்தில் ஈடுபட்டார்கள்" என்று அவர்கள் உண்மையிலேயே வருத்தப்படுவார்கள்.

இன்றைய ஆட்சியாளர்களின் ஒரு பெரிய செல்வத்தை நான் மதிக்கின்றேன். தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அளித்த நல்லெண்ணத்தை ஆட்சியாளர்கள் தேசிய பாங்கில் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த பாங்கில் அவர்கள் பத்து வருஷ காலத்தில் லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்றுவிட்டார்கள். இனியும் அவர்கள் அவ்வளவு தொகையைப் பெற முடியாது ஸ்ரீ நேரு பண்டிதர் தேடித்தரும் புகழும்கூட பாங்கில் பணத்தை சேர்க்காது. ஆகவே நல்ல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்கவேண்டும்.

முன்னேற்றத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முரண்பாடற்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆட்சியாளர்கள் நல்ல திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவார்கள் என்ற பரிபூரண நம்பிக்கையுடன் மக்கள் இருக்கிறார்கள். நாட்டை முன்னேற்றமடையச் செய்வதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்களுக்கு, கோடிக்



கணக்கான ரூபாயும், விலை மதிக்கத்தக்க பொருள்களும், இயற்கை வளங்களும், இவை எல்லாவற்றையும்விட மக்களின் உழைப்பும் இருக்கின்றன. இந்த நிலையில் நல்ல திட்டங்களை வகுத்து நிறைவேற்றவேண்டிய பொறுப்பு இந்த ஆட்சியாளர்களுக்கு இருக்கும்போது தூய்மையான உணர்ச்சியுடன் செயலாற்றுவதற்கேற்ற நிர்வாகத்தை ஆட்சியாளர்கள் பெறவேண்டும் என்பதுதான் இந்த தரப்பில் உள்ளவர்களின் கோரிக்கை என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* * *

30—10—'57 ] [ புதன்கிழமை

(அமைச்சர் அவையின்மீது கொண்டுவந்த 'நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிட்டு பேசுகையில்......)

பிற்பகல் 4 மணி

சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னாலே இந்த அமைச்சர் அவையின் பேரில் நம்பிக்கையில்லை என்று கொண்டுவரப்பட்டிருக்கிற கருத்தின் பேரிலே நடைபெறுகின்ற விவாதத்தில் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்றநாங்கள், நாங்கள் என்று சொல் அளவிலே இருந்தாலும், எப்படி முக்குலத்தவர் என்றால் கள்ளர், மறவர், அகமுடையர் என்று மூன்று வெவ்வேறு பிரிவினைகள் இருக்கின்றார்களோ, அதுபோலவே எதிர்க்கட்சியினர்கள் என்றிருக்கும் நாங்கள் ஐந்து குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையினாலே, இந்த ஆட்சியின் பேரிலே நம்பிக்கை இல்லை என்ற பொதுவான கருத்தில் நாங்கள் பிரச்சினைகளை அணுகுவதில், அவரவர்கள் தம் தமது கோட்பாட்டுக்கு ஏற்ற கோணங்களில் பார்த்தால் ஏதோ எதிர்புறத்தில் உள்ளவர்களிடமிருந்து பல்வேறான கருத்துக்கள் வந்துவிட்டன என்றோ, அல்லது கனம் சன்யாசி அவர்கள் தவறாகக் கருதிக்கொண்டு சொன்னதைப்போல கட்சிகளை எல்லாம் மீறிக்கொண்டு ஜாதி உணர்ச்சி மேலிட்டுவிட்டது என்று, அந்த உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட என்னுடைய கழகத்தைச் சார்ந்த சத்திய வாணிமுத்துவின், போக்கை நினைக்கவேண்டிய அளவுக்கு தவறான கருத்துக்கள் பரவி இருக்கின்றன.

இந்தப் பிரச்னை நாட்டு மக்களின் உள்ளத்தை மிக மிக அதிகமான அளவுக்கு பாதித்துக்கொண்டிருக்கிற பரச்னை மாத்திரமல்ல. இதுபற்றி நாம் இங்கே பேசுகின்ற வார்த்தைகளில் எந்த அளவுக்கு பொறுப்பு உணர்ச்சியை கடைப்பிடிக்கின்றோமோ,

அதைப் பொறுத்துதான் தமிழ் நாட்டின் எதிர்கால அமைதி இருக்கிறது. இங்கே நாம் ஏதாவது ஒரு பக்கத்தில் இன்றைய தினம் ஒன்றுசேர்ந்து அதற்கான ஆதாரங்களை திரட்டியும், செய்திகளை வகுத்தும் பிரித்தும் கட்சிகளின் சார்பாக செய்துவிடுகின்ற காரணத்தினாலே அங்கே இருக்கின்ற புகைச்சலை நம்மால் அடக்கிவிட முடியாது என்னைச்சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் அங்கு ஆதித்திராவிட மக்களுக்கு—இன்றுமட்டுமல்ல, நீண்ட நெடுங்காலமாக—இழைக்கப்பட்டிருக்கின்ற பெரிய கொடுமைகளை அவர்கள் சகித்துக்கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அவர்களுக்கு வரக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கு வக்கு இல்லாமல் இருக்கின்ற நிலையிலே, அதனை சட்டபூர்வமாக தடுப்பதற்கு வழி இல்லாமல், இரண்டு பெரிய ஜாதியினரிடையே தீராத பகையை மூட்டிவிட்டார்கள் என்ற காரணத்தினாலே இந்த அமைச்சர் அவையின்பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நம்பிக்கையில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அங்கே ஆதிதிராவிட மக்களின் அல்லலை மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதனை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல போலீஸ் மந்திரி அவர்கள் ரோம் நாட்டிலே ரோம் தீப்பிடித்து எரிகின்ற நேரத்திலே நீரோ மன்னர் பிடில் வாசித்ததாக பழைய வரலாற்றைக் குறிப்பிட்டார்கள், புதிய ஆராய்ச்சியாளர்கள் அப்படி நீரோ மன்னர் அப்பொழுது பிடில் வாசிக்கவில்லை என்று முடிவுகட்டியிருக்கிறார்கள். எரிகின்ற வீட்டில் ஏதோ கிடைத்தவரையில் லாபம் என்று அகப்பட்டதை பிடுங்கிக்கொண்டார்கள் என்ற தமிழ்நாட்டு பழமொழியை ஒரு உறுப்பினர் சொன்னார்கள். இதற்கு முன்னாலே நான் வருத்தத்தோடு கூறியிருப்பேன். இன்றைய தினம் பெருமையோடு சொல்லுகின்றேன் அந்த வட்டாரத்தில் எங்கள் கழகத்திற்கு இதுவரையிலே ஊன்றுகோல் இல்லை 25 ஆண்டுகளாக நான் பொது வாழ்வில் இருக்கின்றேன். நான் பரமகுடிக்கு அப்பால் போய் பேசியதில்லையே என்று எண்ணியது உண்டு. அங்கெல்லாம் நம் கழகம் பரவவில்லையே என்று எண்ணிக் கொண்டிருந்தேன், இப்பொழுது நான் எண்ணிக் கொள்ளுகிறேன் நல்ல வேளையாகப் பரவவில்லை என்று. பரவியிருந்தால், அங்கே மூட்டப்பட்ட தீயிலே எந்த அளவுக்கு எங்களுக்கும் பங்கு உண்டு என்று சொல்லப்படுமோ, அங்கே நடந்த கொலைகளுக்கு நாங்கள் எத்தனை



பேர்களை தூண்டிவிட்டோம் என்று சொல்லப்படுமோ தெரியாது, எங்கள் கழகத்துக்கு ஏற்பட்ட வளர்ச்சி நல்ல வேளையாக பரமகுடிக்கு அப்பால் தாண்டவில்லை என்று இப்பொழுது கொஞ்சம் சந்தோஷப்பட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றையதினம் நம் முன்னுள்ள பிரச்னை, முதுகுளத்தூரில் நடந்தது நவகாளியா, ஜாலியன்வாலாவா, அல்லது இரண்டுமா என்பதுதான். ஜாலியன் வாலாவில் ஏற்பட்டதுபோல் படுகொலைகள் நடந்திருக்கின்றன. துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல குற்றங்களுக்காக தண்டிப்பதாக கூறிக்கொண்டு பல்வேறு மக்கள் சிறைசாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வட்டாரத்தில் நல்ல செல்வாக்கு படைத்த முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கும் எனக்குமோ அல்லது எங்கள் கழகத்துக்குமோ அன்போ, தொடர்போ, பற்றோ, பாசமோ இல்லை என்பதனை இந்த நேரத்திலே கூறிக் கொள்ளுகிறேன். ஒருக்கால் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவர் காங்கிரஸுடன் ஒன்றிப்போகமுடியுமே தவிர, எங்களோடு ஈடுபட்டு ஒன்றிப்போய்விட முடியாது என்பது அரசியல் வட்டாரத்தில் நன்றாகத் தெரியும். தடுப்புக்காவல் சட்டத்தைப்பற்றி நாங்கள் ஏதாவது பேசினால், அதிலே சம்பந்தப்பட்ட ஆட்களை மறந்து பிரச்னையைப் பற்றி அணுகுகின்றோம். தடுப்புக்காவல் சட்டத்தை ஆட்சியாளர்கள் மிசமிக தாராளமாக பயன்படுத்துகிறார்கள், அன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடுகின்ற நேரத்திலே என்ன காரணங்கள் காட்டினார்களோ, அதே காரணங்களை இப்பொழுது காட்டுகிறார்கள். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 20 ஆண்டு காலமாக பலாத்காரத்தில் ஈடுபட்டிருந்ததால் அவர்மீது வழக்குத் தொடருவதை நியாய உள்ளம் படைத்த யாரும் மறுக்கமாட்டார்கள். கோவிந்தசுவாமி அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றது கண்டு வெற்றி பெறாத காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலின்பேரில் கொள்ளை, கொலை நடந்தன என்று சர்க்கார் அவர்பேரில் வழக்குத் தொடர்ந்தார்கள். 1½ ஆண்டு காலம் வழக்கும் நடந்தது. கோவிந்தசுவாமி அவர்கள் பேரில் கொள்ளைக் குற்றம்சாட்டி வழக்குத் தொடர தயாராக இருந்தவர்கள் யாரைத்தான் கொலை பாதகர்கள் என்று சொல்லமாட்டார்கள்? உண்மையான கொலை பாதகர்களை கண்டுபிடிக்க எங்களுடைய துணையை நாடியிருப்

பார்களேயானால், எங்களால் முடியுமானால் அந்தப் பொறுப்பிலிருந்து நாங்கள் தப்பிக்கொள்ள மாட்டோம்.

இந்த முதுகுளத்தூர் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்று சொல்லுவார்கள். அதாவது பார்த்தவர்கள் சொல்லவில்லை, சொன்னவர்கள் பார்க்கவில்லை என்னைப் பொறுத்தவரையிலே கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பதல்ல நான் நேரடியாகப் பார்க்கவில்லை, விண்டவர் கண்டு சொல்லியதை எண்ணிப் பார்க்கிறேன். இருவரும் உணர்ச்சி வேகப்பட்டிருப்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன் இந்த உணர்ச்சி மதவெறியின் காரணமா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. அதுபோலவே, இந்த உணர்ச்சியினால், இந்த அரசியலுக்கு லாபம் அதிகமா, அந்த அரசியலுக்கு லாபம் அதிகமா என்று சொல்ல தேவைஇல்லை. என்னுடைய மதிப்பிற்குரிய கன்னியாகுமரி அங்கத்தினர் அவர்கள் ஆதித்திராவிட மக்களின் அல்லலைப்போக்க எல்லோரும் ஒன்றாகக்கூடி அரசியல் கட்சிகள் யோசித்தோம் என்று சொன்னார்கள். அம்மாதிரி கூட்டம் நடைபெற்ற தகவல் எனக்கு இல்லை. அதுபற்றி என்னை அணுகியிருந்தால், எங்கள் திராவிட முன்னேற்ற கழகத்தினர் ஆலோசனைகூறி நாங்களே அதை நடத்த ஒத்துக்கொண்டிருப்போம். ஆதித்திராவிட மக்களைக் காப்பாற்ற இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் கொஞ்சம் அதிகசிரமமான காரியங்களில் ஈடுபட்டிருந்தால்கூட அதை நாங்கள் தாக்கிக்கொள்ளுவோம் என்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் தலைமுறை தலைமுறையாக அவர்கள் ஒடுக்கப்பட்டு பாழ்படுத்தப்பட்டிருக்கிறார்கள், மக்களின் உரிமை உணர்ச்சி இந்த 20 ஆண்டு காலமாகத்தான் ஏற்பட்டது. அதற்குக் காரணம் நாங்கள்தான் என்று காங்கிரஸ்காரர்கள் மார்தட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நாங்கள்தான் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கு இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் சரியான நேரத்தில் சரியான முறையைக் கையாளவில்லை. அவர்கள் ஏன் சரியான போலிஸ் படையை அமைத்துக்கொள்ளவில்லை? ஏன் 8 பேர்களை சிறையில் போட்டார்கள் என்று கேட்பது மட்டுமல்ல. நமது போலீஸ் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் முதல்பாராவில்



"I rise to make a statement on the recent outbreak of lawlessness and violence in some parts of Ramanathapuram district and the steps taken by the Government to maintain law and order and to render relief to the victims of the riots."

என்று இருக்கக்கூடிய விஷயங்களில் எவ்வளவு முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்பதைப் பார்த்தால் இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அல்ல என்று தெரியவில்லையா என்று கேட்கிறேன். Outbreak என்று இவர்கள் சொல்வதன் அர்த்தமென்ன? திடீரென்று எரிமலையைப்போல்—அமைதியாக இருந்த பிரதேசத்தில் ஒரு கலவரம் வெடித்தால் அவுட் ப்ரேக் என்று இவர்கள் சொல்வது உண்மையாக இருக்கும்.

அறிக்கையின் பிற்பகுதியைப் பார்க்கப் போனால் சட்டத்தை மீறுகின்ற தன்மையில் பலாத்காரச் செயலில் மக்களைத் தூண்டிவிட்டு, பெரிய குழப்பங்களையும் கலவரங்களையும் உண்டுபண்ணுகின்ற நிலைமை தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது என்பதான தகவல்களை நன்றாக எடுத்துத் தந்திருக்கிறார்கள். ஆகவே இப்போது நடைபெற்ற கலவரத்தை திடீரென்று அமைதியாக இருந்த வேளையில், யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் எரிமலை போல அவுட் பர்ஸ்ட் ஆன சம்பவம் என்று சித்தரிப்பது முன்னுக்கும் பின்னுக்கும் பொருத்தமில்லாத விஷயம். அந்தச் சர்க்காரிடத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துக் கொள்வதற்குக் காரணம் "உங்கள் ஆட்சியிலே சட்டம் மதிக்கப்படவில்லை, பாதுகாக்கப்படவில்லை. உங்கள் ஆட்சியிலே பலாத்காரம் தலைதூக்குகின்றது. சட்டத்தை மதித்து, பலாத்காரம் தலைதூக்காமல் செய்யக்கூடிய திறமை உங்களுக்கு இல்லை பலாத்காரத்தை ஒடுக்கத் திறமையில்லாத நீங்கள் அதை மறைத்து உங்களுடைய நலனுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள், உங்கள் பேரில் நம்பிக்கை இல்லை" எனத் தெரிவிக்கும் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் இருந்து நான் ஆதரிப்பது இதனால்தான்.

இந்த ராஜ்ய மக்களுடைய—ஆதித்திராவிட மக்களாக இருந்தாலும் சரி—பிற்பட்ட இனத்து மக்களாக இருந்தாலும் சரி—உயிருக்கோ, உடமைக்கோ உங்களால் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குப்

பதிலாக, அவர்கள்மேல் எடுக்கப்படுகிற பலாத்காரச் செயல்களுக்கு, நீங்களும் உங்கள் சுயநலத்தின் காரணமாக உடந்தையாக இருக்கிறீர்கள் என்கிற காரணத்தினால் உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறேன்.

மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கும்கூட எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொன்னார். நேற்றும் சொன்னார், சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் எல்லாம் சொல்வார். எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். எண்ணிக்கையில் பெருத்தவர்கள் அவர்கள். ஆனால் நிச்சயமாக நியாயம் என்பது எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டும் அல்ல. எண்ணத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மனதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

அவர்கள் 150 பேர்கள் அங்கே இருக்கிற காரணத்தினாலே நாங்கள் இங்கே 40 பேர்கள் இருக்கிற காரணத்தினாலே, இந்தப் பக்கத்திலுள்ள கந்தசாமி கருப்பாக இருக்கிறார். காக்கையும் கருப்பு தான். ஆகவே கந்தசாமியும், காக்கைதான் என்று சொன்னால், அவர்கள் 150 பேரும் ஆம் என்றால் அந்த ஒரு காரணத்தினாலே கந்தசாமியும் நிச்சயமாகக் காக்கை ஆகிவிடமாட்டார். கந்தசாமி கருப்பாக இருக்கலாம். காக்கையும் கருப்பாக இருக்கலாம். அந்த ஒரு காரணத்திற்காக கந்தசாமி காக்கை ஆகமாட்டார் என்று இந்தப் பக்கத்தில் இருக்கிற எண்ணிக்கையில் அவர்களைவிடச் சிறுத்த நாங்கள் 40 பேர் சொன்னால் எண்ணிக்கையில் சிறுத்தவர்கள் என்பதற்காக இது "இல்லை" என்று ஆகிவிடாது. இப்படித்தான் நியாயத்தை, நீதியை இந்த ஜனநாயக காலத்தில் எண்ணிக்கையைக் கொண்டு நிர்ணயித்துவிட முடியாது. நல்ல ஜனநாயகப் பண்பை ஸ்தாபிக்கக்கூடிய திறமை வாய்ந்த நிதியமைச்சர் அவர்கள் தாங்கள் எண்ணிக்கையில் பெருத்திருக்கிறோம் என்பதற்காக எண்ணிக்கையைக்கொண்டு நியாயத்தை நிலைநாட்டிவிடுவோம் என்று எண்ணி அப்படிப் பேசியிருப்பார்கள் என்றால் அது நிச்சயமாக முடியாது என்பதை எதிர்கட்சி நன்றாக உணர்ந்திருக்கிறது.

**நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் :** நான் நேற்று சொன்னது நியாய அநியாயத்திற்கு எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொல்லவில்லை, மக்கள் யார் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு எண்ணிக்கையைப் பார்க்கச் சொன்னேன். நியாய அநியாயத்திற்குச் சொல்லவில்லை, இந்த அளவு



வாதத்தைச் சொல்லக்கூடிய அளவு குறைவாகப் பேசுவதற்கு நான் எப்போதும் இறங்கமாட்டேன்.

**திரு. சி. என். அண்ணாதுரை :** மக்கள் ஆளுகின்றவர்களிடம் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வது ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒரு முறை தான். இடையே அவர்களுக்கு ஏற்படுகின்ற நம்பிக்கையில்லாத மனக்கசப்பை, மனக்குமுறலை ஆளுகின்றவர்களுக்கு எடுத்து காட்டுவது எதிர்க் கட்சியின் பொறுப்பு.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத தீர்மானமும்கூட உங்களைப் பதவியில் இருந்து இதன் மூலம் விலக்கிவிட முடியும் என்கிற நம்பிக்கையில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படவில்லை. அப்படி எதுவும் நடந்துவிடாது என்கிற எண்ணம் உங்களுக்கும் இருக்கின்ற படியினால்தான் இங்கே உட்கார்ந்து சிறப்பான வாதங்களை எல்லாம் செய்துகொண்டிருக்கிறீர்கள். இல்லாவிடில் இங்கே உட்கார்ந்து வாதங்கள் புரிந்துகொண்டிருக்கமாட்டீர்கள், தனித்தனியாக தங்களுக்கு ஆள் சேர்க்க முயன்று கொண்டிருப்பீர்கள். ஆகையால் இந்த நம்பிக்கையில்லாத தீர்மானத்தில் மகத்தான ஆபத்து அவர்களுக்கு வந்துவிடும் என்று நாங்கள் மனப்பால் குடிக்கவில்லை. அமைச்சர் அவையைத் தள்ளிவிட இந்த தீர்மானத்தால் முடியாது என்கிற ஒரு காரணமும் இருக்கலாம், நான் இந்த தீர்மானத்தை ஆதரிப்பதற்கு.

ஆளுகின்ற அமைச்சர் அவை பிரும்மாண்டமான வலுவில் இருக்கிறது. மிகச் சிறிய எண்ணிக்கையில் உள்ள எங்களால் அவர்களுக்குப் பாடம் கற்பிக்க முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. காலம் ஒன்றுதான் அவர்களுக்கு பாடம் காட்ட முடியும். அவர்கள் ஆளும் கட்சி. நாங்கள் எதிர்கட்சிகள்.

எதிர்கட்சியில் இருக்கின்றவர்கள் ஒவ்வொரு கோணத்தில் இருந்து இந்த நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தை ஆதரிப்பதற்குக் காரணம் எதிர்கால அமைதியாவது பாதுகாக்கப்படவேண்டும் என்கிற ஒரு எண்ணம்தான். சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில் நான் இங்கே பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன். நீண்ட நேரம் பேசவேண்டுமென்று ஆசைப்பட்டது உண்டு. நன்றாகப் பேசவேண்டும் என்றும் ஆசை. ஆனால் எனக்குப் பேசாமல் இருக்கும் சந்தர்ப்பம் இந்தச் சமயத்

தில் கிடைத்திருந்தால் நான் எத்தனையோ மகிழ்ச்சி உடையவனாக இருந்திருப்பேன். இந்தப் பிரச்னையைப்பற்றி—பொது மேடைகளிலும் சரி சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் மிக ஜாக்கிரதையாக நழுவவிட்டிருக்கிறேன். பேசாமல் இருந்திருக்கிறேன். பத்திரிகையில் ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. காரணம்? இந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா? அந்தப்பக்கத்தில் நியாயம் இருக்கிறதா என்பது ஒருபுறத்தில் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. அந்தப் பிராந்தியத்து ஜனங்கள் மிகவும் சீக்கிரத்தில் உணர்ச்சி வசப் படக்கூடியவர்கள்—என்று அந்தப்பக்கத்தில் இருந்து அம்மையார் சொன்னதுபோல—நாம் அநுபவிக்கின்ற அரசியல் முறை 1957 யோடு முடிவு அடைந்துவிடப்போகிறது இல்லை—நல்ல ஆற்றல் படைத்த மக்கள் அவர்கள்—பழி துடைக்கப்படுகிற வரையில் உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கப்போகிறார்கள்—இந்தச்சமயத்தில் எந்தப்பக்கத்தை ஆதரித்து நம்முடைய செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்வோம் என நாங்கள் சிலரைப் போல அரசியல் தந்திரம் படைத்தவர்களாக இருக்க விரும்பவில்லை. ஒன்றைப்பற்றி எழுதினால்—ஒன்றைப்பற்றிப் பேசினால்-அதன் விளைவாக அந்தப்பகுதியில் மீண்டும் ஒரு அமளி ஏற்படுமானால்—சீக்கிரத்திலே உணர்ச்சிவசப்படக்கூடிய மக்கள் கொதித்தெழுவார்களானால் அதற்கு நாமேதான் பொறுப்பாளியாக வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கி அவர்களுக்கும் ராஜ்யத்திற்கும் தீங்கை உண்டுபண்ணாமல் அமைதியாக—அவர்களைப் பண்படுத்திவிட்டோம்-புண்ணையாற்ற நியாயமான முறையில் மருந்து போடவேண்டும் என்கிற தன்மையில் பேசாமல் இருந்தேன். இப்போதும் கூட இந்தத் தீர்மானத்தின் மீது பேசவிரும்பவில்லை.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும் என்கிற நிலைமை வந்தால், நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை நாங்கள் எந்த எந்தக் காரணத்திற்காக ஆதரிக்கிறோம் என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். அந்த முறையில்தான் இப்போதும் பேசுகின்றேன்.

தன்னைத்தானே இப்போது செய்திருக்கும்படியான காரியத்திற்காக போலீஸ் மந்திரி அவர்கள் ஒரு பாராட்டுதலைத் தெரிவித்



துக்கொண்டார்கள், நல்லதொரு நடவடிக்கையை போலீஸ்காரர்கள் எடுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். எதிர்கட்சிகளில் இருந்து திரு சசிவர்ண தேவர் அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைத் தெரிவித்தார். ஆதித்திராவிட மக்களுடைய முன்னேற்றத்தில், அந்தச் சமூகத்தாருக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைத் துடைப்பதில் தாங்களும் பங்குகொள்ளத் தயார் என்பதாக அவரும் மூக்கையத்தேவரும் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கு நமது அமைச்சர் அவர்கள் நல்ல உருவம் கொடுத்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதும் என் அவா.

நாம் நீண்ட நாள் ஒரு சமூகத்தை பகைத்துக்கொண்டுவாழ முடியாது. போலீஸ் மந்திரி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அந்த வட்டாரத்தில் நிரந்தரமாக போலீஸ் பட்டாளங்களை வைத்துக்கொண்டிருக்க முடியாது. அங்கே உள்ள சமூகத்தார்களுக்கு மனக்கசப்பையும், பகைமை உணர்ச்சியையும்தான் அது வளர்க்க உதவும்

முத்துராமலிங்க தேவர் அவர்கள் பலகாலமாக மற்ற கட்சிகளைப்பற்றி எந்த அளவுக்குப் பேசியிருக்கிறார்கள், என்னைப்பற்றியும், என் கட்சியைப்பற்றியும் எத்தனைவிதமாகப் பேசியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவற்றையெல்லாம் நான் இப்போது இந்த மன்றத்தில் எடுத்துப் பேசப்போவதில்லை. முதல் அமைச்சர் அவர்கள் கள்ளநோட்டு அடித்தார்கள் என்று அவர் சொன்னதாக பலர் அந்தப் பக்கத்தில் இருந்து சொன்னார்கள். தேவர் அதோடு நிற்கவில்லை, அதில் ஒரு பங்கு முதல் அமைச்சர் அவர்கள் என்னிடம் கொடுத்து இருக்கிறார் என்றும் சொல்லி இருக்கிறார். ஆகவே அவருக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகவோ, பாசம் பற்று இருப்பதாகவோ எண்ணிக் கொண்டு நான் இந்தமாதிரியாகப் பேசுவதாக யாரும் நினைக்கக் கூடாது. முத்துராமலிங்கத் தேவர் 1933-ம் வருஷத்திலிருந்தே பாண்டிய மண்டலத்தில் சாதித் துவேஷம் வளர்க்கக்கூடிய வகையில் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. வகுப்புக் கலவரம், சாதித் துவேஷம் இவை எல்லாவற்றுக்கும் அவர் உடந்தையாக இருந்து வந்தவர் என்று பேசப்பட்டது. இப்போதுதான் எனக்கு ஒரு தபால் வந்தது. அது ஒரு பத்திரிகை. ரங்கூன் நகரத்தில் கடல் கடந்து நிற்கும் தமிழர்கள் முத்துராமலிங்க தேவரின் பிறந்த தின விழாவைக் கொண்டாடும்

அழைப்பிதழ். அவரைப்பற்றி இப்போது வெறுத்து ஒதுக்கத் தக்கவராகப் பேசிக்கொண்டிருக்கிறோம். அங்கே அவர்கள் உள்ளத்தில் வைத்துக் கொண்டாடுபவராக இருக்கிறார். உலகத்தார் வைத்திருக்கின்ற கருத்து இன்றைய தினம் அந்த ராஜ்ய ஆட்சியாளர் வைத்திருக்கின்ற கருத்தாகத்தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. அவர்கள் கருத்தே நாம் வைக்கவேண்டும் என்பது இல்லை. ஆனால் உலகத்தார் வைக்கின்ற கருத்துக்கு மதிப்பு அளிக்கவேண்டும். உலகத்தார் எல்லாம் போற்றுகின்ற உத்தமராக முத்துராமலிங்க தேவர் இருப்பாரானால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவரோடு கலந்து பேசி ஒரு சமரச சூழ்நிலையை அந்த பிராந்தியத்தில் உண்டுபண்ண ஏன் முயற்சிக்கக்கூடாது? அப்படி இவர் பேசுவதை வேண்டாமென்று யார் குறுக்கிட்டார்கள்? குறுக்கிடுகிறார்கள் என்றால் ஏன் குறுக்கிடுகிறார்கள்.

முதுகுளத்தூர் பிரச்னையாக இருந்தாலும் சரி, முரளிகபே பிரச்னையாக இருந்தாலும் சரி, எந்தப் பிரச்னையும் முளையிலேயே அணுகினால்தான் அதை தீர்க்க முடியும் என்ற அரசியல் தத்துவத்தை உங்களுக்கு எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன். ஜாதிப் பெயர் குறிக்கும் பலகையை எடுக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். இதை நடத்துகின்றவர் பெரியார் ராமசாமி. 700 தொண்டர்களுக்கு மேல் சிறைச் சென்றிருக்கிறார்கள் என்று கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லுகையில் சொன்னார்கள். நான் பத்திரிகையில் பார்த்தேன், கேரள சர்க்கார் உணவு விடுதிகளிலே ஜாதி அறிவிப்பு பலகைகளை தாங்களாகவே நீக்கிவிட வேண்டும் என்று ஒரு அறிக்கை மூலம் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அவைகளை நீக்காவிட்டால் சர்க்காரே அந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று இருக்கிறது. அதற்கு ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தில் இருந்து எடுக்க வேண்டியதில்லை. கருணையோடு மனம் வைத்தால் இந்தப் பிரச்னையை உடனடியாக தீர்க்க முடியும். திரு. இமானுவல் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றி இங்கு பேசினார்கள். உண்மையில் அவர் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் அல்ல. தமிழ் நாட்டிற்கே ஒரு பெரிய தியாகம் செய்திருக்கிறார். இமானுவல் ராமனாதபுரத்து மண்ணிலே மறைந்த மாவீரன் மட்டும் அல்ல, உலகமே புகழும் ஒரு வீரனாகவே அவரைக் கருத வேண்டும். நாட்டில் ஒற்றுமைக்காக பாடுபட்டு தன்னையே



பலியாக்கிக் கொண்ட ஒரு தியாகியை இழந்தோம். அவர் பெயர் இந்நாட்டு சரித்திரத்திலே பொறிக்கப்பட வேண்டியது. திரு. முத்துராமலிங்க தேவர் மறவர்களுக்கு தலைவராக இருந்தார். அதே போல் ஆதித்திராவிட மக்களின் தலைவராக விளங்கினார் திரு. இமானுவல் என்பதை அமைச்சர் அவை அறியும், இந்நாடும் அறியும்.

முதுகுளத்தூர் இமானுவல் படுகொலை செய்யப்பட்ட பிறகு அங்குள்ள மக்கள் தங்கள் தலைவரை இழந்ததற்காக ஆத்திரம் கொள்வதும் ஆத்திரத்தில் பழிக்குப்பழி வாங்க முயல்வதும் இயல்பு, அவர்களின் வீறிட்டெழும் உணர்ச்சியை ஆட்சியாளர் உணர்ந்திருப்பார்களேயானால், அங்கே போலீஸ் படையை உடனே அனுப்பி இருப்பார்கள். அந்த வட்டாரம் பூராவும் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது போலீஸ் நிர்வாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சம்பவம் நிகழ்ந்த நான்கு நாட்களில் மேலும் கலவரம் வளராது தடுப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்காது அவசர அவசரமாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட பிறகு வெங்கடேஸ்வரனை வைத்து விசாரணை நடத்தினார்கள். அவர்களின் நிர்வாகத் திறமையைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அதிகாரிகளின் நிர்வாகத் திறமையை அறிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு எனக்கு அரசியல் அறிவும் இல்லை. அனுபவமும் இல்லை. 10-ம் தேதி அன்று இமானுவல் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். நான்கு நாட்கள் கழிந்து போலிஸ் படை வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் போய்விட்டாரே என்று அந்த மக்கள் கொதித்தெழுவதில் என்ன ஆச்சரியம். திரு. சிதம்பர பாரதி அவர்கள் சொன்னார்கள் யாராவது இந்த தென்பாண்டிய மண்டலத்திலே திரு. முத்துராமலிங்கத் தேவருக்கு எதிராக பேசுவார்களேயானால் அவர்கள் தலை உருளும் என்று சொல்லுவதாகச் சொன்னார்கள். என்னைவிட அவர் தைரியசாலி, இல்லாவிட்டால் இவ்வளவு தைரியமாகப் பேசுவாரா? கலகம் நடந்த இடத்தில் விசாரணை நடத்துவதற்கு திரு. வெங்கடேஸ்வரன் அவர்களை விசாரணை நடத்துவதற்கு அனுப்பியிருக்கிறார்கள். தேனி தியாகராஜன் கூட இவரைப் புகழ்ந்திருக்கிறார். அப்பொழுது இருந்த சூழ்நிலையில் சாட்சிகள் எப்படி வருவார்கள். ஒரு பக்கம் விசாரணை நடக்கிறது. மற்றொரு பக்கம் தீ வைத்துக்கொண்டே போகிறார்கள்,

கனம் போலீஸ் அமைச்சர் கூறுகிறார் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்பட்டது என்று. S. A. P. 8. M. S. P' 4, Armed Reserve Police 4. Wireless set 4. அனுப்பிவைத்திருப்பதாகப் புள்ளி விபரம் தருகிறார். அங்கே இருக்கும் வீடுகள் ஏராளமாகத் தீக்கிரையாகிக்கொண்டிருக்கும்போது தீயை அணைப்பதற்காக தீ அணைப்புப் படையை அனுப்பவில்லை. சில நாட்களுக்கு முன்தான் இந்த தீ அணைப்பு வாரம் கொண்டாடினார்கள், அந்த விழாவில் ஒரு படத்தைப் பார்த்தேன். உயரமான மாடியில் தீ பிடித்துக்கொண்டால் கீழே குதித்துவிடவேண்டும். கீழே ஒரு வலை கட்டப்பட்டிருக்கிறது, அந்த வலையை உபயோகப்படுத்தவில்லையானால் உயிரிழக்க நேரிடும் என்று காட்டினார்கள். ஆனால் அதுபோன்ற வலை நமது அரசிடம் இல்லை என்று அதிகாரி கூறினார். தீ அணைப்புப் படை அரசாங்கத்திடம் இருந்தும். பயன்படவேண்டிய சமயத்தில் உபயோகப்படுவதில்லை, அங்கு தீ பரவாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்குள்ள கட்சித் தீ பரவாமல் தடுப்பதற்கும் தவறிவிட்டது.

திரு. ஏழுமலை அவர்கள் எங்கள் கட்சி நிதானமான கட்சி என்று சொன்னார். ஆம், யார் இல்லையென்று சொன்னது. பார்த்த பிறகுதானே தெரிகிறது, அங்கே இரண்டு கட்சிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஒன்று காங்கிரஸ் கட்சி, மற்றொன்று பார்வார்ட் பிளாக். நாடார்கள் தாழ்த்தப்பட்ட மக்களை தூண்டிவிட்டதாக குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். எனக்கு காங்கிரஸ் நாடார்களைப்பற்றி தெரியாது. ஆனால் நாடார்களைப்பற்றி தெரியும். நாடார் அவைகளை நாடார்.

இந்த 10 ஆண்டு காலமாக நான் கேட்கிறேன், நீங்கள் இந்த துப்பாக்கி பிரயோகத்தைப் பயன்படுத்தும் அளவிற்கு எந்த ஜனநாயக சர்க்காராவது பயன்படுத்தி இருக்கிறதா? நீங்கள் வணங்கும் ஆண்டவன்பேரிலே கேட்கிறேன். நீங்கள் கடைப்பிடிக்கும் காந்திய நெறியின் பெயராலும் கேட்கிறேன். உங்கள் நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள், இத்தனை ஆண்டுகாலமாக நம் நாட்டில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் உலகத்திலே எந்த நாட்டிலேயாவது இந்த அளவுக்கு நடந்ததுண்டா? நீங்கள் இந்த துப்பாக்கி பிரயோகம் நடத்துவதை நாங்கள் கண்டித்தால் உடனே போலீஸ் அமைச்சர் "நாக்கள் இங்கு மட்டுமா துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினோம். இதற்கு முன்னேயே தூத்துக்குடியிலே நடத்தினோம், டால்மியாபுரத்தில் நடத்தினோம், வால்பாறையில் நடத்தினோம், பைத்தியக்கார மக்களே இதுதானே எங்கள் வேலை, இப்பொழுது முதுகுளத்தூரில் சுட்டதற்கு நீங்கள் இந்த நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டுவந்தீர்களே" என்று சொல்லுவார்கள். ஆம். இன்னும் இந்த ஐந்தாண்டு ஆட்சி காலத்தில் இன்னும் எத்தனை முறை இந்தத் துப்பாக்கியின் தோட்டாக்களைப் பயன் படுத்தப் போகிறீர்களோ? யார் யார் பலியாக இருக்கிறார்களோ என்று எண்ணி வேதனைப்படுகிறேன். அதனால்தான் உங்கள்மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லையென்று சொல்கிறேன் நான் பத்திரிகையில் பார்த்தேன். துருக்கி நாட்டிலே ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு அந்தக் கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் தகராறு மூண்டு ஏறக்குறைய 7,000 பேர் கலகத்தில் ஈடுபட்டவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அந்தக்கூட்டத்தைக் கலைக்க துருக்கி சர்க்கார் உபயோகப்படுத்தியது துப்பாக்கியை அல்ல. அவர்கள் மீது தண்ணீரை இறைத்து கலைத்திருக்கிறார்கள், அங்கே ஏராளமான கூட்டம் பெரும் கலகம் விளைவித்தபோதிலும் அந்த சர்க்கார் தீ அணைக்கும் படையின் உதவியினால் கலகத்தைத் தடுக்க அந்த மக்கள் மீது தண்ணீர் இறைத்துத் துரத்தியிருக்கிறார்கள். ஆனால் இங்கு நடந்ததோ என்னவென்றால் கூட்டத்தைக் கலைப்பதற்கு துப்பாக்கியை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். கீழத்தூவலில் நடந்த சம்பவத்தில் 5 பேரைச் சுட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்காகப் போலீஸ் படை சென்றிருக்கிறது. சுடுவதற்கு அனுப்பப்பட்ட அதிகாரியும் சுடுவதிலே பழக்கப்படாதவர் அல்ல. அதில் கைதேர்ந்தவர்கள். ஆனால் சுடுவது மிருகங்களையோ, பறவைகளையோ அல்ல மக்களை என்று நினைவில் கொள்ளவேண்டும்



நான் சொல்வதென்னவென்றால், அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துகொண்டார்களா இல்லையா என்பதல்ல. அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு சரியானதா இல்லையா என்பதைப்பற்றித்தான் சொல்கிறேன். ஒரு சில தினங்களுக்கு முன்னால் டெல்லியில் பாராளுமன்றத்தில் உள்நாட்டு அமைச்சர் ஒரு வாக்குறுதி அளிப்பதுபோல் சொன்னார்கள். We will shoot to scare, not shoot to kill என்று. நாங்கள் கொல்வதற்காக சுடப்போவதில்லை. விரட்டுவதற்காகவே சுடப்போகிறோம் என்று சொன்னார்கள். அப்படி பந்த் அவர்களே சொன்னார்கள். அதைக் கண்டு, பந்த் அவர்களே இப்படிச் சொல்லியிருக்கிறார்களே! [illegible]

இனி போலீஸ் சுடமாட்டார்கள் என்று இந்த பேதை நெஞ்சம் நினைத்துக்கொண்டிருந்தது

கொல்வதற்காகத்தான் சுடவேண்டும். சுட்டு கீழே விழுந்த பிணங்கள் மறவர்களின் பிணங்கள்தான். அவர்கள் கொடுமை செய்தவர்கள். அதனால் அந்தப் பிணங்கள் விழுந்தால் பரவாயில்லை என்று சிலர் சொல்லலாம். ஆனால் அடுத்து குண்டு யார் பேரில் பாயும், இந்த ஐந்து வருடத்திற்குள் யார்யார் மேல் குண்டு பாயப்போகிறது, எத்தனை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்போகிறார்களோ, எத்தனைபேர்கள் அதனால் உயிர்நீக்கப்போகிறார்களோ, எங்கெந்த இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவிருக்கிறதோ என்று எண்ணிப்பார்க்கும்போது இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லையென்று சொல்லத் தோன்றுகிறது நான் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன், உங்கள் அறிவில் உங்கள் ஆற்றலில் எனக்கு சந்தேகமில்லை என்று. ஆனால் நிலைமையைக் கண்டு அறிந்துகொள்வதற்கு நீங்கள் வைத்திருக்கும் அதிகாரிகள் உங்களுக்கு சரியான தகவல் தரவில்லை. நீங்கள் நன்கு ஆள வாய்ப்புத் தரவில்லையென்றுதான் நான் கருதுகிறேன். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், 30, 33-ம் ஆண்டிலிருந்து இன்றையதினம் வரையில் அங்கு பெற்றிருக்கும் செல்வாக்கைப்பற்றி எல்லோரும் எடுத்துச் சொல்கிறார்கள். சசிவர்ண தேவர் அவர்கள் எடுத்துச் சொன்னபோது, முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மறவர்களின் சமூகத்தில் மட்டுமல்ல, பிற சமூகத்தாரிடமும் நல்ல செல்வாக்கு பெற்றவர் என்று எடுத்துச் சொன்னார்கள், காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் எடுத்துச்சொல்லும்போது அவர் ஜாதி ஆதிக்கத்தால் செல்வாக்கு பெற்றார்கள் என்று சொன்னார்கள், எது எப்படியிருந்தாலும் அவருடைய செல்வாக்கு மகத்தானது என்பதை யாரும்மறுக்கவில்லை. அவருடைய இந்தச் செல்வாக்கு இன்றையதினம் கொலைக்கும் கொள்ளைக்கும் பயன்பட்டதாகச் சொல்லும்போது, இந்த செல்வாக்குதான் காங்கிரஸிற்கு 10, 15 வருஷகாலமாகப் பயன்பட்டதல்லவா? என்று கேட்கிறேன், தேவர் அவர்கள் தரும் தொல்லைகள்பற்றி இப்பொழுது அமைச்சர்கள் அல்லல்படுகிறார்கள். ஏன்? இப்பொழுது அவர்கள் தரும் தொல்லைகள் காங்கிரசிற்கு ஏற்படுகிறது அன்று நான் சேர்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி அல்லல்பட்ட காலத்தில் அவரது தொல்லைகள்பற்றி அவர் கொடுத்த தொல்லைகள்பற்றி ஒரு வார்த்தையாவது ஒரு சின்ன வார்த்தையாவது சொன்ன



துண்டா? 1937-ம் வருஷம் கூட அவர் காங்கிரஸ் அபேட்சகராயிருந்து ராமநாதபுரம் ராஜா சுயேச்சையாக நின்றபோது எஸ்டேட் தாசில்தார் தாக்கப்படவில்லையா? அவர்களின்பேரில் நாங்களே அல்லவா வழக்குத் தொடுத்தோம் என்று நேற்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

முத்துராமலிங்கத் தேவரின் செல்வாக்கை நீங்கள் திருப்பரங்குன்றத்தில் உபயோகித்துக்கொள்ளவில்லையா? அப்பொழுதெல்லாம் தேவர் பலாத்கார மனிதனாக இல்லாமற்போனதேன்? நிதி அமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர்தான். ஆனாலும் நாங்கள் சொல்வதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். அப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்? மேலும் அவரைத்தான் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தி வைத்தீர்கள். தென்பாண்டி மண்டலத்தில் அவருடைய செல்வாக்கைக்கொண்டுதானே நீங்கள் ஆதிக்கம் பெற்றீர்கள். அவரைக்காட்டித்தானே ஜஸ்டிஸ் கட்சியை நீங்கள் மிரட்டினீர்கள் அன்று அவரது செல்வாக்கைப் பெற்று வளர்ந்துவிட்டு இன்று அவரைப் பலாத்கார மனிதர் என்கிறீர்கள் அவ்வளவு பயங்கரமான மனிதரை ஏன் இவ்வளவு தூரத்திற்கு வளர்த்துவிட்டீர்கள்? அங்கு இப்பொழுதுள்ள நிலைமையை அடக்குவதாகச் சொல்லி இரண்டு வகுப்பாரிடையே பகையை மூட்டுகிறீர்கள் என்று பயப்படுகிறேன். ஆகவே நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய நிலைமை, எடுக்கப்படுகிற முறை, எடுப்பதின் அளவு இம்மூன்றிலும் நீங்கள் பெற்றிருக்கிற அரசியல் செல்வாக்கை கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் எத்தனை அரசுகள் வளர்ந்தன, எத்தனை அரசுகள் அழிந்தன என்ற வரலாற்றை மனதில் வைத்துக்கொண்டு போலீஸ் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் சொன்னார். கீழத்தூவலில் ஐந்து மறவர்களின் கையைக் கட்டியோ காலைக்கட்டியோ கண்ணைக் கட்டியோ போலிஸார் சுட்டார்கள் என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் போலிஸார் அவ்வளவு பலாத்காரம் உபயோகித்திருக்கவேண்டியதில்லையென்று சொன்னார்கள். எப்படிச் சுட்டிருந்தாலும் சுடப்படக்கூடிய அளவிற்கு அங்கு உணர்ச்சி ஓங்கியிருக்கிறது. வெங்கடேஸ்வரன் அறிக்கையில் 300 பேர்கள் வந்தார்கள். பலாத்காரத்தோடு இருந்தார்கள், ஆயுதங்களைவைத்திருந்தார்கள். ஒரு முறை, இரண்டு முறை சொல்லியும் அக்கூட்டம் கலையாததால் சுட்டார்கள் என்கிறார்கள். இன்னொருஇடத்தில்,

தெருக்கோடிகளில் எல்லாம், சந்தைகளில், பஸ் ஸ்டாண்டுகளில் எல்லாம் பேசப்படுகின்ற பேச்செல்லாம் இந்தப் பிரச்னையைப் பற்றித்தான். ஐந்து பேரை கையை கட்டிவைத்து சுட்டார்களாமே, இல்லை கையை கட்டவில்லை என்று இன்னொருவர், பார்த்தாயா என்று மற்றொருவர், நான் பார்க்கவில்லை, பார்த்தவர் ஒருவர் சொன்னார் என்று இன்னொருவர். இவ்விதமாக பேசப்படுவதை நாம் கேட்கின்றோம். இந்த ஆட்சியாளர்கள் இதை ஒன்றை மாத்திரமாவது கணக்கில் வைத்துக்கொண்டு இந்த நிலைமைகளை, இந்த சந்தேகங்களை நீக்கி, நிம்மதியை உண்டு பண்ணவேண்டும். நான், அல்லது எங்கள் கட்சி, இந்த ஆட்சியாளர்களின் பேரில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதின் மற்றொரு காரணம், இப்போது சொல்லப்படுகின்ற, தாழ்ந்த நிலையில் இருந்த அந்த பகுதிகளை இந்த ஆட்சியாளர்கள் எந்த லட்சணத்தில் வைத்திருந்தார்கள் என்பதைப்பற்றி நாம் பார்க்கவேண்டும். போலீஸ் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் வேறு காரணங்களை காட்டலாம். அங்கேயெல்லாம் போவதற்கு ரோடு வசதியில்லை, வேறு பல வசதிகளும் இல்லாமல் இருந்தது, அதனால் தான் அந்த பகுதிகளை சீர்திருத்த முடியவில்லை, இன்று நாங்கள் அந்த பகுதிகளில் இவைகளை எல்லாம் போக்குவதற்காக முற்போக்கான பல திட்டங்களை வகுப்பதற்காக Block Development போன்ற பல திட்டங்களை ஆரம்பித்து இருக்கின்றோம் என்று வேண்டுமானால் நீங்கள் இன்று சொல்லலாம்.—இப்போதாவது ஆரம்பித்ததற்காக நன்றி—இதுகாறும் ஆரம்பிக்காமல் விட்டுப் போனதற்காக அனுதாபம்—16 மறவர்களை சுட்டுக் கொன்றார்கள் என்பதோடு பழிக்குப் பழி சரியாகப் போய்விட்டது என்று மக்கள் கருதமாட்டார்கள். அடுத்த ஆண்டில் அவர்கள் எந்த மண்டலத்தில் இருந்தாலும் உங்களை சபிக்கப் போகிறார்கள். முன்னாலேயே படுகொலைகள் நடந்துகொண்டிருந்தது என்று கூறுகின்றீர்கள் இன்று இவற்றிற்கு எல்லாம் காரணம் என்னவென்று கருதுகின்றீர்கள்? மதிப்பிற்குரிய அரசாங்கத்தினர், ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்—கலப்புத் திருமணம் எல்லாம் நடந்துகொண்டிருந்தது என்று—மூக்குலத்து மக்களிடம் பெண் கேட்பதற்கு அந்தப் பகுதிகளில் போனால் குரல் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள்—சுய மரியாதை இயக்கம் தோன்றின காலத்திலிருந்து கலப்புத் திருமணம் நடந்து வந்திருக்கிறது. உண்மையில் அந்தப் பகுதிகளில் எல்லாம் சுயமரியாதைக் கழகம் அதிக



மாகப் பரவியிருந்தால் கலப்புத் திருமணம் அதிகமாக நடந்திருக்கும் சுயமரியாதைக் கழகம் மற்ற பல பகுதிகளில் அதிகம்ாகப் பரவியிருக்கின்ற காரணத்தினால்தான் இன்று நாட்டில் பல பகுதிகளிலும் கலப்புத்திருமணம் அதிகமாகநடைபெற்றுவருகிறது, கலப்புத் திருமணத்தில்தான் சுவை இருப்பதாக அறிந்ததின் காரணமாகத்தான் பல பகுதிகள் வரவேற்றன. சுயமரியர்தை இயக்கம் பரவி இருந்திருக்குமானால் முதுகுளத்தூர் வட்டாரத்திலும் ஜாதி வெறிதலைவிரித்தாடியிருக்காது இன்றைக்கு யார் மீது குற்றச்சாட்டுகளைக்கூறுகிறீர்களோ, அவர் மூலமாகத்தான் கழிந்த 25 ஆண்டு காலமாக காங்கிரஸ்காரர்கள் வோட்டுகள் வாங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் இன்றையத்தினம் அந்த வோட்டுகள் காங்கிரசுக்குக் கிடைக்கவில்லை.—மேலும் எங்கே கிடைக்காமல்போய்விடுமோ என்ற பயம் ஆட்சியாளர்களுக்கு, எங்கே இந்த வோட்டுகளை யெல்லாம் திரு வி. கே. ராமசாமி முதலியார் கொண்டுபோய்விடுவார்களோ என்ற பயம் எங்களைப்பொறுத்தவரையிலும் அவர்களுக்கு வாங்கிக்கொடுத்தாலும் நிச்சயமாக எங்களுக்கு வாங்கித்தரமாட்டார் என்பது நிச்சயம். ஆகவே எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை. ஆகவே வோட்டு வாங்குவதற்கு மாத்திரம்தான் இவைகளை எல்லாம் செய்கின்றார்களே தவிர அந்தப் பகுதியிலுள்ள ஆதித்திராவிட மக்கள் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய அளவுக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு 2,735 ஆதித்திராவிட மக்களுடைய வீடுகளும், 107 தேவர்களுடைய வீடுகளும் சாம்பலாக்கப்பட்டன என்று கணக்குக் கொடுக்கின்றீர்கள். அந்த 2,735 ஆதித்திராவிடர்களுடைய வீடுகள் எல்லாம் வெறும் ஓலைக்குடிசைகள்தானே. இவர்களை யெல்லாம் இந்தக் குடிசைகளில்தானே இதுவரை விட்டுவைத்திருக்கிறீர்கள். இன்றுவரை அவர்களுக்கு என்ன செய்துகொடுத்திருக்கிறீர்கள், இதுவரை நீங்கள் எங்கே போயிருந்தீர்கள். ஆதித்திராவிடர்களாகிய அவர்கள் ரத்தம் சொட்டச் சொட்ட முழங்கால் அளவுக்கு சேற்றிலே வாழ்கின்றார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஆதித்திராவிடர்கள் இறந்துபோனால் அவர்களுடைய பிணத்தைத் தூக்கிக்கொண்டுபோவதற்கு பக்கத்திலுள்ள வயல்களைக் கடந்துபோகவேண்டும். நல்ல பாதை கிடையாது. வயல் முதலாளிகள் பாதையை விட்டுத்தரமாட்டேன் என்று சொல்லுகின்றார்கள். இவற்றையெல்லாம் அமைச்சர் கக்கன் அவர்கள் அங்கு வந்திருக்கும் நேரத்தில் அவர்களிடத்தில்

எடுத்துக்காட்டினார்கள். நண்பர் ஏழுமலை அவர்களும் அந்தப் பகுதிகளுக்கு அவர்களோடு கூட வந்திருந்தார்கள். நான் திம்மசமுத்திரத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். நீங்கள் இதுகாறும் ஆதித்திராவிட மக்களை சேற்றில் அழுத்தி கொடுமையில் வைத்திருக்கவில்லை என்றால், நான் அவ்வாறு கருதமாட்டேன். அதுதான் இவைகளுக்குக் காரணமே தவிர வேறு ஒன்றும் இருக்க முடியாது. இவ்வளவு நாட்களாக உங்களுடைய கவனம் எங்கே செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பகுதிகளில் ஏன் உங்கள் கவனத்தைச் செலுத்தாமல் இருந்திருக்கிறீர்கள். அவர்கள் எல்லாம் காந்தீயத்தின் அடிப்படையிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தானே. நீங்கள் வேண்டுமானால் காந்தியத்திற்குப் புறம்பாகப் போவீர்கள், சுவாமி சகஜானந்தா போன்றவர்கள் காந்தீயத்திலிருந்து விலகிப் போக மாட்டார்கள். 2,735 வீடுகள் எரிந்து போய்விட்டன. வீடு ஒன்றுக்கு 30 ரூபாய் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது 100 ரூபாய் கொடுக்கப்பட்டதாக போலீஸ் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவைகள் மாத்திரம் போதுமா என்று கேட்கின்றேன், நாம் பேச வேண்டியவைகளை எல்லாம் அந்தப் பகுதியில் போய்ப் பேசி இருக்க வேண்டும், இந்தச் சட்டசபைக் கூட்டத்தையே பரமக்குடியில் நடத்தி இருக்கலாம். இவைகள் எல்லாம் அந்த நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு தெரிந்து இருக்க வேண்டும். அதற்காகத்தான் இவைகளைச் சொல்லுகின்றேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அமைச்சர்கள் ஏன் அந்தப் பகுதிகளுக்குப் போகவில்லை என்று தோழர் சின்னத்துரை அவர்கள் கேட்டதற்கு இவர்கள் எல்லாம் எங்கே போனார்கள் என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நாங்கள் எல்லாம் போய் என்ன செய்ய முடியும்? நாங்கள் போக வேண்டும் போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டபோது கலகம் வரட்டும் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள், பாதுகாப்பு வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் எல்லாம் அமளிகள் வரட்டும், வந்தால் அவர்கள் அடக்கிக் கொள்வார்கள் என்று சொல்லுகின்றீர்கள், எனவே எதிர்க்கட்சிக்காரர்கள் போய் ஒன்றும் செய்ய முடியாது. ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள்தான் போய் இருக்கவேண்டுமென்று சின்னத்துரை அவர்கள் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? அவர்கள் ஏதோ உணர்ச்சி வயப்பட்டு கேட்டார்களே தவிர, உங்களைப் புண்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல புயல்அடித்த நேரத்தில்

V211,2177 N09 N.11



எல்லாம் அந்தப் பகுதிகளுக்குப் போயிருந்தால் வோட்டு கிடைத்திருக்கும். நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் எனக்கு முன்பே அரசியலில் நீண்டகாலமாக அனுபவம் பெற்றிருப்பவர்கள் என்று நினைக்கின்றேன். என்னுடைய தந்தை அரசியலில் ஈடுபட்டிருந்த காலத்திலேயிருந்து ஈடுபட்டிருக்கக்கூடியவர் அவருடைய மகனுடைய வயதிற்குத்தான் நான் இருப்பேன். மகன் இருக்கிறாரோ இல்லையோ எனக்குத் தெரியாது.

நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்: மகன் இருக்கிறார்.

திரு. சி. என். அண்ணாதுரை: இருக்கிறார் என்றால் மகிழ்ச்சி. எனவே வோட்டு வாங்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் புயல் அடித்த நேரத்தில் எல்லாம் அங்கு போயிருக்க வேண்டும். ஆனால் இப்போதல்ல அதற்குக் காலம். இப்போது தன்னைச் சுற்றி ஆட்களை வைத்துக்கொண்டு அடிபடாமல் திரும்பி வந்தாலே போதும். பல்கலைக் கழகப் பக்கம் திரும்பாவிட்டாலும் கூட, இந்நாட்டு மக்களை, இந்த நாட்டு அரசியலை நன்றாக நிர்ணயித்து வைத்திருக்கிற நமது முதலமைச்சர் அவர்கள் புயல் அடிக்கிற நேரம் பார்த்து அங்கு போனார்கள். எந்த இடங்களுக்கு எந்த நேரத்தில் போனால் வோட்டு கிடைக்கும், எந்த நேரத்தில் போனால் வேட்டு கிடைக்கும், எப்போது வோட்டு, எப்போது வேட்டு என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும் (கை தட்டல், ஆரவாரம்). அவர்கள் இதை எல்லாம் நன்கு அறிந்திருக்கின்றார்கள். எவ்விதமிருந்தாலும் இந்தப் பகுதிகளில் எல்லாம் நீங்கள் போக வேண்டிய நேரங்களில் போகவில்லை என்றுதான் நாங்கள் உங்களை குற்றம் சாட்டுகிறோம். ஆகவே உங்களிடம் ஒரு துளி மாசு இருந்தாலும் கூட அதை நீக்கிக் கொள்ள வேண்டும். பாகவதம், இராமாயணம் இவைகளைப் பற்றி நமது போலீஸ் அமைச்சர் அவர்களுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு என்று நம்புகிறேன். யாரோ ஊரில் ஒருவன் உத்தம சீதை களங்கப்பட்டிருக்கிறாள் என்று சொன்னதற்காக உத்தம சீதை நெருப்பில் இறங்க வேண்டுமென்ற கடும் சோதனையை இராமபிரான் [illegible] எல்லாம் இராமாயணத்தில் நீங்கள் படிக்கிறீர்கள். அந்த நேரத்திலும் சீதை ராமனுக்குக் கிடைக்கவில்லை. பூமி பிளந்து உள்ளே போய் விடுகின்றாள், எங்கோ ஒருவன் சொன்ன குற்றத்திற்காக ஒரு சக்கரவர்த்தியே இவ்விதம் பரிசோதனை நடத்தி இருக்கிறார் என்றால் எவ்வளவோ ஆசாபாசங்கள் நிறைந்திருக்கும் இந்த உலகத்தில் இருக்கும் நீங்கள் அதுவும் எங்களைப் போன்ற ஆட்களையும்

No. 825 MADRAS

துணைகொண்டு இருக்கக் கூடிய நீங்கள் செய்கிற காரியங்களிலும் தவறு இருக்கத்தான் செய்யும். அதை நீக்கிக் கொள்வதற்கு நீதி விசாரணை வைத்தால் என்ன? நீதி விசாரணை வைப்பதின் மூலம் நீங்கள் உங்களையே பரிசுத்தப்படுத்திக் கொள்ள முடியும். அப்போதுதான் ஆளும் கட்சியினருக்கு சுட மட்டும் தெரியும் என்றில்லாமல் மருந்தும் தடவிடத் தெரியும் என்று பொதுமக்கள் புரிந்து கொள்வார்கள். அதற்காகவாவது இந்த நீதிமன்ற விசாரணையை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாங்கள் எதிர்கட்சிகள் அல்ல. நாங்கள் எதிர் கட்சியாக இருந்திருந்தால் 'கிழத் தூவல்' கூட ஒரு சமயம் யோசித்துத்தான் நடந்திருக்கும். இனியாவது இப்படி நடக்காமல், அதற்கு பதிலாக அற நெறியிலும் அன்பு நெறியிலும் ஆட்சி நடத்தப்படும் என்பதற்கு உத்தரவாதம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஆட்சியாளர்கள் கையாண்ட முறையில் நம்பிக்கை இல்லை என்று சொல்லி இந்தப் பிரச்னை குறித்து இப்படிப் பேசியிருக்கிறோம் என்று கூறிக்கொண்டு, இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

* * *

31—10—57 ] [ வியாழக்கிழமை

('நம்பிக்கையில்லாத் தீர்மான' வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்பு பேசியது....)

இந்த நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வந்ததன் நோக்கம், முதல் அமைச்சர் அவர்களின் பேரிலும், போலீஸ் அமைச்சர் அவர்களின் பேரிலும் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதற்கு மாத்திரம் தான் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கின்ற இந்த நேரத்திலே, நாங்கள் பேசுகின்ற பொழுது என்ன கூறினோம் என்பது நினைவிலே இருக்கின்றது. இந்தப் பிரச்னைக்கு இரண்டு மந்திரிகள் பொறுப்பாளிகள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒப்பவில்லை. விவாதத்தின் போது சர்க்கார் மீது குற்றம் சாட்டப்பட்டதற்குக் காரணம், விவாதத்தில் பேசும்போது எங்கள் கழகம் ஒரு கோணத்திலிருந்து பிரச்னையைப் பார்த்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் "Business Advisory Committee-ன் கூட்டத்தில் "கலவரத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமே தவிர நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது" என்பதைச் சொன்னார்கள்; அந்தத் தீர்மானத்தை நாங்களும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், அதற்கு மாறுபட்டு இங்கு நடந்து விட்டதற்கு எங்கள் வருத்தத்தையும் எங்கள் கழகத்தின் சார்பில் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கலவரம் சம்பந்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் மீது நீதி மன்ற விசாரணை தேவையில்லை என்று கனம் அமைச்சர்கள் சொல்லும்போது, "அது தேவை" என்று வற்புறுத்த விரும்புகிறோம். ஆனால் அதை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் வற்புறுத்துவோமானால் இரண்டு மந்திரிகளின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் வற்புறுத்துபவர்கள் ஆவோம்; அப்படிச் செய்து அதன் விளைவுகளுக்கு கனம் அமைச்சர்களை உட்படுத்த விரும்பவில்லை. இந்தக் காரணங்களினால், இந்தச் சர்க்காரின்போக்கை நீதி விசாரணை அமைக்க ஒப்புக்கொள்ளாததற்காக கண்டிக்கும் முறையில் நானும் என்னுடைய கட்சி உறுப்பினர்களும் இப்போது இந்த மன்றத்தை விட்டு வெளியேறுகிறோம் (ஆரவாரம்). (All the D. M. K. Members staged a walk out.)



* * *

5—11—57 ] [ செவ்வாய்க்கிழமை

( வெள்ளை அறிக்கையின் பேரில் நடைபெற்ற விவாதத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு.)

சட்டமன்றத் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையின் பேரிலே நடைபெற்று வருகின்ற இந்த விவாதம்—முடிந்த முடிவுகளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்ற கட்டத்தில்—இல்லாமல்—நாம் எடுக்க இருக்கிற முடிவுகள் நாட்டுக்குத் தேவைதானா என்று அலசிப் பார்ப்பதற்குப் பயன்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மெத்த நம்பிக்கையோடு வரவேற்கிறேன். ஏன் நம்பிக்கையோடு வரவேற்கிறேன் என்று நான் கூறுகிறேன் என்றால், கனம் சின்னத்துரை அவர்கள் எடுத்துச் சொன்னபடி, ஏற்கெனவே செய்யப்பட்டுவிட்ட ஒரு முடிவின் பேரில் அப்படி முடிவு எடுக்கப்பட்டதன் காரணமாக, இங்கே ஒப்புக்கு ஒரு விவாதத்தை நடத்துகிறார்களோ என்று ஐயப்படுகிற விதத்தில் மதுரை மாவட்டத்தில் ஒரு இடத்தில், அவர்கள்

வெள்ளை அறிக்கையிலே என்னமாதிரியான நிலைமைகளைக் காண விரும்புகிறார்களோ அவைகளையெல்லாம் அங்கே பரிட்சித்துப் பார்த்தாலும், அவைகள் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டிய முடிவுகள் அல்ல என்று எடுத்துச் சொன்னதை அரசியல் பெருந் தன்மையாக நான் கருதவில்லை, சர்க்காருடைய நல்ல நோக்கமாகவே கருதி அதை நான் வரவேற்கிறேன்.

இன்றையதினம் கிராமப்புறங்களிலே உள்ள நிலைமைகளைத் தக்கபடி சீர்திருத்துவதற்காக இந்த முறை கையாளப்படுகிறதா, அல்லது கிராம நல அபிவிருத்தி சமுதாய நல அபிவிருத்தி என்று போடப்பட்டிருக்கும் திட்டங்கள் வெற்றி பெறுவதற்காக இந்த முறையைக் கையாளுகிறார்களா என்பது உண்மையிலேயே குழப்பமாகயிருக்கிறது. நிதி அமைச்சர் குறிப்பிட்ட கருத்துக் குழப்பம், கேட்பவர்களிடையே மட்டுமல்ல, சொல்லுபவர்களிடையேயும் பெரும் அளவுக்கு இருக்கிறது ஸ்தல ஸ்தாபனங்களை பிரித்து அமைக்கவேண்டுமென்ற கருத்து சமுதாயநலத் திட்டங்களைப்பற்றி எண்ணிப் பார்க்காமல் இருந்த காலத்திலேயே, ரத்தினசபாபதி முதலியார் காலத்திலேயே இந்த யோசனைகள் இந்த நாட்டிலே வலியுறுத்தப் பட்டுக்கொண்டு வந்திருக்கின்றன. இடையிலே ஏற்பட்ட ஒரு புதிய முறை இன்றைக்கு பொருத்தமாக இருக்கிறதா, இல்லையா என்பதை ஆராயவேண்டுமென்பது மட்டுமல்ல, இருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அமைப்பிலோ, அல்லது புதியதாக ஏற்பட இருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அமைப்பிலோ, சமுதாய நலத்திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக அவைகள் கருவியாக பயன்படவேண்டுமென்ற முறையில் இந்தப் பிரச்னை அணுகப் படுகிறதோ என்று நான் அஞ்சுகிறேன், நான் அப்படி அஞ்சத்தக்க அளவில் நிதிஅமைச்சரவர்கள் சமுதாயநலத் திட்டத்தைப்பற்றி தமது உரையிலே 20 நிமிடங்கள் வலியுறுத்தி அது சரியான முறையில் நடைபெற வேண்டுமானால் கிராமமக்கள் அக்கறை காட்டவேண்டும், கிராம மக்களுக்கு அதில் அக்கறை இருக்கவேண்டும், அவர்களுடைய அமைப்பிலும் அதற்கெல்லாம் வசதிகள் இருக்கவேண்டுமென்று பரிசோதித்தார்.

சாதாரணமாக எங்கள் பக்கத்தில் மாடு வாங்கப்போகும் போது பெண் பார்த்துக்கொண்டு வருவது வாடிக்கை. அதே போல மாடு வாங்கப்போன இடத்தில் மாட்டையும் வாங்கிக் கொண்டு அத்துடன் பெண்ணையும் வாங்கி வருவதுபோல், சமு



தாயநலத் திட்டத்தை எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றலாம் என்ற கருத்தை ஆராய்ந்திருக்கிற இந்த சர்க்கார் அதேநேரத்திலே—ஒரு பெண்ணை வாங்கிக்கொண்டு வரலாம் என்பதைப் போல, நீண்டநாளைய இந்தப் பிரச்னையை அதோடு ஒட்டிவைத்திருக்கிறார்கள். சமுதாயநலத் திட்டம் நல்ல முறையிலே இயங்க வேண்டுமென்று சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள அக்கறையை உண்மையிலேயே வரவேற்கக்கூடிய நேரத்தில், எப்படி மத்திய அரசை ஆட்டிப்படைக்கின்ற அளவுக்கு ‘பிளானிங் கமிஷன்’’ உருவம் எடுத்து அதன் பலனை பல நிதி அமைச்சர்கள் தங்களுடைய வாழ்நாளை விரைவிலே முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்றோ, அதே முறையில் இங்கு சமுதாயநலத்திட்டம் என்ற புதிய இயந்திரம் நம்முடைய ஸ்தல ஸ்தாபன இயந்திரங்களை அடியோடு ஒழித்துக்கட்டிவிடும் என்று நான் உண்மையிலேயே அஞ்சுகிறேன். உண்மையிலேயே திட்டங்கள் என்பது இன்றைக்கு இருக்கும் ஆட்சியாளரினால் மிகவும் முக்கியமாகக் கருதப்படலாம். ஆனால் அவைகளின் முக்கியத்துவத்திற்கு எந்தவகையிலும் குறைந்தது அல்ல, நிரந்தரமாக நம்மிடத்திலிருக்கும் சர்க்கார் இயந்திரங்கள், நிரந்தரமாக இருக்கும் சர்க்கார் இயந்திரங்களையே புதிதாக அமைக்கப்படுகின்றது. இயந்திரங்கள் அடியோடு ஒழிந்து விடும், அல்லது இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுவிடும் என்ற வகையிலே இந்த இரு துருவங்கள் இருக்கலாகாது என்ற என்னுடைய கருத்தைத் தெரியப்படுத்துகிறேன்.

ஒவ்வொரு கூட்டத்திலும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் பக்கத்திலே அதிகாரிகளை நாம் அமரவைத்திருக்கிறோம்—அப்படி அதிகாரிகளை அமரவைப்பதினாலே உண்மையிலேயே நான் அஞ்சுவது என்னவென்றால், நேற்றையதினம் பேசும்போது டாக்டர் சவுந்தரம் அம்மையார் எடுத்துச்சொல்லியபடி, நல்லதரம் உள்ளவர்கள்—இத்தகைய அமைப்புகளில் அமருவதற்கு அஞ்சுவார்கள், நான் கலந்துகொண்ட ஒரு பஞ்சாயத்து மகாநாட்டில் பஞ்சாயத்து தலைவர்களும் உறுப்பினர்களும் தாங்கள் அதிகாரிகளை அணுகினால் அதிகாரிகள் எப்படி அருவருக்கத்தக்க முறையிலே நடந்துகொள்ளுகிறார்களென்று வெளிப்படையாகப் பேசி இனியாகிலும் அதிகாரிகள் அம்மாதிரி நடந்துகொள்ளக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானம் நிறைவேற்றும் நேரத்தில் அதில் கலந்து உரையாற்றிய ஒரு பஞ்சாயத்துத்

தலைவர் எவ்வளவு உருக்கத்தோடு அதிகாரிகளிடம் தாங்கள் படும் அல்லலை எடுத்துச் சொன்னார் என்பதை நான் சொல்வதிலிருந்து அமைச்சரவர்கள் உணர முடியாது. நான் நேரிடையாகக் கேட்டதினால் அதை உணர்ந்து இந்த அவையிலே அந்த அல்லலை எடுத்துச்சொல்ல முன்வந்தேன்.

அதிகாரிகளிடத்திலே ஏற்கெனவே படுகின்ற அல்லல் போதாதென்று மேலும் அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரியிடத்தில் நின்று கையேந்தி நிற்கவேண்டிய நிர்ப்பந்தமானமுறையிலே இந்த அறிக்கை இன்றைய தினம் இருக்கிறது என்று அஞ்சுகிறேன்.

நம்முடைய நிதியமைச்சரவர்கள் பஞ்சாயத்துகளைப்பற்றி பேசிய நேரத்தில் சில அடிப்படை தத்துவங்களை இங்கே எடுத்து விளக்கினார்கள். அப்படி அவர்கள்விளக்கியது மற்றவர்களை விளக்கத் தூண்டும் முறையில் இருந்த காரணத்தினாலே, அதுபற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். பஞ்சாயத்துகள் அல்லது ஸ்தல ஸ்தாபன அமைப்புகள் நல்லபடி நிர்வகிக்கப்படவேண்டும் என்பதற்காக அதிகாரிகளை ஆங்காங்கு அமைப்பது என்பது அதிகாரவர்க்கத்தை அதிகரிக்குமே தவிர மக்களின் சுய ஆட்சி நிலைமை உரிமையை நிலைநிறுத்துவதாக இருக்காது.

பத்து ரூபாயை சில்லறை மாற்றி ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் எல்லோருக்கும் ரூபாய் கிடைக்கும். நம்முடைய சர்க்கார் பத்து ரூபாய் நோட்டை பத்து துண்டாகக் கிழித்து ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு இடத்திலும் கொடுக்கிறார்கள். 500 க்கு ஐந்து பேர்கள் என்ற பஞ்சாயத்து அமைப்பில் ஒரு துண்டைத் தருகிறார்கள். மற்றொரு துண்டை எடுத்து பத்து கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து அவைகள் சில காரியங்களைச் செய்துகொள்ளலாமென்று பஞ்சாயத்து சர்க்கிளிடம் ஒப்படைக்கிறார்கள், 70, 80 பஞ்சாயத்துக்களை ஒன்றாகச் சேர்த்து இப்பொழுது அபிவிருத்தித் திட்டங்கள் நடத்தப்படுகின்ற பகுதியின் அடிப்படையில் ஒரு பகுதிக்கு மற்றொரு துண்டைக் கொடுக்கிறார்கள். இப்படி இருக்கின்ற அதிகாரங்கள் எந்த இடத்திலும் நிர்வகிக்கமுடியாத அளவுக்கு துண்டாடப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு அமைப்பிற்கும் தன் காரியங்களைச் செய்வதற்கான முழு



வாய்ப்பும் செய்துகொடுக்கப்படவில்லை, ஆங்காங்குள்ள நிர்வாக அதிகாரம் இப்பொழுது இருக்கக்கூடிய "பிளாக் டெவலப்மெண்டு" அதிகாரிகள், கிராம சேவக்குகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன, இந்த அதிகாரிகளின் நோக்கம் கிராம நல அபிவிருத்தித் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பதில் செல்லுமே தவிர பஞ்சாயத்துகளில் சுய ஆட்சி உணர்ச்சியை எப்படி வளர்ப்பது என்பதில் அவர்கள் அக்கரைகாட்டமாட்டார்கள் அல்லது அக்கரை செலுத்தமாட்டார்கள்.

"பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்களைப்" பற்றியும் சமுதாயநலத் திட்டங்களைப்பற்றியும் நமது இந்திய சர்க்கார் பெருமையடித்துக்கொள்ளவில்லை. பெருமையடித்துக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் காரியம் சரியானபடி நடத்தப்படவில்லையென்பதை அவர்களே வெளியிட்டிருக்கின்ற 'இவால்யுவேஷன் கமிட்டியின் ரிப்போர்ட்" எடுத்துக்காட்டியுள்ளது. "பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்"கள் சரியான முறையிலே தங்கள் கடமைகளை நிறைவேற்றவில்லையென்று கனம் 'டே' அவர்களும், பாராளுமன்றத்தில் பலரும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள், சந்தேகத்துக்கு இடமானவர்களையும், சரியானபடி காரியங்களை நடத்துகிறார்கள் என்று இன்னமும் தீர்மானிக்கப்படாமல் இருக்கின்ற அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்தினால் அவர்கள் ஜனநாயகத்தையே உண்மையிலேயே பாழ்படுத்திவிடுவார்கள் என்று நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால் எல்லா இடங்களிலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

"ஜில்லா போர்டுகள்" நிர்வகிக்கும் பரப்புநிலத்தின் அளவு அந்த ஜில்லா என்பது கட்டுக்கு அடங்காத. உண்மையிலேயே காரியங்களை நிறைவேற்றுவதற்கு முடியாத பெருத்த அளவுக்கு இருக்கிறது என்று சொல்லி, சிறுத்த அளவில் காரியங்களை நடத்தப்போகிறோம் என்று அமைச்சரவர்கள் சொல்லும் நேரத்திலே அவர்களுக்கு ஒரு சிறிய யோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் பகுதிகள் எந்த அளவுக்கு இருக்கவேண்டுமென்பதற்கு வேறு முறைகளைக் கையாள்வதைவிட அரசியலுக்காக பிரிக்கப்பட்டிருக்கும் சட்டசபை தேர்தல் தொகுதிகளை ஏன் ஒருவகையாக வைத்துக்கொள்ளக் கூடாது. சாதாரணமாக இப்படிப்

பட்ட காரியங்களிலும், வேறு பல காரியங்களிலும் ஆங்கிலத்தில் இரண்டு பதங்களை உபயோகப் படுத்துவார்கள். நல்ல முறையில் நிர்வாகம் நடைபெறுவதற்கு "எகனமிக் யூனிட்டாக" இருக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். அதாவது பொருளாதாரத் துறையிலே எல்லாவித வசதிகளையும் செய்துகொள்ள வகை இருக்கவேண்டும். அல்லது 'பொலிடிகல் யூனிட்'' அரசியலுக் கேற்ற அமைப்பாக இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். இப்பொழுது ஏற்படுத்தப்போகிற பஞ்சாயத்து யூனிட்டுகள் "எகனமிக் யூனிடாகவுமில்லை," "பொலிடிக்கல் யூனிட்டாகவு மில்லை". 'பொலிடிக்கல் யூனிடாக'' இருக்கவேண்டுமென்றால் ஏற்கெனவேயிருக்கின்ற எம் எல் ஏக்கள் தொகுதிகளை அந்தத் தொகுதிகளாக வைத்திருக்கலாம் "எகனமிக் யூனிடாக" இருக்க வேண்டுமென்றால், பொருளாதார நிபுணர்கள் எதை "எகனமிக் யூனிட்" என்று சொல்கிறார்களோ அம்மாதிரி பிரிக்கலாம். இரண்டையும்விட்டு விட்டு குருடன் கோலை வீசி நொண்டி காலை எடுத்து வைப்பதுபோல இப்பொழுது இருக்கிற இரண்டு பிளாக்குகளை ஒன்றாகச் சேர்த்து ஒருவகை யூனிடாக வைத்திருப்பதாக எடுத்துச்சொல்வது அவ்வளவு பொருத்தமாக எனக்குத் தெரியவில்லை. கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு யாரிடம் எதற்கு எப்படி அணுகுவது என்பது தெரியவில்லை. பல்வேறு அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். ரெவின்யூ இலாகா ஒன்று இருக்கிறது. அவர்களும் கிணறு வெட்டுகிறார்கள், "லோகல் டெவலப்மெண்டு'' இலாக்கா ஒன்று இருக்கிறது. அவர்களும் கிணறு வெட்டுகிறார்கள். சமுதாயநலத் திட்டத்தின் கீழும் கிணறுகள் வெட்டுகிறார்கள், என்னுடைய தொகுதியில் ஒரு இடத்தில் ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது அதற்குக் கைபிடிச் சுவர் இல்லை. கைபிடிச் சுவர் ஏன் கட்டப்படவில்லை என்று கேட்டால் அதை நாங்கள் வெட்டவில்லை. சமுதாய நலத் திட்டத்தின் கீழ் வெட்டியிருக்கிறார்கள், அவர்களைக் கேளுங்கள் "என்று ரெவின்யூ இலாகாவினர் சொல்வதாகவும், "நாங்கள் வரவில்லை, அவர்களைத்தான் கேட்கவேண்டும்'' என்று இவர்கள் சொல்வதாகவும் அறிகிறேன். இன்றைக்கும் கைபிடிச் சுவர் இல்லாமல் கிராம மக்கள் அந்தக் கிணற்றை உபயோகித்து வருகிறார்கள், இப்படித் தாறுமாறாகக் காரியங்கள் நடைபெறுவதற்குக் காரணம் பொதுமக்கள் அந்தக் காரியத்திற்கு ஆதரவு தராததுதான். பொதுமக்கள் ஒத்துழைத்தால்தான் ஆதரவு தந்து பங்குகொண்



டால்தான் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்று நிதி அமைச்சரவர்கள் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

அதே தத்துவத்தை அவர் இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்திருப்பாரேயானால் பொதுமக்கள் எந்த நேரத்தில் ஆதரவு தருகிறார்கள், எந்த நேரத்தில் ஆதரவு தர மறுக்கிறார்கள் என்பதை அவர் கொஞ்சம் உணர்ந்து கொண்டிருக்க முடியும். எந்த இடத்தில் சமுதாய நலத்திட்டத்தினால் போடப்படுகிற திட்டம் சரியான முறையில் நடைபெறும், நல்ல திட்டம் என்கிற அபிப்பிராயம் பொதுமக்களுக்கு உண்டாகிறதோ அந்த இடத்தில் அவர்கள் ஆதரவு தந்து உற்சாகமாகத் தாங்களும் பங்குகொண்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் இவர்கள் போடுகிற திட்டம் நன்றாக நடைபெறாது. இது வெறும் கண்துடைப்பு, மெழுகுப் பூச்சு, என்கிற அபிப்பிராயம் அவர்களுக்கு உண்டாகி விடுகிறதோ அங்கேயெல்லாம் அவர்கள் ஆதரவு கிடைப்பதில்லை என்பதை அறிந்து கொள்ளலாம் இதை நான் நடைமுறையில் பார்த்திருக்கிறேன் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை இந்த அவையில்--மன்றத் தலைவரவர்களே உங்கள் அனுமதியுடன்—சொல்லுவது பொருத்தமானதாக இருக்குமென்பதால் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நிதி அமைச்சரவர்களுடைய கோயம்புத்தூர் மாவட்டத்தில் கவுந்தப்பாடி, சவுந்தப்பட்டு கிராமத்தில் சமுதாயநல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பழங்குடி மக்களுக்கு 47 வீடுகளுக்குமேல் கட்டப்பட்டிருக்கிறது. அந்த வீடுகளை நிதி அமைச்சர் அவர்களை திறந்து வைப்பதாக இருந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் இவர் திறந்து வைக்கச் செல்லவில்லை. அவர் திறந்து வைப்பதற்கு ஏற்ற அளவில் இல்லாமல் அவை கட்டிய சிறிது காலத்திற்குள்ளாகவே அலங்கோல மாகிவிட்டன. 47 வீடுகளில் 26 வீடுகள் கீழேவிழுந்து அலங்கோலமாகக் கிடந்தன. அதைக் காண்பதற்கு என்னை அழைத்திருந்தார்கள். நான் பேசும்போதும் குறிப்பிட்டேன், இந்த அலங்கோலக் காட்சியைக் காண்பதற்கு நிதி அமைச்சரை அழைக்காமல் என்னை அழைத்திருப்பதே நல்லது—என்று குறிப்பிட்டேன். நிதிஅமைச்சரவர்கள் அந்த மாவட்டத்திற்குச் செல்லும் காலத்தில் அவசியம் அந்த இடத்தைப் போய்ப் பார்க்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே பொதுமக்களுக்கு இது கண்துடைப்பு வேலையல்ல என்கிற நம்பிக்கை உண்டாகும் வகையில் நல்ல முறையில் இவர்கள் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டால்தான் அவர்கள் தங்கள் ஆதரவைத் தர முன்வருவார்கள். இந்தமாதிரியாகச் செய்தால் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற முடியாது என்று தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்குச் செய்யவேண்டிய முறை, கையாளவேண்டிய கொள்கை வேறு. அதைக் கொண்டுபோய் ஸ்தல ஸ்தாபனங்களுடன் பிணைப்பதை என்பதை நான்ஒத்துக்கொள்ளவில்லை.

ஒரு யந்திரத்தினுடைய கருவியைக் கொண்டுபோய் இன்னொரு இயந்திரத்தோடு சேர்க்கும்போது அது பொருந்துமா என்பதைப் பார்த்துப் பொருத்த வேண்டும்; இல்லாவிட்டால் அது முறிந்துவிடும், அல்லது அந்த இயந்திரத்தின் ஓட்டத்தைத் தடைபடுத்தும் என்பதாக நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஒரு உதாரணம் அவர்கள் ஜில்லாவிலேயே காட்ட முடியும். மாடுகள் இழுக்கும் வண்டிகளுக்கு டையர் சக்கரங்களைப் போடுகிறார்கள். டையர் சக்கரம் போட்ட வண்டி தார்ரோடில்தான் நன்றாகப்போகுமே தவிர மண் ரோடில் போகும் அந்த வண்டிகளுக்கு டையர் சக்கரங்களைப் பொறுத்துவது பொருந்தாத ஒன்றை கொண்டுபோய் பொருத்துவதாகத்தான் இருக்கிறது. அதே முறையில் எல்லா இடத்திலும் அனுசரிக்க வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்தல ஸ்தாபனங்களைத் திருத்தி அமைக்கவேண்டுமென்ற கருத்தையும், சமுதாய நலத்திட்டம் வெற்றிபெற வேண்டுமென்ற கருத்தையும் ஒன்றாகப் பிணைப்பது சரியானது அல்ல. அந்தக் கண்ணோட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிற அறிக்கையில் நான் காணுகின்ற குறைபாடு இந்த அடிப்படையில்தான் சாதாரணமாக வெள்ளை அறிக்கையில் இருக்கிற மற்ற தத்துவங்களைப் பற்றியும் அவநம்பிக்கையிருக்கிறது. இங்கே பேசியவர்களெல்லோரும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள்—ஸ்ரீ முத்தையா அவர்களைத்தவிர மற்ற யாவரும்—வரவேற்கவில்லை. ஓரளவுதான் வரவெற்கிறேன் என்று ஸ்ரீ முத்தையாவும் குறிப்பிட்டார்கள். அந்த ஓரளவுதான் என்ன என்பதை அவர் இங்கே சொல்லாவிட்டாலும் பொறுக்குக் கமிட்டியிலாவது ஒரு சமயம் சொல்வாரோ என்று நினைக்கிறேன். சிந்தனைக்கு உரியதாகக் காணப்படுகிற



விஷயங்களை யெல்லாம், போட்டிருக்கிற பொறுக்கு கமிட்டி நன்றாக அலசி ஆராய்ந்து பார்க்கும் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன்.

மற்றொன்று பஞ்சாயத்து நடக்கிற தேர்தலைப்பற்றி அரசியல் கட்சிகளுக்கு எல்லாம் சிறியயோசனை ஒன்றை நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள் அரசியல் கட்சிகளையெல்லாம் யோசிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். "அங்கேயெல்லாம் அரசியல் கட்சி மனப்பான்மை வளருவது நல்லதா? அரசியல் கட்சியின் சார்பில் பஞ்சாயத்துப் போட்டியிடுவது நல்லதா?" என்று கேட்டார்கள்.

மன்றத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். முன்பு நான் சார்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அரசியல் கட்சியின் சார்பில் போட்டிபோடக் கூடாது என்கிற முறையைத்தான் அந்தக்காலத்தில் வகுத்திருந்தார்கள். காங்கிரஸ் காரர்கள்தான் அந்த முறையைத் தகர்த்தெறிந்தார்கள். கட்சியின் சார்பில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் போட்டியிடும் வழக்கத்தைகொண்டு வந்தார்கள். இன்றைக்கு அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடக்கூடாது என்கிற முறையை வகுக்க விரும்பினார்கள் என்றால்- ஆங்கிலத்தில் சொல்வதுண்டு—"ஜென்டில்மென்ஸ் அக்ரிமெண்டு" என்பதாக—அப்படி எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுகூடி அந்த முடிவுக்கு வருவார்களானால் நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில் காங்கிரஸ்காரர்கள் கொண்டுவருகின்ற அப்படிப்பட்ட முடிவுக்கு முழுக்க ஒத்துழைக்கத் தயாராய் இருப்பேன் என்று இன்றையதினம் சொல்லிக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியின் கருத்தாகத்தான் அது இருக்குமென்று நம்பி இதைச் சொல்லிக்கொள்கிறேன். இது நிதி அமைச்சரவர்களுடைய சொந்தக் கருத்து என்றால் தனிப்பட்ட முறையில் உயர்ந்த கருத்தைத் தெரிவித்ததற்காக என் மதிப்பு. அதன்பேரில் அவர் எடுத்துக்கொள்கிற நடவடிக்கை எப்படி இருக்குமோ அது எதிர்காலத்தில்தான் தெரியவேண்டும்.

ஆனால் ஒன்று, பஞ்சாயத்து அரசியல் கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நின்று சண்டைபோட்டுக்கொள்வது நாகரீகச் சண்டையாக இருந்தாலும் இருக்கும். காரணம் பஞ்சாயத்து தேர்தல்கள் ஏதாவது ஒரு கட்சியின் சார்பில்தான் நடைபெறக்கூடியதாக

இருக்கும். கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும் வடக்குத்தெரு ஒரு கட்சி, தெற்குத் தெரு ஒரு கட்சி. இரண்டுக்கும் சண்டை, மேட்டுத் தெருவிற்கும்; கிழக்குத் தெருவிற்கும் சண்டை; அல்லது சாதியின் பெயரால் சண்டை; அல்லது பெரிய வீட்டுக்காரருக்கும், சின்ன வீட்டுக்காரர்களுக்கும் சண்டை; என்று இப்படித்தானிருக்கும். ஆனால்—இந்தச் சண்டைகளையெல்லாம்விட அரசியல் கட்சிகளுக்குள் ஏற்படுகிற சண்டை ஒருகால் நாகரீகமான சண்டையாகவே இருக்க முடியும். ஆனால் ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் அரசியல் கட்சிகளின் சார்பில் ஸ்தல ஸ்தானங்களின் தேர்தல் நடைபெறக் கூடாது என்று இருந்த முறையை மாற்றி அமைத்த காங்கிரஸ்காரர்கள்—அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடுவது நல்லதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்கிற முறைக்கு இறங்கி வந்திருக்கிறார்களென்றால் அதற்குக் காரணமென்ன? தாங்கள் எதிர்பார்த்த நோக்கம் அதனால் பூர்த்தி அடையவில்லை—இல்லாவிட்டால் தாங்கள் எதிர்பார்த்ததுபோல் இல்லாமல பல இடங்களில் தங்களுக்கே நட்டம் அதிகமாக வந்துவிட்டது என்கிற காரணமாக இருந்தாலும் இருக்கலாம் எப்படியிருந்தாலும் அது நல்ல யோசனை என்பதனால்தான் அந்தக் கருத்து உருவானால் எங்கள் கட்சியின் ஒத்துழைப்பும் அதற்குக் கிடைக்கும். இதைப்பற்றி எல்லாக் கட்சிகளும் ஒன்றுகூடி பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டால் அதை வரவேற்கிறேன் என்று எடுத்துச் சொல்லி, நாம் செய்கின்ற மாறுதல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரம் கொடுத்து அவை நல்ல முறையில் செயலாற்ற வேண்டுமென்பதாக இருக்கவேண்டுமே தவிர சமுதாயநல அபிவிருத்தித் திட்டங்களை எப்படி வெற்றிபெறச் செய்வது என்கிற காரணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

காரணம் சமுதாய நல அபிவிருத்தி திட்டங்கள் என்பன ஐந்து வருடத்திட்ட அடிப்படையில் போடப்படுவது, நிரந்தரமான திட்டங்கள் இல்லை. முதல் ஐந்து வருடத்திட்டம் முடிந்தது. இரண்டாவது ஐந்து வருடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. முடிந்தால் மூன்றாவது ஐந்து வருடத்திட்டத்தையும் இவர்கள் கொண்டுவரலாமா? அனுமதித்தால் நான்காவது ஐந்து வருடத் திட்டத்தையும் கொண்டுவரக் கூடும். இப்படி அவை நிரந்தரமான திட்டங்களாக இல்லாமல் குறிப்பிட்ட வருடங்களைக்



கொண்ட திட்டங்களாகவே அவை அமைவன. ஆனால் ஸ்தல ஸ்தாபனங்கள் என்பது நிரந்தரமான ஒரு திட்டம். நிரந்தரமான ஒரு திட்டத்தோடு நிரந்தரமில்லாத திட்டத்தை பிணைப்பது ஒரு டப்பிக்குள் இன்னொரு சின்ன டப்பியைப் போடுவதாகத்தான் இருக்கும். இது அதோடு பொருந்தாது. உள்ளேயிருந்து ஓசையைத்தான் எழுப்ப உதவும். பந்தோபஸ்தாக இருக்காது என்கிற காரணத்தினால் ஸ்தல ஸ்தாபனங்களின் பிரச்னைதனி, சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களின் பிரச்னைதனி, இரண்டையும் ஒன்றாகப் பிணைப்பது சரியல்ல என்று கூறி சட்டசபைக் கமிட்டியில் ஸ்தல ஸ்தாபனங்களை நல்ல முறையில் சீர் அமைப்பது பற்றி ஆலோசிப்பார்கள் என்று நம்பி முடித்துக்கொள்கிறேன்.

* * *

**11—11—1957]** **[திங்கட்கிழமை**

[தேசீய அவமதிப்புத் தடுப்பு மசோதா தேவையா என்ற விவாதத்தில் மறுத்துப் பேசியது.]

சட்டமன்றத் தலைவரவர்களே, இன்றுவரையில் குற்றங்கள் என்று கருதப்படாமல் இருந்துவந்த சில செயல்கள், இனி மூன்று ஆண்டுகளுக்கு தண்டிக்கத்தக்க கடுமையான குற்றங்கள் என்று தெரிவிக்கும் இந்த மசோதாவை நான் நீதானது, தேவையற்றது, கொடுங்கோன்மைக்கு வழிகோலுவது என்று கூறி கண்டிக்கிறேன் என்று சொன்னால், நான் இந்தக் காரியங்களிலே பங்கு எடுத்துக்கொள்ளுகிறவன் என்று நீங்கள் தவறாகக் கருதமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன். இதனை வார்த்தையால் மட்டும் சொல்லவில்லை முன்பு ஒரு சமயத்திலே தேசீயக் கொடி எரிக்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சி நடந்த நேரத்திலே நான் அதிலிருந்து ஒதுங்கியிருந்தது மட்டுமல்ல, அது தவறானது என்று வெளிப்படையாக கண்டித்தேன். ஆகையினால் நான் இன்றையதினம் இந்தச் சபையின் முன்னாலேயிருக்கிற இந்த மசோதா நீதானது, தேவையற்றது, கொடுங்கோன்மைக்கு வழிகோலுவது என்று கூறினால், அதன் மூலமாக தேசீய சின்னத்தை, தேசீய கௌரவத்தைப் பங்கப்படுத்தவேண்டுமென்று நான் வாதாடுகின்றேன் என்று பொருளல்ல, தேசீய கௌரவம் என்பது பரம்பரை பரம்பரையாக நாட்டு மக்கள் உள்ளத்திலே ஊடுருவிப் பாயவேண்டிய தொன்றாகும் சட்டத்தின் மூலம் தேசீய கௌர

வத்தை நிலைநிறுத்திவிடமுடியாது. தேசிய கௌரவத்திற்கு இழுக்கையுண்டாக்கிக்கொண்டிருப்பவர்களை சும்மா விட்டுக்கொண்டிருக்க முடியுமா? பைத்தியக்காரர்களென்றால் அவர்களைப் பிடித்து உள்ளே போடத்தான் வேண்டும். சட்டம் இருக்கிறது என்பதாக போலீஸ் அமைச்சர் அவர்கள் பேசினார்கள்.

ஒருநாட்டிலே பைத்தியக்காரர்கள்குறைவாகஇருப்பது நாட்டுக்கும் நல்லது. ஒரு நாட்டிலே பைத்தியக்காரர்கள் குறைவாக இருப்பது என்பது நாட்டு ஆட்சிக்கும் பெருமை. "எங்கள் நாட்டிலே பைத்தியக்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள், அவர்களை அடக்கச் சட்டங்கள் போட்டிருக்கிறோம்" என்று சொல்வது போலீஸ் அமைச்சருக்கோ, அவருடைய நிர்வாகத்திற்கோ பெருமையைத் தேடித் தராது. ஆகவே தேசிய கௌரவத்தைப் பாதுகாக்கப் புதிய சட்டங்கள் தேவையில்லையென்று சொல்லுகிற நேரத்திலே "யாரோ ஒரு பைத்தியக்காரர் காந்தியாரின் படத்தைக் கொளுத்துகிறார் என்றால் அதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடியுமா?" என்று இவர்கள் சட்டத்தைக் கொண்டு வரும்போது ஒன்று சொல்லிக்கொள்வேன். "நீங்கள் காந்தியாரின் உயிரைக் காப்பாற்றத் தயாராயில்லாவிட்டாலும், காந்தியாரின் படத்தைக் காப்பாற்றவாவது முயற்சி எடுத்துக்கொண்டீர்களே, பெருமைதான்" என்று கூற விரும்புகிறேன்,

சாதிவெறியினால்தான் காந்தியார் கோட்சேயினால் கொல்லப்பட்டார் என்பதும், சாதி வெறியை அடக்க காந்தியார் முயற்சி எடுத்ததுதான் காத்தியாரின் உயிருக்கே ஆபத்தாய் முடிந்தது என்பதும் உலகம் அறிந்த உண்மை.

காந்தியாரின் உயிரையே வாங்கிவிட்ட சாதி வெறியை அடக்குவதற்கு நாங்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால் நான் அதைப் பாராட்டுவேன். உலகம் உங்களைப் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும். ஒன்றை நான் இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காந்தியாரின் சமாதிக்கு மாலை போட்டுவிட்டு கதர் கட்டிக்கொண்டிருக்கிற காங்கிரஸ்காரர்கள் தாம் இன்றைக்கு இருக்கிறார்கள். இவர்களெல்லாம் ஒருகாலத்தில் பெரியாரின் மாளிகையில் தங்கியிருந்தவர்கள்தாம். காந்தியார் சாதி வெறியினால் கொல்லப்பட்ட நேரத்திலே, காந்தியார் இருந்த இந்த நாட்டுக்குக் காந்தி நாடு என்பதாகவும், இந்நாட்டிலுள்ள மதத்திற்குக் காந்தி மதம் என்றும் பெயர்



வைக்கவேண்டுமென வெளிப்படையாகச் சொன்னவர் பெரியார்தான் என்பதை அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறவர்கள்மறந்திருக்கலாம் ஆனால் நாடு மறந்திருக்காது. நாட்டு மக்கள் மறந்திருக்கமாட்டார்கள், காந்தி பெரியாரின் மாளிகையில் தங்கியிருந்திருக்கிறார். காந்தியின் நினைவாக தன் தமக்கையின் பெண்ணுக்கு பெரியார் "காந்தி" என்ற பெயர் வைத்திருக்கிறார்கள்.

காந்தியாரை வைத்துக்கொண்டு காங்கிரஸ் கட்சியார் தன் செல்வாக்கை அதிகமாக்கிக்கொண்டதன் காரணமாக—அன்றைக்கு அவர் உயிரைக் காப்பாற்ற முன்வராவிட்டாலும்—அவர் படத்தையாவது காப்பாற்றுவோமென முன்வந்திருக்கிறவர்கள் ஒரு உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும். "காந்தியின் படத்தைக் கொளுத்துவேன், அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன்" என்று பெரியார் சொன்னாரென்றால் அவருக்கு அவைகளின்பேரில் இருக்கிற வெறுப்பினாலல்ல, தேசிய கொடிக்கு, தேசிய சட்டத்திற்கு இழுக்கை உண்டாக்கவேண்டுமென்கிற எண்ணத்தினாலல்ல, இவைகளை எந்தக் காரணத்திற்காகக் கொளுத்தச் சொல்லுகிறேன், கிழிக்கச் சொல்லுகிறேன்" என அவர் எடுத்துச் சொல்லுகிறாரோ, அந்தக் குறைபாடுகளையெல்லாம் நீக்குவதற்கு சர்க்கார் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக —அவர்களுடைய கவனத்தைக் கவர்வதற்காகச்சொல்லப்படுகிற விஷயங்கள்தான். அவைகளின்பேரில் அவருக்கு வெறுப்பு இல்லையென்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதை உணர்ந்துகொண்டு அவர் எந்தக் காரணங்களுக்காக உள்ளம் குமுறிக்கொண்டிருக்கிறாரோ அதை நிறைவேற்ற இவர்கள் ஏற்பாடு செய்தார்களா?

அவைகளைச் செய்யாத வரையில் திரு. சங்கரன் சொன்னதுபோல மூன்றுக்குப் பக்கத்தில் பைபரைப்போட்டு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை என்றாலும்கூட இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். சுதந்திரம் அடைந்து எட்டாண்டு காலம் ஆனபிறகும்கூட சாதி ஒழிப்புக்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்கிற கேள்வியின் அறிவிப்புத்தான் பெரியாரின் செய்கை. எங்கள் தேசியச் சின்னங்களுக்கு அவமானத்தை உண்டாக்குவது என்றால், "எங்கள் அரசியல் சட்டத்திற்கு இழிவை உண்டாக்குவது என்றால் அதை எப்படித் தடுக்காமல் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்?" எனப்

போலீஸ் அமைச்சர் கூறி அப்படிச் செய்கிறவர்களுக்கு மூன்று வருட தண்டனை அளிக்கப்படும் எனச் சொல்லலாம். திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் அதை இன்னும் கூடுதல் ஆக்கவேண்டும் என்று சொல்லலாம். இந்த அளவில் திரு சங்கரன் மூன்று வருடத்தை முப்பது வருடம் எனத் திருத்தவேண்டுமென்று பேசலாம். உண்மையில் இவர்கள் எல்லாம் அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள்வது என்று யோசிக்கிறார்களே தவிர, நோயினுடைய மூலகாரணத்தை அறிந்துகொள்ளச் சற்று யோசிக்கத் தவறிவிட்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

பைத்தியக்காரன் என்ற உதாரணத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். சிலர் உண்மையிலேயே பைத்தியக்காரர்களாக இருக்கலாம். அவன் கருத்துக்கு ஒவ்வாத கருத்தை இவன் சொன்னாலும் பைத்தியக்காரனென்று பிறரால் இவன் பட்டம்சூட்டப்படுகிறான் கனம் போலீஸ் அமைச்சரவர்கள் பைத்தியக்காரனை அடக்கச் சட்டம் இல்லையா? அப்படித்தான் இது எனப் பேசியபோது பைத்தியக்காரன் என்று யாரைச் சுட்டுகிறீர்கள், பெரியாரையா என்று திரு பழனிசாமி கேட்க. "அப்படித்தான் குறிப்பிடவில்லை" என அவர் மறுத்தது, அரசியல் பெருந்தன்மை என்ற முறையில் நான் வரவேற்கிறேன். ஆனால் அவர் பேசிய பேச்சு இந்த எண்ணத்திற்குத்தான் சபையிலுள்ளவர்களை இழுத்துக் கொண்டு செல்லும்,

ஆகையால் அவர் ஒப்புக்கொள்வது உண்மையென்று வைத்துக்கொண்டாலும் பைத்தியக்காரர்களை அடக்குவதில் வீட்டாருக்குள்ள பொறுப்பு வேறு, நாட்டாருக்குள்ள பொறுப்பு வேறு, அரசியலாருக்குள்ள பொறுப்பு வேறு. பைத்தியக்காரனென்றால் அவன் வீட்டார் அவன் பைத்தியத்திற்குக் காரணமான மனப் பிராந்தியை எப்படிப் போக்குவது என்றே முயற்சி செய்வார்கள். அந்த முறையில் பெரியாரவர்களுடைய மனக் குமுறலை—இப்படியெல்லாம் இவர் செய்வேனென்று சொல்வதற்கு மூலகாரணமான மன எழுச்சியை அவர்கள் போக்குவதற்கு என்ன செய்தார்கள்? இவர்கள் பெரியாரை ஒரு பைத்தியக்காரனென்று சொன்னாலும்கூட எண்பது ஆண்டுகள் சென்ற பெரியார் தமிழகத்தில் மிகச் சிறந்த செல்வாக்கைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அவர்களில் யாரும் மறுக்க முடியாது. அந்தச் செல்வாக்குத் தங்களுக்கு இன்றைக்குப் பயன்படவில்லையே,



தவறான வழியில் நமக்கு அனுகூலமில்லாத வழியில் ஓடப்பார்க்கிறதே என்று இவர்கள் இன்றைக்குச் சட்டம் கொண்டுவர முயற்சிக்கிறார்கள். நீண்டினால் திருநீலகண்டம்; என்று இவர்கள் அவரை இத்தனைநாளும் ஒதுக்கிக்கொண்டிருக்கவில்லை. திரு. கல்யாண சுந்தரம் அவர்களும் பெரியாரின் உதவியை ஒரு காலத்தில் பெற்றிருக்கிறார்கள். காங்கிரசுக்கும் அவருடைய பேராதரவு கிடைத்திருக்கிறது. அவருடைய பேருழைப்பைப் பெற்றுத் தான் இங்கே வந்திருக்கிறார்கள். ஆனால் அவருடைய ஆதரவை இதுவரையிலும் பெறாதவன் யாராவது ஒருவன் இங்கிருக்கிறான் என்றால் அது நான்தான்.

நான் அவருக்காக வாதாடுகின்ற நேரத்திலே நீங்களெல்லாம் அவரை எந்தக் கூண்டிலே தள்ளுவது என்று பேசுவதும், தள்ளுகிற கூடு இரும்புக்கூடாக இருக்கவேண்டுமென திரு. கல்யாண சுந்தரம் சொல்வதும்; இரும்புக்கூட்டில் தள்ளினால் போதாது. அதற்குப் பெரிய பூட்டாகப் போட்டு பூட்டவேண்டுமென திரு. சங்கரன் சொல்வதும்—இன்றைய அரசியல் உலகத்தில் ஏற்பட்டிருக்கிற விசித்திரமான நிலைமையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்லிக்கொள்வேன், குற்றம் என்று சொன்னால் நான் படித்த அகராதியில்-அது சாதாரண அகராதிதான். சட்ட அகராதியல்ல—any offence committed against public laws and which is anti to social welfare என்றுதான் பொருள் இருக்கிறது. சட்டங்களுக்குப் புறம்பாகச் செய்வது குற்றம். இப்போதுதான் புதிதாகச் சட்டம் செய்கிறோமென்ற காரணத்தினால் அந்த பொருள் தேவையில்லை. சமுதாயத்திலுள்ள நன்மைகளைப் பாதிக்கக்கூடிய செயல் குற்றங்களென்று சொன்னால்-சட்ட நிபுணர்கள் இங்கே இருக்கிறார்கள்—சட்டம் செய்வதற்கு முன்னால் எந்த வகையில் அந்தச் செயல் சமுதாயத்தைப் பாதிக்கிறது என்று பார்த்துச் சொல்லவேண்டும். உங்கள் கௌரவத்தை அது பாதிக்கலாம். நீங்கள் சார்ந்து வளர்ந்திருக்கிற இயக்கத்திற்கு இழிவு என்று கருதலாம். சமுதாயத்தைப் பொறுத்த அளவில் எந்த மாதிரியாகப் பாதிக்கிறது. சமுதாய பொருளாதாரத்தைப் பாதிக்கிறதா? சமுதாய அரசியல் வாழ்வைப் பாதிக்கிறதா? சமுதாயத்தின் மானத்தைப் பாதிக்கிறதா?

சமுதாயத்திலே மிகவும் ஊன்றி இருக்கும்படியான உணர்ச்சி மதஉணர்ச்சி யுகம் யுகமாக அநாதி காலம் தொட்டு இருப்பது

அவ்வுணர்ச்சியென்று சொல்வார்கள். இன்றைக்கு தேசியச் சின்னங்களைக் கொளுத்துவதற்கு முன்னர்—அன்றைக்கு மதச் சின்னங்களை—பிள்ளையார் விக்ரகத்தையும், ராமர் படத்தையும் பெரியாரவர்கள் உடைத்துக் கொளுத்தினார்களே, அந்த நேரத்தில் நீங்களென்ன சொன்னீர்கள்? "பிள்ளையார் உருவத்தை அவர் உடைக்க உடைக்கத்தான் பிள்ளையாருக்கு அதிகப் பெருமை உண்டாகிறது? என்று ரொம்ப யுக்தியாகச் சொன்ன உங்கள் வாதம் இந்த நேரத்தில் மங்கிப்போய் விட்டதா? அன்றைக்குப் பிள்ளையாரைப்போட்டு உடைத்து, ராமர் படத்தைக் கொளுத்திக்கொண்டிருந்தபோது சமுதாய மக்களின் உள்ளத்திலே ஆழ்ந்து பதிந்திருக்கும்படியான உணர்ச்சி புண்பட்டிருக்கிறது? அப்போது அதனால்தான் பிள்ளையார் பெருமை உயர்கிறது என்று சொல்லிச் சும்மாயிருந்த நீங்கள் அந்த தத்துவத்தை உண்மையாக உணர்ந்து பேசியிருந்தால் இப்போது இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கவசியமென்ன? இதனால் யாருடைய மனம் புண்படும்? இந்தக் காரியம் ஏற்கெனவே கண்முன்னால் செய்து காட்டப்பட்டுவிட்டது.

பாட்னா நகரத்தில் கிளர்ச்சி செய்யப்பட்ட நேரத்தில் காந்தியார் படத்தைக் கொளுத்தியிருக்கிறார்கள். நேருவுக்குக் கொடும்பாவி கட்டி இழுத்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நீங்களே அரசியில் கூட்டத்தை ஏழு ஆண்டுகளுக்குள்ளாகப் பத்துதடவை கொளுத்தியிருக்கிறீர்கள். அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் காரியத்தைத்தர்ன் ரொம்ப நாகரீகமாகப் பத்து தடவை திருத்தியிருக்கிறீர்கள். ரொம்ப புனிதமான சட்டமென்று போற்றப்படுகிற அந்தச் சட்டம் உங்களாலேயே திருத்தப்படுவதென்றால் என்ன? கொளுத்தப் பட்டதென்று தானாகிறது.

நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்: இந்த வார்த்தையை நான் அறிஞரிடத்திலிருந்து எதிர்பார்க்கவில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை; நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் "நாங்களெல்லாம் அரசியல் சட்டத்தை வேதமென்று வைத்துக்கொண்டிருக்கிறோம்" என்பதாக, அதை அவர்கள் வேதமாக வைத்துக்கொண்டு பூசிப்பதை யாரும் தடுக்க மாட்டார்கள். ஆனால் மிகப் பெரும்பாலோராக யிருக்கின்ற



அவர்களால் அந்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டால் அது புனிதமானதாகவும், மிகச் சிறுபான்மையோராக இருக்கக் கூடியவர்கள் அதிலுள்ள குறைபாடுகளை நீக்கவேண்டுமென்று சொன்னால் அது குற்றமாகவும் ஆகுமா? மிகப் பெரும்பாலோராகயிருக்கக் கூடியவர்கள் ஒரு காரியத்தைச் செய்யத் துணிந்த பிறகு, மிகச் சிறுபான்மையோராக இருக்கக் கூடியவர்கள் அந்தக் காரியத்தையே செய்ய முற்படும்போது சட்டத்தினால் மட்டும் அப்படிச் செய்யக்கூடாது என்று தடுத்துவிட முடியாது. சட்டங்கள் இயற்றலாம்; சட்டங்கள் இயற்றப்படுவதால் மட்டும் எந்தச் செயலையும் அடியோடு நிறுத்திவிட முடியாது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சட்டமியற்றப் பழக்கப்பட்டவனல்ல நான், மனதிற்கு சரியென்றுபட்ட காரியத்திற்காக அவசியமென்று ஏற்பட்டால் சட்டம் குறுக்கிடுமென்று நம்பினால், அந்தச் சட்டத்தை துச்சமென்று மதிக்கிறவர்கள் தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான பேர் இருக்கிறார்கள். நீங்கள் சட்டத்தை நிறைவேற்றிவிட்டாலும், ஆனால் 10 ஆயிரம்பேர் அந்தச் சட்டத்தை மீறி, மூன்று ஆண்டு அல்ல முப்பதாண்டல்ல சிறையில் இருக்கத் தயங்க மாட்டார்கள். அமெரிக்க நாட்டிலோ, பிரான்ஸ் நாட்டிலோ, ரஷ்ய நாட்டிலோ ஒரு சமுதாயத்தை எப்படியெல்லாம் அவர்கள் கருத மாட்டார்கள். இந்திய அரசியல் சட்டத்தில் எவ்வளவோ மாறுபட்ட கருத்துக்களுள்ளன யார் தேசியத் தலைவரென்று ஏற்றுக் கொள்வதிலே இன்னும் விவாதம் இருக்கிறது, சிறைக்குச் செல்பவர் 10 ஆயிரம் பேரென்று அங்குள்ளவர்கள் கருதுவார்களே தவிர, அது நீங்கள் எதிர்பார்க்கிற கவுரவத்தைக் காப்பாற்றுவதாகாது. நான் உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்—பெரியாரவர்கள் செயலுக்குப் பின்னால் இருக்கிற நோக்கத்தை தயவுசெய்து ஆராய்ந்து பாருங்கள் அந்த நோக்கத்தை வெளிப்படுத்துகிற பெரியாருடைய பழைய கால நடவடிக்கைகளை உங்களுக்கு ஏற்பட்ட தொடர்புகளையும் ஒருகணம் எண்ணிப் பாருங்கள். அவர்களை சுலபத்திலே பயித்தியக்காரரென்று சொல்லிவிடுவார்களேயானால், நாமெல்லாம் எந்தெந்த காலத்தில் எப்படி பயித்தியக்காரர்களாகி விடுவோமோ என்று தோன்றுகிறது. அப்படி அவரை பயித்தியமென்று சொல்வதற்கு அவர் எடுத்துச் சொல்வதுதானென்ன? அவர்கள் சொல்வதத்தனையும் ஜாதி ஒழிய

வேண்டுமென்பதுதானே ஜாதி இருக்கவேண்டுமென்று இந்திய நாட்டு பிரதம மந்திரி பண்டித நேரு கருதவில்லை. 10 நாட்களுக்கு முன்னால் ஒரு வாலிபர்சங்க விழாவில் பேசும்போது நேரு சொன்னார். "India is entering into the threhold of the Third India from the Second India of Casteism, superstitution methodoxy and narrowmindedness" என்று தெளிவுபட எடுத்துப் பேசியிருக்கிறார். மூன்றாவது இந்தியாவை பெறுவதற்கு நீங்கள் தயாரிக்கப்படுகிற நேரத்தில், அவருடைய முறையீடுகளை கவனிக்காத நேரத்தில், மக்கள் அழுகிற குரலை கவனிக்காத நேரத்தில், சிறு சிறு கிளர்ச்சிகளை கவனிக்காமல் இருக்கிற நேரத்தில், பண்டிதநேரு வேறொரு சந்தர்ப்பத்தில் சொல்லிய அந்த வாக்கியத்தை நான் ஆதாரம் காட்டி உங்களைத் தெளிவாக்கலாமென்று கருதுகிறேன். பெரியார் ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்கிறார். பெரியாரவர்களை நீங்கள் பித்தம் பிடித்தவரென்று கருதலாமே தவிர உலகத்தில் பெரும் பகுதியினர் அவ்வாறு கருதவில்லை. உங்களுக்கு இருக்கிற அதிகார பலத்தைக்கொண்டு நீங்கள் சட்டத்தை நிறைவேற்றலாம் ஆனால் அது உங்களுடைய பலவீனத்தைக் காட்டுமே தவிர உண்மையான பலத்தைக் காட்டாது மூன்று ஆண்டுகள் சட்டத்தை மீறியவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க, இந்திய அரசியல் சட்டத்தை கண்ணில் ஒத்திக் கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் கர்த்தாவாகிய காலம் சென்ற டாக்டர் அம்பேத்கார் அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார், "இந்த அரசியல் சட்டத்தில் பலவேறு கோளாறுகள் இருக்கின்றன, இது எரிக்கத் தக்கது" என்று "நீர்தானே இந்தச் சட்டத்தை செய்தவர்" என்று சிலர் அவரைக் கேட்க "நீங்கள் சொல்லி செய்யப்பட்டதே தவிர ஏற்றுக்கொள்ள முடியாத, மனதிற்கு ஒவ்வாத பல கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அரசியல் சட்டத்தில் இன்றைய தினம் உள்ள நாக நாட்டு நிலைமையைப் பற்றி நாளைக்கு ஒரு திருத்தம் கொண்டுவர இருக்கிறார்கள். இந்த 7 ஆண்டுகளிலே அரசியல் சட்டத்தில் 10 தடவைகள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள், திருத்தங்கள் கொடுப்பது என்பது நாகரீகமான முறையில் சட்டத்தை கொளுத்துவதாகும். திருத்துகிறோம் என்ற பெயரால் 10 தடவை கொளுத்தியிருக்கிறீர்கள் அந்தச் சட்டத்தை. மேலும் வெள்ளைக்காரனுடைய துணியை கொளுத்தினீர்கள் என்றால் வெள்ளைக்காரர்களையே கொளுத்துவது என்று அர்த்தமல்ல, அந்தத் துணிகளைக் கொளுத்துவதன் மூலம்



சுதேசி உணர்ச்சியை ஊட்டவேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கம். அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதன் மூலம் பெரியாரவர்கள் இன்று சாதி அடிப்படையிலே இருக்கும் பல குறைகளை வெளிப்படுத்துவதற்காகத்தான். இப்பொழுது முதல் அமைச்சராக இருக்கும் திரு. காமராஜ் அவர்கள் சென்னையில் பெரியார் அவர்களால் நடத்தப்பட்ட ஜாதி ஒழிப்பு மாநாடு ஒன்றில் கலந்து கொள்கையில் "நான் அதிகாரத்திற்கு வந்தால் நான் செய்யக்கூடிய முதல் காரியம் ஜாதி ஒழிப்பாகத்தான் இருக்கும்" என்று பேசினார் இதை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள். நான் கேட்டிருக்கிறேன். ஆகையால் பெரியாரவர்கள் தன்னுடைய செல்லப்பிள்ளை ஆட்சிக்கு வந்து விடுவாரென்ற நம்பிக்கையில் இரவு பகல் பாராமலுழைத்து உங்களை உட்கார வைத்திருப்பது நீங்கள் சாதி ஒழிப்பிற்கு ஆதரவாக இருப்பீர்களென்ற நம்பிக்கையினால்தான். ஆனால் அப்படி உங்களை நம்பினவரை நட்டாற்றில் கைவிடுகிறீர்களே என்றுதான் நான் பரிதாபப்படுகிறேன்,

பெரியாரவர்கள் நேற்று ஒரு கூட்டத்தில் பேசியதை பத்திரிகையிலே பார்த்தேன். பெரியாரோடு நெடுங்காலமாக பழகியிருக்கிற எனக்கு, நம்முடைய திரு. கல்யாண சுந்தரமவர்கள் சொன்ன வாக்கியம் எந்த தொனியிலே சொல்லப்பட்டிருந்தாலும், அந்த வாக்கியத்தின் அடிப்படை உண்மையை நான் ஒத்துக் கொள்கிறேன். சட்டத்தை அவர் என்றைக்கும் ஏற்றுக்கொள்கிறவர் மதித்து நடக்கிறவர் என்பதை நானறிவேன். அனாவசியமாக கிளர்ச்சிகளிலும் கொந்தளிப்புகளிலும் அவர் ஈடுபடுகின்றவரல்ல. ஜெர்மன் நாட்டிலே கிரீச்சிங் பாம் போட்டார்கள் அது பயங்கரமான சத்தத்தை விம்பும். அதிலே மக்கள் அயர்ந்துவிட வேண்டுமென்று எண்ணினார்கள். அதைப்போல் பலருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து மதமதப்பு அடைந்திருக்கும் சர்க்காரை கொஞ்சம் சுறுசுறுப்பாக்க வேண்டுமென்று கருதினார்கள். சாதி ஒழிப்பிலே பெரியாரவர்கள் கொஞ்சம் தீவிரமாக வேண்டுமென்று கேட்டுக்கொள்வதில் தவறு என்ன இருக்கிறது. நான் வழக்கறிஞனல்ல என்றாலும் இந்தச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சொல்வேன். வாதத்தில் சிறந்த வழக்கறிஞராகயிருக்கும் போலீஸ் அமைச்சரும், நிதி அமைச்சருமிருக்கிறார்கள், நான் வழக்கறிஞனல்ல என்ற காரணத்தால் என்னுடைய வாதத்திலே ஓட்டையிருப்பதாக

எடுத்துச் சொல்லக்கூடும் அதே சமயத்தில் வழக்கறிஞரல்லாதவர்களும் சட்டத்தைப் பார்த்தால் அதிலென்ன குறைகளிருக்கின்றன என்று உணரமுடியும். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்தை அவரவர்கள் தங்களுக்குரிய சொத்துக்களை பெறுவதற்கும், பாதுகாத்துக் கொள்வதற்கும் 9-வது பிரிவிலே உரிமையளிக்கப்படுகிறது. அடிப்படை உரிமை அது. அதனையும் பாதிக்கும் சட்டங்களை இயற்ற சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறது. இயற்றப்படும் நேரத்தில் ஆர அமர யோசித்துப் பார்த்து இயற்றவேண்டுமே தவிர கண்மூடித்தனமாக இயற்றக்கூடாதென்பதை சட்ட நிபுணர்கள் ஒத்துக்கொள்வார்கள். ஆட்சியாளர்கள் இதைக் கூர்ந்து கவனிப்பார்களென்று நினைக்கிறேன். அரசியல் சட்டப் புத்தகத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று கருதினாலும், பாதுகாக்க வேண்டுமென்று கருதினாலும், நாசமாக்க வேண்டுமென்று கருதினாலும், அதற்கு அடிப்படை உரிமை தரப்பட்டிருக்கின்ற நேரத்தில், பெரியார் தம் கையிலே உள்ள பணத்தைப் போட்டு, ஏடு வாங்கி, தம்மனையில் இரண்டு பக்கத்தைப் படித்துக் காட்டி இதில் குறையிருக்கிறது சனியன் தொலையட்டுமென்று அதைக் கிழித்தெரிந்தாலும் அது அவருடைய தனிப்பட்ட உரிமையென்று நீங்கள் ஏன் கருதக்கூடாது? சட்ட நிபுணர்களும், வழக்கறிஞர்களும் வேறு விதமாகச் சொல்லக்கூடும். அந்த உரிமை மக்களுடைய உரிமைதானே, நீங்கள் குறுக்கிடுவானேன். "சோஷல் வெல்பேர்" ஆட்சியாகவேண்டுமென்று இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவர வேண்டுமா? வேண்டுமென்றால் "எங்களுக்கு பிடிக்கவில்லை, எங்கள் காலத்திலேயே இப்படி நடக்கிறதே" என்று சொல்லுங்கள்.

திரு. என். கே. பழனிசாமியவர்கள் காந்தியடிகள் தேச பிதாவாகயிருந்தார். அவருடைய படத்தையா இப்படிச் செய்வது யென்று கேட்டார், நல்ல வேளையாக அப்படிச் சொன்னாரே யென்று மகிழ்ச்சியடைந்தேன். அவர் வணங்கிய பழைய தெய்வமாகிய பழைய ஸ்டாலின் சிலை தூக்கிப்போட்டு உடைக்கப்பட்டதென்பதை இன்றைய தினம் மறந்து பேசுகிறார். ஒருவேளை. இவர் ரஷ்யாவிலிருந்திருந்தால், குருஷேவை கரத்தைப் பிடித்துத் தடுத்திருப்பாரென்று நினைக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக இவர் அங்கே யிருக்கிறார். தேசபிதாவின் படங்களைக் காப்பாற்றப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்கிறார்கள், தேசப் பிதாவை



புகழ்ந்து பேசினார்கள். அவருடைய புனித தன்மை பாழாக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். நாட்டில் கொந்தளிப்பு ஏற்படுமென்று குற்றம் சாட்டுகிறார்கள். எல்லாம் ஒரு கடுமையான சட்டம் இயற்றுவதற்காகக் காட்டப்படும் சாக்குகள்.

பெரியார் ராமசாமியவர்கள் காம்ராஜ் அவர்களை எந்த வகையில் கருதுகிறார்கள் என்பதை இன்று பார்த்தால் காமராஜ் ஓங்கி அடித்தாலும் காமராஜரின் கரம் வலிக்குமேயென்றுதான் பெரியார் கருதுவார். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவிலாண்டி' என்பதுபோல் பெரியாரவர்களும் என்னைத்தான் தாக்குவாரேயொழிய காமராஜ் பக்கம் திரும்ப மாட்டார். அந்த அளவுக்கு உங்களை நம்பி பாசம் வைத்து இருப்பவரை பாதி வழியில் சென்று சந்தித்துப் பேசி தேசியக் கொடியின் கவுரவத்தைக் காப்பாற்றினால் எந்த கவுரவம் எப்படிப் பாதிக்கப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

திரு. முத்துராமலிங்கத் தேவரவர்களை திரு. காமராஜரவர்கள் சந்தித்துப் பேசக் கூடாதா யென்று கேட்டதற்கு நம்முடைய நிதியமைச்சர் ஒரு சமாதானம் சொன்னார், "காமராஜ் அவர்களுடைய குலத்தையே தாழ்வாகப் பேசுகிறார். அப்படிப்பட்டவரோடு எப்படி கலந்து உரையாடுவது" யென்று கேட்டார்கள். அந்தக் குலத்தைப் பொறுத்தும் அதிகமாகக் கொந்தளிப்பு ஏற்படுமென்று சொன்னார்கள். அது வாதத்திற்கு ஒப்புக்கொள்ளத் தக்கதாக யிருக்கும். ஆனால் பெரியார், காமராஜ் தொடர்பு அப்படிக் கருத முடியாது. அவர் காமராஜின் அருங்குணங்களை, இதுவரை சொல்லாத அருங்குணங்களை காமராஜருக்கே தெரியாமலிருக்கும் அருங்குணங்களை அவர் எடுத்துச் சொல்லி அவர் சிறந்த தமிழர், அவரைவிட பச்சைத் தமிழர் என்றால் வளர்க்கப்பட்ட தமிழரைவிட சிறந்த தமிழர் என்று சொல்லத்தக்க அளவிலே பாசம் வைத்திருக்கிறார். ஏன் திரு. காமராஜ் அவர்கள் பெரியாரவர்களை ஒருதரம் சந்தித்துப் பேசக்கூடாது?

பெரியாரை ஒருகணம் சந்தித்து சாதி ஒழிப்புபற்றி இந்திய அரசியல் சட்டத்தில கூறப்பட்டிருக்கிறது, சாதியை ஒழிக்க வேண்டுமென்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது, நீங்கள் அதைப் பாராமலிருக்கிறீர்களே யென்று எடுத்துச் சொல்லி, சாதி ஒழிப்பு என்பது தங்களுக்குள்ள பிரத்தியேக உரிமையா, சாதி வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோமா, அது உங்களுக்குத் தெரியாதா

எங்களமைச்சரவையில் சாதிக் கட்டுப்பாட்டை மீறி கலப்பு மணம் செய்துகொண்டவர்கள் இருக்கிறார்களே என்றெல்லாம் பெரியாரிடம் எடுத்துச் சொல்லி அவரது முறையை மாற்றுவது தான் ராஜதந்திரமாகுமேயொழிய எங்களுக்கு மெஜாரிட்டியிருக்கிறது என்று சொல்லி கட்சி பலத்தைக் கொண்டு சட்டம் போட்டுக்கொள்வதில் வியப்புமில்லை அதில் யூகமுமில்லை. பலமுள்ள ஒரு அரசியல் கட்சி ராஜதந்திர முனையில் வெற்றி பெற்றார்கள் என்று உலகத்திற்கு நீங்கள் அறிவிக்க வேண்டும் ஆகவே பெரியாரை தயவுசெய்து சந்தியுங்கள். அவரது மனக் குமுறலை உணர்ந்துகொள்ளுங்கள். அவரது லட்சியமும் உங்களுக்கு உகந்ததுதான். ஆனால் அவரது முறை தவறென்று நீங்கள் கருதுகிறீர்கள், நான் கருதுகிறேன். அங்ஙனம் கருதுகிற காரணத்தால்தான் நான் அதில் ஈடுபடாமலிருக்கிறேன். முறை தவறென்று கண்டிக்கும்போது தூய்மையான நோக்கத்தை ஆராய்ந்து பார்த்து அதை நீக்குவதற்கு உங்களுக்கு வழிவகையிருக்குமானால் ஏன் அந்த வாய்ப்பை நீங்கள் இழக்கவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். காமராஜ்—பெரியார் சந்திப்பு இப்பொழுது தேவையேயல்லாது புதிய சட்டமல்ல. சட்டத்தை நிறைவேற்றி விடலாம். நிறைவேற்றவும் போகிறீர்கள், நிறைவேற்ற துடித்துக்கொண்டிருக்கிறீர்கள். இதுவரை அப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றாதது தவறுயென்றும் ஆளும் கட்சியைச் சார்ந்த சில அங்கத்தினர்கள் கூறினார்கள். சட்டம் இயற்றுவதினால் மட்டும் நமது தேசியக் கௌரவத்தைக் காப்பாற்கொள்ளப் போவதில்லை சட்டங்கள் செய்யப்போகிற நேரத்தில் நீங்கள் யாரையோ வலுச்சண்டைக்கு அழைக்கிறீர்களென்று மக்கள் கருதி மூன்று ஆண்டுகள் தானே என்று எண்ணிக்கொண்டிருக்கும் மக்கள் தமிழகத்தில் ஏராளமாக இருக்கிறார்களென்று போலீஸ் அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். ஐம்பதினாயிரம் மக்கள் தஞ்சை மகாநாட்டில் கூடினார்களென்று சொன்னபோது போலீஸ் அமைச்சர் அவர்கள் நான் அதை நம்பவில்லையென்று சொன்னார்கள். அதை நம்ப அவர்கள் மறுக்கிறார்கள். நம்பினால் கொஞ்சம் நடுக்கம் எடுக்கும், ஐம்பதினாயிரமென்று எண்ண அவரது நெஞ்சம் கூசுகிறது.

**போலீஸ் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம்:**—எனக்குத் தெரியாது, எனக்குவந்த தகவல்வேறு ஆனால் பத்திரிகைக்காரர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றுதான் சொன்னேன்.



திரு. சி. என். அண்ணாதுரை: பதினாயிரம் பேர்கள்தான் வந்திருந்தார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஐம்பதினாயிரம் என்ன, நான்குலட்சம் பேர்கள் வந்தார்களென்று சில பத்திரிகைகள் எழுதியிருந்தது. அவனவன் மனைவி அவனவன் கண்ணிற்குப் பிடிக்கும், என்பதுமாதிரித்தான் இது இருக்கிறது. உங்கள் ஆட்களைக் காணும்போது நீங்கள் ஒருவிதம் எண்ணுவீர்கள், வேறு ஆட்களைப் பார்க்கும்போது வேறுவிதம் எண்ணுகிறீர்கள் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று அவர் சொல்கிற நேரத்தில் அதற்கு ''ஆம்'' என்று சொல்கிறவர்களை பயித்தியக்காரர்களென்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் இன்றையதினம் நிம்மதியாய் உட்கார்ந்திருப்பதின் காரணமாக, பெரியார் சொல்வதை ஏற்றுக்கொள்ளும் இத்தனை பேர்களும் பயித்தியக்காரர்களா? அப்படி அவர்களைப் பயித்தியக்காரர்களென்றால், நீங்கள் இன்று தமிழ் நாட்டிற்கு அதிகாரிகளல்ல, பயித்தியக்காரர்கள் அடங்கிய நாட்டிற்குத்தான் அதிகாரிகளாவீர்கள். சாதியை ஒழிப்பது இந்த அரசாங்கத்தின் கடமையென்று 10 தினங்களுக்கு முன்பு நேரு அவர்களே சொன்னார்களே, அந்த அடிப்படையில் பெரியாரைச் சந்தித்துப் பேசினால், அவரைவிட தனிப்பட்டவர்களிடத்தில் மரியாதை காட்டுகிறவர், அவரைவிட தாட்சண்யத்திற்கு கட்டுப்படக் கூடியவர், அவரைவிட, எதிரியின் மனப்பான்மையை அறிந்து தன் மனப்போக்கை மாற்றிக் கொள்ளக்கூடிய ஒருவரை நீங்கள் தமிழகத்திலேயே பார்க்கமுடியாது சட்டங்களைச் செய்வதினால் பலனில்லை. நம் போலீஸ் அமைச்சர் அவர்கள் இச்சட்டம் குறித்து பேசியபோது மிகவும் உணர்ச்சியோடு பேசினார்கள். அவர் இவ்வளவு உணர்ச்சியோடு பேசினதை நான் இதுவரை பார்த்ததில்லை. நான்கூட நினைத்திருக்கிறேன், போலீஸ் அமைச்சருக்கு உணர்ச்சியே வராதோ என்று அவர் உணர்ச்சியோடு பேசியதற்கு, அவரது உணர்ச்சிக்கு நான் மதிப்பளிக்கிறேன். தேசியக் கொடி அவமதிக்கப்பட்டால் அது தன் நெஞ்சில் புண்ணை ஏற்படுத்தும் என்று அமைச்சர் அவர்கள் கருதுவது போல், பெரியாரை அடக்குவதற்காக நீங்கள் கடுமையான சட்டம் கொண்டு வந்தால் மனம் புண்படுபவர்கள் இன்று தமிழகத்தில் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவை தயவுசெய்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த சர்க்காரும் தனிப்பட்டவர்களின் கிளர்ச்சியை ஒடுக்குவது என்பது இயற்கையாகவே

அமைகிறது. ஆனால் எத்தனை தடவை, எத்தனை கிளர்ச்சிகளை நீங்கள் இப்படி அடக்கிக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று கேட்கிறேன். முத்துராமலிங்க தேவரை ஒரு பக்கத்தில் பூட்டிக் கொண்டிருக்கிறீர்கள். பெரியார் ராமசாமியை ஒரு பக்கத்தில் பூட்ட இருக்கிறீர்கள், இப்பொழுது அரசியல் சட்டத்தைக் கொழுத்துவது, தேசீய தலைவருக்கு இழுக்கு செய்வது சட்ட விரோதமாகும் என்று சட்டம் கொண்டு வருகிறீர்கள். அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது அரசியல் சட்டத்திற்கு விரோதமாகும் என்று சங்கரன் அவர்கள் கூறினார்கள். ஆனால் எந்தப் புத்தகத்தையும் கொளுத்துவது அல்லது அவரவர் விருப்பப்படி செய்வதற்குள்ள உரிமை இருப்பதுபற்றி, அதே அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதை வழக்கறிஞராகிய அவர் உணரவில்லை. அரசியல் சட்டத்தில் குறைபாடுகள் இருக்கலாம். அதை சிலர் நாகரீகமாக சொல்வார்கள், சிலர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்வார்கள், சிலர் பட்டும் படாததுமாகச் சொல்வார்கள். அரசியல் சட்டத்தில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துச் சொல்வதே கூடாது என்று சொல்வார்கள்போல் இருக்கிறது. அதற்கும் சட்டம் குறுக்கிடக் கூடும். அதேபோல், ஒருவரின் ஆறு வயது குழந்தை காந்தியாரின் படத்தை எடுத்து உடைத்து விட்டால், அவருக்கு வேண்டாத போலீஸ்காரர் இருந்தால் அவர் சட்டப்படி இக்குற்றத்திற்கு ஆளாகலாம். அதற்குப் பிறகு தானே கோர்ட்டிற்குப் போய், நான் அவமானப் படுத்தவில்லை, என் குழந்தை கீழே போட்டு உடைத்துவிட்டது என்று சொல்லி பிறகுதானே விடுதலைப் பெற்று வரவேண்டும். ஆகவே, நான் சொல்வது, வேண்டுமென்றே செய்யப்பட்டால், பொதுவிடங்களில் செய்தால் என்றுகூட எழுதாமல் விட்டிருக்கிறீர்கள் காந்தியின் படத்தைத் தொட்டால், அரசியல் சட்டத்தைத் தீண்டினால் மூன்று வருஷம். இது எதைக் காட்டுகிறது? வாசகங்களை எழுதுவதில் கூட ஏன் அலங்கோலம் இருக்கவேண்டும். எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதன் வாசகம் எப்படியிருந்தாலும், உங்களுக்கு 150 பேர்கள் இருக்கிறார்கள், மன்னிக்கவேண்டும், இதற்கு 190 பேர்கள் இருக்கிறார்கள் என்று நம்பிக்கையின் பேரில் இச்சட்டத்தைக் கொண்டு வருகிறீர்களே தவிர பிரச்னையினடிப்படையை ஆராய்ந்து அதன் பின்னால் இருக்கும் பெரியாரின் மனப்போக்கை அறிய நீங்கள் முயற்சி எடுக்கவில்லை. இப்படிப்பட்ட தேவையற்ற, தீதான, கொடுங்கோன்மைக்கு வழி செய்யக் கூடிய, சர்வாதிகார நாடுகளில் கையாளக் கூடிய முறைகளை கை-



யாளாது, தேசீயக் கொடியின் மாண்புகளையும், அரசியல் சட்டத்தின் மாண்புகளையும் மக்களிடம் எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவைகளுக்கு கௌரவம் தேடுங்கள் என்று சொல்லிக் கொண்டு, நமது அரசியல் சட்டம் வேதத்திற்கும் சிறந்த வேதம் என்று போலீஸ் அமைச்சர் கூறுகிறார். வேதம் படும்பாட்டை உலகம் இன்று பார்க்கிறது—வேதத்திற்கும் சிறந்த வேதம் என்று சொல்வதால் அதற்கு முக்கியத்துவம் கற்பித்துக் கொடுத்துவிட முடியாது. அரசியல் சட்டம் என்றால், அது என் வாழ்விற்காக இருக்கிறது, அது என்னை மனிதனாக ஆக்குகிறது, என்னை நல்லவனாக இருக்கச் செய்கிறது, எனக்கு நாட்டில் மதிப்பளிக்கிறது என்று நாட்டில் உள்ள மக்களை உணரச் செய்தால், அதை யாருமே தீண்ட மாட்டார்கள். நான் கேள்விப்படுகிறேன், நேரு அடுத்த திங்கள் இந்த மாகாணத்திற்கு வருகிறபோது, அவர்கள் ஏதோ ஒரு பிரச்சனையில் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை என்று அதிருப்திப் பட்டவர்கள் அவருக்கு கருப்பு கொடி காட்டுவதாக இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் மக்கள், மதுரையிலும், கொடைக்கானலிலும் நின்று கொண்டு நேருவே திரும்பிப்போ, நேருவே திரும்பிப்போ என்று சொன்னால் அதில் தேசீய கௌரவம் பங்கப்படவில்லையா? ஜப்பானில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் படுகிறது, அமெரிக்காவில் கோலாகல விழாவில் அவர் கலந்து கொள்ளும்போது மதுரையில் கருப்பு கொடி பிடிக்கிறார்கள் என்றால் அது அவருக்கும் தேசீய கௌரவத்திற்கும் இழுக்குத்தான். அப்பொழுது அதையும் தடுக்கவேண்டும். கருப்பு கொடி காட்டுவதையும் தடுக்க வேண்டும். இப்படியெல்லாம் சட்டம் கொண்டு வந்தால் இந்த ஐந்து வருடத்திற்குள் எதிர்க் கட்சியில் இருப்பதே கூடாது என்று சொல்லி, சில நாடுகளில் ஒரு கட்சிதான் இருக்கலாம், அதற்குப் பெயரும் ஜனநாயகம்தான், என்பதுபோல் நீங்களும் ஒரு கட்சி ஜனநாயகத்தை உண்டாக்க விரும்புகிறீர்கள். நீங்கள் ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரப் பாதையில் போகிறீர்கள். அதற்கு வேண்டிய, அதற்கு உதவக் கூடிய காரியங்களைத்தான் நீங்கள் செய்கிறீர்கள். அப்படி நான் சொல்லும்போது, கொளுத்துகிற காரியத்தில் நான் பங்கு ஏற்றுக் கொள்கிறவன் அல்ல நாங்கள் அந்த முறைகளை ஏற்றுக்கொள்பவர்கள் அல்ல என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்வதோடு, தயவு செய்து அருள்கூர்ந்து ஜனநாயக தத்துவத்தை மனதில் வைத்துக்கொண்டு, விஷயம்

என்னவென்று ஆராய்ந்து, பெரியாரை சந்தித்து அவர் மூலம் இந்த நாட்டிலே நன்மை ஏற்பட நீங்கள் வழி செய்து அந்த வகை உங்கள் கௌரவத்திற்கு பாதகம் இல்லை என்று உணரவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இப்பொழுது தேவை சட்டமல்ல, சந்திப்புதான். இப்பொழுது தேவை ஒருவரை ஒருவர் கலந்து பேசுவதே தவிர ஒருவரை ஒருவர் மிரட்டுவதல்ல. இப்பொழுது தேவைப்படுவது அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பேசுவதே தவிர வலுத்தவன் இளைத்தவன் என்று சொல்லி, உள்ளே வைத்து பூட்டுவதல்ல என்று சொல்லிக்கொண்டு இந்த மசோதா தேவையற்றது, தீதானது கொடுங்கோன்மைக்கு வழி தேடுவது என்று சொல்லிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

## தேசிய அவமதிப்பு தடுப்பு மசோதா இறுதி சொற்பொழிவு:—

சட்ட மன்றத் தலைவரவர்களே, இந்த மசோதா சட்டமாவதற்கான கடைசிக் கட்டத்திலும் நான் இதை ஆட்சேபிக்கிறேன் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவசரப்பட்ட நடவடிக்கையிலீடுபட்டு நிலைமையை அலங்கோலமாக்காதீர் என்ற ஒரு வாதத்தை நான் முக்கியமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சரவர்கள் இந்த நேரத்தில் எனக்கும், நான் சார்ந்திருக்கிற கட்சிக்கும் அவராலான சிறு கைங்கரியத்தைச் செய்யலாமென்று எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டதாக அவர் கருதிக்கொண்டிருக்கலாம்.

**நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமண்யம்:—** வெற்றி பெறவில்லை. நீங்கள் இன்னும் பேசிமுடியவில்லையே.

**திரு. சி. என். அண்ணாதுரை:—** என்றாலும் அதிலே சில கொள்கைப் பிரச்னைகள் வெளியிடப்பட்ட காரணத்தால், அது பற்றிமட்டும் நான் சில வார்த்தைகளைப் பேச கடமைப்பட்டிருக்கின்றேன். திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் வெவ்வேறாகப் பிரிந்திருந்தாலும், இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திரை கிழிக்கப்பட்டுவிட்டது. அவர்களுடைய உண்மை சுவரூபத்தை நாங்கள் கண்டுவிட்டோமென்று நிதி அமைச்சரவர்கள் கூறினார்கள். எங்கள் சுவரூபத்தை நாங்கள் அவ்வளவு சுலபமாக காட்டிவிடமாட்டோம். நிதி அமைச்சரவர்கள் உண்மையிலேயே எங்கள் சுவரூபத்தைக் கண்டுபிடித்ததாகயிருந்தாலும், அவரே திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கையில் வேறுபாடு யிருப்பதை, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகிற 'நம் நாடு' பத்திரிகையிலும், நான் எழுதுகின்ற எழுத்துக்களிலும் குறை காணுவதற்கு எதுவுமில்லையென்று எடுத்துச் சொன்னதிலிருந்து, நாங்கள் ஒப்புக்கொள்ளத்தக்க கொள்கைகளுடன் நல்ல முறையில்..............



**நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமண்யம்:—** குறைகாணுவதற்கில்லை என்பதில்லை. சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு அதிலே இடமில்லை.

**திரு. சி. என். அண்ணாதுரை:—** சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு அதில் இடமில்லை யென்று சொல்கிறார்கள்: அது என்னுடைய வாதத்திற்கு வலுவளிப்பதுதான். ஆகையால் "சட்டபூர்வமான முறையிலே இவைகளை எடுத்துச் சொல்வது என்பது திராவிட முன்னேற்றக் கட்சியின் கொள்கை, சட்டத்திற்கு விரோதமான முறையில் சட்டத்தைப்பற்றிக் கவலைப்படாமல் சொல்வது திராவிடக் கட்சியின் கொள்கை"- என நிதி அமைச்சரவர்கள் கருதுகிறார். இது ஒன்றைப் பார்த்தாலும் திராவிட முன்னேற்றக் கட்சியினருக்கும், திராவிடக் கட்சியினருக்குமுள்ள மாறுபாடு தெரியும். முரண்பாடு என்பதும், மாறுபாடு என்பதும் வேறுபாடு என்பதும் தமிழில் ஒரே பொருளைக் குறிக்கின்ற சொல்லாகப் பொதுவாகப் பார்க்குமிடத்துத் தோன்றினாலும் ஆழ்ந்து கருத்துக்களை ஆராயமுற்படும்போது இவை ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமுண்டு என்பதை நான் குறிப்பிட வேண்டுமென்பதில்லை. கனம் நிதி அமைச்சரவர்களே உணர்ந்திருப்பார்களென்று நம்புகிறேன். ஆனாலும் அவர்கள் இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கட்சியைப்பற்றி ஏதாவது பேசவேண்டுமென்று கருதியது, ஆளுகின்ற கட்சி எங்களுக்குக் கொடுத்த கௌரவமாகவே நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மற்றொன்று சட்ட மன்றப் பிரச்னைகளைப் பார்க்கும்போது— குழந்தைகள் பயங்கரமான வஸ்துக்களைப் பார்க்கும்போது பயத்தால் இறுகக் கண்ணை மூடிக்கொள்ளுமே—அப்படி நாங்கள் பயந்து கண்ணை மூடிக்கொள்கிறோமென்று சொன்னார்கள். உண்மையில் நாங்கள் குழந்தைகள் நீங்கள் ரொம்ப பயம் காட்டுகிறீர்கள். இந்த இரண்டும் நீங்கள் சொல்கிற வாதத்தில் தெரிகிறது.

பயந்து ஓடிவிடுகிறோமென்று சொல்வது—கண்ணை மூடிக்கொள்கிறோமென்று சொல்வது கோழைத்தனம் என்கிற நினைப்பில் சொல்லிவிட்டுச் சிரித்துக்கொள்கிறார்களோ என்னவோ? ஆனால் ஆங்கிலத்தில் சொல்வார்களே ஓடுவதற்கு இரண்டு வார்த்தைகள் 'ப்ருடென்ஸ்' (Prudence) 'கவர்டிஸ்' (Cowardice) என்று இரண்டுக்கும் பொருள் கனம் நிதி அமைச்சரவர்களுக்குத் தெரியாமலிருக்காது. சபையிலிருந்து நாங்கள் ஓடிவிடுகிறோமென்று சொல்வது உண்மையானாலும் கோழைத்தனத்தாலல்ல. இருப்பது முறையாகாது என்று எழுந்து போயிருக்கலாம். இன்னொன்றும் தங்கள் மூலமாக நிதி அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பயத்தால் கண்ணை மூடிக்கொள்வது ஒன்று, ஒன்றைப் பார்க்க அறுவறுப்படைகிற நேரத்திலும் கண்ணைமூடிக் கொள்வதுண்டு. அப்படி சில சமயங்களில் ஒரு செயலைப் பார்க்க அறுவறுப்படைந்து நாங்கள் கண்ணை மூடிக்கொண்டிருக்கலாம். கண்ணை மூடிக்கொள்வது கோழைத்தனத்தாலல்ல என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மற்றொன்று திரு. கல்யாண சுந்தரமவர்கள் பேசும்போது பகுத்தறிவு என்று குறுக்கு வழியில் போகக்கூடாது என்றார்கள், குறுக்கு வழியில் போவதை மாற்றுவதுதான் பகுத்தறிவு என்பதை, அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பாரேயானால் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்கள். பகுத்தறிவு என்று சொல்லிக்கொண்டு—புராணங்களில், இதிகாசங்களில் நம்பிக்கையில்லாவிட்டாலென்ன? அவற்றை ஏன் கொளுத்த வேண்டும், ஏன் குறுக்கு வழியில் போக வேண்டும்?—குறுக்கு வழியில் போவதை அனுமதிக்கக் கூடாது என்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன், நம் முன்னால் மாகாணத்திலேயே மிகவும் செல்வாக்குடையவராக இருக்கக்கூடிய ஒரு தலைவர்' 'எதைக் கொளுத்துவேன்'' என்று சொல்கிறாரோ அதைக் குறுக்கு வழி என்று சொல்வது எவ்வளவுபொறுத்தமற்றது என்பதைக் காட்ட ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

வெகுகாலத்திற்கு முன்னாலேயே மார்டின் லூதர் என்பவர்—கிறிஸ்துவ உலகம் முழுவதும் மிகவும் புனிதமானது என்று கருதுகிற பைபிள் லதீன் மொழியிலிருப்பது கூடாது. போப்பாண்டவர் ஆதிக்கமேற்பட்டு விடுகிறது என்ற ஒரு காரணத்திற்காக பகிரங்கமாக ஐரோப்பா கண்டத்திலே கொளுத்தியிருக்கிறார்களென்



பதைக் கூறுவேன், நண்பர் திரு. கல்யாண சுந்தரம் அடிக்கடி ஐரோப்பா போவதனால் ஓய்வு நேரத்தில் இதைப்பற்றியும் அங்கிருந்து தெரிந்துகொண்டு வரவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே இன்றைக்கு அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது என்பது முரண்பட்ட செய்கையோ, குறுக்குவழியான செய்கையோ என்று நினைக்க முடியாது. ஆனால் போலீஸ் அமைச்சரவர்கள் சொன்னதுபோல சமுதாயத்தில் கலவரம் ஏற்படக்கூடும் என்கிற வாதத்தை நான் உண்மையில் உணருகிறேன். அதைத் தடுப்பதற்கு வேறு வழிகள் சாத்தியமானால் சட்டம் வேண்டாம். முடிவான ஒரு சட்டத்தைப் போடுவது மேலும் அவர்களை அந்தக் காரியத்தைச் செய்யும்படி தூண்டச் செய்வதாகவே ஆகும் என்பதற்காகவே முன்பு சொன்னேன்.

எங்களுக்கும் திராவிடக் கழகத்திற்கும் உள்ள முறைகளில் வித்தியாசமிருக்கிறது என்பதை பார்ப்பனர்களை நாங்கள் எந்த வகையில் நடத்துகிறோம், திராவிடக் கழகம் எந்த வகையில் நடத்துகிறது என்பதைக் கவனித்துப் பார்த்திருந்தால் நிதி அமைச்சரவர்களுக்கே தெரிந்திருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் பார்ப்பனர்கள் உறுப்பினர்களாக யிருக்கிறார்கள். பார்ப்பனர்களாலேயேதான் பார்ப்பனியம் அழிக்கப்பட வேண்டுமென்பதை நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறோம். இதற்கு கொஞ்ச காலதாமதம் பிடிக்குமென்றாலும் கூட இந்த வழிதான் உறுதியானதென எண்ணிக்கொண்டிருக்கிறோம். கால தாமதமானாலும் நாகரீகமான முறையில் பார்ப்பனியத்தை ஒழிக்க திராவிட முன்னேற்ற கழகம் உழைக்கிறது. இதே விஷயத்தை வேறு வகையில் தீவிரமாக—கால தாமதமின்றி நிறைவேற்றிவிடத் திராவிடக் கழகம் துடிக்கிறது, அதனாலேயே "இந்த இரண்டு கட்சியும் ஒன்றுதான்" என நிதி அமைச்சரவர்கள் சொல்லி, அதனால் அவரடைகின்ற லாபம் என்னவோ தெரியவில்லை, இதனால் ஒரு சில பிராமணர்களும் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாக யில்லாமல் செய்துவிடுகிற லாபத்தை அவரடைந்தாலும் நான் கவலைப் படவில்லை. ஆனால் எங்கள் கட்சியின் கொள்கையைப் பற்றித் தெளிவாகச் சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால் அதைச் சொல்கிறேன்.

சேரியை ஒழிக்க வேண்டுமென்பதற்காக சேரிகளையெல்லாம் கொழுத்திவிட முடியுமா என்கிற வாதத்தை நிதி அமைச்சரவர்கள் எழுப்பினார்கள், அப்படி அவர் கேட்கின்ற நேரத்தில்—ஒரு பெரும் வழக்கறிஞராக கோவையில் அவர் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் இந்த மாதிரியான கேள்விகள் எத்தனைபோட்டு எதிர்க் கட்சியைத் திணரடித்திருப்பாரோ யென்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன்.

சேரியை ஒழிக்க வேண்டுமென்பதற்காக நகரசபை அதிகாரிகள் இந்த இடத்திலே சேரியிருக்கக் கூடாது என்று உத்தரவு போடுகிறார்கள், அதை மீறி மறுபடியும் அந்த இடத்தில் சேரி ஏற்படுமானால் — குடிசைகள் போடப்படுமானால் — அவர்கள் அந்தக் குடிசைகளை பிரித்துத்தான் போடுகிறார்கள், கொளுத்தி விட்டுப் போகிறார்கள்.

செத்த பிணம் நாறிக் கிடக்கிறதென்றால் அதை எடுத்துப் புதைக்கத்தான் வேண்டும் இல்லையானால் கொளுத்தவேண்டும். அதை எரிக்காமல் வைத்துக்கொண்டிருக்க முடியாது. யாரும் வைத்துக்கொண்டிருக்கவும் மாட்டார்கள், ஆகவே கொளுத்துவதாவது என்கிற வாதத்தை எடுத்துச்சொல்லிப்பயனில்லை என்று அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்

கடைசியாக ஒரு விஷயம், "திரு. காமராஜரும், பெரியாரும் சந்திக்கவேண்டும்; அவர்கள் இரண்டுபேரும்தான் பரஸ்பரம் நண்பர்கள் ஆயிற்றே" என்று நான் சொன்னதற்கு போலீஸ் அமைச்சரவர்கள்—சங்ககாலத்து இலக்கியத்தில் ஒருதலைக்காதல் என்பார்களே அப்படி—பெரியாருக்கும் காமராஜரிடத்தில் அதிகமான காதல் இருக்கலாம். ஆனால் காமராஜருக்கு அவரிடத்தில் காதல் இல்லை என்று சொன்னார்கள். சங்க காலத்தில் தூதன், பாகன், பாணன்போல இவர் இங்கே பேசியது பொருந்தாது. ஒருக்கால் காமராஜருக்கும் பெரியாருக்கும், பெரியாருக்கும் காமராஜருக்கும் எப்படிப்பட்ட காதல் உண்டு என்பதை இடையேயிருந்து அவர் நன்றாக உணர்ந்திருக்கலாம். எந்த அளவிற்கு அவ்விஷயம் இவருக்குத் தெரியும் என்பது எனக்குப் புரியாது.

உண்மையிலேயே பெரியாருடைய காதல் ஒருதலைப்பட்சமானதாக யிருந்தாலும், காமராஜருக்கு அவரிடத்தில் காதல் இல்லையென்றாலும், காமராஜர் சென்று சந்திக்கக்கூடிய அளவுக்கு, மக்களிடத்திலே அதிக செல்வாக்கைப் படைத்த ஒரு தலைவர் பெரியார் என்பதை இவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர் திடீரென்று ஆப்பிரிக்கா நாட்டிலிருந்து நேற்று காலை நம் ராஜ்யத்திற்கு வந்தவரல்ல. லண்டன் நாட்டவர் போகும்போது நம்மிடத்திலே விட்டுவிட்டுச் சென்றுவிட்ட விசித்திர பிறவியுமல்ல. நெடுங்காலத்திற்கு முன்னாலிருந்தே இந்த நாட்டுக்கு இடைவிடாமல் உழைத்து வருபவர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகவும்; தலைவராகவும் இருந்து பணியாற்றியவர். காங்கிரஸ் மூலமாக சில கொள்கைகள் நிறைவேறாது என்ற காரணத்தினால் அதை விட்டு வெளியேறியவர். இருந்தாலும் இன்றைய நிலையில் காங்கிரஸ்தான் பதவியிலிருக்கவேண்டும் என்பதற்காக பொதுத் தேர்தலின்போது உங்களுக்காக இடைவிடாமல் உழைத்தவர். தகப்பனிடத்தில் பிள்ளை போவது—எத்தனை மனஸ்தாபமாக இருந்தாலும் அதுதான் சரியென்பதுபோல காமராஜருக்கு பெரியாரிடத்தில் காதல் இல்லையென்றாலும்கூட—பெரியார் தங்களுடைய மாஜி தலைவர்—மாஜி தோழர் என்கிற முறையிலாவது அவரை அணுகுவது சரியான கொள்கைதான் என்று நான் கருதுகிறேன். தன்னுடைய மாஜி தலைவர், மாஜி தோழர் இவரைப்பற்றி சபையில் யாராவது ஏதாவது சொன்னால் மனம் புண்படுமே என்பதுபோலத்தான்' இன்றைக்கு சபையில் காமராஜர் இல்லையென்று கருதுகிறேன். கனம் நிதி அமைச்சர் என்னைப்பற்றி சொன்னதுபோல் அவர் ஓடிவிட்டாரென்று சொல்லமாட்டேன். நாகரீகமான பாஷையில் ஒளிந்துகொண்டார் என்று கருதலாம். "தான் இவ்விடத்திலிருந்து துக்கப்படாமல் வேறு இடத்திலிருந்து மனதிற்கு சாந்தி ஏற்படுத்திக் கொள்கிறார் என்று கருதுகிறேன்.

ஆனாலும் போலீஸ் அமைச்சர் அவர்கள் பேசும்போது "காமராஜர் போய் சந்திப்பதைக் காட்டிலும் நீங்களே போய் சந்திக்கலாமே. தந்தையும் மகனும் பிரிந்திருந்தாலும் இந்தக் காரணத்தினால் சந்திப்பது மிகவும் பொருத்தமாயிற்றே" என்று குறிப்பிட்டார்கள். பிரிந்துவிட்டதனால் இழந்துவிட்ட லாபத்தை திரும்பவும் சந்தித்து ஒட்டிக்கொள்வதின் மூலம் பெற்றுவிடலாமென்று சொன்னார்கள், அவர்களுடையநல்லெண்ணத்தைத் துணைகொண்டு நான் அவரை சந்தித்துப் பார்க்கிறேன். ஆனால் அதுவரையில் இந்த சட்டத்தை நிறுத்தி வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அவரைப் போய்

சந்திப்பது தூது ஆகாது. இந்தக் குற்றத்தைச் செய்தால் இத்தனை வருடம் சிறை தண்டனை கிடைக்கும் என்பதை அவரிடத்தில் சென்று சொல்லும் அறிவிப்பாகத்தானிருக்கும். அதைப் போய் நான் சொல்லவேண்டாம். பத்திரிகை வாயிலாக அவரே பார்த்துக் கொள்வார் உண்மையில் நான் அவரைப் போய் இந்தக் காரணமாக சந்திப்பதனால் லாபம் ஏற்படுமென்றால், திரும்பவும் நாங்கள் அவரோடு ஒட்டிக் கொள்ள முடியும் என்றால் மகன் தந்தை செய்ததை மறந்து திரும்பவும் அவரிடத்தில் சென்று ஒட்டிக் கொள்வது குற்றங்களில் ஒன்றல்ல. குணங்களில் ஒன்று என்பதை நிதி அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர் உதாசினப் படுத்தினாலும் நான் சென்று பேசுகிறேன். அதுவரையில் இந்தச் சட்டத்தை நிறுத்தி வையுங்கள். சட்டத்தை நிறைவேற்றி விட்டு நான் போய் பேசினால் அவர் என்ன சொல்வார் என்பது எனக்குத் தெரியும். "எனக்கு எண்பது வயதாகிவிட்டது. மூன்று வருடம் சிறையில் கிடந்தால் என்ன? எனக்காக யாரும் துக்கப்பட வேண்டாம்" எனத்தான் சொல்வார் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் இந்த நேரத்திலும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "இப்போது வேண்டியது சந்திப்பு, சந்திப்பு தேவையே தவிர சட்டம் தேவை இல்லை"—என்று கடைசியாகவும் வலியுறுத்திக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* * *

**11—3—1958] [செவ்வாய்க்கிழமை**

**(ஆட்சி மொழிப் பிரச்னையைப் பற்றி எழுந்த விவாதத்தில் நிகழ்த்திய கருத்துரை....)**

முற்பகல் 10-40

சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, மொழிப் பிரச்னை சம்பந்தமாக கருத்துரை வழங்குவதில் நல்ல சூடு பிடித்திருக்கிறது. என்பதனை எங்களுடைய தரப்பிலிருக்கின்ற கனம் அன்பழகன் அவர்கள் இந்த சட்ட மன்றத்தின் முன்னால் எடுத்துரைத்தார்கள். நான் இந்தப் பிரச்னையைப் பற்றி முற்றிலும் வேறொரு கோணத்திலிருந்து கவனிக்க விரும்புகிறேன் மொழிப் பிரச்னையில் நாம் இன்றைய தினம் எடுக்கின்ற முடிவுகள் நம்மை மட்டும் கட்டுப் படுத்துமென்று இருக்குமானால் நாம் அவரவர்களுக்கு இருக்கின்ற விருப்பு வெருப்புகளை முக்கியமாக கருதி ஒரு முடிவினை அவசரப்பட்டு ஆர்வத்தின் காரணமாக



எடுத்து விடலாம். ஆனால் நாம் எடுக்கக்கூடிய முடிவுகள் நம்மை
மட்டுமல்லாமல் நம்முடைய பிற்கால சந்ததிகளைப் பெரும் அள
வுக்குக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஒரு பெறும்
பொறுப்பை ஏற்கின்ற நேரத்தில் எல்லையில் ஆர்வம் நம்மிடத்தில்
இருக்கிறது என்பதால் எழுகிற ஆணவமோ, அல்லது எல்லோரை
ரையும் கட்டுப்படுத்தக் கூடிய எண்ணம் பெற்றிருக்கின்றோம்
என்ற அரசியல் உணர்வோ மேலிடுவதை விட்டு விட்டு, நாம்
செய்யக்கூடிய காரியம் பிற்கால சந்ததியார்களைப் பாதிக்கக் கூடும்
என்ற காரணத்தினால் நாம் மிகுந்த ஜாக்கிரதையோடு இந்தப்
பிரச்னையை அணுக வேண்டியிருக்கிறது. ஆதலால் தான் என்று
கருதுகிறேன் இந்த ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்றவர்கள் இந்தப்
பிரச்னையில் ஒருகோடியில் சின்னதுரைகளைப் பார்க்கிறார்கள். இன்
னொரு கோடியில் அண்ணாதுரைகளைப் பார்க்கிறார்கள் (சிரிப்பு).
இரண்டு முனைகளுக்கு மிடையிலிருக்கின்றவர்கள், ஆட்சியாளர்
கள், கனம் சின்னத்துரை அவர்கள் சொல்கிறபடி இந்தி மக்களு
டைய மொழி என்று ஏற்றுக்கொள்வதில் தயக்கமடைகிறார்கள்.
அதே நேரத்தில் அண்ணாதுரை சொல்கிறபடி "ஆங்கிலம் இருக்
கட்டும், இந்தி தேவையில்லை" என்பதை ஏற்றுக்கொள்வதற்கும்
தயக்கமடைகிறார்கள், இந்த இரண்டுக்கும் இடையிலே ஏதாவது
ஒரு நல்ல வழி கண்டுபிடிக்க முயலுகிறார்கள். இந்த நல்லெண்
ணத்தைப் பாராட்டுகிறேன் வரவேற்கிறேன். இந்த நல்லெண்
ணத்தை இந்திய துணைக் கண்டத்தில் வேறு எந்த ராஜ்யத்திலும்
நாம் பார்க்கவில்லை என்று பெருமையுடன் சொல்லிக் கொள்
கிறேன். அப்படிப் பெருமையுடன் சொல்லக் கூடிய நேரத்தில்,
இந்த பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க நல்லவழி கண்டுபிடிக்க
வேண்டுமென்று நல்ல முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அந்த
முயற்சியில் எல்லா கட்சிகளிலும் உள்ளவர்கள் தத்தமது கருத்து
களை எடுத்துச் சொல்லவேண்டுமென்று மெத்த பரிவோடு விரும்
பினார்கள். அவரவர்கள் தத்தமது கருத்துகளை எடுத்துச் சொன்
னார்கள் ஆனால் இதற்கிடையிலே நாட்டிலே முளைத்துவிட்ட
சில பிரச்னைகள ஒவ்வொருவரும் தத்தமது கருத்தை, நாட்டுக்கு
விளக்கி கூற வேண்டிய நிர்ப்பந்தத்தில் கொண்டுவந்து வைத்
திருக்கிறது. அதே நேரத்தில் எதிர் கட்சித் தலைவர் வி. கே. ராம
சாமி முதலியார் அவர்கள் "மொழிக் கமிட்டியில் உட்கார்ந்து
விட்டு, மற்றொரு கூட்டத்திற்குச் சென்று, இரண்டுக்குமிடையே
இருக்கின்று கருத்தைப் பற்றி வேறு விதமாகச் சொல்லக்கூடும்,
அதிலும் குறிப்பாக என்னைப் போன்றவர்கள் சொல்லக்கூடும்"

என்று குறிப்பிட்டார்கள். என்னை வருந்தி வருந்தி அழைத்தார்கள், நான் சென்றேன், அந்த மொழிக் கமிட்டியில் பேசியதை அங்கே மறுக்கவில்லை என்று சொன்னவர்கள், ஒன்றே ஒன்று சொன்னார்கள் 344-வது பிரிவை மாற்றம் செய்யவேண்டுமென்று சொன்னேனென்று சொன்னார்கள். யார்யாரை அழைத்தாலும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டுமென்று எண்ணுவது மனித சுபாவம். அந்த மனித சுபாவத்தின்படி விட்டுக் கொடுக்கக் கூடிய பிரச்னைகளில், திராவிட முன்னேற்றக் கழகம் விட்டுக் கொடுத்து உண்மையில் பிரச்னைகளைத் தீர்க்க முயலும். அந்த விதத்தில் இந்தப் பிரச்னை நம்மைக் கட்டுப் படுத்துவதோடல்லாமல், எதிர்கால சந்ததியார்களின் வாழ்வையும் கூடக் கட்டுப் படுத்துவதால் சில அடிப்படை உண்மைகளை கசப்பாயிருந்தாலும் கூட ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த நாட்டில்—இந்த நாடு என்று குறிப்பிடும்போது நம்முடைய மாநிலத்தை மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால்—இப்போது ஒரு பழைய தலைமுறை வேகமாக மறைந்து விடுகிறது, ஒரு புதிய தலைமுறை வேகமாக எழுந்து வருகிறது—இந்த இரண்டிற்குமிடையில் நாம் வாழ்ந்து வருகின்றோம். பழைய தலைமுறை இந்தியா, இந்திய துணைக் கண்டம், இந்தியர், இந்தி என்றும், இந்தியா விடுதலை பெற்றதால் இந்திதான் தேசியமொழி என்று ஆழ்ந்த நம்பிக்கையோடு கருதுகின்ற ஒரு தலைமுறை இனி வரவிருக்கின்ற தலைமுறையில், இந்தியா என்பது உண்மையில் ஒரு கற்பனை என்று கருத்துக்கொண்டிருக்கிற நாங்கள் வெற்றிபெறக் கூடுமானால், இந்தியா என்பது ஒரு துணைக் கண்டமாக ஆக்கப் பட்டு பல மாநிலங்களைக் கொண்டதாகக் கருதி தனி நாடுகளாக ஆகப்போகின்ற அத்தகைய நேரம் வரப்போகிறது—இந்தியா, இந்தியர், இந்தி என்று நண்பர் சின்னத்துரை அவர்கள் கொண்டிருக்கிற மன எழுச்சி அது வெற்றிபெறப் போவதில்லை—அப்படி சின்னத்துரை அவர்கள் வெற்றி பெறுவாரானால் அவருடைய மன எழுச்சி நிரந்தரமானதாக இருக்கும். இந்த இரண்டுக்குமிடையில் நாம் இருக்கிறோம், நாம் இன்றைக்கு பழைய நினைவுகள் ஒருபுரம் இழுக்க மற்றொரு புரத்தில் எதிர்கால சந்ததியார்களின் வாழ்வின் நினைவுகள் இழுக்க, நாம் இக்கட்டான நிலையிலிருக்கின்ற ஒரு தலைமுறை என்று கருதுகின்றேன். ஆகையால்தான் இங்கே செய்யப்போகின்ற தீர்மானம் பழைய காலத்திலிருந்து வந்ததை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது.



உண்மையிலேயே இத் தீர்மானம் எதிர்கால சந்ததியார்களுக்கு கேடு பயப்பதாக இருக்கக்கூடாது ஆகையால்தான் இந்தப் பிரச்னையை உண்மையிலேயே ஒவ்வொருவரும் தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படாமல் அணுகவேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படாமல் பேசவேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் எப்போதும் சாந்தத்தோடும், சமரச நோக்கத்தோடும், கனிவாகப் பேசக்கூடிய நண்பர் சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள், மலையாள நாட்டுக்கு, கன்னட நாட்டுக்குச் சென்றுபாருங்கள், நீங்கள் உயிரோடு திரும்பிவரமாட்டீர்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, அவரே பேசியிருக்கிறாரென்றால்—இந்தப் பிரச்னை விருப்பு வெறுப்புகளை எவ்வளவு தூரத்திற்குக் கிளப்பி விட்டிருக்கின்றது என்பது நன்றாகத் தெரியும். "இந்தியை எதிர்க்கின்ற இவர்கள், இவர்களுடைய கட்சியைச் சேர்ந்த நெடுஞ்செழியன் அவர்களுடைய துணைவியார், இந்தி வளர்ச்சிக் கமிட்டியில் ஒரு உறுப்பினராக இருந்து வருகிறார்"—என்று கேள்விப்பட்டேனென்று அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்தப் பிரச்னையை ஆராய்ந்து பார்க்கின்ற நேரத்திலே, ஒவ்வொரு கட்சித் தலைவர்களின் மனைவிமார்கள் என்னென்ன செய்கிறார்களென்பதை ஆராயத்தக்க அளவிற்கு விருப்பு வெறுப்புகள் சென்று விட்டன, உண்மையிலேயே அம்மையார் அவர்கள் இந்தி வளர்ச்சிக் கமிட்டியிலே இருப்பதாகச் சொல்லப்பட்டதும், திரு. வேதரத்தினம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக அல்ல, எனக்கே ஏற்பட்ட ஆவலின் காரணத்தால், அதைப்பற்றி விசாரித்தேன், அப்படிப்பட்ட ஓர் கமிட்டியிலே அவர்கள் இல்லை என்று அறிகிறேன், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும். அவருடைய கணவரே சொல்கிறார். விஷயங்கள் இவ்வளவு தூரம் வளருவதற்குக் காரணம் உண்மையிலேயே நாம் எடுத்துக் கொள்கின்ற முயற்சி........

நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் :—அப்படி மனைவி வேறு விதமான கருத்தைக் கொண்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்த சுதந்திரம் உண்டு.

திரு. சி. என். அண்ணாதுரை; அமைச்சரவர்கள் சொல்கின்றபடி கணவன் வைததுக் கொண்டிருக்கக் கூடிய கொள்

கையைவிட மாறுபட்ட கருத்தைக் கொண்ட ஒருவர் துணைவியாக இருப்பது தவறல்ல. இதை முதலில் பேசியவர்கள் உணர்ந்திருந்தால் இதைக் குறித்து பேச்சு வந்திருக்காது. ஆனால் விஷயங்களைப் புரிந்து கொள்ளும் துணைவியாக இருந்தால் நல்லது. நான் குறிப்பிட விரும்பியது என்னவென்றால், அந்தப் பிரச்னையை அணுகுகின்ற நேரத்திலே, "அரண்மனை முதல் அந்தப்புரம் வரை" நுழைந்து பார்க்கிற அளவிற்கு விருப்பு வெறுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான் இன்றைய தினம் கிளம்பியிருக்கிற முக்கியமான கட்டம், சென்னை மாநில சர்க்கார் தயாரித்திருக்கிற அறிக்கையைப் பற்றியதாகும். "ஜெனரல் எக்ரிமென்ட்", அதாவது பொது உடன்பாடு வேண்டுமென்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் அந்தக் கமிட்டியிலே கலந்துகொண்டு, அந்த அறிக்கைக்கு ஒப்பமும் அளித்திருக்கிறேன். ஆனால், அது தவறான முறையில், வியாக்கியானம் செய்யப்பட்டும், தப்பான முறையிலே பயன்படுத்தப்பட்டும் வருவதைப் பார்த்து, என்னுடைய கொள்கையையும், கழகத்துனுடைய கொள்கையையும் விளக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் கழகத்தின் சார்பிலே தரப்பட்டுள்ள திருத்தல்கள், இந்த அறிக்கையை வலியுறுத்துவதற்காகவேயன்றி, வலுவற்றதாக ஆக்குவதற்கல்ல.

சாதாரணமாக ஒரு பிரச்னையை மூன்று வழிகளில் தீர்க்கலாம். இருக்கின்ற முக்கியமான அடிப்படை உண்மைகளை மறந்துவிட்டு, மேலெழுந்தவாரியாக சமரசத்தை ஏற்படுத்தலாம். இன்னொரு சமரசத்துக்காக அடிப்படை உண்மைகளை மாற்றிக்கொள்ளலாம். மேலும் பிரச்னையில் அடிப்படையைப் புரிந்து கொள்ளாமல்கூட சமரசத்திற்கு வரலாம் சமரசம் என்பது முக்கியமானதாக கருதப்படாமல், இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் எண்ணம் மத்திய சர்க்காருக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் கருத்து ஐயம்திரிபுற மத்திய சர்க்காருக்கு அறிவிக்கப்பட வேண்டும், இந்த நாட்டிலே இந்த விஷயத்தில் எல்லோரும் ஒருமித்த கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற 1965-ல் வரயிருக்கிற ஆபத்திலிருந்து, விபத்திலிருந்து, இந்த நாடு காப்பாற்றப்பட ஆங்கிலம் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்திருக்க வேண்டுமென்று இந்த நாட்டிலே ஒருமித்த கருத்து இருக்கிறது. மற்ற விவகாரங்களிலே ஒருமித்த கருத்து இல்லை என்பது மட்டுமல்ல, ஒருமித்த கருத்து இருப்பது



லாபம் இல்லை. நாம் எல்லோரும் சேர்ந்து இந்த அறிக்கையை ஆதரிப்போம் என்று சொல்லுவது சர்க்காருடைய கரங்களை வலுவாக்கும் என்று நான் கருதியதுண்டு 'சர்க்காருடைய கரங்களை வலுவாக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம் என்று நான் அந்தக் கமிட்டியிலே குறிப்பிட்டேன் ஆனால் சர்க்கார் கரத்தை வலுவாக்குவதற்காக அந்தந்தக் கட்சிகள் தங்களுக்கு இருக்கின்ற வலுவை குறைத்துக்கொள்ள வேண்டுமென்பது பொருளல்ல அது மட்டுமல்ல, எல்லாக் கட்சிகளும் இந்த அறிக்கையை ஏகமனதாக ஒத்துக்கொள்வதன் மூலம் மத்திய சர்க்காருடைய பிடிவாதத்தை வடக்கேயிருக்கின்ற இந்தி வெறியர்களின் வெறித்தன்மையை குறைத்துவிட முடியுமா என்பதைப் பார்த்தால் குறைப்பதற்கு வழியில்லை ஒவ்வொரு கட்சிக்காரரும் தத்தமது கருத்தினைக் கொண்டவர்களாக இருந்தபோதிலும், கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தபோதிலும்—இந்தி மட்டும்தான் மக்களுடைய மொழி அதுதான் தேசிய மொழி என்று தீவிரமாக கருதுகின்ற கனம் சின்னத்துரையும், இந்தி தமிழ் நாட்டுக்கு தேசிய மொழியாகாது என்ற கருத்தைக் கொண்ட அண்ணாத்துரையும்—இவர்கள் அத்தனைபேரும் ஒன்றாகச் சேர்ந்து ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டுமென்ற அளவிலே ஒருமைப்பாடு இருக்கிறது. அதிலேதான் ஒருமைப்பாடு இருக்கிறது. மற்றவற்றிலே எங்களுக்கு மாறுபாடு இருக்கிறது. இந்த மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தங்கள் கருத்தினை எடுத்துச் சொல்லும்போது—மாநில சர்க்காரின் கருத்தை மட்டுமல்லாமல் இதனைத் தெளிவாக்கினால், இந்த மாநில மக்களுடைய உண்மையான எண்ணத்தை எடுத்துக் காட்டுவதாகும். பிரச்னையை மூடி மறைப்பதினாலே பயனில்லை, புண்ணை மூடுவதற்காக புனுகு தடவுவதில் பயன் இல்லை இந்தப் பிரச்னையிலே ஐயப்பாடு இருக்கிறதென்பதை மறுத்துப் பயனில்லை. அடிப்படையில் ஐயப்பாடு இருக்கிற காரணத்தினாலேதான் திராவிட முன்னேற்ற கழகம் இன்றையதினம் என்னென்ன சொல்கிறது. என்னென்ன செய்கிறது என்பதை மட்டும் ஆராய்ந்தால் போதாது என்றுகருதி நம்முடைய நிதி அமைச்சரவர்கள் பூர்வோத்திரங்களை ஆராயஆரம்பித்தார். கட்சிக்கொள்கைகளை ஆராயும்போதுபூர்வோத்திரங்களையும் ஆராயவேண்டுமென்கிற அளவிற்கு விருப்பு வெறுப்புகள் இருக்கின்றபோது, இந்தப் பிரச்னையிலே நாம் வெறும் சமரசத்தை மட்டும் மத்திய சர்க்காருக்கு அனுப்பினால் பயனில்லை. இந்த சமரசம் ஏற்றுக்கொள்ளப்படலாமென்று நிதி அமைச்சரவர்கள்

தமது உரையிலே தைரியமாகச் சொல்லியிருக்கிறார். இந்திய துணைக் கண்டத்துக்கே ஒரு வழி காட்டத்தக்க அளவிற்கு சென்னை சர்க்கார் இருக்கிறது. ஆகவே இதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், மத்திய சர்க்கார் மூலமாகவோ, அதற்குப் பின்னர் வரக்கூடிய சர்க்கார் மூலமாகவோ தமிழகத்திற்கு எந்த ஆபத்தும் வராமலிருக்கவேண்டுமானால், அரசியல் சட்டத்திற்கு ஒரு திருத்தம் வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுவேன். மொழிக் கமிஷன்பற்றி நடைபெற்ற அந்தக் கமிட்டியில் சட்டத்தை திருத்தவேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. என்பதை நிதி அமைச்சரவர்கள் நினைவில் வைத்துக்கொள்வார் என்று கருதுகிறேன். அந்தக் கூட்டத்திற்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ ராமமூர்த்தி "It is bad tactics"—என்றுதான் சொன்னார். அது இப்போதைக்கு நடைமுறைக்கு ஏற்றதல்ல, நல்ல "tactics" அல்ல என்று சொன்னார். நான் பேசுகின்றபோது ராமமூர்த்தி "tactics" என்று சொல்கின்றாரே, நாம் நம்பவேண்டியிருக்கிறது என்று சொன்னேன். அப்படி நான் சொன்னது, ராமமூர்த்தி சொன்னதை ஆதரிப்பது யென்று அர்த்தமல்ல, "tactics"—என்பதன் அர்த்தத்தை கம்யூனிஸ்ட் கட்சி நீண்ட நாட்களாக நம்பிக்கொண்டிருக்கிறது என்பதைக் காட்டித்தான் அப்படிச் சொன்னேன். இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தினால், வலுவாக யிருக்குமா, இருக்காதா என்பதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. நான் அதைப்பற்றி இப்போது எடுத்துச் சொல்லப் போவதில்லை. அதற்குப் பிறகு, நடந்திருக்கிற சம்பவங்களை ஆராய்ந்து பார்க்கிற அளவில், எனக்குக் கிடைக்கும் தகவல்களைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கிற அளவில், இப்போது மாநில சர்க்கார் இந்திய அரசியல் சட்டத்தை ஏற்ற முறையில் திருத்தவேண்டும் என்று முயற்சிகள் எடுத்து அதை அறிக்கையில் சேர்ப்பார்கள் என்று நினைக்கிறேன், இந்திய துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலே இதற்கு கணிசமான ஆதரவு கிடைக்கும் என்று துணிவாகக் கூறலாம். வங்காளத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சி பாஞ்சாலத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சி, மராட்டி நாட்டில் ஏற்பட்டிருக்கும் குழுறல்—இவைகளெல்லாம் பிற்போக்குவாதிகளால் செய்கின்ற கிளர்ச்சியென்று சொல்லிவிடுவார்களானால், அவர்களிடமுள்ள அரசியல் அகராதி அந்த ஒரு பதத்தைத்தான் அவர்களுக்குத் தருகிறது என்று சொல்லவேண்டும். உண்மையாக ஆராய்ந்து பார்த்தால், இந்திய அரசியல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு ஒரு "Political climate" அரசியல் சூழ்நிலை சரியானபடி ஏற்பட்டிருக்கிறதென்று நான் கருதுகிறேன். நீடித்திருக்க வேண்டுமென்கிற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். இதை அறிக்கையில் சேர்க்கவேண்டுமென்று எங்கள் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். திருத்தம் தருகிறோம் என்கிறபோது, மொத்தத்தில் திருப்தி ஏற்பட்டுத்தான் தருகிறோம் என்பதைக் கனம் நிதி அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன்.



"தலையைச் சீவிக்கொண்டு வா" என்று சொல்லும் நேரத்தில், கவர்ச்சியாக உள்ள மங்கையைப் பார்த்துதான் சொல்லுவோமே தவிர கவர்ச்சி யற்றவர்களை அல்ல, இவர்கள் தலை சீவாவிட்டால் தான் என்ன என்று சொல்லி விடக்கூடும். இந்த அறிக்கையிலே உயிரோட்டம் இருக்கவேண்டுமானால், நாங்கள் சொல்லுகின்ற திருத்தத்தை சேர்த்துக்கொண்டால்தான் உயிரோட்டம் பெற முடியும். இதில் ஏதோ ஒரு வகையான சமரசத்திற்கு முயற்சி செய்தோமானால் ஒருவருக்கு ஒருவர் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக இருக்குமே ஒழிய இந்த அறிக்கை வலுவிழந்ததாகப் போய்விடும் என்று அஞ்சுகிறேன். ஆகையினால், சென்னை சர்க்கார் கருத்து வெற்றி பெற வேண்டுமானால், இந்திய அரசியல சட்டம் திருத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். அதைத் திருத்துவதற்கு ஏற்ற ஒரு நல்ல சூழ்நிலை இன்றைய தினம் உருவாகிக்கொண்டு வருகிறது. பலருடைய முயற்சியும் இருக்கிறது. அவர்களைப் பற்றி இந்த மாமன்றத்தில் வெகுவாக விவாதிக்கப்பட்டது. அதைப்பற்றி நான் பேசப்போவது இல்லை. எங்களுக்கு தரப்பட்ட அறிவுரைகளைப் பற்றி மட்டும் இரண்டொரு வார்த்தைகளை சொல்ல கடமைப பட்டிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் 'ராஜாஜி ஒரு புளிய மரம், அதன் நிழலில் எதுவும் வளராது" என்று சொன்னார்கள். அதே புளிய மரத்தின் நிழலில்தான் நீங்கள் வளர்ந்திருக்கிறீர்கள். ஆகையால் நாங்கள் மட்டும் வளர மாட்டோம் என்று சொல்வதில் பொருள் இல்லை. எப்படி இருந்தாலும், "புளியமரம், நட்டாற்றில் விட்டு விடுவார்கள்" என்றெல்லாம் இந்தப் பிரச்னையின்போது எடுத்துச் சொன்னார்கள். அவருடைய நேர்மையை ஆராய்வது அவ்வளவு சரியல்ல என்று நான் கருதுகிறேன். அது

மட்டும் அல்ல, நான் ஒன்று தெளிவாகச் சொல்லுவேன். இந்தப் பிரச்னையில் யார் யாரோடு சேர்ந்தாலும், ஒருவரைக்காட்டி ஒருவர் வாழ வேண்டும், பிழைக்கவேண்டும் என்ற கருத்து அல்ல என் பதை தெளிவு படுத்த விரும்புகின்றேன். இந்த வகையிலேதான் ராஜகோபாலாச்சாரி அவர்கள் வங்காளத்திற்குச் சென்று அங்கே ஒரு மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். வடக்கே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு காணக்கோரி அவர் அங்கே போகவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம், அவரு டைய துணையைக்கொண்டு வங்காளத்தில் 4 இடங்களை பெறப் போவது இல்லை. எந்தப் பிரச்னையிலும், இரண்டு பேர் கூடிப் பேசினால், சந்தேகம், சந்தோஷம் இவைகள் ஏற்படுவது சகஜம். ஆனால் இந்தப் பிரச்னையில் அது பொருந்தாது என்பதை சொல் லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காங்கிரஸ் அங்கத்தினர்கள்தான் இதற்கு முன்னதாக அவரு டன் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத்தான் அவரைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அவர் எங்களை ஏமாற்று வார்கள் என்று எங்களுக்கு எச்சரிக்கை விடுவதற்கு நாங்கள் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். அந்த எச்சரிக்கையை எடுத்துக்கொண்டு நாங்களும் ஜாக்கிரதையாகத்தான் இருப் போம். அப்படி இருப்பதற்கும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த பிரச்னை அவ்வளவு முக்கியமானது அல்ல.

ஆளும் கட்சியை ஆதரிக்கிறவர்களாக இருந்தாலும் இந்தப் பிரச்னையில் கருத்தை எடுத்துச் சொல்வது கட்சிக்கு அப்பாற்பட்டது என்பதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னை மட்டும் அல்ல. நான் துவக் கத்தில் சொல்லிய மாதிரி இந்தத் தலைமுறைக்கு மட்டும் ஏற்பட்ட பிரச்னை அல்ல, இது வருங்காலத்தைப் பற்றிய பிரச்னை. வெறும் சமரசம் மட்டும் கண்டால் போதாது. தக்க பாதுகாப்பு இருக்க வேண்டும். இப்பொழுது பாதுகாப்புகள் உண்டாக்கப்படா விட்டால் எதிர்காலத்தில் விபத்துகள், ஆபத்துகள் அடிக்கடி ஏற் படாமல் இருக்க வேண்டுமானால் விபத்துக்களும் ஆபத்துக்களும் வந்தபடி இருக்கும் அவ்வாறு. ஆங்கிலத்தில் "டெமாக்கிள்ஸ் ஸ்வோர்டு" என்று சொல்வது போல் தலைக்கு மேல் ஒரு கத்தி தொங்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் கதைக்கு ஒப்ப நம்முடைய தமிழ் நாட்டில் ஒரு புராண கதை உண்டு. யமதர்ம ராஜா



தவருன நீதி வழங்கும்போது அவன் தலையில் விழுவதற்கு என்று ஒரு பெரிய பாராங்கல் கட்டி தொங்க விடப்பட்டிருக்கும் என்று. இப்படி நம்முடைய புராணத்தில் ஒரு கதை உண்டு. அந்தப் பாராங்கல் இருக்கும் வரையில் அவனுக்கு பயம் இருக்கும், ஆனால் நிதி அமைச்சர் சொல்லுவார், அப்படி இருந்தால் தான் அவர் நீதியாக நடப்பார் என்று. பாராங்கல்லை வைத்து விட்டு நீதி எது என்பதை நிர்ணயிப்பது சரியல்ல. இந்த அரசியல் சட் டத்தைத் திருத்துவதற்கு நம்முடைய மாகாண அரசியலார் முற் பட்டால் அது ஏதோ குற்றம் போலும். அதில் ஏதோ தவறு காண்கிறோம் என்றும் அர்த்தம் இல்லை. திரு. நாகாராஜமணிகார் சொன்னார் "பிரமாணம் எடுத்துக்கொண்ட பிறகு இப்படி செய் வதா" என்று. அப்படிச் சொல்வதில் பிரயோசனம் இல்லை. பிரமாணம் எடுத்துக்கொண்டது உண்மைதான். நம்முடைய அரசியல் சட்டத்தில் குற்றம் குறைகள் இருக்குமானால் அவற் றைத் திருத்துவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகை யினால் அதை திருத்துவதால் எந்த விதமான இழிவும் வராது. அப் படித் திருத்துவதற்கு ஆதரவு கிடைக்கும் என்று எனக்கு பாஞ் சாலத்திலிருந்தும் தகவல் வந்திருக்கிறது. வங்காளத்திலிருந்தும் தகவல் வந்திருக்கிறது. மாராட்டி பிரதேசங்களிலிருந்தும் தகவல் வந்திருக்கிறது. இந்த மூன்று வெளிநாடுகளைத் தவிர வேறு எந்த வெளிநாடுகளுடனும் எனக்குத் தொடர்பு இல்லை என்று நான் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படி அங்கிருந்து கிடைக்கும் தகவலிலிருந்து நமக்கு ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்; அந்த எல்லையைத் தாண்டி அதற்கு மேற்கே போய்க்கொண்டிருக்கிறீர்களோ என்று நான் சந்தேகப்பட்டேன்.

திரு. சி. என். அண்ணுதுரை: ஆகையினுல் நான் இந்த அறிக்கையின் மூலமாக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கிற பகுதியை மிக மிக நம்பிக்கையுடன் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடிப்படைப் பிரச்னையைப்பற்றி இங்கே விவாதிக்கப்பட் டது, அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பூர்வோத்தரத்தைப்பற்றி அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியது

தேவை இல்லை என்றும் கருதுகிறேன். மற்றப்படி இதற்குப் பிறகு வரப்போகிற விவாதங்களில் இதைப்பற்றி எடுத்துக் கொள்ளலாம் என்று நான் நினைத்து இத்துடன் விட்டு விடுகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் பணிவுடன் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வரலாற்றில் ஆறுவது பக்கத்தில் ஒரு பொருள் கிடைக்கும், பதினாறுவது பக்கத்தைப் பார்த்தால் மற்றொரு பொருள் கிடைக்கும். 1924-ம் ஆண்டில் சுயமரியாதை இயக்கம் துவங்க பொறுப்பாளியாக இருந்த பெரியார் ராமசாமி நிறைவேற்றிய தீர்மானத்திற்கு நான் ஒப்புதல் அளித்ததாக கருதிக்கொண்டு என்னை இணைத்துப் பேசினார்கள். எனக்கு இப்பொழுது வயது 48. 1924-ம் ஆண்டில், அந்தக் காலத்து சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு கட்சியினுடைய தீர்மானத்தை உருவாக்கும் தன்மையோ உருவாக்கும் பொறுப்போ எனக்கு இருந்திருக்கும் என்று நமது நிதி அமைச்சர் எதிர்பார்க்கமாட்டார். அந்த வரலாற்றை அத்துடன் நிறுத்தி விடுவானேன் என்று கனம் நிதி அமைச்சரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். 1924-க்கு மேல் இதே பெரியார் ராமசாமி உங்களுடன் இருந்து வைக்கம் சத்யாக்ரகம் நடத்தி சிறைச்சாலைக்குச் சென்று, காந்தியாருடன் துணைவராக இருந்து, முதல் அமைச்சர் காமராசர் அவர்களே காங்கிரஸ் தொண்டராக உடன் வரக்கூடிய பெருமையையும் பெற்றார். இதைப் பார்க்கும்போது, எங்களுடைய வரலாறு அவ்வளவு கேவலமானது அல்ல என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன்.

இவைகளையெல்லாம் எடுத்துப் பேசுவதற்குக் காரணம் என்னவென்றால் பல பிரச்னைகளில் நாம் விருப்பு, வெறுப்பு, உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். விருப்பு, வெறுப்புக்கு ஆளாகாதவன் மனித குலத்திலிருந்து மாறுபடக்கூடும். பலர் விருப்பு, வெறுப்புக்கு ஆளாகிறார்கள். அப்படி ஆளாகும் நேரத்தில் கொஞ்சம் நமக்குள்ளேயே கட்டு திட்டங்களை உள்ளத்தில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

எதிர் தரப்பில் இருக்கிறவர்களை கேவலமாகப் பேசுவது அப்படி கேவலமாக பேசுகிறவர்களுடைய உள்ளத்துக்கு ஆனந்தம் ஏற்படுவது இயற்கை. உடலில் சிரங்கு இருக்கிறது. அதற்கு மருந்து போடுவதற்கு முன்னால் அதைச் சொரிந்து கொண்டிருந்தால் ரத்தம் வரும் வரையில் ஆனந்தமாகத்தான் இருக்கும். அது



போல நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால்
பேசியபோது ரொம்பவும் சொரிந்துகொண்டார். ரத்தம் வந்தவு
டன் எரிச்சல் ஏற்பட்டிருக்கிறது. அவர் எடுத்துப் பேசிய பல
விவரங்களை யோசித்துப் பார்த்தால் மன எரிச்சலை ஏற்படுத்த பயன்
பட்டதே தவிர ஒளியைத்தர பயன்பட்டிருக்காது என்பதை பணி
வன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஒத்துழைக்க வேண்டும், எல்லோரையும் சுமுகமாக
நடத்திச் செல்ல வேண்டுமென்று பேசுகின்ற நீங்கள் உண்மையி
லேயே எதிர்தரப்பிலுள்ளவர்கள் சில குறிப்பிட்ட அடிப்படைக்
கொள்கைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதை உணர்ந்துதான்
பிரச்னைகளைப் பார்க்கவேண்டும். இரண்டு தடவைகள் இதே
சட்ட மன்றத்தில் எங்களை கேவலமாகப் பேசியதால், இத்தனை
ஆண்டுகளாக நாங்கள் சேர்த்து வைத்திருக்கும் உணர்ச்சிகள்
அழிந்துவிடும் என்று நீங்கள் நம்பவேண்டாம். அப்படி கேவல
மாகப் பேசுவதால் நாங்கள் எங்கள் கொள்கைகளை விட்டுவிட்டு
ஓடிவிடுவோம் என்று கருதத்தக்க பலஹீனர்கள் அல்ல நாங்கள்.
நாங்கள் பலஹீனர்கள் அல்ல என்பது மட்டுமல்ல, நாங்கள் வைத்
துக் கொண்டிருக்கின்ற கொள்கைகளும் பலஹீனமான கொள்
கைகள் அல்ல என்பதை நாங்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துச்
சொல்ல கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையிலே, எதிர்கால சந்ததி
களைக் கட்டுப்படுத்தக் கூடிய மிக முக்கியமான முடிவில் அவசரப்
பட்டு ஏதோ சமரசம் காணவேண்டும் என்பதில் நாட்டம் வைக்
காமல், இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கான எங்களு
டைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இந்திய அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட நேரத்
தில் அது எவ்வளவு அவசரமாக ஆக்கப்பட்டது என்பதனை உணர
வேண்டும். அவ்வாறு யார் மூலமாக உணர்ந்திருக்கிறோமென்றால்,
இந்திய அரசியல் சட்ட நிபுணர்களாக இருந்தவர்கள். அரசியல்
சட்டம் ஆக்கப்படும் பொழுது உடன் இருந்தவர்கள் இவர்க
ளெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன
கருத்துக்களிலிருந்து நாங்கள் அதைத் தெரிந்துக்கொண்டிருக்கி
றோம். அன்றையத் தினம், வெள்ளைக்கார ஆட்சி நீங்கி இந்த
நாட்டிற்கு சுய ஆட்சி கிடைத்த நேரத்தில், வெள்ளைக்காரர்
போய்விட்டார்கள் என்ற இயற்கை சந்தோஷத்தில், எதிர்காலத்

தில் ஆட்சி எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து, ஒருவருக்கொருவர் எதை வேண்டுமானாலும் பரிமாறிக்கொள்ளலாம் என்ற ஆனந்தத்தில் செய்துகொண்ட காரியம் இது. ஹோலிபண்டிகையன்று வேடிக்கையாக ஒருவருக்கொருவர்மீது வண்ணச் சாயத்தை வீசிக் கொள்ளுவதுபோல, ஒருவர்க்கொருவர்மீது வாதங்கள் ஆனந்தமாக வீசிக்கொள்ளப் பட்டன. ஆர அமர ஆராய்ந்து இது செய்யப்படவில்லை என்று அரசியல் சட்டத்தை ஆராய்ந்திருக்கும் பெரிய அரசியல் சட்ட நிபுணர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஸிலோன் நாட்டிலிருக்கிற அரசியல் நிபுணர், நீதித்துறை தலைவர், அரசியல் அறிவாளி ஐவர்ஜென்னிங்ஸ் (Ivor Jennings) அவர்கள் இந்திய அரசியல் சட்டம் மிக அவசரமாக ஆக்கப்பட்டது என்றும், மிக அதிகமான அளவு கூட்டப்பட்டது என்றும் கூறியிருக்கிறார். பொதுவாக அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்யவேண்டியது ஏராளமாக இருக்கின்றன என்ற கருத்து மேலோங்கி இருக்கின்ற நேரத்திலே, மொழிப் பிரச்னை சம்பந்தப்பட்ட வரையில் இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்துகொள்வதுதான் உண்மையிலேயே நமக்கும் எதிர்காலத்திற்கும் நல்லது நல்ல பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும். அந்தப் பாதுகாப்பைப் பெறுவதற்காகத்தான் இந்த அறிக்கையிலே எங்களுடைய திருத்தத்தை இணைத்துக் கொள்ளுவது பொருத்தம் என்பதை நான் நிதி அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சின்னதுரை அவர்கள் இந்திதான் மக்களுடைய மொழி என்று வலியுறுத்தினார்கள், அவர் காட்டிய மன எழுச்சியை அருள் கூர்ந்து நோக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கொண்டிருக்கும் கருத்தை தெளிவாக துணிவுடன் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கொண்டிருக்கும் கருத்தை நான் குறை சொல்லவில்லை. அவருக்கு ஏற்பட்ட துணிவையும், தெளிவையும் நான் பாராட்டுகிறேன், வரவேற்கின்றேன். இந்திதான் மக்கள் மொழி என்று தமிழகத்தில், இந்த மாநிலத்தில், இந்த ஆட்சி மன்றத்தில், இன்றைய தினம் சொல்லுவதற்கு சின்னதுரை அவர்கள் எந்த அளவுக்கு விருப்பப்படுகிறார்களோ, அதே போல் இந்தியத் துணைக்கண்டத்திலே, இந்த அறிக்கையோடு இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கான திருத்தம் இணைக்கப்படாமல் இருந்தால், இந்தி தான் மக்கள் மொழி என்று சொல்



லுவதற்கு 1,000 சின்னதுரைகள் முன்வரக்கூடும் லட்சக்கணக்கான பேர்கள் முன்வரக்கூடும். இந்திதான் மக்கள் மொழி என்று வலியுறுத்தக்கூடும். இந்திதான் மக்களுடைய மொழி என்று வலியுறுத்தப்பட்டால், எது மக்களுடைய மொழி என்ற பிரச்னையும், இந்த மக்களுக்கு ஏற்கனவே ஒரு மொழி இல்லையா என்ற ஆராய்ச்சியும். அந்த மொழிக்கு இந்தி மொழி ஈடா என்ற பழைய பிரச்னைகள் மறுபடியும் வரும். இந்தி ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று அவர்கள் பேசுகிறார்கள்.

நமது ஆட்சி மொழி இருக்கிறது, அது தமிழ் ஆட்சி மொழியைப்பற்றி பிரச்னையல்ல. தேசிய மொழியைப் பற்றி பிரச்னை அல்ல. அபிஷியல்லாங்குவேஜ்—அதிகார மொழி எது என்பது பற்றித்தான் பிரச்னை ஆகும் இந்தி மொழி ஆட்சி மொழி என்று சொல்லுகின்ற காரணத்தினாலே அதற்கு ஒரு பெரிய அந்தஸ்து கிடைத்துவிடும் என்ற அச்சத்தோடு நான் கூறுகிறேன். இப்போது மூன்று வகையான மொழிப் பிரச்னைகள் நம்முன்னால் இருக்கின்றன. ஒன்று தேசிய மொழிப் பிரச்னை; தேசிய மொழியைப் பொறுத்த வரையில், 10—15 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்ததெல்லாம், "இந்திதான் தேசிய மொழி" என்பது ஆகும். இந்திதான் தேசிய மொழி என்று எடுத்துக் கூறப்படாத காங்கிரஸ் கூட்டங்கள் அப்போது கிடையாது. இந்திதான் தேசிய மொழி என்று கூறாத காங்கிரஸ்காரர் அப்போது கிடையாது. அவ்வாறு கூறாதவர் காங்கிரஸ்காரர் இல்லை என்ற கருத்து அப்போது நிலவி வந்தது. இன்றோ இந்தி தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், இந்தியுடன் தமிழும் மற்ற பல மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, மொத்தம் 14 தேசிய மொழிகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை வருத்தப்பட்டாலும், கோபப் பட்டாலும், அந்த 14 தேசிய மொழிகளுடன் ஆங்கிலமும் தேசிய மொழியாக இணைக்கப்பட வேண்டுமென்ற கருத்து இந்திய துணைக் கண்டத்தில் இப்போது வலுப்பெற்று வருகிறது. அந்தக் கருத்து வெற்றியும் அடையும். இப்போது, இந்தி மட்டும் தேசிய மொழியாக இருக்கவில்லை; தமிழகத்திற்கு தமிழும், தெலுங்கு நாட்டுக்குத் தெலுங்கும், மற்ற ராஜ்ய மாநிலங்களில் அந்த அந்த மொழிகளும் தேசிய மொழிகளாக இருக்கின்றன. ஆகவே இந்தி மட்டுமின்றி, மொத்தம் 14 மொழிகள் தேசிய மொழி அந்தஸ்தைப்

பெற்றிருக்கின்றன. ஆனால், ஆட்சிமொழி அந்தஸ்தைப் பொறுத்த வரையில், தமிழ்தான் தமிழகத்தில் ஆட்சி மொழி. வேறு சில ராஜ்யங்களிலுள்ள மொழிகள் ஆட்சி மொழி அந்தஸ்தைப் பெறாமல் இருக்கக்கூடும், அவைகளை நாம் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அந்த ராஜ்யங்களைப் பார்த்து நாம் பரிதாபப்படுவோம். நமக்கு இருக்கும் துணிவு அந்த ராஜ்யத்தினருக்கு இல்லையே என்று நாம் பரிதாபப்படுவோம், தமிழை இந்த ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக்குவதற்கான துணிவைப் பெற்ற கனம் நிதி அமைச்சருக்கு நன்றி கூற நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். நம் மாநிலத்தில் எது ஆட்சி மொழி என்பதைப் பொறுத்த வரையில் நம்மிடையே அபிப்பிராயபேதம் இல்லை, நம் ராஜ்யத்தில் தமிழ்தான் ஆட்சி மொழி. இந்தியாவில் நிர்வாக மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதுபற்றி கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையை மூன்று விதமாக நோக்கலாம். இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில் இப்பிரச்னையைப் பார்ப்பது ஒரு விதம். இரண்டாவது, இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கப் போவதில்லை, அது பிரியப் போகிறது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு, பிரியும்வரையுள்ள இடைக்காலத்தில் எது நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று பார்ப்பது ஆகும். எங்களைப் பொறுத்த வரையில் இந்தியா பிரியப் போகிறது என்ற எண்ணத்துடன்தான் இப்பிரச்னையை நாங்கள் அணுகுகிறோம். நிர்வாகத்தில் மத்திய சர்க்காரிடம் எந்த எந்தப் பொறுப்புகளை மாத்திரம் ஒப்படைக்கலாம் என்று பார்த்து அவர்களிடம் இருக்கும் அதிகப்படியான பொறுப்புகளைக் குறைத்துவிட்டால், அப்போது மத்தியஅரசாங்க நிர்வாக மொழி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன் இப்பிரச்னையை அணுகுவது மூன்றாவது விதம் ஆகும். இந்த மூன்றையும் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கனம் நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் தம்முடைய சாமர்த்தியமான வாதத்தைக் காட்டுவதற்காக இவைகளைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டுமென்று அவரை நான் கேட்டுக் கொள்ளவில்லை; தம்முடைய இதயத்தை அவர் காட்டுவதற்காக இவைகளைப்பற்றி யோசித்துப் பார்க்கவேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். அன்றையதினம் அவர் பேசியபோது, "உங்களுடைய இதயத்தைக் கேட்கிறேன், சாமர்த்தியத்தை அல்ல" என்று அவரிடம் பன்னிப் பன்னிக் கூறினேன். இதயத்தில் ஆழ்ந்த கருத்



துக்களைப் பதிய வைத்துக்கொண்டால்தான் பல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முடியும். நிர்வாக மொழியாக இந்திதான் இருக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திச் சொல்லும் வெறிபிடித்த தலைவர்களின் கூட்டம் வடநாட்டில் இருக்கிறதென்பதும், அந்தத் தலைவர்களுக்கு, மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்களிடமிருந்த செல்வாக்கு இருக்கிறதென்பதும் உலகமறிந்த உண்மை, கௌஹாத்தி காங்கிரஸ் மகாநாட்டில் கனம் திரு. சுப்பிரமணியம் பேசிய பேச்சை "the most reactionary speech" என்று ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டார்.

நிதிஅமைச்சர் திரு.சி.சுப்ரமணியம்: அவருக்கும் இந்திக்கும் சம்பந்தம் கிடையாது; ஆகவே இந்தி தெரியாதவர்தான் அவ்வாறு கூறினார்.

திரு.சி.என்.அண்ணாத்துரை: அவருக்கும்இந்திக்கும் சம்பந்தம் இல்லாதபோது, இந்தியின் சார்பாக அவர் பேசியிருப்பதிலிருந்து, இந்திக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும், அந்தச் செல்வாக்கு வளர்ந்து கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களும் அவ்வாறு கூறுபவர்களும் இருக்கிறார்கள். இந்தப் பிரச்னையில், சமரச மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு விரும்புகிறார் என்பதை அவருடைய வார்த்தைகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது, இந்தியை எப்படியும் நிர்வாக மொழியாகப் புகுத்த வேண்டுமென்ற மனப்பான்மை கொண்ட கூட்டத்தினரும், இந்தியைப் பக்குவமாக நிர்வாக மொழியாகப் புகுத்த வேண்டுமென மனப்பான்மை கொண்ட கூட்டத்தினரும் வடநாட்டில் இருக்கிறார்கள். இந்த இரு கூட்டத்தினருள், எந்தக் கூட்டத்தினர் வெற்றி பெறுவார்கள், எந்தக் கூட்டத்தினர் வெற்றிபெற மாட்டார்கள் என்று நாம் இன்று அறுதியிட்டுக் கூறமுடியாது. இப்படிப்பட்ட நிலைமையில், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறிக்கைக்கு ஒப்புமை அளித்திருக்கிறது என்றும் மற்ற எதிர்க்கட்சிகளும் ஒப்புதல் அளித்திருக்கிறது என்றும் குறிப்பிட்டு இந்த அறிக்கையை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினால், வடநாட்டு இந்தி வெறியர்கள் இங்கே இந்தியைப் புகுத்துவதற்கு இந்த அறிக்கையைப் பயன்படுத்திக் கொள்வார்கள். அவர்கள் தமிழ் நாட்டில் இந்தியை யாரும்

எதிர்க்கவில்லை என்று அறிக்கையிலிருந்து தெரிவதால், தமிழ் நாட்டில் ஹிந்தியைப் புகுத்தலாம் என்று சொல்ல முற்படுவார்கள். ஆகவேதான், இந்தியை எதிர்ப்பவர்களும், இந்தி ஆட்சிமொழியாகக் கூடாது என்று சொல்பவர்களும், இந்தி மத்திய அரசாங்க ஆட்சிமொழியாக ஆக்கப்படவேண்டுமென்று கூறும் அரசியல் சட்டப் பிரிவை எதிர்ப்பவர்களும், அந்தப் பிரிவை திருத்தவேண்டுமென்று வாதாடுபவர்களும் தமிழ் நாட்டில் ஏராளமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதை மத்திய அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்கு நாங்கள் வகைசெய்கிறோம். நாங்கள் இவ்வாறு செய்வது, இந்தித் திணிப்பை எதிர்த்து மத்திய அரசாங்கத்திடம் வாதாடுவதற்கு இந்த மாநில ஆட்சியாளர்களுக்கு உதவும்படியாக இருக்கும் என்று சொல்வேன்.

"நாங்கள் 150 பேர் இருக்கிறோம், எங்களுக்குக் கிடைக்கும் மதிப்பு போதும்" என்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சொல்லக் கூடும். அந்த மதிப்பை நான் குறைத்துப் பேசவில்லை. எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் வளரக் கூடியவர்கள் என்பது ஜனநாயக தத்துவம்; அவர்கள் வளரக்கூடியவர்கள் என்பதை எண்ணித் தான் பார்ப்பார்கள். ஆகவே, இங்கே இந்திக்கு எதிரிடையான கருத்து எந்த அளவுக்கு இருக்கிறதென்பதை அவர்களுக்குத் தெரியப் படுத்துவதற்காகவும், இந்திய அரசியல் சட்டத்திலே திருத்தம் வேண்டும் என்ற அந்தத் திருத்தத்தையும் அதிலே இணைத்துக்கொண்டால், அதற்குப் பிறகு இங்கிருந்து ஏகமனதாக இந்த அறிக்கையை அனுப்பியதாகக் கொள்ளலாம். ஏகமனதாக அனுப்பப்படுகிற அறிக்கை ஆனாலும் ஒவ்வொரு கட்சியினுடைய கருத்தும் அதிலே குறிப்பிடத்தக்க அளவு இணைந்திருப்பதை வடநாட்டிலே உள்ளவர்கள் உணருவார்கள்.

" வடநாடு எது? தென்னாடு எது?" என்று கேட்கப்பட்டது. அப்படிக் கேட்கும்போது, சாதாரணமாக படத்தில் ஒரு கோடு போட்டுக் காட்டிவிட முடியாது. இதற்கு மேலே இருப்பது வடக்கு, இதற்குக் கீழே இருப்பது தெற்கு என்று எடுத்துச் சொல்வதற்கில்லை. அப்படிச் சொல்லக் கூடிய அரசியல் தத்துவம் இல்லை. வடநாடு என்று சொல்லும்போது எல்லா மாநிலங்களுக்கும் முழுப் பொறுப்பையும், அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்கிற மத்திய சர்க்காரையும், அந்த மத்திய சர்க்காரோடு நெருங்கிய தொடர்புஇருக்கிற ராஜ்யங்களையும் மனதிலே வைத்துக்கொண்டு



தான் வடநாடு, வடநாடு என்று பேசுகிறோம் என்று குறிப்பிடுகிறேன்.

இந்த மொழிப் பிரச்னையில் நாமெல்லோரும் சமரசத்திற்கு வந்துவிட்டோம் என்று தெரிவிப்பதை விட, அடிப்படையில் சில மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்காருக்கு உணர்த்துவது மிகப் பொருத்தம் என்று கருதி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தத் திருத்தத்தை நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.

மற்றபடி மொழிப் பிரச்னையிலே, மக்கள் மொழியாக இந்தி
தான் இருக்கக்கூடும் என்று சொல்கிற அந்தநிலைமையை இந்த
நாட்டிலே வளர விடாமல் தடுப்பதற்கு ஏற்ற வகையிலே ஆட்சி
யாளர் இருப்பதைப் பற்றி நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.
அந்த அளவுக்கு அவர்களுக்கு இன்றைய தினம் வெறி இல்லை.
நம்முடைய அமைச்சரவை, அதிலும் குறிப்பாக நமது நிதி அமைச்
சர் சுப்ரமண்யம் அவர்களுக்கு தமிழினிடத்திலே நீங்காத பற்று
இருக்கிறதென்பதைப் பார்த்து நான் மெத்த மகிழ்ச்சி அடைகி
றேன். அது கொங்கு நாட்டுக்கே இருக்கும் தனிச் சிறப்பு.
கொங்கு நாட்டுத் தமிழ் ஒன்றுதான் பிறமொழிக் கலப்பு இல்லாத
தமிழ்; வடமொழியோ, வேறு எந்த மொழியோ கலப்பு அதிகம்
இல்லாத தமிழ். அப்படிப்பட்ட கொங்கு நாட்டுச் செல்வர்
தமிழுக்காகப் பாடுபடுவதைப்போல், எதிர்காலத்தில் படிக்கும்
பிள்ளைகளுக்கு, வருங்காலச் சந்ததிகளுக்கு ஆபத்து வராமல்
இருக்கவேண்டுமானால், நாங்கள் சொல்லுகிற திருத்தத்தையும்
ஏற்றுக்கொள்ளவேண்டும். பதினைந்து பேர் சொல்லும் திருத்
தத்தை 150 பேர் ஏற்றுக்கொள்ளலாமா என்ற அரசியல் கணக்
குப் போடாமல் "Politics is not mere arithmetic but is a poli-
tical philosophy" என்ற கருத்தின்படி, எதிர்க்கட்சிகள் வளரக்
கூடியன என்ற தத்துவம் என்ற முறையிலே எங்களுடைய திருத்
தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நிதி அமைச்சர்
அவர்களையும் ஆளும் கட்சியையும் வேண்டிக் கேட்டுக்கொண்டு
என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

13—3—1958 ] [வியாழக்கிழமை

(மது விலக்குச் சட்டம் பற்றி எழுந்த விவாதத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு...,

பிற்பகல் 12-10 கனம் சபாநாயகர் அவர்களே, மதுவிலக்குச் சட்டம் நம்நாட்டில் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ அந்த அளவிற்கு நாம் பெருமைப்பட வேண்டும். எந்த அளவிற்கு அது தோல்வியடைந்திருக்கிறதோ அந்த அளவிற்கு நம்மைப்பற்றிக் கேவலமான ஒரு கருத்து நமக்குள்ளேயே எல்லாக் கட்சியினரிடத்திலும் இருந்து வருகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட கொள்கையில் எல்லாக் கட்சிகளும் ஒருமித்த கருத்துக்கொண்டிருக்கின்றன என்றால், அது மதுவிலக்குத் திட்டம் நம் நாட்டில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கொள்கைதான் ஆகும். இந்த கொள்கை குறித்து எல்லாக் கட்சிகளும் ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கும்போது, சில கடுமையான தண்டனைகளை விதிப்பதற்கான ஷரத்துக்கள் ஆளும் கட்சியினரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவில் புகுத்தப்பட்டிருப்பது சரிதானா என்பதுபற்றியும், அந்த ஷரத்துக்கள் கொண்ட மதுவிலக்குச் சட்டம் வெற்றியடையுமா என்பதுபற்றியும் நாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறிவதற்காக, சில காலத்திற்கு மசோதாவை சட்டமாக்குவதை ஒத்திவைக்கவேண்டுமென்று கோரி எதிர்க்கட்சியினர் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொண்டால், அது மதுவிலக்குத் திட்டம் குறித்து இந்நாட்டில் எல்லாக் கட்சியினரும் ஒருமித்த கருத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உலகம் அறிவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை உண்டுபண்ணும்.

மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக்குவதற்குக் கடுமையான தண்டனைகள் தரப்படவேண்டுமென்று பல மேடைகளிலே பேசப்படும் நேரத்தில், அந்தக் கடுமையான தண்டனை மதுவிலக்குக் குற்றத்தைத் துணிந்து செய்கின்ற பெரிய மனிதர் பேரிலேயே வீசப்படவேண்டுமென்ற கருத்திலே பேசப்பட்டு வருகிறது. "கடுமையான 'தண்டனை" என்று சட்டத்திலே மட்டும் குறிப்பிட்டுவிட்டு, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்போ, கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு மன்றங்களிலே எடுத்துச் சொல்லும் தன்மையோ, அதற்கு தரப்படும் கடுமையான தண்டனையை வாங்கித்



தரும் பொறுப்போ போலீஸ் இலாகாவினருக்கோ மற்றவர்களுக்கோ விட்டு விடுவதால் நாட்டிலே ஏற்படும் சில பல தொல்லைகளை எதிர்க் கட்சியினர் சொன்னால், அவைகள் அத்தனையும் தவறு என்று ஆளும் கட்சியினர் தள்ளிவிட முடியாது

நாட்டிலே கட்சி மாச்சரியங்கள் இருக்கின்றன. கிராமத்திலே ஜாதிக்கு ஜாதி மாச்சரியங்கள் இருக்கின்றன. கிராமத்திற்குக் கிராமம் மாச்சரியங்கள் இருக்கின்றன. இந்த மாச்சரியங்களைக் காரணமாக வைத்து சட்டத்திலே கடுமையான தன்மைகளைப் புகுத்தினால், ஒரு கிராமத்திலே ஒரு ஜாதியார் இன்னொரு ஜாதியார் பேரிலும், ஒரு கிராமம் இன்னொரு கிராமத்தின் பேரிலும் பொய் வழக்குகள் ஜோடிப்பதற்கும், தவறான வழக்குகளைச் ஜோடிப்பதற்கும் இந்தச் சட்டம் இடம் தந்துவிடும் என்ற அச்சம் நாட்டிலே இருக்கிறது. அந்த அச்சத்தை நீக்கும் தன்மையில் எல்லா கட்சிகளும் கூடி, மதுவிலக்குச் சட்டம் வெற்றி பெற்றிருக்கிற அளவுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்து, இனி வெற்றிபெற வேண்டியதன் அவசியத்தையும் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அது எவ்வளவு சமூக விரோதமானது என்பதையும் நாட்டு மக்கள் உணரும்படி செய்து, அதற்குக் காலம் அளித்து, அதற்குப் பிறகு சட்டத்தை நிபுணர்களுடைய ஆலோசனைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் திருத்தத்திலே நம்முடைய நண்பர்கள் வலியுறுத்துவது என்று ஆளும் கட்சியினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்றைய தினம் மதுவிலக்குச் சட்டம் வெற்றிகரமாக நடத்தப்படவேண்டும் என்பதை எதிர்த் தரப்பிலே இருக்கும் யாரும் சந்தேகப்படவில்லை. ஆனால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களிலே மிக உயர்ந்த நிலையில உள்ளவர்கள், சென்ற கிழமையேகூட, ராஜ்ய சபையில் பேசிய மாஜி மந்திரி ராஜ்குமாரி அம்மையார் அவர்கள் மறுபடியும் தம்முடைய வேறுபாட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலே இவ்வளவு உயர்ந்த பதவியிலே உள்ளவர்கள், அடிக்கடி "மதுவிலக்குச் சட்டம் தவறானது, தோற்றுவிட்டது, தோற்றுவிட்டது" என்று சொல்லுகிற நேரத்தில், அது நாட்டிலே பரவினால் அது மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகிறவர்களுக்கு எவ்வளவு பெரிய சங்கடத்தை விளைவிக்கும் என்று உணராமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள் அப்படிப்பட்ட கருத்துக்கள் பரவாமல் தடுப்பதற்கு

நாட்டிலுள்ள அமைச்சர் பெருமக்கள் துணை நிற்கவேண்டும்; அப்படிச் சொல்வது தவறு என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் மதுவிலக்குச் சட்டம் நிச்சயமாக வெற்றி பெறவேண்டும் என்பதிலே ஒத்துழைக்கச் சித்தமாக இருக்கிறார்கள். அதற்கு வெளிநாட்டு நிலைமைகளைப் பற்றியும், நம் நாட்டு நிலைமைகளைப்பற்றியும் ஆராய்ந்து கொண்டிருப்பதில் பயன் இல்லை. என்னைப் பொறுத்த வரையில், இந்த நாட்டில் 100-க்கு 60 பேர்கள் கல்வி அறிவு பெற்று, நல்ல நாகரீகமான மனப்பான்மையையும், நாகரீகமான வாழ்க்கையையும் பெற்றன பிறகு, மதுவிலக்கு தேவையா இல்லையா என்று அப்பொழுது நிர்மானித்துக்கொள்வதிலேகூட சிக்கல் அதிகம் இருக்காது. மேனாடுகளிலே "குடிப்பது" என்பதற்கும், "குடிகாரன்" என்பதற்கும் பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. "Drinking" என்பதற்கும் "Drunkard" என்பதற்கும் எழுத்திலே மட்டும் அல்ல பொருளிலேயும் வித்தியாசம் இருக்கிறது. அந்த அளவு வித்தியாசம் நம் நாட்டில் இல்லை. ஆகையால், இந்த மதுவிலக்குச் சட்டம் இந்த நாட்டிலே மிகவும் தேவை.

இந்த சர்க்காருக்கு நான் குறிப்பாகச் சொல்வேன் — மதுவிலக்குச் சட்டத்தில் அவர்கள் பெற்றிருக்கிற வெற்றியை ஒரு வகையிலே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மதுவிலக்குச் சட்டம் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிற காரணத்தால் தான் இன்றைய தினம் நாம் வீதிகளில் குடிகாரர்களைக் காண முடியவில்லை. குடித்துவிட்டுச் செய்யும் சில்லரைக் கலவரங்களும் நாட்டிலே பெருவாரியாக அடங்கி விட்டன. குடித்தால் என்ன குதூகலம் பெறலாம் என்று கருதி அவர்கள் குடித்தாலும், வீட்டிலே முட்டாக்கு போட்டுக்கொண்டு மூலையிலே படுத்துத்தான் உறங்கவேண்டுமே யல்லாது, தெருவில் நின்று, குடித்துவிட்ட அருமை பெருமையைப் பேசிக்கொள்வதற்கு இல்லை. முன்னால் அத்தகைய துர்ப்பாக்கியமான காட்சிகளெல்லாம் தமிழ் நாட்டில் இருந்தன. ஆனால் இப்பொழுது அவை வெகுவாகக் குறைந்ததற்கு அமைச்சரவையை மட்டுமல்ல, நாட்டு மக்களையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நல்ல காரியங்களை அனைவரும் ஒன்றுகூடிச் செய்கிறார்கள் என்றால், அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலே இந்த



நாடு வழக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, நாட்டிலே மறுபடியும் அந்த நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவும், கட்சி மாச்சரியங்களை மனதிலே வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தைத் தவறான விதத்தில் மக்கள் பயன் படுத்தாமல் பார்த்துக்கொள்வதற்காகவும் எல்லோரும் கூடி ஆலோசித்துச் செய்யவேண்டும் என்ற அந்த நோக்கத்திலேதான் கனம் அங்கத்தினர் திரு. சட்டநாதக் கரையாளர் அவர்கள் இந்த திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்ற நம்பிக்கையில் நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

ARCHIV... MADRAS
8215

வடக்கன்குளம், கலைமகள் பிரஸில் அச்சிடப்பெற்றது

## தயாராகிறது!

அண்ணாவின் சட்டசபைச் சொற்பொழிவுகள்

# இரண்டாம் தொகுதி

***

விவரங்களுக்கு

கலைமகள் நிலையம்
126, பிராட்வே,
சென்னை - 1